# மனம் விரும்புதே உன்னை...



ஆர். மணிமாலா

மனம் விரும்புதே உன்னை... ஆர். மணிமாலா

# மனம் விரும்புதே உன்னை...

ஆர். மணிமாலா

முத்து நிலையம்
3, ஐயம்பெருமாள் தெரு
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

36999
5426619

## நூல் விவர அட்டவணை

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | மனம் விரும்புதே உன்னை... |
| ஆசிரியர் பெயர் | : | ஆர். மணிமாலா |
| முதற் பதிப்பு | : | செப்டம்பர், 2003 |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| மொழி | : | தமிழ் |
| நூலின் அளவு | : | 1x 8 கிரவுன் |
| தாள் | : | 11.6 kg வெள்ளைத் தாள் |
| மொத்தப் பக்கங்கள் | : | 312 |
| அச்சு எழுத்து | : | 10 புள்ளி |
| பைண்டிங் | : | சாதா அட்டை பைண்டு |
| வெளியீடு | : | முத்து நிலையம்<br>3, ஐயம்பெருமாள் தெரு,<br>இராயப்பேட்டை<br>சென்னை - 600 014. |

36999
5426619

**விலை ரூ. 80.00**

| | | |
|---|---|---|
| ஒளி அச்சு | : | 'சிவம்'ஸ், போன்: 24331808 |
| அச்சிட்டோர் | : | ஜீ.பி.பிரிண்ட்ஸ், சென்னை-14 |

# மனம் விரும்புதே உன்னை...

## உள்ளே...

மனம் விரும்புதே உன்னை... 5

கல்யாண மாலை 89

காதலின் பொன் வீதியிலே 179

* * *

36999
5426619



# மனம் விரும்புதே உன்னை...

1

சூரியன் மேற்குப் பள்ளத்தில் அமிழ ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டிருந்த அந்தி நேரம்.

மணி ஐந்தைக் கடந்து பத்து நிமிடங்கள் ஆகிவிட்டது. பூரணி ஃபைல்களைச் சரிபார்த்து மேஜை டிராயரில் வைத்துப் பூட்டி சாவியைத் தன் ஹேண்ட் பேகில் பத்திரப்படுத்திக் கொண்டாள்.

''நேரமாச்சு. கிளம்பலாமா பூரணி?'' சுதா புடவையைச் சரி பண்ணியபடி அருகில் வந்தாள்.

''கிளம்பியாச்சு. தலைய வலிக்கிறாப் போல இருக்கு. கேன்டீன் போய் காபி சாப்பிடலாமா?''

''ம்... வா!''

கேன்டீனில் நுழைந்தார்கள்.

''பஜ்ஜி சாப்பிடலாமா பூரணி? சூடா போட்டிருக்கான்!''

''நீ சாப்பிடு... எனக்கு வேண்டாம். காபி மட்டும் போதும்!''

''நான் மட்டும் தனியே எப்படி சாப்பிடறது? எனக்கும் காபியே போதும்... இரு. வாங்கிட்டு வந்திடுறேன்!'' என்ற சுதா நிமிடத்தில் காபியோடு வந்தாள்.

காபியைப் பருகியபடி பூரணியைக் கண்களால் அளந்தாள் சுதா!

பளீரென்ற மஞ்சள் கலந்த வெண்மை நிறம்! அழகான வட்டமுகம். சுருட்டை முடியை இறுக்கி பின்னலிட்டிருந்தாலும் முகத்திற்குத் தனி அழகைத் தந்தது. ஒற்றை செயின், சின்னதாய் முத்துப் பதித்த கம்மல், நெற்றியில் மிளகு சைஸில் சின்னதாய் ஸ்டிக்கர் பொட்டு. வெள்ளை நிறத்தில் மஞ்சள் பூக்கள் சிதறிய சேலை! பூரணி பெரும்பாலும் வெள்ளையில் கண்ணை உறுத்தாத வண்ணப் பூக்கள் கலந்த புடவையைத்தான் உடுத்துவாள்.

பணிபுரிவது தனியார் நிறுவனமென்றாலும் புகழ்பெற்ற நிறுவனம். அக்கவுண்டன்ட் ஆகப் பணிபுரிகிறாள். கை நிறையச் சம்பளம். ஆண்டவன் எதிலும் குறைவைக்க வில்லை... ஒரே ஒரு விஷயத்தைத் தவிர!

மூன்று வருடங்களுக்கு முன் மகேஷைக் காதலித்து மணந்தாள் பூரணி! வேறு வேறு ஜாதி எனினும் அவர்கள் காதலுக்குத் தடை எழவில்லை. எழக்கூடிய அளவில் இருபக்கமும் குறை ஏதுமில்லை என்பதுதான் சரி! மகேஷ் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவன்.

பூரணியிடமும் குறையேதும் சொல்ல முடியாது என்பதால் பெரியோர்களின் சம்மதத்தோடு, விமரிசையாய்த் திருமணம் நடைபெற்றது. இது அந்த ஆண்டவனுக்கே பொறுக்க வில்லையோ என்னவோ, சரியாய் ஆறே மாதத்தில்... பூரணியின் கழுத்திலிருந்த தாலி இறங்கிவிட்டது. அலுவலக விஷயமாய் கல்கத்தா சென்ற மகேஷ் விமான விபத்தில் மரணமடைந்துவிட்டான்.



இடிந்துபோய் விட்டாள் பூரணி!

காதல் கணவனை இழந்த துக்கம் அவளைத் தற்கொலைக்கும் தூண்டியது. மகேஷின் அம்மாதான் பார்த்துப் பதறி உத்திரத்தில் தொங்கவிருந்தவளைக் காப்பாற்றினாள்.

மகேஷின் அம்மா மற்ற மாமியாரைப் போலில்லை. அன்னம்மாள் நல்லவள். தன் மகனைப் போலவே மருமகள் மீது மட்டற்ற பாசத்தை வைத்திருந்தாள். மகேஷ் நேசித்த ஒவ்வொரு பொருளையும் அவன் நினைவாகப் போற்றிப் பாதுகாத்தாள். தன் உயிரினும் மேலாக நேசித்த பூரணியை மட்டும் கட்டாயத்துக்கு விட்டு விடுவாளா என்ன?

மருமகளைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

''பாவி... என்ன காரியம் பண்ண இருந்தே? மகேஷ் நம்மை விட்டுப் போய்ட்டான்தான். அதுக்காக... நீயும் போய்டணும்னு முடிவுக்கு வந்திட்டியே பூரணி! உன் மூலமா நான் என் பிள்ளையைப் பார்க்கறேன்டி! உன் மேல எவ்வளவு ஆசை வைச்சிருந்தான்! இப்ப மட்டும் உன்னை விட்டு எங்கேயோ போய்ட்டான்னா நினைக்கிறே? இல்லேம்மா... அவன் உன் கூடவே... உன்னையே சுத்தி சுத்தி வந்துக்கிட்டிருக்கான்! இந்த வீட்லே காத்தோட காத்தா கலந்திருக்கான். நீ இருக்கிற இடத்திலே எல்லாம் மகேஷ் இருப்பான். என் பிள்ளைய பார்க்கத்தான் முடியாது. நான் சுவாசிக்கிற காத்துலேயாவது இருக்கிறான்ங்கற ஆறுதலாவது உன் மூலமா எனக்கு கிடைக்கணும் பூரணி... இங்கே பார்! என் ராஜாத்தி... இனி, இந்த மாதிரி முடிவுக்கு வரமாட்டேன்னு மகேஷ் போட்டோ முன்னாடி எனக்குச் சத்தியம் பண்ணிக்குடு. அதுமட்டு மில்லே... அவனுக்கு நீ... துடைச்ச வைச்ச குத்து விளக்கா இருக்கறதைப் பார்க்க பிடிக்குமா? தினமும் உனக்குப் பூ வாங்கி

வருவானே... எதுக்காக? இந்த கோலத்தில் பார்க்கவா? பாருடி... நான் உன் மாமியார் இல்லே. அம்மா! நான் சொல்றதைக் கேள்! எங்க வீட்டுக்கு வந்த மகாலட்சுமி எப்பவும் மகாலட்சுமி மாதிரியேதான் இருக்கணும். பொட்டு வச்சுக்க... பூ வச்சுக்க... ஊர் உலகம் என்ன சொல்லுமோன்னு பயப்படாதே! பயந்துக்கிட்டு ஓடறவங்களைத் தான் நாய்கூட துரத்தும். திரும்பி நின்னு முறைச்சுப்பார். ஒரு கல்லை எறிஞ்சுபார்! உனக்குப் பயந்துக்கிட்டு ஓடும். அதுதான் கண்ணு உலகம்! இது உன் வீடு! அட்சயா மகேஷோட தங்கச்சி இல்லே! இனி உன்னோட தங்கச்சி! கடைசிவரைக்கும்... உன்னைத் தூசு தும்பு படாம நாங்க பார்த்துக்கறோம் பூரணி! மனசை மட்டும் தளர விடாதேம்மா! அப்புறம்... எங்களையும் நீ உயிரோட பார்க்கமாட்டே..." என்று கதறினாள் அன்னம்மாள்.

மாமியார் மடியில் முகம் புதைத்துத் தன் வேதனையை எல்லாம் கண்ணீராய்க் கொட்டினாள் பூரணி!

மனதைக் கொஞ்சம் கொஞ்சமாய்த் தேற்றி அலுவலகம் சென்றாள்.

மூன்று மாதம் போயிருக்கும்.

விசாலாட்சி என்ன நினைத்தாளோ, ஏது நினைத்தாளோ, மகளைத் தன் வீட்டிற்கு அழைத்துச் செல்ல வந்தாள்.

அன்னம்மாவினால் தடுக்க முடியவில்லை. ஆனால் பூரணி எங்கே தன் தாயோடு போய் விடுவாளோ என்கிற பயம் மட்டும் வயிற்றைப் புரட்டியது.

பூரணிக்கு மாமியார் வீட்டைவிட்டுப் போக மனசில்லை தான்! ஆனால் அது மகேஷ் வாழ்ந்த வீடு! ஒவ்வொரு அடியும் அவன்கால்பட்ட இடம். அவனோடு இரண்டறக் கலந்த



படுக்கை, குளிக்கும்போதும் சில்மிஷம் செய்த பாத்ரூம் என்று ஒவ்வொன்றும் மகேஷின் நினைவை ஊதி... தினமும் அவளைக் கண்ணீர்விடச் செய்தன. பூரணி மகேஷை மறக்க விரும்பவில்லை. அவனைப் பற்றிய இன்பமான நினைவுகளை அசைபோட்டு... அந்த எண்ணங்களையே சுவாசித்து கடைசிவரை வாழத்தான் ஆசைப்பட்டாள். ஆனால் அந்த வீடு, அவன் இல்லாததைத்தான் நினைவுபடுத்தியது. கூடத்தைக் கடக்கும்போதெல்லாம்... வெள்ளைத் துணியால் போர்த்தப்பட்டு மாலைபோட்டு மகேஷைக் கிடத்தியிருந்த ஞாபகம்தான் வந்தது.

அதனால், கொஞ்ச நாளைக்காவது அம்மாவுடன் இருந்துவிட்டு வரலாம் என்று அம்மாவுடன் கிளம்பிவிட்டாள் பூரணி.

அன்னம்மாளுக்கு ஏமாற்றமாகி விட்டது. அவள் முகத்தைப் படித்துவிட்ட பூரணி அவள் கையைப்பற்றிக் கொண்டாள்.

"அத்தை... நான் உங்க பூரணி! மகேஷோட பூரணி! இது என் வீடு! நான் வருவேன்... இப்ப... போய்ட்டு வரட்டுமா அத்தை!" என்று தயவாய்க் கேட்டாள்.

அதற்கு மேல் மறுக்க முடியுமா?

அன்னம்மாள் தலையசைத்தாள்.

விசாலாட்சிக்கு மீண்டும் மகளை அந்த வீட்டுக்கு அனுப்பும் எண்ணமில்லை.

ஆறுமாச தாம்பத்ய வாழ்க்கைக்காக... காலம் முழுக்க பூரணி தனி மரமாய் இருப்பதில் விருப்பமில்லை. தரையில் வீழ்ந்திருக்கும் கொடிக்கு நல்ல கொம்பாய்ப் பிடிமானம் தர விரும்பினாள்.

பூரணிக்குத் தாய் வீடு... ஆறுதலைத் தந்தது. அன்னம்மாள் மருமகளைப் பார்க்க வாரத்திற்கொரு முறையாவது வந்து விடுவாள். அதற்குத் தடையேதும் சொல்லவில்லை விசாலாட்சி!

விசாலாட்சிக்கு ஒரு மகனும், மகளும் மட்டுமே! பூரணியின் அண்ணன் சுரேந்திரன் தங்கை மீது மிகுந்த பாசம் வைத்திருந்தான். தன் ஒரே தங்கையின் வாழ்க்கை இப்படியாகிவிட்டதே என்று அவன் கலங்காத நாளே இல்லை. எனினும் அவன் மனைவி விமலாவுக்கு இது எரிச்சலைத் தான் உண்டு பண்ணியது. விமலாவும் நன்கு படித்தவள். ஓரளவு வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவள்தான். எதையுமே டேக் இட் ஈஸி என்று எடுத்துக் கொள்ளும் யதார்த்தமான பெண்மணி!

ஆரம்பத்தில் அவளும் வருத்தப்பட்டாள்தான். ஆனால் ஒரு மாதமாகியும் கணவன் இன்னமும் விட்டத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்ததுதான் பிடிக்கவில்லை. கணவனின் கவனத்தைத் திசை திருப்ப வலிய அவனைத் தன் பக்கம் இழுத்தவளை அற்பமாய்ப் பார்த்தான்.

''எப்படி விமலா... இப்படிப்பட்ட சூழ்நிலையிலேயும்.. இந்த மாதிரி ஆசையெல்லாம் வருது? என் தங்கச்சி... இப்படி... ஓ...காட்!'' என்று அவள் மனதில் சூடிழுத்தது போல் பேசிய விதம்... விமலாவினால் மறக்க முடியவில்லை.

தன்மான உணர்வு உசுப்ப... அன்றிலிருந்து ஒரே அறையில் தனித் தனிப் படுக்கைதான். சுரேந்திரனும் அலட்டிக் கொள்ளவில்லை. விமலாவை நாடி வரவுமில்லை. அவன் எண்ணமெல்லாம் தங்கையைச் சுற்றித்தான் வட்டமிட்டது.



பூரணி அந்த வீட்டிற்கே வந்த பிறகு கடுப்பாகிவிட்டாள் விமலா!

அதுவரை அறைக்குள் படுத்திருந்த சுரேந்திரன் அவள் வந்தது முதல் ஹாலில் வந்து படுக்க ஆரம்பித்தான். தங்கை மனதில் எந்த ஏக்க உணர்வும் எழக்கூடாதாம். தான் இப்படி இருக்கையில் அண்ணன் சந்தோஷமாக இருக்கிறான் என்று நினைத்துவிடக்கூடாதாம். விமலா கொதித்துப் போனாள்.

அவ்வப்போது தன் ஆத்திரங்களைப் பாத்திரங்களைச் சத்தமாய் உருட்டுவதில் வெளிப்படுத்துவாள்.

விசாலாட்சிக்குப் புரியாமலில்லை. இதுகுறித்து மகனிடம் பேச... நாகரீகம் தடுத்தது. மருமகளிடம் பேச அச்சம் எழுந்தது. அதனால் மௌனமாய் இதற்கொரு தீர்வு காண விரும்பினாள்.

அதற்கு ஒரே வழி பூரணியை அந்த வீட்டிலிருந்து அனுப்புவதுதான். அன்னம்மாள் வீட்டுக்கல்ல. இன்னொரு மாமியார் வீட்டிற்கு!

இந்த எண்ணத்தை கோடிட்டுக் காட்டியபோது பத்ரகாளியாய் மாறிப்போனாள் பூரணி.

''எனக்கா... எனக்கா இன்னொரு கல்யாணம்? நெவர். ஐ... கான்ட்! அம்மா. ஐயம் மிஸஸ் மகேஷ்! உனக்கென்ன பைத்தியம் பிடிச்சிருக்கா? எப்படி... எப்படி மனசு வந்தது? நீயும் ஒரு பொண்ணுதானே! அப்பா செத்தப்ப... நீ மறு கல்யாணம் பண்ணிக்கிட்டியா? இல்லையே... அப்ப ஏன் எனக்கு மட்டும் பண்ண நினைக்கிறே? கேட்டா... அப்பா மனசு நிறைய நிறைஞ்சிருக்கப்ப... எனக்கெதுக்கு இன்னொரு கல்யாணம்னு கேட்பே! அதே மாதிரிதாம்மா எனக்கும். மகேஷ் எனக்குள்ளே இருக்கார். என்னால முடியாதும்மா!''

''பைத்தியக்காரி... உங்கப்பா இறந்தப்ப... எனக்கு முப்பத்தேழு வயசு. உனக்கு? இப்ப இருபத்திரண்டு வயசு. அவர் எனக்குன்னு உன்னையும், சுரேந்தரையும் விட்டுட்டுப் போனார். உனக்கு யாரை விட்டுட்டுப் போனார் உன் புருஷன்? எவ்வளவுதான் வீராப்பா பேசினாலும் பொண்ணுங்களுக்கு நாலு சுவரோட பாதுகாப்பும், சாஞ்சுக்க ஒரு தோளும் அவசியம் வேணும் பூரணி! எனக்கு இப்ப அம்பது வயசு! இன்னும் அஞ்சு வருஷமோ, பத்து வருஷமோ... இருக்கலாம் அதுக்குப் பிறகு யாருடி உனக்குத் துணை?''

''அண்ணன் இருக்கார்!''

''அதுவும் எத்தனை நாளைக்கு பூரணி? எட்ட இருந்து உறவை வளர்த்தாதான் உறுதியா இருக்கும். சுரேந்திரன் நல்லவன்தான். ஆனா, உங்கண்ணி? கல்யாணத்துக்கு முன்னாடியே உங்க ரெண்டு பேருக்குள்ளே... சின்னச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் சண்டை வந்தது. இப்ப சரியாக்கூடப் பேசறதில்லே. போதாததுக்கு...நீ இந்த மாதிரி ஆகிட்டியேன்னு அவன் ஒவ்வொரு நாளும் புழுவா துடிச்சிட்டிருக்கான். அதனாலேயே... அவன் இந்த ஒரு வருஷமா தனியா படுக்கறான் பூரணி!''

''அ...ம்...மா!'' என்றாள் அதிர்ச்சியாய்.

''உனக்கொரு நல்ல வாழ்க்கை அமைச்சுத் தராம நான் எந்த சந்தோஷத்திலேயும் ஈடுபடறதில்லேன்னு சத்தியமே பண்ணியிருக்கான். விமலா யார்கிட்டேயும் சரியா பேசாம இருக்கறதுக்கு இதுதான் காரணம். சொல்லும்மா... உன்னால அத்தனை பேரும் கஷ்டப்படறாங்க... ஏன்... உனக்கொரு நல்வாழ்க்கையை ஏற்படுத்தித் தர...''

''.......''



''நீ சரின்னு ஒரு வார்த்தை சொல்லு பூரணி! உன்னைக் கட்டிக்க ஒரு நல்ல மனுஷன் தயாராயிருக்கார். அவர் பேரு சிவகுமாராம். உங்கண்ணன் கூட வேலை பார்க்கிறார். உன்னை முதல்ல அவர்தான் பெண் கேட்டார். இல்லை... அவ ஒரு பையனை லவ் பண்றா! அவனைதான் கல்யாணம் பண்ணி வைக்கப் போறோம்னு உங்கண்ணன் சொல்லிட்டான். இப்ப நீ இப்படியாய்ட்டேன்னு தெரிஞ்சு மறுபடி...''

''அம்மா... போதும். இதுக்கு மேலே பேசாதே!'' என்று உறுமலாய் அடக்கிவிட்டுத் தன்னறைக்குப் போய்விட்டாள் பூரணி.

ஆனாலும், விசாலாட்சி அதோடு விடவில்லை. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் இதைப்பற்றி பேசினாள். பேசப்பேச பூரணிக்கு அந்த சிவகுமார் மீது வெறுப்பு வளர ஆரம்பித்தது.

'என் மகேஷ் இடத்தில் அவனா? சேச்சே! அவனால்தான் எனக்கு இப்போது மனக்கஷ்டம்! அவனுக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும்...' என்று கறுவிக் கொண்டாள்.

ஒரு சந்தர்ப்பத்தில் வேண்டா வெறுப்பாக அவனை மணக்கவும் சம்மதித்து விட்டாள். அதுவும் ஒரு காரணமாகத் தான்.

★ ★ ★

என்ன சுதா என்னையே வச்ச கண் எடுக்காம பார்த்திட்டி ருக்கே!' காபி கோப்பையை டேபிள் மீது வைத்தபடியே கேட்டாள் பூரணி!

''ஒண்ணுமில்லே பூரணி! வர்ற புதன்கிழமை எங்கம்மா வீட்டுல சுமங்கலி பூஜை நடக்குது. நீயும் அவசியம் வரணும்னு அம்மா சொல்லச் சொன்னா!''

''பைத்தியக்காரி... நானெல்லாம் அந்தப் பூஜைக்கு வரக் கூடாது!''

''ஏன் கூடாது? அதெல்லாம் ஒண்ணுமில்லே! அதான் ஆண்டவன் கிருபையால கூடிய சீக்கிரம் சிவகுமார் கையால தாலி வாங்கிக்கப் போறியே!''

பெருமூச்செறிந்தாள் பூரணி!

''எனக்கு இதுல கொஞ்சமும் விருப்பமில்லே சுதா! என்னால மகேஷை மறக்க முடியாது. நான் என்னைக்குமே விதவைதான்...!''

''பூ...ர...ணி!''

''கழுத்துல தாலி கட்டிட்டா மட்டும் போதுமா? மனசையும் சேர்த்துக் கட்டறதுதான் கல்யாணம்! அது என் வாழ்க்கையிலே நடந்து முடிஞ்சாச்சு! மகேஷை தவிர வேற யாராலயும் என் மனசுல இடம் பெற முடியாது! சரி... நேரமாச்சு. கிளம்பலாமா?'' என்று எழுந்து கொண்டாள் பூரணி.

## 2

தெரு விளக்குகள் எரிய ஆரம்பித்திருந்தன.

பூரணி ஹாலின் மூலையில் செருப்பைக் கழற்றி வைக்கப் போனபோதுதான் கவனித்தாள். அங்கு இன்னொரு ஜோடி செருப்பிருந்தது.

பூரணி கண்கள் சுருக்கி யோசனையோடு உள்ளே நுழைந்தபோது தெரிந்து போனது.

விஜயலட்சுமி வந்திருந்தாள். சிவகுமாரின் அம்மா!



விசாலாட்சி எதையோ சொல்லிச் சிரித்தபடி பேசிக் கொண்டிருந்தாள். விமலா அவர்கள் முன் தட்டில் சாப்பிட போண்டாவும் காபியும் கொண்டுவந்து வைத்தாள். முதலில் விஜயலட்சுமிதான் பூரணியைப் பார்த்தாள்.

''வாம்மா... பூரணி!'' என்று வாஞ்சையோடு அழைத்தாள்.

பூரணி தலை குனிந்தபடி ஏதும் பேசமல் அவர்களைத் தாண்டிச் செல்ல முற்பட்டபோது விஜயலட்சுமி அவள் கையைப் பற்றினாள்.

''உக்காரு பூரணி!''

வேறு வழியின்றி அமர்ந்தாள்.

''உன்னைப் பார்க்கறதுக்காக... ஒரு மணி நேரமா காத்துக்கிட்டிருக்காங்க உங்க அத்தை! ஏம்மா லேட்டு?'' என்றாள் விசாலாட்சி.

அம்மாவை ஒரு கணம் முறைத்தவள் விஜயலட்சுமி பக்கம் பார்வையைத் திருப்பினாள்.

''என்ன விஷயம்?'' பூரணி பளிச்சென்று கேட்கவும் அந்தம்மாள் கொஞ்சம் தடுமாறித்தான் போனாள்.

''ஒண்ணுமில்லேம்மா! உன்னைப் பார்க்கறதுக்கு ஏதாவது காரணத்தைத் தூக்கிட்டு வரணுமா? உன்னைப் பார்க்கணும் போல இருந்துச்சு! அதோட... சிவகுமார் வேலை விஷயமா கேரளா போய் வந்தான். உனக்கு நேந்திரங்காய் சிப்ஸ் பிடிக்கும்னு உங்கண்ணன் மூலமா தெரிஞ்சு வச்சிக்கிட்டு... உனக்காக வாங்கிட்டு வந்தான். இந்தா பூரணி!'' என்றபடி ஒரு கிலோ பாக்கெட்டை அவளிடம் நீட்டினாள்.

பூரணி அதை வாங்காமல் வெறித்துப் பார்த்தாள்.

''வாங்கிக்க பூரணி'' என்றாள் விசாலாட்சி. மௌனமாய் வாங்கிக் கொண்டாள்.

'எங்க வீட்டுக்கு நீ சீக்கிரம் வரணும் பூரணி! எனக்குச் சிவகுமார் ஒரே பையன்தான்! அவனும் ஆபீஸ்க்கு போயிடறான். நான் தனியா வீட்லே இருக்க வேண்டியிருக்கு. நீ வந்த பிறகுதான் அந்த வீடு கலகலன்னு இருக்கும்!''

'இருக்கும்... இருக்கும்...' என்றெண்ணிக் கொண்டாள் பூரணி.

''சம்பந்தியம்மா... முதல்ல போண்டா சாப்பிடுங்க. ஆறிப் போகுது!'' என்றாள் விசாலாட்சி.

''பூரணி... நீயும் சேர்ந்து சாப்பிடேன்!''

''இல்லே... வேண்டாம். ஆபீஸ் கேன்ட்டீன்ல சாப்பிட்டுட்டு தான் வந்தேன்! நான் முகம் கழுவணும்!'' என்றபடி எழுந்துவிட்டாள்.

''கேன்ட்டீன்ல சாப்பிட்டு உடம்பைக் கெடுத்துக்காதே பூரணி!'' விஜயலட்சுமி சொல்லிக் கொண்டிருக்கும்போதே அங்கிருந்து சென்றுவிட்டாள்.

விசாலாட்சிக்கே என்னமோ போலாகிவிட்டது.

''தப்பா நினைச்சுக்காதீங்க! அவ குழந்தை மாதிரி. அவ யதார்த்தமாதான்...''

''அடடா... எதுக்குப் பெரிய வார்த்தையெல்லாம் பேசிக் கிட்டு? நான் தப்பா நினைச்சுக்கலியே! நானும் பொண்ணுதானே! அவமனசை என்னால புரிஞ்சுக்க முடியுது.



பள்ளமாகிப் போன இதயத்துல அன்பால பூசி மெழுகிடுவேன். அந்த நம்பிக்கை எனக்கிருக்கு. அவ புரிஞ்சுக்கறதுக்கு பழகிக்கறதுக்கு கொஞ்ச நாளாகும். அது எல்லா பொண்ணுங் களுக்கும் உள்ள ஆரம்ப பிரச்சனைதானே! நீங்க இந்த விஷயத்தைப் பெரிசுபடுத்தறதுதான் எனக்குப் பிடிக்கலே!''

விசாலாட்சியின் கண்கள் கண்ணீரில் தளும்பின.

''என் பொண்ணை இப்படி நடுக் கடல்ல தள்ளிவிட்டுட்டி யேன்னு கடவுளைத் தினந்தோறும் பழிசொல்லி சண்டை போட்டுக்கிட்டிருந்தேன். ஆனா, அந்தக் கடவுளே இப்ப உங்க ரூபத்துலே வந்திருக்கு. என் பொண்ணைக் கடவுள் கைவிடலே! அவ செஞ்ச புண்ணியம் நீங்க அவளுக்கு மாமியாரா கிடைச்சிருக்கீங்க!''

''சேச்சே... என்னைப் போய் கடவுள் கிடவுள்னு. விமலா! போண்டா நீயா செஞ்சே? அருமையா மெதுமெதுன்னு இருக்கு. இன்னொன்னு சாப்பிடணும்னு ஆசையாதான் இருக்கு. ஆனா, என் பேரப் பிள்ளைகளையெல்லாம் கொஞ்சறதுக்கு கடவுள் எனக்கு ஆயுளைத் தரணும். இதை அதிகமா சாப்பிட்டா எனக்கு மூச்சிரைக்கும்!'' சிரித்தபடி சொன்னாள்.

''ஏம்மா அப்படிச் சொல்றீங்க? உங்க பேரப் பிள்ளைங் களுக்கு கல்யாணம் பண்ணி அதுங்களும் குழந்தைங்க பெத்துக்கறதையும் பார்க்கத்தான் போறீங்க!'' என்றாள் விமலா.

''என்னம்மா... நல்லாருக்கீங்களா?'' என்ற குரல் கேட்டு மூவரும் வாசல் பக்கம் திரும்பினர்.

அன்னம்மாள் நின்றிருந்தாள்.

அந்த நேரத்தில் அந்த இடத்தில் அவளை எதிர்பார்க்க வில்லை விசாலாட்சி.

''வா... வாங்க!'' என்றாள்.

''பூரணி எங்கே? ஆபீஸ்லேர்ந்து வந்துட்டாளா?'' அன்னம்மாளின் கண்கள் பூரணியைத் தேடியது.

விஜயலட்சுமி புருவம் சுருக்கி வந்த பெண்மணியைப் பார்த்தாள்.

விசாலாட்சி மரியாதை நிமித்தமாக அவர்களை அறிமுகப் படுத்தியாக வேண்டிய கட்டாயம்.

''இவங்க... பூரணியோட மாமியார்!'' என்றாள் விஜயலட்சுமியிடம்.

''வணக்கம்மா!'' என்று கைகூப்பினாள்.

''வணக்கம்! நீங்க?'' என்றாள் அன்னம்மாள்.

''பூரணியோட வருங்கால மாமியார்!''

திடுக்கென அதிர்ந்தாள் அன்னம்மாள்!

விசாலாட்சி அவள் அருகே வந்தாள்.

''எந்த தாயுமே தன் பொண்ணு பூவும், பொட்டுமா குழந்தை குட்டிகளோட செளக்கியமா வாழணும்னுதான் ஆசைப்படுவா! என் பொண்ணு தனி மரமா நிக்கறதைப் பார்க்கப் பார்க்க நெஞ்சே வெடிச்சிடும் போலிருந்துச்சு. அவளை ஏத்தி, எறக்கி சம்மதிக்க வைக்கறதுக்குள்ளே நான் பட்டபாடு... எனக்குத்தான் தெரியும். நீங்க... எங்களை வித்தியாசமா நினைச்சிடாதீங்க...''

''என்னம்மா நீங்க? பூரணி எனக்கும் மகள்தான்! அவளுக்கு ஒரு வாழ்க்கை அமையுதுன்னா... ஆண்டவனுக்கு நன்றி சொல்ற முதல் ஆள் நானாகத்தான் இருப்பேன். பூரணி



எங்கேம்மா... நான் பார்க்கணும்!'' நெகிழ்வாய்ச் சொன்னாள் அன்னம்மாள்.

''அத்தை... எப்ப வந்தீங்க?'' என்று ஆச்சரியமாய் குரல் கொடுத்தபடி வந்தாள் பூரணி.

''இப்பதான்! நல்லாருக்கியாம்மா?''

''ம்... நீங்க எப்படியிருக்கீங்க? அட்சயா எப்படியிருக்கா? ஆமா, பத்துநாளா இந்தப்பக்கம் எங்கே ஆளே காணோம்?'' உரிமையாய்க் கடிந்து கொண்டாள் பூரணி.

''நடக்க முடியலே பூரணி! கால் மூட்டுல எலும்பு தேய்ஞ்சிருக்காம். நடந்தா வலிக்குது!''

''அடடா! டாக்டர்கிட்டே போனீங்களா?''

''அதெல்லாம் பார்த்து மருந்து, மாத்திரை சாப்பிட்டுக் கிட்டுதான் இருக்கேன். அதைவிடு! உன் முகம் ஏன் வாடிப் போயிருக்கு? சரியா சாப்பிடறியா இல்லையா?''

''ம்ம்....'' என்றாள்.

அவள் மனதைப் படித்தவளாய்ப் பேச்சை மாற்றினாள் அன்னம்மாள்.

''இந்தாம்மா... உனக்குத் திரட்டுப் பால் பிடிக்குமே... சாப்பிடு...'' என்று தான் கொண்டு வந்திருந்த பிரம்புக் கூடையைப் பூரணியிடம் நீட்டினாள்.

வாங்கிக் கொண்டாள்.

''அத்தை... உக்காருங்க... சூடா போண்டா இருக்கு. சாப்பிடுங்க!''

''வேணாம் பூரணி! டாக்டர் அதையெல்லாம் சாப்பிடக் கூடாதுன்னு சொல்லியிருக்கார்!''

''காபியாவது சாப்பிடுங்க! அண்ணி! ப்ளீஸ்...'' என்று விமலாவைப் பார்க்க, விமலா சமையலறைக்குள் போனாள்.

''அத்தை... நான் போன முறை வந்திருந்தப்ப கேட்டேனே, எங்க கல்யாண ஆல்பம்! கொண்டு வந்தீங்களா?''

அவள் பளிச்சென்று அப்படிக் கேட்டதும் அன்னம் மாளுக்குச் சங்கடமாய் இருந்தது.

''பூரணி... வாயேன். உன் ரூமுக்குள்ளே போகலாம்!'' என்று குரலைத் தாழ்த்திக் கூறி அவள் அறைக்குள் போனாள். பூரணியும் பின்னேயே சென்றாள்.

''அப்ப... நான் வரட்டுமா சம்பந்தியம்மா?'' விஜயலட்சுமி எழுந்து கொண்டாள்.

''நீங்க மனசுல எதையும்...''

''ஏம்மா... ஏன் சங்கடப்படறீங்க? பூரணியோட நிறையப் பேசணும்னு ஆசைப்பட்டேன். அவ பேசறதைக் காது நிறைய கேட்டு சந்தோஷப்பட்டேன். என்னைக்கிருந்தாலும் அவ எங்க வீட்டுப் பொண்ணு! அப்ப சேர்த்து வச்சு பேசிக்கறேன். வரட்டுமா? பூரணிகிட்டேயும் சொல்லிடுங்க...'' என்று புன்னகை மாறாமல் பேசி விடைபெற்றாள் விஜயலட்சுமி

விசாலாட்சி தொப்பென சோபாவில் அமர்ந்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

* * *



அன்னம்மாள் பூரணியின் அருகே அமர்ந்து அவள் கையை எடுத்துத் தன் மடி மேல் வைத்துக் கொண்டாள்.

''நீ... நல்லாயிருக்கணும் பூரணி! நல்லாயிருக்கே! அந்த ஆல்பமெல்லாம் எங்கிட்டேயே இருக்கட்டும்!''

''ஏன், அத்தை நீங்க என்னைத் தப்பா நினைச்சிட்டிருக்கீங்க! எனக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டமில்லை!''

''அப்படியெல்லாம் சொல்லக்கூடாது. உனக்கொரு துணை அவசியம் தேவை பூரணி! மகேஷ் தெய்வமா இருந்து... உனக்கொரு வாழ்க்கைய அமைச்சுக் கொடுத்திருக்கான். அதை மறுக்கறது முட்டாள்தனம். அந்தம்மாவும் பார்க்க நல்ல வங்களா தெரியறாங்க!''

''இல்லே அத்தை! என்னை ஏன் யாருமே புரிஞ்சுக்க மாட்டேங்கறீங்க? என்னால உங்க பிள்ளையை மறக்க முடியாது அத்தை!'' என்றாள் விசும்பலுடன்.

''இதோ பார்! அழாதே ராஜாத்தி! உன்னை மகேஷை மறக்கச் சொல்லலே! அவனையே நினைச்சிட்டிருக்காதேன்னுதான் சொல்றேன். அவனைத் தெய்வமா வழிபடு. உனக்கு வழி காட்டுவான்! அதை விட்டுட்டு முட்டாள்தனமா பேசாதே! ஆரம்பத்துல கஷ்டமாயிருந்தாலும், போகப் போக எல்லாம் சரியாப் போய்டும்! நான் அடுத்த முறை உன்னைப் பார்க்க வரும்போது... முகத்துல கல்யாணக் களையப் பார்க்கணும். இப்படிக் கண்ணீரும், கவலையுமா பார்க்கக்கூடாது. நீ மகேஷை இன்னமும் மதிக்கறது நிஜம்னா... என் பேச்சுக்கு மதிப்புக் குடு பூரணி! நான் வரட்டுமா?'' அவள் கையை அழுத்திப் பிடித்து விடை பெற்றாள் அன்னம்மாள்.

## 3

ரமணி சந்திரனின் நாவலில் மூழ்கியிருந்தாள் பூரணி. ஜன்னல் வழியே தென்றல் அனுமதி யின்றிப் புகுந்து அவள் உடலை இதமாய் வருடிக் கொடுத்தது. அமாவாசைக்கு இன்னும் இரண்டு நாட்களே இருந்ததால்... மெலிந்து, சோர்ந்து போயிருந்தது நிலா!

''பூரணி!'' என்றழைத்தபடி அறைக்குள் நுழைந்தாள் விசாலாட்சி.

''என்னம்மா?'' என்றபடி கட்டிலிலிருந்து எழுந்தமர்ந்தாள்.

''படிச்சிட்டிருக்கியா? நேரமாகுதில்லே?''

''தூக்கம் வரலே! ஆமா... நீ தூங்கலே?''

''ஹூம்... நான் தூங்கி ரெண்டு வருஷமாயிடுச்சு பூரணி!''

''சரி... இப்ப எதுக்கு வந்தே?''

''ஏண்டி இப்படி எப்பவும் கறாரா பேசறே?''

''தொட்டில் பழக்கம். மாத்திக்க முடியாதும்மா!''

''நீ பண்றது எதுவும் சரியில்லே பூரணி! மகேஷோட அம்மா மேல நீ ரொம்ப பாசமாயிருக்கிறது சரிதான்.''

''அதென்ன மகேஷோட அம்மா! என் மாமியார்னு சொல்லு!''

''சரி... உன் மாமியார்தான்! அவங்க வந்ததும் கன்றுக் குட்டி மாதிரி துள்ளிக்கிட்டு ஓடிப்போய் எவ்வளவு சந்தோஷமா பேசினே? வந்தவங்க என்ன நினைச்சிருப்பாங்க? உனக்காக உன்கிட்ட பேசணும்னு எவ்வளவு நேரமா காத்துக்கிட்டி ருந்தாங்க! அவங்களை ஒரு வார்த்தை வாங்கன்னு கூப்பிட்டியா? சாப்பிடுங்கன்னு உபசரிச்சியா?''



''அம்மா... நீயா புதுபுதுசா உறவுக்காரங்களைத் தேடிப்போ! நான் அவங்க கிட்டேயெல்லாம் சரளமா பேசிட்டிருக்கணும் இல்லே? முடியாதும்மா... என்னால எல்லார்கிட்டேயும் பேச முடியாது!''

''ஏன் முடியாது! உன் மாமியார்கிட்டே பேசறே இல்லே?'' என்றாள் கடுப்பாய்.

''ஆமா... என் மாமியார்கிட்டே பேசறேன்தான். அவங்க என் மகேஷைப் பெத்தவங்க!''

''இவங்களும் உன் மாமியார்தான் பூரணி! ரொம்ப நல்ல மனுஷி! அவங்க மனசைப் புண்படுத்தலாமா சொல்லு!''

''அம்மா... உனக்கு எப்படிப் புரிய வைக்கறதுன்னே தெரியலேம்மா! எனக்கு நீ செய்யற இந்த ஏற்பாடுகள்ல துளியும் இஷ்டமில்லேம்மா! மகேஷோட வாழ்ந்த வாழ்க்கை இந்த ஜென்மத்துக்குப் போதும் எனக்கு! அந்த இடத்தை வேற யாருக்கும் என்னால தர முடியாதும்மா!''

''எல்லாத்துக்கும் மனசுதான்டி காரணம்! நீ வாழ்ந்து முடிச்சதுக்குப் பேரு வாழ்க்கையில்லே! ஒத்திகை! இனிமே வாழப் போறதுதான் வாழ்க்கை! உன் மேல அந்தப் பையன் உயிரையே வச்சிருக்கான். அதனாலதான் நான் தைரியமா இந்த காரியத்திலே இறங்கினேன். யோசிச்சிப் பார்! கை நிறைய சம்பளம். ஓரளவு வசதியான குடும்பம். ஆளும் லட்சணம். அவனைக் கட்டிக்க பொண்ணுங்களெல்லாம் க்யூவில நிக்கறப்ப... உன்னைத்தான் கட்டணும்னு ஒத்தக் கால்ல நிக்கறான்னா... உன் மேல எவ்வளவு அன்பு வச்சிருப்பான்னு நினைச்சிப்பார்!''

''என் மேலே இல்லேம்மா... என் உடம்பு மேலேதான் அவருக்கு ஆசை!''

''ச்சட்! ஏன் இப்படி பேசறே? இருக்கட்டும். அப்படியே இருந்தாலும்... அதை உரிமையோட, சாஸ்திர சம்பிரதாயத் தோடதானே உரிமை கொண்டாடப் போறார். காமாலைக் கண்ணுக்குக் காண்பதெல்லாம் மஞ்சள் நிறமாத்தான் தெரியும். இதோ பார்டி! இந்த கல்யாணம் நடக்கும். நடக்கணும். இல்லேன்னா... என்னை நீ உயிரோட பார்க்க முடியாது. சினிமாவுல வர்ற வசனம் தானேன்னு கேலியா நினைச்சிடாதே! என் பொண்ணுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை உருவாக்கித் தர... என் உயிரையும் தரத் தயாராயிருக்கேன்! இது உங்கப்பா மேல சத்தியம்!'' ஆவேசமாய்ப் பேசிவிட்டு அறையை விட்டு வெளியேறினாள் விசாலாட்சி.

பூரணி ஆடித்தான் போனாள்!

★ ★ ★

பூரணி அலுவலகம் கிளம்பினாள்.

அவளுக்காக டிபன் எடுத்து வைத்துக் காத்துக் கொண்டிருந்த விசாலாட்சி வியப்பாய்ப் பார்த்தாள்.

''பூரணி... கிளம்பிட்டியா?''

''ம்...''

''சாப்பிடலே?''

''வேணாம்!''

''இங்கே வா!''

வந்தாள்.

''என்ன?''

''சாப்பிட்டுப் போடி!''



''வேணாம்னு சொல்றேன்ல!'' என்றாள் சற்றே எரிச்சலுடன்.

''அதான் ஏன்னு கேக்கறேன்! கோபமா?''

''..........''

''கோபத்தை வயித்து மேல காட்டாதே! உனக்கு என் மேலதானே கோபம்? என்னை ரெண்டு அடி அடிச்சிடு! அதுக்காகச் சாப்பிடாம இருந்து உடம்பைக் கெடுத்துக்காதே!''

''அம்மா!'' என்று அதட்டினாள்.

''உன்னைக் கை நீட்டி அடிக்கிற அளவுக்கு என்னை ஆணவக்காரியாவா நினைச்சே? ச்சே... ஏன் இப்படி நடந்துக்கறே? என்னைக் கஷ்டப்படுத்திப் பார்க்கறதிலே உனக்கென்ன சந்தோஷம்?''

''உன்னை நீயே கஷ்டப்படுத்திக்கிறியேன்னுதான்டி கவலைப்படறேன். நீ சந்தோஷமா இருக்கணும். உன் குழந்தையைத் தூக்கிக் கொஞ்சணும்னு எனக்கு ஆசை இருக்காதா?''

''..........''

''அதே ஆசை விமலாவோட அம்மாவுக்கும் இருக்குமில்லையா? அவ... புகுந்த வீட்லயே வாழா வெட்டியா இருக்கிறா பூரணி! அவளும் சின்ன வயசுக்காரி தானே? உங்கண்ணன் உனக்கொரு வாழ்க்கை அமையாம தன் பொண்டாட்டியைத் தொடறதில்லேன்னு சபதம் எடுத் திருப்பான் போல! ரெண்டு வருஷமா தனித்தனி படுக்கைதான். விமலாவும் பொறுமையாதான் இருக்கா! ஆனா, பொறுமைக் கும் ஒரு அளவிருக்கில்லையா? அவங்களுக்குள்ளே இருக்கிற இடைவெளி எங்கே நிரந்தரமாயிடப் போகுதோன்ற பயத்துல

எனக்கு இப்பல்லாம் நெஞ்சு வலியே வந்துடுது பூரணி! நான் பெத்த ரெண்டு குழந்தைகளோட வாழ்க்கையும் என் கண்ணெதிர்லே நாசமா போறதைப் பார்த்துக்கிட்டு என்னை உயிரோட இருக்கச் சொல்றியா? அதைவிட நான் செத்துப் போறேன். இந்தக் கண்றாவியெல்லாம் பார்க்காம ஒரேயடியா போய்ச் சேர்ந்துடறேன்!'' விசாலாட்சி கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''அம்மா... என்னை ரொம்ப படுத்தாதே! இதுல என் தப்பு என்ன இருக்கு?''

''தப்பில்லே பூரணி! பிடிவாதம்! அதைக் கொஞ்சம் விட்டுக் கொடுத்தா உன் வாழ்க்கையும் நேராகும். சுரேந்திரன் வாழ்க்கையும் சீராகும்!''

''அம்மா! நீ சொல்றது சரிதான்! ஆனா, ஒரு பக்கம் மட்டுமே யோசிச்சு முடிவுக்கு வராதே! இந்தக் கல்யாணத்துல எனக்கு ஏற்படக்கூடிய சங்கடங்களையும் நினைச்சிப்பார்! மகேஷோட பட்டாம்பூச்சியா இந்த ஊர் முழுக்க பறந்து திரிஞ்சேன். அதே ஊர் முன்னாடி, இன்னொரு ஆணோட கைப்பற்றி நடக்கறதை நினைச்சிக்கூடப் பார்க்க முடியலேம்மா! கற்பனையே இப்படி இருக்கப்ப... நிஜம் எப்படி சுடும்?

''போடி பைத்தியக்காரி! ஊர் உலகம்னா யாருடி? எதிர்வீடு, பக்கத்து வீடு, அண்டை வீடுதானே? நீ தாலியறுத்து உக்காந்தப்ப... உச்சு கொட்டி பரிதாபப்பட்டதோட அவங்க கடமை முடிஞ்சு போச்சுடி! அவங்க வீட்டுப் பொண்ணுங் களுக்கும் இந்த மாதிரி நிலைமை வந்தா... அவங்களும் இதைத்தாண்டி செய்வாங்க. நீ எந்த உலகத்துல, எந்த நூற்றாண்டுல இருக்கிறே பூரணி? இந்தக் காலத்துல புருஷனை இந்தப் பக்கம் வேலைக்கு அனுப்பி வச்சிட்டு அந்தப்பக்கம்



கள்ளப் புருஷனைத் தேடிப் போற குடும்பத்துப் பொம்பளைங்க எத்தனையோ பேர் உண்டு! ஆனா, நீ அப்படியில்லையே! துணையை இழந்து தவிக்கிற உனக்கு ஒரு நல்ல துணையைத் தேடித் தரணுங்கற ஆதங்கத்துல சொல்றேன். சிவகுமார் மகேஷைவிட நல்லபிள்ளை! வீம்புக்காக அந்தப் பிள்ளையை ஒதுக்கிடாதே பூரணி! இந்தக் கல்யாணம் நடந்தா உனக்கு மட்டுமில்லே, எல்லாருக்கும் நல்லது! உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன்டி. உன் கால்ல வேணும்னாலும் விழறேன்... சரின்னு சொல்லுடி!'' விசாலாட்சி கையெடுத்துக் கும்பிட்டாள்.

பூரணியைக் குழப்ப மேகம் வந்து போர்த்தியது. தொப் பென்று சேரில் அமர்ந்தாள். விசாலாட்சி இதுதான் சமயம் என்று அவள் முன் தட்டு எடுத்து வைத்தாள்.

## 4

எத்தனை முறை சரி பார்த்தாலும் அந்தக் கணக்கு தப்பாகவே வந்தது.

பூரணிக்குக் கண்கள்கூட பூத்துப் போனது. தலையை வலிக்க ஆரம்பித்தது.

மீண்டும் ஒருமுறை சரிபார்க்கும் போதுதான் புரிந்தது. பௌன்ஸ் ஆகிய ஒரு கம்பெனி செக்கையும் சேர்த்துக் கணக்குப் போட்டிருப்பது.

'அப்பாடா!' என்று மூச்சு விட்டாள்.

அரைமணி நேரமாய்க் கண்ணாமூச்சி காட்டிய கணக்கின் நுனி பிடிபட்ட சந்தோஷம்.

அந்நேரம் போன் அலறியது.

எடுத்துப் பேசிய சுதா, "பூரணி! கால் ஃபார்யூ!" என்றாள்.

"எனக்கா?" என்றபடி சீட்டைவிட்டு எழுந்தாள். 'யாராய் இருக்கும். அண்ணனா? அம்மாவா?' என்ற கேள்விகள் எழுந்தன.

சுதாவிடமிருந்து ரிசீவரை வாங்கியவள் "ஹலோ" என்றாள்.

எதிர்முனையும் "ஹலோ" என்றது.

அந்தக் குரல் புதியது. இதற்கு முன் பேசியிராத குரல். அதுவும் ஆணின் குரல்.

"ஹலோ...ஹூ ஆர் யூ?"

"ஐ ம் சிவகுமார். நீங்க பூரணிதானே?"

ரிசீவரைக் கை நழுவ விட்டிருப்பாள். அப்படியொரு அதிர்ச்சி.

"யெஸ்!"

"குட் ஈவ்னிங் பூரணி!"

"கு... குட் ஈவ்னிங்!" தடுமாறினாள்.

'இவன் எதற்கு போன் செய்கிறான்? குரலில் என்ன அப்படியொரு உற்சாகம் பொங்கி வழிகிறது?'

"மணி நாலாயிடுச்சே! டீ சாப்பிட்டியா?" அவன் உரிமையாய், ஃப்ரென்ட்லியாய் விசாரிக்கவும் பூரணி வாயடைத்துப் போனாள்.

"என்ன, டீ, காபியெல்லாம் சாப்பிடற பழக்கமெல்லாம் இல்லையா?"

"இ... இருக்கு!"



"சரி... ரொம்ப திணறாதே! உன்னை நான் இப்ப மீட் பண்ணனுமே பூரணி! நீ ஃப்ரீயா இருக்கியா?"

'என்னது சந்திப்பதா? இவனையா?'

"என்ன, பதிலே காணோம்?"

'ஐ'ம் ஸாரி... எனக்கு வேற ஒரு என்கேஜ்மென்ட் இருக்கு."

"என்ன என்கேஜ்மென்ட்?"

"நான் இன்னைக்கு கோவிலுக்குப் போகணும்!"

அந்தப் பதிலை கேட்டுச் சிவகுமார் சிரித்தான்.

"பாரேன் பூரணி... இந்தக் கடவுள் நடத்தற விளை யாட்டை? நான் உன்னைக் கூப்பிட்டதே கோவிலுக்குப் போகத்தான்!"

"கோவிலுக்கா?"

"யெஸ்...கோவிலுக்குத்தான்! நம்ம மேரேஜ் இன்விடேஷன் பிரிண்டாகி வந்திருக்கு. அதைப் பூரணியோட சேர்ந்து போய் கோவில்ல அர்ச்சனை பண்ணிட்டு வான்னு அம்மாவோட உத்தரவு! பாரேன்... இப்ப நீ எந்த மறுப்பும் சொல்ல முடியாதபடி நீயும் கோவிலுக்குதான் வரப்போறே! சரி... எந்தக் கோவில்ல... உனக்காக நான் வெய்ட் பண்றது?"

இனி தப்பிக்க முடியாத நிலை!

பூரணிக்குத் தலைவலி அதிகமானது.

"அங்காளம்மன் கோவில்!" என்றாள்.

"ஓக்கே! சரியா அஞ்சரை மணிக்கெல்லாம் வந்துடு. வச்சிடட்டுமா?"

''ம்...'' என்று கூறி வைத்து விட்டாள்.

''என்ன பூரணி! நெர்வஸாயிட்டே? யார்கிட்டேர்ந்து போன்?'' என்றாள் சுதா.

''சிவகுமார்!''

''வாவ்! ஏன்டி என்னை ஒரு வார்த்தை இன்ட்ரடியூஸ் பண்ணி வச்சியா? நானும் ரெண்டு வார்த்தை பேசியிருப்பேன் இல்லே?''

''ஆமா... அவர் ரஜினிகாந்த்! அவர்கிட்டே உன்னை அறிமுகம் செய்து வைக்கிறேன்.''

''ரஜினிகாந்தைவிட கிரேட் மேன்தான்டி சிவகுமார். சினிமாவுல எல்லாம் வெறும் நடிப்பு! ஆனா, சிவகுமார் செயல்ல தான் ஒரு ஹீரோங்கறதை நிரூபிச்சிட்டார். ஒரு விடோவுக்கு வாழ்க்கை குடுக்கறதுக்கு மகத்துவமான மனசு வேணும். அது அவர்கிட்டே இருக்கு!''

''போதும் சிவகுமார் புராணம்!''

''ஏன்தான் இவ்வளவு கோபம் வருதோ? என்ன... அவரோட கோவிலுக்குப் போறியா?''

''ம்.. தனியா கோவிலுக்கு போய் ஒரு அரை மணிநேரம் பிராகாரத்துல உட்கார்ந்துட்டு வரணும்னு நினைச்சேன். பூஜை வேளையில கரடி வரப்போகுது!'' அலுத்துக் கொண்டாள் பூரணி.

''ஆமா... நீ எதுக்கு கோவிலுக்குப் போகணும்னு நினைச்சே?''

''வருஷா வருஷம்... இதே நாள்ல நான் கோவிலுக்குப் போவேன்! இன்னைக்கு மகேஷோட பிறந்த நாள்!''



சுதா அவளையே சில கணங்கள் சங்கடமாய்ப் பார்த்தாள்.

''பூரணி... சொல்றேன்னு தப்பா நினைக்காதே! நீ கொஞ்சம் கொஞ்சமாய் மகேஷை மறக்கறது நல்லதுன்னு தோணுது!''

''எப்படி... எப்படி சுதா? புதுசா ஒரு உறவைக் கொண்டு வந்து மகேஷை மறக்கடிக்கணும்னு எல்லாரும் ஒண்ணு சேர்ந்து கங்கணம் கட்டிக்கிட்டு டார்ச்சர் பண்ணப் பண்ண எனக்கு மகேஷோட நினைவு இன்னும் அதிகமாய்ட்டுதான் இருக்கு! என்னால என் மகேஷை மறக்க முடியாது சுதா! சிவகுமாரோட சந்தோஷமா வாழ முடியாதுங்கறதும் சத்தியமான நிஜம்!''

''காலம்தான் எல்லாத்துக்கும் சிறந்த மருந்து! நீ முயற்சி பண்ணினா முடியாதது எதுவுமில்லே! பழைய மண்ணு மேல புது மண்ணைப் போட்டு மூடினாதான் கட்டிடம் கட்ட முடியும்.''

''மகேஷ் மண்ணில்லே! காற்று! நான் விடற சுவாசக் காற்று!'' என்றாள், பூரணி - அழுத்தமான குரலில்.

★ ★ ★

**கோ**விலில் கூட்டம் அதிகமில்லை!

வேண்டுமென்றே இவள் தாமதமாகத்தான் கோவிலுக்குச் சென்றாள்.

வாசலிலேயே காத்திருந்தான் சிவகுமார். இதற்கு முன் ஒருமுறை அவன் அம்மாவோடு இவள் வீட்டிற்கு மரியாதை நிமித்தமாக வருவதுபோல் பெண்பார்த்துவிட்டுப் போகும் போது பார்த்தது.

''ஏன் லேட்?'' என்று அவன் கேட்பான் என எதிர்பார்த்தாள்.

ஆனால், அவனோ இவளைப் பார்த்ததும் முகம் மலர வரவேற்றான்.

''வெல்கம் பூரணி!''

பூரணி அமைதியாய் அவனோடு நடந்தாள்.

பைக்கை ஒரு ஓரமாய் விட்டுவிட்டு செருப்பை வாசலில் கழற்றிவிட்டு அருகேயிருந்த ஒரு கடையில் தேங்காய் பழக்கூடை ஒன்றை வாங்கினான் சிவகுமார்.

பூரணியும் ஒரு அர்ச்சனைத் தட்டை வாங்கினாள்.

''ஏன் பூரணி? அதான் நான் வாங்கிட்டேனே! நீ வேற ஏன் தனியா ஒண்ணு வாங்கறே?'' என்றான் ஆச்சர்யமாய்.

''இல்லே... நான் தனியா அர்ச்சனை பண்ணணும்!''

''அப்ப சரி!'' என்று நடந்தான்.

சிவகுமார் முதலில் அர்ச்சனைத் தட்டோடு அழைப்பிதழ் களையும் வைத்து அர்ச்சகரிடம், ''அம்மன் பாதத்தில் வைத்துத் தாருங்கள்!'' என்று கேட்டான். அவரும் அர்ச்சித்துத் தந்த பின், பூரணி அர்ச்சகரிடம், ''பேரு மகேஷ்! சிவகோத்திரம், பூரட்டாதி நட்சத்திரம்!'' என்று கூறவும் சிவகுமார் அவளை உற்றுப் பார்த்தான்.

கை குவித்துச் சேவித்த பூரணியின் மூடிய கண்களிலிருந்து கசிந்த கண்ணீரையும் பார்க்கத் தவறவில்லை அவன்.

அர்ச்சனை முடிந்த பின் பிராகாரம் சுற்றி ஒதுக்குப் புறமாய் அமர்ந்தனர்.

''உங்களுக்கு ஷாக்காயிடுச்சா? செத்தவருக்கு அர்ச்சனை பண்றாளேன்னு? இன்னைக்கு மகேஷோட பிறந்த நாள். அவரோட ஆத்ம சாந்திக்காக அர்ச்சனை பண்ணினேன்!'' என்றாள் அவளாகவே.



''அப்படியா?'' என்றபடி அர்ச்சனைத் தட்டிலிருந்த வாழைப்பழத்தில் ஒன்றை எடுத்து அவளிடம் தந்துவிட்டுத் தான் ஒன்றைச் சாப்பிட்டான்.

''மகேஷ்! வெரி நைஸ் மேன்! குறும்புத்தனம் ஜாஸ்தி! ஏறுக்குமாறா பேசிடுவார். அப்புறம் அவரே வந்து மன்னிப்புக் கேட்பார்!''

''ஓஹோ!''

''மகேஷை நீங்க பார்த்ததில்லே, இல்லையா? வெரி ஸ்மார்ட்! அதே சமயம் ரொம்ப பொஸஸிவ்! நான் ஒரு நடிகரைப் பிடிச்சிருக்கு, அழகாயிருக்காரேன்னு ஒரு வார்த்தை சொல்லிடக்கூடாது. கோபம் வந்துடும். ரெண்டு, மூணுநாள் பேசவேமாட்டார். அந்த பொஸஸிவ், கோபம் இதையெல்லாம் நான் அணு அணுவா ரசிப்பேன். ஐ லவ் ஹிம்! ஐ லவ் ஹிம் ஸோ மச்! எனக்குப் பிடிச்ச மாதிரி கடவுளுக்கும் அவரை ரொம்ப பிடிச்சுப் போயிடுச்சி போலிருக்கு!

''மகேஷ் என்கிட்டே இருக்கட்டும்னு அழைச்சிக்கிட்டார். எப்படியெல்லாமோ வாழ ஆசைப்பட்டார். பட், எதுவுமே நிறைவேறாம போயிடுச்சி!''

பூரணி பாட்டிற்கு மகேஷைப் பற்றிப் பேசிக் கொண்டே யிருந்தாள். சிவகுமார் அமைதியாக, குறுக்கே பேசாமல், புன்னகை மறையாத முகத்தோடு அவள் பேசுவதைச் செவிமடுத்துக் கொண்டிருந்தான்.

''எனக்கொரு குணம்! என்னால் எதையும் அவ்வளவு எளிதா மறந்துவிட முடியாது. ஒரு பொருளையோ, அல்லது

நபரையோ பிடிக்கலேன்னா... கடைசிவரைக்கும் அதுக்கிட்டே நெருங்கவேமாட்டேன். அதே மாதிரி ஒருத்தரைப் பிடிச்சிப் போச்சின்னா... நான் சாகறவரைக்கும் அவரை மறக்க மாட்டேன்.''

முதல் முறையாய் வாயைத் திறந்து பேசினான் சிவகுமார்.

''இந்த விஷயத்திலே நானும் உன்னை மாதிரிதான் பூரணி! இந்த உலகத்திலேயே எனக்குப் பிடிச்சவங்கன்னு சொல்லிக்கணும்னா... ரெண்டே ரெண்டு பேரை மட்டும்தான் சொல்லுவேன். ஒண்ணு எங்கம்மா! ரெண்டாவது...'' என்று சொல்லி நிறுத்தி அவள் கண்களை ஊடுருவிப் பார்த்தான்!

''ரெண்டாவது... நீ!'' என்றான்.

பூரணி அவனை ஆச்சர்யமாய்ப் பார்த்தாள்.

''நா... நான் மகேஷை இன்னமும் நேசிக்கிறேன். அவரை என்னால மறக்க முடியாது. நான் ஒரு மணி நேரம் பேசினா... அதுல அம்பத்தஞ்சு நிமிஷம் மகேஷைப் பத்திதான் பேசுவேன். அதை என்னால தவிர்க்க முடியாது. இது... இதெல்லாம் உங்களுக்கு உறுத்தலா இருக்காதா?''

''அன்பால சாதிக்க முடியாததுன்னு இந்த உலகத்துல ஏதாவதொன்னு இருக்கா? எனக்கு எந்த உறுத்தலுமில்லே. வருத்தமுமில்லே! நீ அடிபட்டிருக்கே! உனக்கு ஆறுதல் வேணும். அவுட் லெட் வேணும். மகேஷைப் பத்திய நினைவு உனக்குள்ளே அதிகமாயிருக்கு. அதை அப்படியே மனசுக்குள்ளேயே பூட்டி வைக்கறதுதான் தப்பு! நீ பேசணும். பேசிப் பேசிதான்... எல்லாத்தையும் கரைக்கணும். நீ அம்பத்தஞ்சு நிமிஷம் மகேஷைப் பத்தி பேசறது குறித்து கவலையில்லே. ஆனா, மீதியிருக்கிற அஞ்சு நிமிஷம் போதும்



பூரணி. நான் என்னைப் பத்தி பேச வைப்பேன். ஏன்னா, என் அன்பும் நிஜமானதுதான்!''

''..........''

''தாம்பத்ய உறவு மட்டுமே கணவன், மனைவியா நிர்ணயிச்சிட முடியாது! தோழன், தோழியாகவும் மனசுவிட்டு பழகணும். நான் ஒரு நல்ல தோழனாகவும் இருப்பேன் பூரணி! சரி... வேற டாபிக் பத்தி பேசுவோம். நீ தனியா கார்டு எதுவும் அடிச்சிடலியே! நானே உனக்கும் சேர்த்துதான் பிரிண்ட் பண்ணக் கொடுத்தேன். அதெல்லாம் நாளைக்குத் தர்றேன்னு சொல்லிட்டாங்க! அம்மா என் கல்யாணத்தை ராகவேந்திரா கல்யாண மண்டபத்துல நடத்தணும்னு ஆசைப்பட்டாங்க! ஆனா, உனக்கு அது விருப்பமில்லேங்கறதாலதான் சிம்ப்ளா கோவில்ல கல்யாணம். அசோகா ஹோட்டல்ல ரிசப்ஷன்னு தீர்மானம் பண்ணினாங்க. என் அம்மா ரொம்ப நல்லவங்க பூரணி! ஒரு ஸ்மால் ரிக்வெஸ்ட்!''

''என்ன?'' என்பது போல் பார்த்தாள்.

''எங்கிட்டே நீ எவ்வளவு நேரமானாலும் மகேஷைப் பத்தி பேசு. ஆனா, அம்மா எதிரே பேசாதே... ப்ளீஸ்...'' என்றான் தயவாய்.

அதைக் கேட்டு உள்ளுக்குள் ஏளனமாய் நகைத்துக் கொண்டாள் பூரணி.

## 5

வடபழனி ஆலயத்தில் திருமணம்! உறவினர்கள், முக்கிய நண்பர்கள் என்று சொற்பக் கூட்டம் குழுமியிருக்க, கெட்டி மேளம் முழங்க... சிவகுமார் பூரணியின் கழுத்தில் தாலி கட்டினான். அவன் கழுத்தில் மூன்று முடிச்சு போடும்போது பூரணி தன்

கழுத்தில் தூக்கு கயிறு இறுக்குவது போல துடித்துப் போனாள். "ஸாரி... மகேஷ்... ஸாரி மகேஷ்!" என்று அவள் உள்ளம் கதறியது.

அவள் கண்களிலிருந்து திரண்ட கண்ணீர் ஹோம குண்டத்தில் விழுந்து காணாமல் போனது.

பொம்மைபோல் அம்மா காலிலும், மாமியார் காலிலும் விழுந்து ஆசீர்வாதம் வாங்கினாள்.

அன்னம்மாளும் வந்திருந்தாள். ஒரு ஓரத்தில் நின்றிருந்த அவள் காலிலும் தேடிச் சென்று விழுந்து வணங்கினாள்.

பூரணியின் அண்ணன் சுரேந்திரன் சிவகுமாரின் கழுத்தில் செயினை அணிவித்தான்.

அதைப் பார்த்த பூரணியின் இதயம் வெதும்பியது.

மகேஷிற்குத் திருமணத்தின் போது அரைப் பவுனுக்கு ஒரு மோதிரம் போட்டதோடு சரி. இவனுக்கு மட்டும் நாலு பவுனில் சங்கிலியா?

நிஜத்தைச் சொல்லப் போனால், சுரேந்திரனுக்குப் பூரணி மகேஷை மணப்பதில் விருப்பமேயில்லை. அவனுக்கு சிவகுமார் பூரணியை மணக்க ஆசைப்படுகிறான் என்ற விஷயம்கூடத் தெரியாது. தன் தங்கையைச் சிவகுமாருக்கு மணமுடித்தால் நன்றாயிருக்குமே என்று நினைத்தான். அந்த சமயத்தில்தான் சிவகுமாரும் சுரேந்திரனிடம் பூரணியைப் பெண் கேட்டான்.

பழம் நழுவிப் பாலில் விழுந்த மகிழ்ச்சி சுரேந்திரனுக்கு.

அவனுக்குச் சிவகுமாரைப் பற்றி நன்றாகத் தெரியும். சிறு உயிரினத்திற்கும் தீங்கிழைக்காத மென்மையான குணம்,



பெண்கள் உரிமைபற்றி அவர்களை சப்போர்ட் பண்ணி பேசும் சமதர்ம பங்காளன், நல்ல வேலை, கை நிறையச் சம்பளம், பிக்கல் பிடுங்கல் இல்லாத குடும்பம், கம்பீரமான தோற்றம், எல்லாவற்றிற்கும் மேலாக அவனாகவே பூரணியை மணக்க ஆசைப்பட்டுக் கேட்கிறான். பூரணிக்கும் கண்டிப்பாய் இவனைப் பிடிக்கும். சிவகுமாரை எந்த விஷயத்திலும் குறை சொல்ல முடியாதே! அவனைப் போல் கணவன் கிடைக்க பூரணி ரொம்ப புண்ணியம் பண்ணியிருக்க வேண்டும்.

தன் ஒரே தங்கை மீது சுரேந்திரன் அளவற்ற பிரியம் வைத்திருந்தான். அவளை நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுத்து விட்டால், நிம்மதியாய் மூச்சு விடலாம்.

அதனாலேயே தன் மனைவி சினிமா, கடற்கரை என்று ஆசைப்பட்டு அழைத்தாலும்கூட அழைத்துச் செல்ல மாட்டான். வயது வந்த தங்கையின் மனம் ஏக்கப்படுமாம். தன்னைவிட அண்ணியின் மேல்தான் அண்ணனுக்கு பாசம் என்று நினைத்துவிடக் கூடாதாம்! அதற்காகத் தன் ஆசைகளையும் கட்டிப்போட்டுப் பரணில் எறிந்துவிட்டான். எல்லாமே பூரணி கல்யாணத்திற்குப் பிறகுதான் என்று!

அன்று சிவகுமாரைப் பற்றி வீட்டில் பேசிவிட வேண்டும் என்ற முடிவோடு சென்றான் சுரேந்திரன். ஆனால், அதே நாளில்தான் பூரணியும் மகேஷை பற்றிப் பேசினாள். இவன் மனதினுள் ஏமாற்றம் சூழ்ந்ததும் நிஜம். அதற்காக அவள் விருப்பத்திற்குத் தடை போட விரும்பவில்லை. சம்மதித்தான். மகேஷைச் சந்தித்துப் பேசியபோதுகூட இவன் சிவகுமாரைவிட எதில் உசத்தி என்றுதான் மனம் எடை போட்டது.

பூரணி தனக்கில்லை என்றறிந்த போது எழுந்த வேதனையைச் சாமர்த்தியமாய் மறைத்து விட்டான் சிவகுமார்.

"இட்ஸ் ஒக்கே சுரேன்! பூரணி மகேஷிற்குத்தான் என்று ஆண்டவன் எழுதி வைத்ததை நாம் மாற்ற முடியுமா? கண்டிப்பாய் உன் தங்கையின் கல்யாணப் பத்திரிகை எனக்கு வைக்கணும். சரியா?" என்று புன்னகை மாறாமல் பேசினான்.

எதுவென்று குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. ஆனால், ஏதோவொன்று மகேஷிடம் சுரேந்திரனுக்கு அன்னியோன்யம் ஏற்பட விடாமல் தடுத்தது.

அவன் இறந்து போனபோது இடிந்து போனான். தங்கைக்காகக் கண்ணீர் வடித்தான். அவள் வாழ்க்கை இப்படியாகிப் போனதே என்று தணலில் விழுந்த புழுவாய்த் துடித்துப் போனான்.

நாட்கள் கரையட்டும். காயங்கள் ஆறட்டும் என்று காத்திருந்த சிவகுமார். மறுபடி பூரணியின் திருமணம் பற்றிப் பேசியபோது... அதிர்ந்து போனான் சுரேந்திரன். அந்த நேரத்தில் சிவகுமார் ஒரு கடவுள் போலத்தான் தோன்றினான் அவனுக்கு.

எத்தனை ஆண்களுக்கு இது போன்று மனம் வரும்? சிவகுமார் அவன் மதிப்பில் மிக உயரத்திற்குப் போனான். தன் அன்பை, மரியாதையை அன்பளிப்பு மூலம் வெளிப்படுத்திக் கொண்டான். ஆனால், அதையும் தவறான கண்ணோட்டத்தில்தான் பார்த்தாள் பூரணி!

★ ★ ★

**சா**ந்தி முகூர்த்தம் பெண் வீட்டில் நடத்துவதுதான் சம்பிரதாயம். சாஸ்திரம், சம்பிரதாயம், நல்ல நேரமெல்லாம் பார்த்துச் செய்துதான் முதல் திருமணம் அப்படியாகிவிட்டதே! "சாந்தி முகூர்த்தம் எங்கள் வீட்டில் நடக்கட்டுமே!" என்று



விஜயலட்சுமி கேட்டபோது விசாலாட்சி தாராளமாய்ச் சம்மதித்தாள்.

இங்கே என்றால் பூரணி முரண்டு பிடித்து ஏடாகூடமாய் எதையாவது பேசி விடவும் செய்வாள். மாமியார் வீட்டில் என்றால் கொஞ்சம் பயமும், மரியாதையுமாய் அனுசரித்துப் போய் விடுவாள் என்று நினைத்துத் தலையாட்டிவிட்டாள்.

அதுவே பூரணியைக் கடுப்படிக்க வைத்துவிட்டது.

'எல்லோரும் ஒன்று சேர்த்து என் இதயத்திலிருந்து மகேஷை வழித்தெறிந்துவிடக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களை எப்படி அலற வைக்கப் போகிறேன் பார்!' என்று தனக்குத் தானே சபதம் எடுத்துக் கொண்டாள்.

சிவகுமாரின் வீடு!

சின்ன பங்களா என்று சொல்லலாம். அழகாய், கச்சிதமாய், சுத்தமாய் இருந்தது. வீட்டைச் சுற்றிலும் ஜன்னல். காற்றுக்கும், வெளிச்சத்திற்கும் குறைவில்லை. மாடி பால்கனியிலும், கீழே பால்கனியிலும் செடிகள் வளர்த்திருந்தது... அழகிற்கு அழகு சேர்த்தது. அதிலும் பூரணிக்கு மிகவும் பிடித்த அடர்த்தியான மஞ்சளில் பெங்களூர் ரோஜாவும் பூத்துச் சிரித்துக் கொண்டிருந்தது.

'அப்பாடா... வீடாவது ரசிக்கும்படியாய் இருக்கிறதே! இந்த மனிதர்களைப் போல் இல்லாமல்!' என்று சந்தோஷப்பட்டாள்.

முதலிரவு!

சிவகுமார் இவள் வருகைக்காகக் காத்திருந்தான். பூரணி அறைக்குள் நுழைந்தாள்.

முதலிரவுக்கான முஸ்தீபுகளான கட்டிலை மலர்களால் அலங்கரித்து வைக்கும் எந்த அலங்காரமுமின்றி தலையணை, போர்வை என்று கச்சிதமாய், சுத்தமாய் இருந்தது.

''வா... பூரணி!'' என்றழைத்த சிவகுமார் அவள் கண்களில் படிந்திருந்த ஆச்சர்யத்தைப் பார்த்து யூகித்துவிட்டான்.

''என்ன அப்படிப் பார்க்கிறே? கட்டிலைப் பூக்களால் அலங்கரிக்காம, பழம், பட்சணம் ஏதுமில்லாம வெறிச்சுனு இருக்கேன்னு பார்க்கறியா? நான்தான் வேண்டாம்னுட்டேன். அதுக்கு ரெண்டு காரணம் இருக்கு. ஒண்ணு மலர்கள் கசங்குவது எனக்குப் பிடிக்காது. ரெண்டாவது மத்தவங்க கற்பனை பண்ற மாதிரி, எதிர்பார்க்கிற மாதிரி இப்போதைக்கு நமக்குள்ளே தாம்பத்ய உறவு நடக்கப் போவதில்லை. நாம பேசிக்கிட்டுதான் இருக்கப் போறோம். இல்லையா? அதுக்காக...! பேசிப் பேசிக் களைப்படையறப்ப குடிக்கிற துக்குப் பால் வைக்கச் சொன்னேன். அதோ சூடா ஃப்ளாஸ்க்ல இருக்கு! உக்காரு பூரணி!'' என்றான் அதே புன்னகையுடன்.

பூரணி திறந்த வாய் மூடவில்லை.

'எமகாதகன்! பேசிப் பேசியே இவனைக் காய வைக்கணும் என்று நினைத்தால்... நமக்கு முன்பே இதையெல்லாம் எதிர்பார்த்து, முன்னெச்சரிக்கையாய்த் திட்டம் போட்டு, முன்னேற்பாடுடன் 'என் மீசையில் மண் ஒட்டாதே!' என்று கைகொட்டிச் சிரிப்பதைப் போலிருந்தது அவன் நடவடிக்கை.

பூரணிக்குத்தான் சப்பென்றாகிவிட்டது.

அமர்ந்தாள்.

''என்ன ஒண்ணுமே பேச மாட்டேங்கிறே?'' என்றான் இயல்பாய். அவன் முகத்தில் முதலிரவுக் கணவனுக்கே உரிய



எந்தவிதப் பதட்டமும் இல்லை. சுதா தன்னிடம் பேசுவது போலவே... இயல்பாய், மென்மையாய், நட்பாய்ப் பேசுவதைப் பார்த்ததும் திகைத்துப் போனாள்.

'நாம் நினைத்தபடி இவனை வெற்றி கொள்ள முடியாதோ? என் நடவடிக்கை இவனைக் காயப்படுத்தாதோ? எங்கே... இவன்தான் என் மனதிலிருப்பதையெல்லாம் படித்துவிட்டு அதற்கேற்றபடி சாமர்த்தியமாய் நடந்து கொள்கிறானே!'

''தாங்க்ஸ்!'' என்றாள்.

''எதற்கு?''

''எனக்கு விருப்பமில்லாத சில நிகழ்ச்சிகள் நடைபெறாம லிருக்க நீங்க செய்த உதவிக்கு!''

''முதல்ல உன் மனசில இருக்கிற பாரத்தைக் குறைக்கணு மில்லையா? அதுவும் பேசி... பேசி! அதுக்கு அதிகபட்சம் பத்து, பதினைந்து நாளாவது தேவைப்படும். அதுக்குப் பிறகு நிச்சயம் உன் மனசுல எனக்கும் ஒரு இடம் இருக்கும்ங்கற அசாத்திய நம்பிக்கைதான் இப்ப... இவ்வளவு பொறுமையை எனக்குக் கொடுத்தது!''

''தாங்க்ஸ்... ஆனா எனக்கு மனசுல உள்ள பாரம் குறையும்னு நம்பிக்கையில்லே!''

''எனக்கு இருக்கு!'' என்றான் அழுத்தமாக.

''இந்தக் கல்யாண மார்க்கெட்ல எத்தனையோ பெண்கள் உங்களுக்குக் கிடைச்சிருப்பாங்க! அவங்கள்ல ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்து மணக்காம, எதுக்காக என்னைப் போய்...''

''லவ்வனு வச்சுக்கயேன்!''

"என்னது லவ்வா?"

"யெஸ்... லவ்தான்! நான் ஒரு ஸன்டே உங்கண்ணனைப் பார்க்க உங்க வீட்டுக்கு வந்திருந்தேன். ஹால்ல உட்கார்ந்திட்டிருந்தேன். நீ எங்கேயோ அவசரமா வெளியே கிளம்பிட்டே! அந்த வேகத்துல என்னை நீ கவனிக்கலே. ஆனா நான் கவனிச்சேன். அந்தச் சில கணங்கள் எனக்குப் போதுமானதா இருந்தது. அப்பவே அந்த செகன்ட்லேர்ந்தே உன்னை லவ் பண்ண ஆரம்பிச்சிட்டேன்!"

"........!"

"சுரேந்திரன் கிட்டே உன்னைப் பெண் கேட்டேன். மறுநாள், 'மகேஷ்ங்கிற ஒருத்தரை அவ லவ் பண்றா. ஸாரி... சிவா!'ன்னு சொல்லிட்ட பிறகு, சத்தியமாய் அப்பவே உன்னை மறந்துட்டேன். ஆனா, ஆறே மாசத்துல அப்படியொரு ஆக்ஸிடன்ட் ஆகும்னு யார்தான் எதிர்பார்த்திருப்பா? ரொம்ப வருத்தப்பட்டேன். ஒருநாள் எதேச்சையா உன்னை ரோட்ல பார்த்தப்பதான், ஏன் பூரணியைக் கல்யாணம் பண்ணிக்கக் கூடாதுன்னு தோணிச்சு! இதோ, இப்ப நீ என் பக்கத்துல."

"முதல் முதலா வாழ்க்கையில நடக்கிற, ஏற்படுகிற சம்பவங்களைச் சாகறவரைக்கும் மறக்கவே முடியாதுன்னு சொல்வாங்க! முதல் முத்தம், முதல் காதல், முதல் கல்யாணம் இப்படி! அது மாதிரி மகேஷை என்னால முறக்க முடியாது!"

"என்னாலகூட உன்னை மறக்க முடியாது. ஏன்னா நான் காதலிச்ச ஒரே பொண்ணு நீ!"

"மகேஷ்க்கு என் மேல உயிர். எனக்கு லேசா தலை வலின்னாக்கூட துடிச்சிப் போயிடுவார். கிட்டத்தட்ட என்னோட டேஸ்ட் அப்படியே அவருக்கும் உண்டு. சாப்பாடு



விஷயத்திலேயும் சரி, இயற்கைய ரசிக்கிற விஷயத்திலேயும் சரி... எனக்கு யெல்லோ ரோஸ்னா ரொம்ப பிடிக்கும். மகேஷுக்கும் ரொம்ப பிடிக்கும். இப்படி நிறைய சொல்லிக் கிட்டே போகலாம்!"

"என்ன ஆச்சர்யம் பாரு! எனக்கும் மஞ்சள் ரோஜான்னா ரொம்ப பிடிக்கும். அதனாலதான் தேடிப்பிடிச்சி இந்த மஞ்சள் ரோஜாச் செடியை வாங்கி வந்தேன்! ஸோ இதிலேர்ந்து என்ன தெரியுது. உன் டேஸ்ட்டும், என் டேஸ்ட்டும்கூட ஒத்துப் போகுது, இல்லையா?" என்றான் சந்தோஷமாய்.

"..........!?"

"எனக்கு இப்ப ரொம்ப நம்பிக்கையிருக்கு பூரணி! ரொம்ப சீக்கிரத்துல, நீ ஒரு மணி நேரம் பேசினா, அதுல அம்பத்தி அஞ்சு நிமிஷம் என்னைப் பத்தி பேசுவே! பால் சாப்பிடறியா? ரொம்ப பேசிட்டோமில்லையா?"

"நோ தாங்க்ஸ்... எனக்குத் தூக்கம் வருது!" என்றபடி அவனை முறைத்துவிட்டு முதுகுகாட்டிப் படுத்துவிட்டாள்.

சிவகுமாருக்குச் சிரிப்புப் பொங்கிக் கொண்டு வந்தது.

'உன்னை நீயே ஏன் ஏமாத்திக்கிறே பூரணி! உனக்கும் என்னைப் பிடிச்சிருக்கு. அதை வெளிப்படுத்திக்க தயங்கறே! அதை மறைக்கப் படாத பாடுபட்டு எனக்கு வெறுப் பேற்றணும்னு சதா மகேஷைப் பற்றிப் பேசுகிறாய்! பேசு... எவ்வளவு வேணும்னாலும் பேசு! ஆனால் காலம் முழுக்கப் பேசிக் கொண்டிருக்காதே!' தனக்குள் எண்ணிக் கொண்டான்.

ஃபேன் காற்றில் சிலும்பிய பூரணியின் தலைமுடியைக் கோதிவிட வேண்டும் போல் தோன்றிய ஆசையை வெகுவாய்க் கட்டுப்படுத்திக் கொண்ட அவனும் படுத்துக் கொண்டான்.

## 6

பூரணி கண் விழித்த போது... அறையினுள் வெளிச்சம் கண்களைக் கூசவைத்தது. சிவகுமாரை யும் காணோம்.

டேபிள் மீதிருந்த அலாரத்தைப் பார்த்தாள்.

8.20 என்றது.

'காட்! இவ்வளவு நேரமா தூங்கி விட்டேன்?'' பரபரவென்று எழுந்து கொண்டாள்.

சாதாரணமாய் ஆறு, ஆறரை, அதிகபட்சம் ஏழுக்குள் எழுந்துவிடுவாள். இன்றென்ன வந்தது? அதுவும் பிறத்தியார் வீட்டில்?

'இது பிறத்தியார் வீடா?' என்று மனதின் ஒரு மூலையில் கேள்வி எழாமலில்லை.

''எந்திரிச்சிட்டியா பூரணி? ரொம்ப அசதியா இருந்தா... படுத்துக்க... பாவம் நேத்தெல்லாம் ஹோமப்புகை, ரிசப்ஷன்ல மணிக்கணக்கா கால் வலிக்க நின்னபடி இருந்தது, எல்லாம் உன்னைக் கஷ்டப்படுத்தியிருக்கும். படுத்துக்க...'' உள்ளே வந்த விஜயலட்சுமி பரிவாய்ச் சொன்னாள்.

''இல்லே... வேண்டாம்!''

''சரி... காபி கொண்டு வரேன்! பிரஷ் பண்ணிக்க...'' விஜயலட்சுமி சமையற் கட்டுக்குள் நுழைய, பூரணி பாத்ரூம் நோக்கி நடந்தாள்.

அவள் பாத்ரூமில் நுழைய முற்படுகையில் கதவைத் திறந்து தலையைத் துவட்டியபடி வெளிப்பட்ட சிவகுமார் அவள்மீது மோதிக் கொண்டான்.



''ஸாரி...'' என்றபடி இருவரும் திடுக்கிட்டு நிமிர்ந்தனர்.

இருவரும் கவனிக்கவில்லை.

பூரணி அவனுக்கு வழிவிட்டு ஒதுங்கினாள்.

''குட் மார்னிங் பூரணி!'' என்றான்.

''.........''

''பதிலுக்கு சொல்றது ஃபார்மாலிட்டி! பட் நமக்குள் அந்த போலித்தனமான மரியாதை வேண்டாமென்று நீ நினைப்பது... எனக்குப் பிடிச்சிருக்கு!'' என்று அவள் மௌனத்திற்குத் தானே ஒரு காரணத்தைக் கூறிக் குறும்பாய்ச் சிரித்தபடி அகன்றான்.

அவன் முதுகை எரித்து விடுவதைப் போல் பார்த்த பூரணி பாத்ரூமிற்குள் நுழைந்துவிட்டாள்.

★ ★ ★

குளித்து முடித்து ஒரு பாலிகாட்டன் சேலையை உடுத்திக் கொண்டு சமையலறைக்குள் நுழைந்தாள் பூரணி.

விஜயலட்சுமி சமையலில் பிஸியாக ஈடுபட்டுக் கொண்டிருந்தாள்.

இவள் வருவதைப் பார்த்ததும் முகம் மலர, ''வாம்மா! ஒரு பத்து நிமிஷம் பொறுத்துக்க. இதோ வந்துட்டேன்,''என்றாள்.

''நான் ஏதாவது ஹெல்ப் பண்ணட்டுமா?'' ஒரு மரியாதைக்குக் கேட்டாள்.

''உனக்கெதுக்கு அந்த வேலையெல்லாம்? இன்னைக்கு மட்டுமில்லே, என்னைக்குமே இந்த வேலை உனக்கு வேண்டாம். நான் உயிரோடு இருக்கும் காலம் வரைக்கும் என்

பிள்ளைக்கும், மருமகளுக்கும் என் கையாலேயே சமைச்சு உட்கார வச்சு பரிமாறுவேன். நீங்க ரெண்டு பேரும் வேலைக்குப் போய் வர்ற பிள்ளைங்க. அங்கேயும் கஷ்டப்பட்டு இங்கேயும் வந்து கஷ்டப்படணுமா? ஆனா, நீ வேலைக்குப் போறதில் எனக்கு இஷ்டமில்லை பூரணி! உன்கூட மணிக் கணக்கா பேசிக்கிட்டே இருக்கணும்னு ஆசையா இருக்கு. ஆனா, முடியுமா? பழையபடி சுவத்தை வெறிச்சுப் பார்த்துக் கிட்டுதான் காலத்தை ஓட்டணும்!'' தன் மன ஆதங்கத்தைப் பெருமூச்சுடன் சொல்லி முடித்தாள்.

பூரணி பதில் கூறாமல் அமைதியாய் இருந்தாள்.

பதில் வராது போகவே விஜயலட்சுமி நிமிர்ந்து அவளைப் பார்த்தாள்.

''ஏம்மா, ஒண்ணும் பேச மாட்டேங்கிறே? இந்த வீட்ல கலகலன்னு பேச்சுச் சத்தம் கேட்டுக்கிட்டே இருக்கணும் பூரணி! இது உன் வீடு! எதையும் மனசுல போட்டுக் குழப்பிக்காதே! உனக்கு இடியாப்பம் பிடிக்கும்தானே?''

''ம்... பிடிக்கும்!''

''இடியாப்பம், தேங்காய்ப்பால், வெண் பொங்கல், வடை, இட்லி, குருமா எல்லாம் ரெடியாய்டுச்சு, குருமாவைத் தாளிச்சுக் கொட்டிட்டா வேலை முடிஞ்சுது!''

''எல்லாம் நீங்க தனியாவா செஞ்சீங்க?'' என்றாள் பிரமிப்புடன்.

''இதென்ன பெரிய விஷயமா? ஒரு கல்யாணத்துக்கே நிமிஷத்துல சமைச்சுடுவேன். கண் பார்த்தா, கை வேலை செஞ்சிட்டுப் போகுது!''



''ஆச்சர்யமாயிருக்கு!'' என்றாள் விழியகல.

''அப்பாடா... ஒரு வழியா என் மருமக இரண்டு வார்த்தை பேசிட்டா...'' என்று சிரித்தாள்.

அப்போதுதான் தன்னைமீறிப் பேசிவிட்ட தன் தவறு புரிந்தது பூரணிக்கு.

''என் மாமியார்கூட இப்படித்தான். ரொம்ப நல்லா வித விதமா சமைப்பாங்க! அவங்க பிரியாணி சமைச்சாங்கன்னா தெருவே மணக்கும். அன்னைக்கு மகேஷ் பெரிய ஹாட் பேகிலே பிரியாணியை அடைச்சு ஆபீஸ்க்கு எடுத்துக்கிட்டுப் போவார். ஏன்னா, என் மாமியார் செய்யற பிரியாணிக்கென்று அவர் ஆபீஸ்ல ரசிகர்கள் உண்டு! நான் வெஜிடேரியன் சாப்பிட்டே பழக்கமில்லாத நானே நான் வெஜ் சாப்பிட ஆரம்பிச்சிட்டேன்னா பார்த்துக்குங்க!'' பூரணி கண்கள் மின்னப் பேசப் பேச விஜயலட்சுமி அசந்து போய் அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''நீ பிரியாணிக்கே இவ்வளவு ஆர்ப்பாட்டம் பண்ணினா எப்படி? எங்கம்மா செய்யற புலாவையும், மட்டன் குருமாவையும் சாப்பிட்டிருந்தா... இப்படிப் பேசியிருக்க மாட்டே! என்ன ஒண்ணு, என்னால ஹாட்பேகிலே அடைச்சு அதை வேற ஆபீஸ்க்கு தூக்கிட்டு ஓடணுமாங்கற சோம்பல்! பட், என் நண்பர்களை வீட்டுக்கே வரவழைச்சு அடிக்கடி விருந்து வைக்கறதுண்டு! அம்மா! பசிக்குது, ரெடியா?'' என்று அறை வாயிலில் வந்து நின்றபடி பதில் தந்தான் சிவகுமார்.

பூரணியின் முகம் கூம்பிப் போனது.

டைனிங் டேபிளில்கூட அவள் அமைதியாகவே சாப்பிட்டாள். சிவகுமாரே கூடத் தான் அப்படி மூக்கை

உடைப்பதைப் போல் பேசியிருக்கக் கூடாதோ என்று வருத்தப்பட்டான்.

விஜயலட்சுமிகூட மகனைத் தனிமையில் கண்டித்தாள்.

''என்ன சிவா... நீ ஏன் அப்படிப் பேசினே? எதையும் லேசுல மறந்துட முடியாதுப்பா! ஆறு மாசம் புகுந்த வீட்ல இருந்தவளாச்சே! விட்டுக் கொடுத்துட முடியாது. அப்படி பாராட்டற குணம் எத்தனை மருமகள்கிட்டே இருக்கு? பூரணி ரொம்ப நல்ல பொண்ணுப்பா! அவ ஒண்ணும் சொல்லிடலியே! இதைவிட அது நல்லாருக்கும். அதைவிட இது நல்லாருக்கும்னு எடை போடற குணம் மனுஷாள் எல்லோருக்கும் உண்டு. இதைப் போய்ப் பெரிசு பணணிக் கிட்டு.....'' என்றாள்.

அன்றிரவு வெட்கம் பாராமல் பூரணியிடம் மன்னிப்புக் கேட்டான்.

''ஸாரி பூரணி! காலைல நான் கொஞ்சம் வேகமா பேசிட்டேன். அம்மா நல்லவங்க பூரணி! எனக்காக ரொம்ப கஷ்டப்பட்டவங்க. எனக்கு மூணு வயசு முடியறதுக்குள்ளே அப்பா இறந்து போய்ட்டார். என்னைச் சமூகத்தில் மதிப்புள்ள மனுஷனா உருவாக்கின சிற்பி எங்கம்மாதான்! அவங்க கொஞ்சம் முகம் சுருங்கினாகூட என்னால தாங்கிக்க முடியாது. நீ என்கிட்ட எவ்வளவு வேணும்னாலும், எதைப்பத்தி வேணும்னாலும் பேசு. ஆனா, அவங்க எதிரே பேசாதே! உன் விருப்பு வெறுப்புகளைக் காட்டிக்காதே!''

''ரொம்ப கஷ்டம்!'' என்றாள்.

''என்னது?''



''ஒரே ஒரு நாள்தான் போயிருக்கு. என்னைச் சமாளிக்க உங்களால முடியாது. வேலியில போற ஓணானை வலிய எடுத்துக் காதுக்குள்ளே விட்டுக்கிட்டது உங்க தப்பு!''

''எனக்குப் பிடிக்காத எந்த விஷயத்திலேயும் நான் இறங்கினதில்லே பூரணி! உன்னை என்னால புரிஞ்சுக்கவே முடியலே! நான் உன்னை நேசிக்கிறேன். உயிருக்குயிரா காதலிக்கறேன். ஆனா, நீ ஏன் புரிஞ்சுக்க மாட்டேங்கிறே பூரணி?'' என்றான் நெகிழ்ச்சியாய்.

''பிகாஸ்... ஐ ஸ்டில் லவ் மகேஷ்! இந்தக் கல்யாணம்கூட கட்டாயக் கல்யாணம்தான்! என்னால மகேஷை மறக்க முடியலையே... என்னைப் புரிஞ்சுக்குங்க! ஏற்கெனவே கல்யாணமாகிக் கணவனை இழந்த பெண்ணை வற்புறுத்தி அவள் கழுத்தில தாலியைக் கட்ட வச்சிட்டா மட்டும், எல்லாத்தையும் மறந்து வாழ்ந்திட முடியுமா?''

''ஏன் முடியாது? என்னையும் மகேஷ் போல நினைச்சுக்க!''

''நோ... மகேஷ் இஸ் மகேஷ்! ஒருத்தர் இடத்தை இன்னொருத்தரால நிரப்ப முடியாது. இப்பக்கூட மோசம் போயிடலே! நான் உங்களுக்கு விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்திடறேன்... நீங்க வேற ஒரு பொண்ணை...''

''ஸ்டாப் திஸ் நான்சென்ஸ்! என்ன பேசறோம்னு புரிஞ்சுதான் பேசறியா? அம்மா தாயே... நீ எந்த ஆலோசனையும் எனக்குச் சொல்ல வேண்டாம். ரொம்ப அழகான ஒரு சேலையை ஆசைப்பட்டு வாங்கி உடுத்திக்கறே! இன்னொரு நாள் அதைவிட அழகா, தரமா சேலை இருந்தா வாங்கி உடுத்திக்க மாட்டியா? மகேஷ் நல்லவர்தான். இல்லேங்கலே. நானும் நல்லவன்தான். ப்ளீஸ்... ப்ளீஸ்

அன்டர்ஸ்டான்ட் மீ...! உனக்கு என்னைப் பிடிச்சிருக்கு. அதை வெளிக்காட்டிக்க ஈகோ தடுக்குது. எனக்குத் தெரியும். அந்த ஈகோவை ஒழிச்சிக் கட்டிட்டு ஒருநாள் என்கிட்டே வருவே! அப்ப புரிஞ்சுப்ப இந்த சிவகுமார் பத்தி! ஓக்கே... டைமாயிடுச்சி, தூங்கு... குட்நைட்!'' என்று தரையில் பெட்ஷீட்டை விரித்துப் படுத்துக்கொண்டான் சிவகுமார்.

படபடவென்று அவன் இப்படிப் பொரிந்து தள்ளுவான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

★ ★ ★

''அடடே... அத்தை... வாங்க... வாங்க! இப்பத்தான் இந்த மருமகளைப் பார்க்க வழி தெரிஞ்சுதா?'' குரலில் ஆச்சர்யம் வழிய வரவேற்றாள் பூரணி.

''யாரது வந்திருப்பது?'' என்றறிய ஹாலில் எட்டிப் பார்த்தாள் விஜயலட்சுமி.

அன்னம்மாள்தான் கூடை நிறையப் பழங்களைச் சுமந்தபடி வந்து கொண்டிருந்தாள்.

''எப்படியிருக்கே பூரணி? நல்லார்க்கியாம்மா?'' தவிப்புடன் அருகே வந்து அணைத்துக் கொள்கிறாள் அன்னம்மாள்.

''ம்... இருக்கேன்... அத்தை!'' என்றாள் சலிப்பான குரலில்.

''வாங்கம்மா...'' விஜயலட்சுமி வரவேற்றாள்.

''என்னம்மா இது, கூடை நிறையப் பழம் அது இதுன்னு...''

''ஏம்மா... என் மருமகளுக்கு நான் வாங்கிட்டு வரக் கூடாதா?'' என்று சிரித்தபடி இயல்பாய்க் கேட்டவள் சட்டென்று நாக்கைக் கடித்துக் கொண்டாள்.



5426619

''மன்னிச்சிடுங்க... பழக்கதோஷம்! அவ இப்ப இந்த வீட்டுப் பொண்ணாயிட்டா!''

''இதிலென்னம்மா தப்பிருக்கு? அவ உங்களுக்கும் மருமகதானே? பாருங்க... வந்தோம், பார்த்தோம்னு உடனே கிளம்பிடாதீங்க. சாப்பிட்டுட்டுதான் கிளம்பணும். சரியா?''

''சரிம்மா...'' என்று சிரித்தாள் அன்னம்மாள்.

''பூரணி... அத்தைய உன் ரூமுக்கு அழைச்சிட்டுப் போம்மா... இதோ நானும் சமையலை முடிச்சிட்டு வந்திடறேன்.''

''வாங்க அத்தை!'' என்று தன்னறைக்குள் அழைத்துப் போனாள் பூரணி.

அன்னம்மாளுக்கு அங்கு இருக்கவே என்னவோ போலிருந்தது. ஹாலில் சிவகுமார், பூரணியின் கல்யாணத்தின் போது எடுத்த போட்டோ லாமினேஷனில் பளபளத்தது. அதைப் பார்த்ததும் அன்னம்மாளின் நெஞ்சு கரித்தது. அவள் வீட்டு ஹாலிலும் மகேஷ் - பூரணியின் போட்டோ மாட்டப் பட்டிருக்கும். தன் வீட்டு மருமகள் தன் வீட்டு மகாலட்சுமி இன்னொரு வீட்டுக்குச் சொந்தமாகி விட்டாளே என்ற உண்மையை அவளால் ஜீரணிக்க முடியவில்லை. இந்த திருமணத்திற்குச் சம்மதிக்க வைக்கப் பூரணிக்குத் தானும் தூபம் போட்டதை எண்ணி இப்போது வருத்தப்பட்டாள்.

''அத்தை... நீங்க நல்லாருக்கீங்களா? அட்சயா எப்படி இருக்கா?

''சொல்றேன்... அதுக்கு முன்னாடி நீ ஒரு உண்மைய சொல்லு. சந்தோஷமாயிருக்கியா பூரணி!''

"என்னால உங்க பிள்ளைய எப்பவும் மறக்க முடியாது அத்தை. வேறெதையும் என்னைக் கேக்காதீங்க. ஆனா, ஒரே ஒரு உதவி மட்டும் செய்யுங்க. எனக்கு என்னோட கல்யாண ஆல்பம் வேணும்."

"உன் சந்தோஷம்தான்... என் சந்தோஷம். அடுத்த வாரம் மறுபடி வரும்போது... ஆல்பம் எடுத்துட்டு வர்றேன்!" என்றாள் மகிழ்ச்சியோடு.

'பரவாயில்லை. இவள் இன்னும் என் மகனை மறக்க வில்லை. அது போதும் எனக்கு!' என்று சந்தோஷப்பட்டாள்.

"தாங்க்ஸ் அத்தை! ஆமா ஏதோ சொல்லணும்னு சொன்னீங்களே!"

"ஆமாம் பூரணி! நம்ம அட்சயாவுக்கு ஒரு வரன் அமைஞ்சிருக்கு. எல்லாம் நல்லபடி முடிஞ்சது. அஞ்சு மாசம் கழிச்சி கல்யாணம் வச்சுக்கலாம்னு மாப்பிள்ளை வீட்லே சொல்லிட்டாங்க! நீ இருந்து நடத்தி வைக்க வேண்டிய கல்யாணம்... ஹூம்...!" என்று பெருமூச்சு விட்டாள்.

"ஏன் அத்தை பெருமூச்சு விடறீங்க? எவ்வளவு பெரிய சந்தோஷமான விஷயத்தைச் சொல்லியிருக்கீங்க! இப்ப மட்டும் என்ன? நானிருந்துதான் நடத்தி வைக்கப் போகிறேன். என் பங்குக்கு நான் என்ன செய்யணுமோ, அதைச் செய்வேன்! கவலையேபடாதீங்க!" என்றாள் சிவகுமாரை மேலும் அலைக்கழிக்க ஒரு துருப்புச் சீட்டு கிடைத்த மகிழ்ச்சியில்.

## 7

"இல்லை... இனியும் என்னால பொறுத்துப் போக முடியாது. எனக்கு இங்கிருக்கப் பிடிக்க வில்லை. உங்க யாரையும் பிடிக்கவில்லை. நான் மகேஷ் வீட்டிற்கே போய் விடுகிறேன்!" என்று கதறியழ ஆரம்பித்தாள் பூரணி.



செய்வதறியாது திகைத்துப் போன சிவகுமார், "பூரணி! காம் டவுன்! உனக்கென்ன பைத்தியமா பிடித்துவிட்டது? மகேஷை நீ மறந்துதான் ஆகவேண்டும். நான் உன் புருஷன். நீ இங்குதான் இருந்தாக வேண்டும்!" என்றான்.

"கழுத்திலே தாலி கட்டிட்டா மட்டும் கணவனாகிவிட முடியாது. அப்படியொரு எண்ணமிருந்தா... இந்தா நீ கட்டின தாலி!" பூரணி ஆவேசமாய்த் தாலியை இழுத்து அறுக்க முற்பட... ஒரு கையால் அவள் கையைத் தடுத்து, மறுகையால் பளார் என்று அறைந்தான் சிவகுமார்.

அவன் அடித்த அடியில் சுழன்று போய்ச் சுவரில் மோதிக் கொண்டாள். பூரணியின் நெற்றியிலிருந்து குபு குபுவென இரத்தம் பெருக... மயங்கிக் கீழே விழுந்தாள்.

திடுக்கிட்டு எழுந்து கொண்டான். உடம்பெல்லாம் வியர்த்திருந்தது. நடந்த சம்பவம் அத்தனையும் கனவு என்று புரிந்து கொள்ளச் சில கணங்கள் தேவைப்பட்டன.

'சே... என்ன மோசமான கனவு!' சிலிர்த்துக் கொண்டவன் அப்போதுதான் பார்த்தான். பூரணி படுக்கையில் இல்லை.

திரும்பினான்.

டேபிளில் விளக்கை எரியவிட்டு எதையோ புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள் பூரணி.

ஆச்சர்யமாய் எழுந்து அருகே போனான்.

மகேஷ்-பூரணியின் திருமண ஆல்பம்.

"பூரணி... தூங்கலே?" என்றான்.

திடுக்கிட்டுத் திரும்பினாள் பூரணி.

கன்னங்களில் கண்ணீர்க் கோடு போட்டிருந்தது.

திகைத்துப் போனான் சிவகுமார்.

'அழுகிறாளா என்ன? நிலைமை விபரீதமாய் போவதற்குள் ஒரு வழிக்குக் கொண்டு வந்தாக வேண்டும்.

★ ★ ★

"என்ன பூரணி... சரியாக்கூடச் சாப்பிடலே... அதுக்குள்ளே எந்திரிச்சிட்டே?" விஜயலட்சுமி அவளின் கையமர்த்தி மறுபடி உட்கார வைக்க முயன்றாள்.

"இல்லே, போதும்! ஆபீஸ்க்கு வேற டைமாய்டுச்சி!" பூரணி கை கழுவ நழுவிப் போனாள்.

"என்ன சிவா... வரவர அவ சரியாவே சாப்பிட மாட்டேங்கறா! என்கிட்டேயும் முகம் கொடுத்துப் பேச மாட்டேங்கறா. மனசுக்குள்ளே எதையோ போட்டு உழப்பிக்கிட்டு தன்னைத்தானே கஷ்டப்படுத்திக்கறா!" என்றாள் கவலை அப்பிய முகத்துடன்.

"விடும்மா... எல்லாம் தன்னால சரியாப் போய்டும். சட்னி போடு!"

"உன்கிட்டேயாவது சந்தோஷமா பழகுறாளா சிவா?"

"ஏம்மா... அதிலென்ன சந்தேகம்? நீயா எதையாவது கற்பனை பண்ணிக்காதே!"

"இல்லப்பா... புது வீடு, புது மனுஷாள்னு பேச, பழகத் தயங்கறான்னு சொல்லலாம். அதுக்காக மூணு மாசமாகவா?"

"அவ கொஞ்சம் மூடி டைப்! அப்படித்தான் இருப்பா. இன்னும் கொஞ்சம் நாளானா சரியாய்டுவா!"



"மூடி டைப்னா... அந்த அன்னம்மாள் வந்தா மட்டும் அருவி கொட்டறா மாதிரி சிரிச்சிப் பேசறா. என்கிட்டே பேசமாட்டேங்கறா. நான் என்னப்பா குறை வைச்சேன்?"

அம்மாவின் ஆதங்கம் சிவகுமாரையே கலங்கடித்தது.

"சரிம்மா... நானும் கிளம்பறேன். நேரமாச்சு!"

"பூரணியையும் உன் பைக்லே ஏத்திக்கிட்டு அவ ஆபீஸ்லே விட்டுடேன்!"

"நானும் கேட்டாச்சு. உங்க ஆபீஸ் மைலாப்பூர்ல, என் ஆபீஸ் நுங்கம்பாக்கத்துல. என்னை ட்ராப் பண்ணிட்டு நீங்க எப்ப போய்ச் சேர்றதுன்னு கேக்கறா. அவ சொல்றதும் சரிதானே?" பச்சைப் பொய் சொன்னான்.

"எல்லாத்துக்கும் ஒரு காரணம் வச்சிருக்கீங்க, ரெண்டு பேரும்... என் வாயடைக்க. புதுசா கல்யாணமானவங்கன்னா, சினிமா, பார்க், பீச்சுன்னு போக மாட்டாங்களா? கேட்டா... நேரமில்லேன்னு பாட்டுப் பாடறீங்க. ஆனா, இப்ப நான் சொல்றதை நீங்க ரெண்டு பேரும் கேட்டுத்தான் ஆகணும். ரெண்டு பேரும் ஒரு வாரம் லீவு போட்டுட்டு ஊட்டி, கொடைக்கானல்னு போய்ட்டு வாங்க! குண்டுச் சட்டியிலேயே குதிரையை ஓட்டிக்கிட்டிருந்தா... அவளுக்கும் வெறுப்பு வரத்தானே செய்யும்?"

அந்த ஐடியா சிறந்ததாகத் தெரியவே, 'இப்பவே டிக்கெட் ரிசர்வ் பண்ணிடறேம்மா..." என்றான் குஷியாக.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த பூரணியின் முகம் மாறியது.

★ ★ ★

நிலவில்லாத தைரியத்தில் நட்சத்திரங்கள் வான வீதியில் கண்சிமிட்டி விளையாடிக் கொண்டிருந்தன.

பூரணி ஜன்னலிலிருந்து பார்வையை நகர்த்திப் படித்துக் கொண்டிருந்த சிவகுமாரைப் பார்த்தாள்.

ஆத்திரமாய் வந்தது.

'என்னிடம்கூட ஒரு வார்த்தை கேட்காமல், கொடைக்கானல் செல்ல டிக்கெட் ரிசர்வ் பண்ணிவிட்டு வந்திருக்கிறான். அத்தனை இளப்பமாகப் போய் விட்டேனா நான்?'

''உங்ககிட்டே பேசணும்!'' என்றாள் அவன் முன் நின்று.

புத்தகத்திலிருந்து பார்வையை எடுத்து நிமிர்ந்து பார்த்தான்.

''பேசு பூரணி! என்ன விஷயம்?''

''யாரைக் கேட்டுக் கொடைக்கானல் போக டிக்கெட் ரிசர்வ் பண்ணீங்க?''

''அம்மாவோட ஐடியா அது. என்றாலும், என்னோட ஆசையும் இதிலே அடக்கம்! இட மாற்றம் மன மாற்றத்திற்குச் சிறந்த மருந்துன்னு சொல்வாங்க! நீ மனசு மாறணுங்கறது தானே என்னோட தவமே! ப்ளீஸ் பூரணி! கண்டிப்பா வந்துதான் ஆகணும். இல்லேன்னா, அம்மா மனசொடிஞ்சு போயிடு வாங்க. இப்பவே அவங்களுக்குச் சந்தேகம்தான்... நமக்குள்ளே இடைவெளி இருக்குன்னு. அது ஊர்ஜிதப் படுத்தற மாதிரி நீ நடந்துக்காதே!''

''இல்லே... நான் வரலே!'' என்றாள் வீம்பாய்.

''ப்ளீஸ் பூரணி! நான் உனக்காக... உன் விருப்பத்திற்காக அனுசரிச்சுப் போகலியா? எனக்காக இந்த ஒரு விஷயத்தில் விட்டுக் கொடுக்கக் கூடாதா? அங்கே ஹோட்டல் ''கலா மந்திர்''ல கூட ரூம் புக் பண்ணியாச்சு!''



''என்னது கலா மந்திர் ஹோட்டலா?'' என்று திடுக்கிட்டுப் பார்த்தாள்.

''ஆமா... ஏன் கேக்கறே?''

''ஒண்ணுமில்லே...'' என்று சற்றுக் கண்மூடி யோசித்தவள், சிறிது நேர மௌனத்திற்குப் பின், ''சரி,'' என்றாள்.

சிவகுமாரின் முகம் பிரகாசமடைந்தது.

★ ★ ★

வானத்தை எய்ம் பண்ணி வளர்ந்து கொண்டிருந்த யூகலிப்டஸ் மரத்தின் தைலவாசம் சில்லென்று முகத்தில் மோதிக் கிறக்கத்தை ஏற்படுத்தியது.

கொடைக்கானலில் பார்க்கக்கூடிய இடங்களையெல்லாம் பார்த்துவிட்டுப் பூரணியோடு அறைக்குத் திரும்பினான் சிவகுமார்.

சென்னையில் அடங்கிப் போயிருந்த உணர்வுகள் இந்தக் குளிர்ப் பிரதேசத்தில் கட்டுக்கடங்காமல் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தன.

திரும்பின இடமெல்லாம், தோளோடு தோள் சேர்த்தபடி, இடுப்பை இறுக்கி வளைத்தபடி, கழுத்தில் முகம் புதைத்தபடி என்று இளம் ஜோடிகள், இந்த உலகத்தில் தங்களிருவரையும் தவிர வேறு யாரும் இல்லை என்கிற எண்ணத்தில் சூழ்நிலை மறந்து, நாகரீகம் துறந்து வலம் வந்த விதம் இவனுள் சூடேற்றியது.

அறைக்குள் நுழைந்த பூரணி ஜன்னலின் வழியே வெறிச்சிட்டுப் பார்த்தாள். கண்கள் வெப்பத்தில் நனைந்தன.

அருகில் வந்த சிவகுமார் அவள் முகத்தைப் பார்த்துத் திடுக்கிட்டான்.

''பூரணி... ஏய்... என்னாச்சு... அழறியா என்ன?''

''...!''

''பூரணி... எதுவும் சொன்னாத்தானே தெரியும். என்ன, சொல்லு.''

''நானும், மகேஷும் இங்கேதான் ஹனிமூனுக்கு வந்தோம். இதே ஹோட்டல்ல, இதே ரூம்லதான் தங்கி இருந்தோம்.''

'போச்சுடா... இங்கேயும் ஆரம்பிச்சிட்டாளா?' சலிப்பு ஏற்பட்டது.

''நாங்க தங்கியிருந்த அந்த நான்கு நாட்கள் வசந்த நாட்கள். இனித் திரும்பி வராத நாட்கள்...'' என்று அவள் பேசிக் கொண்டே போக... சிவகுமார் பொறுமை இழந்தான்.

''பூரணி... ப்ளீஸ்... இந்தப் பேச்சை நிறுத்து! கத்தி மாதிரி நினைவுகளை இதயத்தில் சுமந்து, அதை அசை போட்டுக் கிட்டிருந்தா... ஆபத்து இதயத்திற்குத்தான். நானும் உன்கிட்டே நிறையப் பேச ஆசைப்படறேன். உன் மனசில் என்னையும் பதிய வைக்க பிரயத்தனம் பண்றேன். ஏன் புரிஞ்சுக்க மாட்டேங்கிறே?'' என்றான் தவிப்பாய்.

''பிகாஸ்... ஐ லவ் மகேஷ்!''

''நீ என்னையும் நேசிக்கணும்!''

''ஐ... கான்ட்...!''



''முடியும், முடியணும், முடிய வைப்பேன். எதற்கும் ஒரு லிமிட் உண்டு! சாத்வீகமான முறையிலே உன் மனசிலே என்னால நுழைய முடியலேனா, முரட்டுத்தனமாகவும் முயற்சி பண்றதிலே தப்பில்லேன்னு தோணுது!''

''அதுக்காக?'' என்றாள் மிரட்சியாய்.

''உன்னோட பர்மிஷன் இல்லாம உன்னை நான் எடுத்துக்கப் போறேன்!''

''என்னது?'' என்றாள் அதிர்வாய்.

''எனக்கு வேற வழி தெரியலே... ஸாரி... பூரணி!'' என்றவன் அவள் தோள்களை அழுத்திப் பிடித்தான்.

''விடுங்க... என்ன இது அரக்கத்தனம்!'' கத்தினாள்.

''நானும் மனுஷன்தானே... அதை நிருபிக்க வேண்டாமா?'' சிவகுமார் அவள் முகத்தை இரு கைகளால் ஏந்தினான்.

''நோ... நோ...''

அதற்கு மேல் பொறுமையின்றி அவள் முகம் நோக்கிக் குனிந்தான்.

அவனைத் தடுக்கப் பகீரதப் பிரயத்தனம் செய்தாள். ஆனால் அவள் மீதிருந்த காதல் மனைவி என்கிற உரிமை, இத்தனை மாதம் காத்திருந்த பொறுமை எல்லாமாகச் சேர்ந்து சிவகுமாரிடம் ஒரு புதிய சக்தியை உருவாக்கியிருந்தது. பூரணியின் முயற்சிகள் அத்தனையும் தோற்றுப் போயின. சிவகுமார் அவளை முழுமையாக ஆட்கொண்டான்.

## 8

ஒரு மாதம் ஓடிப் போனது.

பூரணியை நிமிர்ந்து பார்க்கவே இப்பவும்கூடக் கூசியது சிவகுமாருக்கு.

'நானா அப்படியெல்லாம் நடந்து கொண்டேன்? நானா அப்படி மிருகமாய் மாறிப் போனேன்? சே!' என்று தன்னையே நொந்து கொண்டான்.

பூரணி அன்று அவனைப் பார்த்த பார்வை இருந்ததே... புழுவை விடவும் கேவலமாய்ப் பார்த்தாள்.

அந்தச் சம்பவத்திற்குப் பிறகு அவள் அவனிடம் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை... இன்றுவரை.

வலியப் பேச வந்த அவனைக் கை நீட்டித் தடுத்துவிட்டாள்.

''பேசவேண்டாம். ஒன்றும் பேச வேண்டாம். உங்களைப் பார்க்கவோ, பேசவோ எனக்கு இஷ்டமில்லை!'' என்றாள் கடுமையாக.

அந்த வார்த்தை வேறு அவனை ரம்பமாய் மாறி அறுத்துக் கொண்டிருந்தது.

அந்த அறைக்குள் ஒரு பொம்மையைப் போல் இயங்கிக் கொண்டிருந்தாள் பூரணி.

விஜயலட்சுமியின் எதிரில் இயல்பாய் இருந்தாள். என்றாலும் எப்போதும் வாயை மூடி மௌனமாய் வலம் வரும் மருமகளைப் பார்க்கும்போது... வேதனையாக இருந்தது.

'என்ன குறை வைத்தேன்? பெற்ற மகளாய் இருந்தால்கூட இந்தளவு பாசம் வைத்திருப்பேனோ என்னவோ? இந்தச் சின்ன வயதில் வாழ்க்கையை இழந்து வாடிப்போய்



நிற்கிறாளே என்று மகன் கேட்டதும் மணக்கச் சம்மதித்தேனே!' அதிலிருந்தாவது என் அன்பைப் புரிந்து கொண்டிருக்க வேண்டாமா? நானாக வலியப் போய்ப் பேசினாலும் ஒரிரு வார்த்தையோடு பதிலை முடித்துக் கொள்ளும்போது அடுத்துப் பேச நா எழுமா? ஹூம்... என் தவிப்பு புரிய மாட்டேங்குதே!' என்று பூரணியின் அம்மா விசாலாட்சியிடம் போய்ப் புலம்பினாள்.

கல்யாணமானால் தன்னால் அவள் பிடிவாதம் அடங்கிப் போய் விடும் என்று நினைத்த விசாலாட்சியின் நினைப்பில் மண் விழுந்தது. தன் ஏமாற்றத்தை அவள் முன் வெளிக் காட்டிக் கொள்ள விரும்பவில்லை.

''பூரணி... ரொம்ப சாதும்மா! ரொம்ப நல்ல பொண்ணு! இன்னும் கொஞ்ச நாள்ல எல்லாம் சரியாப் போய்டும்! நான் வந்து பார்க்கறேன். வீட்டு நினைப்பு வந்துடக்கூடாதுன்னுதான் நான் அவளைப் பார்க்கக்கூட வரலே! நான் நாளைக்கே வந்து பார்க்கறேன்,'' என்று சொன்னதோடு நில்லாமல் மறுநாளே மகளைப் பார்க்கவும் வந்தாள்.

ஆனால் பூரணி தாயிடமும் முகம் கொடுத்துப் பேச வில்லை.

''ஏண்டி இப்படி யிருக்கே? நீயா ஆசைப்பட்டு அமைச்சுக்கிட்ட வாழ்க்கைதான் மண்ணோடு மண்ணா ஆகிப்போச்சு. கடவுளா தந்த வாழ்க்கையையாவது புத்திசாலித்தனமா காப்பாத்திக்கறியா? அதுவுமில்லே...!''

''நீ எங்கே இங்கே வந்தே? பொண்ணு ரெண்டாவது புருஷனோட எப்படி குடும்பம் நடத்தறாள்னு பார்க்க வந்தியா? இதோ பாரும்மா! உனக்கு நீ பெத்த பிள்ளையோட

வாழ்க்கை முக்கியம்னு அதைக் காரணம் காட்டி, இந்தக் கிணத்துலே தள்ளி விட்டுட்டே! பயப்படாதே... நான் மறுபடி உன் வீட்டுக்கு வந்துடமாட்டேன். என் வாழ்க்கைய எப்படி வாழணும்னு எனக்குத் தெரியும். நீ போகலாம்!'' என்று முகத்திலடிப்பது போல் பேசி அனுப்பிவிட்டாள்.

விசாலாட்சி வாயடைத்துத் திரும்பிவிட்டாள்.

நல்ல வேளை, இந்த உரையாடல் விஜயலட்சுமி காதில் விழவில்லை.

ஆபீஸ் முடிந்து வந்ததும் மாமியாரிடம் ஓரிரு வார்த்தைகளை உதிர்த்துவிட்டுத் தன்னறைக்குள் முடங்கிக் கொள்வாள்.

முன்பாவது அவளைப் பார்த்துக் கொண்டே இருந்தாலே போதும் என்ற சந்தோஷமிருந்தது சிவகுமாருக்கு. இப்போது குற்ற உணர்ச்சிதான் மேலோங்கியிருந்தது.

ஒன்று, பூரணி ஏதாவது புத்தகம் படிப்பாள் அல்லது மகேஷின் ஆல்பத்தை எடுத்துப் பார்த்துக் கண்ணீர்விட்டுக் கொண்டிருப்பாள்.

அதைத் தடுக்கவும் சிவகுமாரால் முடியவில்லை. அதே சமயம் அவள் மனதில் இன்னமும் மகேஷ் நீக்கமற நிறைந்திருக்கிறான் என்ற நிஜம் அவனுள் பொறாமையை உண்டாக்கியது.

மகேஷை நினைவுபடுத்தும் அந்த ஆல்பம் அவளிடம் இருக்கக் கூடாது என்று முடிவு செய்தான்.

மறுநாள்!

மாலை அலுவலகம் விட்டு வந்ததும் வராததுமாக ஆல்பத்தை அதனிடத்தில் தேடினாள்.



காணவில்லை.

நெற்றி சுருங்க யோசித்தாள். 'இங்கேதானே வைத்தேன். எங்கே போயிருக்கும்?' பரபரவென கட்டில், பெட் அடியில், கப்போர்டில் என்று தேடியவள்... கடைசியாய்ச் சிவகுமாரிடம் வந்தாள்.

அவன் முகத்தில் இதுநாள்வரை இல்லாத திருட்டுத்தனம்.

பூரணிக்குப் புரிந்துவிட்டது.

''ஆல்பம் எங்கே?'' என்றாள்.

''எந்த ஆல்பம்?''

''என் கல்யாண ஆல்பம்!''

''இதோ... நம் பீரோவில்தான் இருக்கிறது.''

''நான் அதைக் கேட்கவில்லை. மகேஷோட ஆல்பத்தைக் கேட்கறேன்.''

''........''

''ஆல்பம் எங்கே என்று கேட்டேன்...'' என்றாள் அழுத்தமாய்.

''தெரியாது!''

''இதுபொய் என்பது எனக்குத் தெரியும். உண்மை வேண்டும்!''

''ஓகே... ஆல்பம்தானே? அது இருக்க வேண்டிய இடத்தில் இருக்கிறது.''

''மகேஷ் வீட்டில்!''

''எப்படி?'' என்றாள் திடுக்கிட்டு.

''நான் கொடுத்துவிட்டு வந்தேன்!''

''ஓஹோ... அப்ப... மகேஷோட நினைவா எந்தப் பொருளும் இங்கே இருக்கக்கூடாது, அப்படித்தானே?'' அவள் உச்சரிப்பில் ஏளனம் மிகுந்திருந்தது.

''மறக்கப் பழகிக்கணும் பூரணி! விடாப்பிடியா அதையே நினைச்சு நீ கண்ணீர் விடறதைப் பார்க்க என்னால தாங்கிக்க முடியலே!''

''ஆல்பம் இல்லேன்னா... நான் என்ன மகேஷை மறந்துடவா போறேன்? இடியாடிக்!''

''மறப்பே... என்னை நேசிக்கறப்ப... நிச்சயம் நீ பழசை மறக்கத் தொடங்குவே!''

''நோ... சான்ஸ்!'' என்றாள் எகத்தாளமாக.

''பூரணி... என்னைப் பிடிக்கலையா? ஏன்? நான் உன்மேல அன்பாயில்லையா? ஆசையாயில்லையா? அதனாலதான்... அன்னைக்கு நான் உன்கிட்டே அப்படி நடந்துக்கிட்டேன். அப்படியாவது நீ என்னை நேசிக்க மாட்டியான்னு... ஏன்... ஏன் என்னைப் புரிஞ்சுக்க மாட்டேங்கறே?'' தவிப்பாய்ப் பேசினான்.

''ஏன்னா... நீங்க என் மகேஷ் இல்லே... அந்த மோசமான சம்பவம்... என் வாழ்க்கையில நடந்த விபத்து, அதை மறக்கத்தான் முயற்சி பண்றேன். இது எனக்குப் பிடிக்காத கல்யாணம், உங்களுக்குப் பிடிச்சதை அடையணும்ங் கறதுக்காக என் விருப்பத்திற்கு மாறாக நடந்த கல்யாணம் இது. என் மனசு எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கும்! அதே மாதிரி



நீங்களும்பட வேண்டாமா? படுங்கள்.'' சைக்கோ மாதிரி கத்தினாள் பூரணி.

★ ★ ★

அன்று சிவகுமாரின் பிறந்த நாள்.

விஜயலட்சுமி அவனுக்குப்பிடித்த பணியாரமும் பால் பாயசமும் செய்து கொண்டிருந்தாள்.

சிவகுமார் குளித்து முடித்துத் தன்னறையில் நுழைந்தவன் ஆச்சர்யப்பட்டான்.

பூரணி இன்னமும் படுக்கையை விட்டு எழவில்லை. பொதுவாக அவன் குளித்து முடித்துவிட்டு வரும்போது... இவள் குளிக்கத் தயாராக நிற்பாள்.

இன்று இவளுக்கு என்ன ஆயிற்று? உடம்பு கிடம்பு சரியில்லையோ? அம்மா வேறு பூரணியோடு கோவிலுக்குப் போய் அர்ச்சனை பண்ணிவிட்டு வா என்றார்கள்.

இவள் என்னடாவென்றால்...

''பூரணி...''

''ம்...'' என்றாள், திரும்பாமலே.

''நேரமாகுதே... ஆபீஸ்க்குப் போகலையா?''

''போகலை!''

''ஏன்?''

''எல்லாத்துக்கும் காரணம் சொல்லணுமா? பிடிக்கலை. போகலை!'' என்றாள் படுக்கையைவிட்டு எழுந்தமர்ந்து.

''உடம்பு முடியலியான்னுதான் கேட்டேன். ஸாரி!'' என்றான் மென்மையாக.

''அதெல்லாம் ஒண்ணுமில்லை!'' பட்டென்று சொன்னாள்.

''அப்ப சரி! போய்க் குளிச்சிட்டு வா... வெளியே போகலாம்!''

''என்னது? வெளியே போகணுமா? எங்கே? கொடைக் கானலுக்கா?''

அவளின் ஏளனமான பேச்சு அவன் மனதைப் புண்படுத்தவே செய்தது.

''இல்லை... கோவிலுக்கு.''

''ஸாரி... நான் வரலே.''

''இன்னிக்கு என்னோட பிறந்த நாள் பூரணி.''

''இருக்கட்டும். என்னால வர முடியாது. ரொம்ப சந்தோஷமா கடவுளைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட என்னால முடியாது. நீங்க போய் வாங்க!''

''ஏன் பூரணி, எல்லாத்துக்கும் ஏறுக்கு மாறா பேசறே?''

''ஏன்னா... இன்னைக்கு என் மகேஷோட இறந்த நாள். அவர் என்னை விட்டுப் பிரிஞ்ச நாள்! மனசுல துக்கத்தை வச்சுக்கிட்டு, என்னால எந்தக் காரியத்திலும் ஈடுபட முடியாது விட்ருங்க என்னை!'' என்று குரல் உடைந்து அழ ஆரம்பித்தாள்.

சிலைபோல் ஸ்தம்பித்துப் போனான் சிவகுமார்.

* * *



''என்ன சிவா... கோவிலுக்குக் கிளம்பிட்டியா?''

''ஆமாம்மா!''

''பூரணி எங்கே...?''

''இல்லேம்மா... நான் மட்டும்தான் போறேன்!''

''ஏன்?'' என்றாள் திகைப்போடு.

''விதிம்மா! இன்னைக்கு என்னோட பிறந்த நாளும், மகேஷோட இறந்த நாளும் ஒண்ணா வந்திருக்கக் கூடாதும்மா! அவ மனசு என்ன பாடுபடும்?''

''அடடா... பாவம்பா பூரணி! அவ மனசு எவ்வளவு சஞ்சலப்படும். நீ புறப்படு. ஆனா, அதுக்காக அவளைத் துக்கப்பட்டுக்க உட்கார்த்தி வச்சிடக்கூடாது. சாயந்திரம் அவளை எங்கேயாவது வெளியே கூட்டிக்கிட்டுப் போ! மனசுக்கு ஆறுதலா இருக்கும்.''

''சரிம்மா!'' என்று படியிறங்கிப் போனான்.

* * *

மாலை அவன் அலுவலகத்திலிருந்து திரும்பும்வரை பூரணி அப்படியேதான் இருந்தாள்.

குளிக்கவில்லை, சாப்பிடவில்லை, அழுதழுது முகம் உப்பிப் போயிருக்க, சுருண்டு படுத்திருந்தாள்.

விஜயலட்சுமி கவலையாய் மகளைப் பார்த்தாள்.

''எனக்கு என்னமோ சரியாப் படலை சிவா! இவ ஒரேயடியா சாப்பிட மாட்டேன்னு வீம்பு பண்றா... அழுதுகிட்டே இருக்கிறா... துக்கம்தான், மறுக்கலே. ஆனா, இன்னைக்கு

உனக்குப் பிறந்த நாளாச்சேங்கறதுக்காகவாவது அழாமே இருக்கலாமில்லையா? விளக்கு வெச்சப்புறமும் கண்ணீர் விட்டுக்கிட்டிருந்தா குடும்பத்துக்கு நல்லதில்லே சிவா!'' குரல் நடுங்கியது விஜயலட்சுமிக்கு.

''நான் பார்த்துக்கறேன்மா... நீ போ!'' என்றவன் அறைக்குள் நுழைந்தான்.

அம்மா சொன்னது சரிதான்! பூரணி அழுது கொண்டிருந்தாள்.

''பூரணி...''

''......''

''பூரணி...'' என்றான் மறுபடி.

''என்ன?''

''இப்படியே அழுதுகிட்டிருந்தா என்ன அர்த்தம்? காலைலேர்ந்து எதுவும் சாப்பிடலையாமே! எந்திரி... குளிச்சிட்டு கிளம்பு. ஹோட்டல்ல போய்ச் சாப்பிடலாம்... பீச்சுக்குப் போய் வரலாம்!''

''ஓ... உங்க பர்த் டேயை செலபரேட் பண்ண கூப்பிடறீங்களா?''

''சரி... அப்படியே நினைச்சுக்கிட்டாலும் பரவாயில்லே... கிளம்பு!''

''நீங்க மனுஷனா, மிருகமா? இன்னைக்கு என் மகேஷோட இறந்த நாள்னு தெரிஞ்ச பிறகும். உங்க சந்தோஷத்துல பங்கெடுத்துக்கணும்னு வற்புறுத்துறீங்களே... சே... உங்களுக்கெல்லாம் மனசாட்சியே இல்லையா?''



பூரணியின் பேச்சு சிவகுமாரை உசுப்ப... பளாரென அவள் கன்னத்தில் அறைந்தான்.

''இன்னைக்கு மகேஷோட இறந்த நாள்தான்! இல்லைன்னு சொல்லலே! ஆனா, நான் இன்னும் உயிரோடதான் இருக்கிறேன். மகேஷோட பிறந்த நாள்னு அவன் செத்த பிறகும் கோவிலுக்குப் போய் அர்ச்சனை பண்ணத் தெரிஞ்ச உனக்கு உயிரோட இருக்கிற எனக்காகக் கோவிலுக்கு வரப் பிடிக்கலே இல்லை! நீ நடந்துக்கறதுக்குப் பேரு மனுஷத்தன்மையா? சே!'' சிவகுமார் நெற்றியில் அறைந்து கொண்டான்.

அவனிடமிருந்து இப்படியொரு தாக்குதலை எதிர்பார்க்காத பூரணி... அந்த அடியும், அதிர்ச்சியும் அவளை மயக்கமுறச் செய்தது.

பதறி விட்டான் சிவகுமார்.

## 9

தாயும் மகனும் டாக்டரின் வரவிற்காக மூடியிருந்த கதவையே பார்த்துக் கொண்டிருந்தனர். விஜயலட்சுமி எல்லாத் தெய்வங்களையும் துணைக்கழைத்துக் கொண்டிருந்தாள்.

கதவு திறந்தது.

டாக்டர் காமேஸ்வரி சிரித்த முகத்துடன் வெளியே வந்தாள்.

''டாக்டர்... பூரணி எப்படியிருக்கா?''

''என் மருமகளுக்கு ஒண்ணுமில்லையே டாக்டர்?''

''ஏன் ரெண்டு பேரும் டென்ஷனாகறீங்க? நத்திங் டு வொர்ரி. மிஸ்டர் சிவகுமார்! இன்னைக்கு உங்களுக்கு பர்த்டேன்னு உங்கம்மா சொன்னாங்க... அப்படியா?''

''ஆமாம் டாக்டர்!''

''அப்ப உங்களுக்கொரு பர்த்டே ப்ரஸெண்ட் தரட்டுமா?'' என்றாள் கண்ணாடி அணிந்த கண்களில் குறும்பு மின்ன.

''என்ன சொல்றீங்க டாக்டர்?'' என்றான் ஆர்வமாய்.

''நீங்க அப்பாவாகப் போறீங்க.''

''எ... என்ன?'' திகைப்பாய் அலறிவிட்டான்.

''அம்மா தாயே சௌடேஸ்வரி... என் குலம் தழைக்க வச்ச தெய்வமே... உன் கருணையே கருணை!'' கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது சந்தோஷத்தில்.

சிவகுமாருக்கு ஆகாயத்தில் பறப்பது போலிருந்தது. அந்த ஒரு நாள் விளையாட்டில்... பூரணிக்கும் அவனுக்கும் இடையில் பகை அதிகமாகி, வீடு யுத்த களமாய் மாறிக் கொண்டிருக்கும் வேளையில்... குழந்தை! இனி எல்லாப் பிரச்சனையும் சரியாகிவிடும் என்ற நம்பிக்கை வேர் விட்டது.

''பூரணி இப்ப மூணு மாசம் கர்ப்பமாயிருக்காங்க. அவங்க உடம்பு ரொம்ப வீக்காயிருக்கு. நான் எழுதித் தர டானிக்கெல்லாம் வாங்கிக் கொடுங்க. ரொம்ப ஸட்ரெய்ன் பண்ணிக்கக் கூடாது. ஆட்டோவுல கூட ஜர்னி பண்ண வேண்டாம் மோஸ்ட்லி...! ஓக்கே?''

இவர்கள் பேசிக் கொண்டிருந்தது அத்தனையும் உள்ளே படுத்திருந்த பூரணியின் காதில் விழுந்தது.

மளமளவென்ற உற்பத்தியான கண்ணீர் சூடாய் வழிந்து காதுக்குள் இறங்கியது.



'இவர்கள் சங்காத்தமே வேண்டாம் என்று ஒதுங்கிப் போகிறேன்... என் வயிற்றில் குழந்தையா? ஐயோ...' வயிறு உள்வாங்கி அழுகை கேவலாய் வெளிப்பட்டது.

'மகேஷ்..... நீங்கள் எவ்வளவு ஆசைப்பட்டீர்கள். நமக்குக் குழந்தை வேண்டும் என்று! ஒவ்வொரு மாதமும் எதிர்பார்த்தோமே! நம்மை ஏமாற்றிய ஆண்டவன்... இப்போது என்னைப் பழி வாங்கிவிட்டான் பார்த்தீர்களா? இல்லை மகேஷ்... இந்தக் குழந்தை வேண்டாம்... எனக்கு வேண்டவே வேண்டாம்!' வெளியே நின்றிருந்தவர்கள் உள்ளே வரும் காலடிச் சப்தம் கேட்டுக் கண்களை மூடி, முகம் திருப்பி ஒருக்களித்துப் படுத்துக் கொண்டாள்.

அவளை உள்ளங்கையில் வைத்துத் தாங்கினாள் மாமியார். சிவகுமார் அவளிருக்கும் அறைக்கே உணவைக் கொண்டு வந்து சாப்பிட வைத்தான். டாக்டர் சொன்னபடி டானிக் வகைகளை வாங்கி வந்து கொடுத்ததோடல்லாமல் அவனே குடிக்கவும் வைப்பான்.

பூரணியிடம் எந்த மாற்றமும் இல்லை. மருந்துக்குகூடச் சிரிப்பதில்லை. அதனால் அவளிடம் எதையும் பேசவே பயப்பட்டான்.

அன்று மாலை ஆபீஸிலிருந்து வந்தவனின் முகம் பரபரப்பாய்க் காணப்பட்டது.

''பூரணி... உன்கிட்டே பேசணுமே!''

''என்ன?''

''உனக்கு எம் மேல கோபம். ஒத்துக்கறேன். உங்குழந்தை மேல என்ன கோபம்?''

''வலுக்கட்டாயமான முறையிலே உருவான குழந்தை!'' என்றாள் முகம் சுருக்கி.

''சரி... இருக்கட்டும். அது உன் குழந்தையில்லையா?''

''.........''

''நீ டாக்டர் காமேஸ்வரிய போய்ப் பார்த்தியா?''

''ஆமாம்!''

''எதுக்காக?''

''இத்தனை விஷயங்கள் தெரிஞ்சிருக்கறப்ப... இதையும் ''ஸ்பை'' மூலமா தெரியாமலா இருந்திருக்கும்?''

''டாக்டரம்மாவே எனக்கு போன் பண்ணிச் சொன்னாங்க பூரணி! அபார்ஷன் பண்ணச் சொன்னியாமே! உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு?''

''ஆமா... குழந்தை பிறந்தா நிச்சயமா பைத்தியம் பிடிக்கத்தான் போகுது. அப்புறம் நிரந்தரமாக நான் இருந்தாகணும்ங்கற சூழ்நிலை உருவாகும். பிடிக்காத குழந்தையச் சுமக்கறதைக் காட்டிலும் அழிச்சிடறது எவ்வளவோ மேல்! ஆனா எனக்கு முன்னே துரதிர்ஷ்டம் வந்து நிக்குது! மூணு மாசம் ஆயிட்டதால கலைக்க முடியாது. மீறிச் செய்தா என் உயிருக்கு ஆபத்துன்னு சொல்லிட்டாங்க! என் தலைவிதி!''

அவள் பேசப் பேச ஸ்தம்பித்துப் போனான்.

'தாய்மை அடைந்திருக்கும் ஒரு பெண் பேசும் பேச்சா இது?'

''வேணாம் பூரணி... இப்படியெல்லாம் பேசாதே! பின்னாடி ரொம்ப வருத்தப்படுவே!''



''இப்ப மட்டுமென்ன, சந்தோஷமாவா இருக்கேன்? சனியன் குழந்தை ரூபத்துல என்...''

''ஸ்டாப்... ஸ்டாப்! வேண்டாம். என் குழந்தையை அப்படி கரிச்சுக் கொட்டாதே! இதப்பார்... உனக்கு என்னைப் பிடிக்கலேன்னா போய்டு. ஆனா, என் குழந்தைய பெத்துக் குடுத்துட்டுப் போய்டு. நான் என் குழந்தை முகத்தைப் பார்த்தாவது சந்தோஷப்பட்டுக்கறேன்!''

அவன் இப்படிச் சொல்வான் என்று எதிர்பார்க்கவில்லை பூரணி.

''நிஜமாதான் சொல்றீங்களா? பேச்சு மாறமாட்டீங்களே! இந்தக் குழந்தைய ஒப்படைச்சுட்டுப் போக எனக்கு எந்தத் தடையும் இருக்காதே!''

''இருக்காது!'' என்றான் துக்கத்தையெல்லாம் ஒன்று சேர்த்து எச்சிலாய் விழுங்கி!

★ ★ ★

அந்த வீட்டில் மணப் பெண்ணாய்க் காலெடுத்து வைக்கும்போது இது போன்ற அலங்காரத்தில் பார்த்திருக்கிறான். அதன் பிறகு மறுபடி இப்போதுதான் பட்டுப் புடவையும், நகைகளும், பூவுமாய்ப் பார்க்கிறான்.

சிவகுமாருக்கு ஒரு கணம் எதுவும் புரியவில்லை.

''பூரணி... வெளியே கிளம்பறியா?''

''ஆமாம்...!''

''எங்கே?''

''ஃபங்ஷனுக்கு!''

"எந்த ஃபங்ஷனுக்கு?"

"ஏன், அதுக்குள்ளே மறந்து போச்சா? உங்களுக்கும்தானே இன்விடேஷன் கொடுத்தாங்க? வேண்டியவங்களாயிருந்தா நினைவு வந்திருக்கும். அவங்க வேண்டாதவங்களாச்சே... உங்களுக்கு?"

"எனக்குச் சுத்தமா புரியலே!"

"மகேஷோட தங்கச்சிக்கு இன்னைக்கு நிச்சயதார்த்தம்!"

"நீ அவசியம் போகணுமா பூரணி?"

"கண்டிப்பா!"

"ப்ளீஸ்... உன்னை நீ அதிகமா ஸ்ட்ரெய்ன் பண்ணிக்காதே டாக்டர் சொன்னதை மறந்துட்டியா?"

"ஸோ... உங்க குழந்தைக்கு ஏதும் ஆகிடக் கூடாதுன்ற பயம். அப்படித்தானே? எனக்கு உங்க குழந்தையவிட மகேஷ் வீட்டு நிகழ்ச்சி முக்கியம். அவர் இருந்து நடத்த வேண்டிய காரியத்தை நான்தானே நடத்தியாகணும்."

"பூரணி... இதுக்கு முன்னாடி எப்படியோ, ஆனா இப்ப நீ மிஸஸ் சிவகுமார். அந்த வீட்டுப் பொது நிகழ்ச்சியிலே நீ கலந்துக்கறதை என்னைச் சார்ந்தவங்க யாராவது பார்த்தா ஒரு மாதிரி பேசுவாங்க பூரணி!"கெஞ்சினான்.

பூரணி அவனைப் புழுவைப் பார்ப்பதுபோல் பார்த்து விட்டுப் போய் விட்டாள்.

தொப்பென சோபாவில் அமர்ந்து கொண்டான் சிவகுமார். வீட்டில் விஜயலட்சுமியும் இல்லை. கோவிலுக்குப் போயிருந்தாள்.



நல்லவேளை... இவள் பேசியதை அவள் கேட்காமல் போனாளே!

இருந்தால் மட்டும் என்ன? இன்னும் எத்தனை நாளைக்கு மறைக்க முடியும்?

குழந்தை பிறந்ததும் தன்னாலே எல்லாம் வெட்ட வெளிச்சமாகி விடாதா! இதுநாள்வரை நான்கு சுவருக்குள் தன் மகன் சந்தோஷமாய் வாழ்ந்தது போல் பாசாங்கு செய்ததைச் சொல்லாமலே தெரிந்து கொள்ளப் போகிறாள். ஹூம்...!

கோவிலிலிருந்து திரும்பிய விஜயலட்சுமி வந்ததும், வராததுமாய் மருமகளைத் தேடினாள், பிரசாதம் தர!

"பூரணி... இல்லேம்மா!"

"இல்லையா? இந்நேரத்துக்கு எங்கே போனா?"

"மகேஷோட தங்கச்சிக்கு இன்னைக்கு நிச்சயதார்த்தமாம். போயிருக்கா!"

"ஆமாம்... இன்னைக்குத்தான் நிகழ்ச்சியில்லே! இது மூணாவது மாசம் வேற... எல்லை தாண்டிப் போகக்கூடாது. நீ ஏம்பா அவளை அனுப்பினே? அவளுக்குப் பதிலா நீயாவது போய்த் தலைய காண்பிச்சிட்டு வந்திருக்கலாமே!"

"சொன்னேன்மா! அவசியம் போகணும்னு பிடிவாதம் பிடிச்சா? என்ன பண்றது?" என்றான் சலிப்பாய்.

"அநாவசியத்துக்குப் பிடிவாதம் பிடிக்கிறா! கேக்கவும் சங்கடமாயிருக்கு. பார்ப்போம்... குழந்தை பிறந்த பிறகாவது பொறுப்பு வருதான்னு!" விஜயலட்சுமி பெருமூச்செறிந்தாள்.

ஆனால்...

இரண்டு மணி நேரம் கழித்து வாசலில் ஆட்டோ வந்து நிற்கும் சத்தம் கேட்க... வாசலுக்கு வந்தனர் இருவரும்.

அன்னம்மாள் கைத்தாங்கலாய்ப் பிடித்திருக்க வலியின் முனகலோடு இறங்கினாள் பூரணி!

★ ★ ★

இப்படியெல்லாம் நடக்கும் என்று விஜயலட்சுமியோ, சிவகுமாரோ மட்டுமல்ல... பூரணியே எதிர்பார்க்கவில்லை.

மகேஷ் வீட்டு நிகழ்ச்சியாயிற்றே என்று ஓடி ஓடி வந்தவர்களை வரவேற்பதும், பந்தி பரிமாறுவதுமாய் உழைத்துக் கொண்டிருந்தாள்.

வந்தவர்களில் பலரின் கண்கள் அவளையே மொய்க்கத் தொடங்கின.

''அன்னம்மா... அந்தப் பச்சைப்புடவை கட்டிட்டிருக்கிற பொண்ணு உன் மருமகதானே?''

''ஆமாம்!''

''உன் பிள்ளை செத்து ரெண்டரை வருஷம் ஆச்சில்லே?''

''ஹூம்... ஆச்சு!'' என்றாள் கண்ணீரைத் துடைத்தபடி.

''பதினாறு நாள் காரியமெல்லாம் பண்ணீங்க இல்லே?''

''ம்... பண்ணாம இருப்போமா? என் பிள்ளை ஆத்மா சாந்தியடையணுமே!''

''அப்ப... உன் மருமக கழுத்துல தொங்குதே தாலி... அதைக் கழட்டலியா?''

''அது... அது வந்து... அவளுக்கு மறுகல்யாணம் ஆயிடுச்சி!''



''ஓ... எல்லாம் சரிதான்! ஆனா, அவளை ஒரு ஓரமா ஒதுங்கி உக்காரச் சொல்லு! பார்க்கறவங்க கண்ணுக்கு வித்தியாசமாதான் தெரியும்!'' என்றாள் அந்தப் பெண்மணி.

அன்னம்மாளுக்குச் சுருக்கென்று குத்தினாலும், அந்த கூற்றில் நியாயம் இருப்பதை உணர்ந்தாள்.

இந்த உரையாடல் அத்தனையும் பூரணியின் காதிலும் விழவே செய்தது. பொங்கி வந்த சீற்றத்தை அடக்க மிகவும் சிரமப்பட்டாள்.

அன்னம்மாள் பூரணியின் அருகில் வந்தாள்.

''பூரணி...''

''ம்...''

''ஏம்மா... நீ இந்த வேலையெல்லாம் செஞ்சுக்கிட்டு, இப்பவே ரொம்ப களைச்சிப்போய்ட்டியே... உக்காந்து ரெஸ்ட் எடும்மா!''

அத்தையின் வார்த்தையில் வெளிப்பட்டது கரிசனமல்ல, உறுத்தல் என்பது புரியப் பூரணிக்கு அதிக நேரம் தேவைப்பட வில்லை.

நெஞ்சு குமுற அமர்ந்து விட்டாள். ஓவென்று அழ வேண்டும் போல் இருந்தது. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள். அடிவயிற்றில் சூடு போட்டதுபோல் ஒரு வலி! மனதினில் கசமுசாவென்ற குழப்பம். மயங்கி விழுந்து விட்டாள்.

அன்னம்மாள் பதறிப் போய் ஆட்டோவில் ஏற்றி ஹாஸ்பிடலுக்குக்கூடப் போகாமல் சிவகுமார் வீட்டிற்கு அழைத்து வந்தாள்.

முடிந்தது. அவள் வேண்டாமென்று ஒதுக்கிய ஜீவன் கர்ப்பத்திலேயே கலைந்து விடைபெற்றுக் கொண்டது.

விஜயலட்சுமி இடிந்து போனாள்.

சிவகுமார் விக்கித்துப் போனான்.

பூரணி குற்ற உணர்வில் தத்தளித்தாள்.

அடி வயிற்றை அடிக்கடி தொட்டுப் பார்த்தாள். வெறுமையாக இருந்தது.

'நான் உன்னை ரொம்ப அதிகமா திட்டிட்டேனா? சனியன், கினியன் என்று பேசியதெல்லாம் உன் காதிலும் விழுந்ததா? அதனால்தான்... இவள் வேண்டாம் என்று மடிந்து போனாயா?' மனதிற்குள் கேள்விகள் பிறந்தன.

## 10

வீடு சூன்யமாய் வெறிச்சென்றிருந்தது.

விஜயலட்சுமி வீட்டில் இல்லை. தமிழ் நாட்டிலுள்ள அத்தனை கோவிலுக்கும் செல்லும் சுற்றுலாக் குழுவில் அவளும் சேர்ந்து போய்விட்டாள். வர ஒரு மாதமாகும். அம்மா வெகுவாய் மனம் நொந்திருக்கிறாள் என்பதைச் சிவகுமார் அறிந்திருந்தான். அதனால் பயணத்திற்குத் தடையேதும் கூறவில்லை.

அப்படியாவது அம்மாவின் மனம் நிம்மதியடைந்தால் சரி.

ஒரு மாதத்திற்குச் சமைத்துப் போடவும், வீட்டு வேலைகளைக் கவனிக்கவும் ஒரு வயதான பெண்மணியை அமர்த்திக் கொண்டான்.



அந்தச் சம்பவத்திற்குப் பின் சிவகுமார் பூரணியிடம் பேசுவதை அறவே விட்டுவிட்டான். அந்த அறையிலும் தங்காமல் மொட்டை மாடியிலோ, ஹாலிலோ படுத்துக் கொண்டான்.

அவனின் ஒதுங்கல்... பூரணியைச் சலனப்படுத்தாமல் இல்லை.

* * *

பிள்ளையைப் பெற்றுத் தந்து ஒதுங்கிப் போய் விடுகிறேன் என்று சொன்னவள்... இப்போது அதற்கான எந்த முயற்சியிலும் ஈடுபடவில்லை. மாறாக... சிவகுமாரின் பாராமுகம் நெஞ்சில் பாறாங்கல்லாய்க் கனத்தது.

விஜயலட்சுமி சுற்றுலா சென்றபோதுகூட அவளிடம் 'போய் வருகிறேன்!' என்று ஒரு வார்த்தைகூட சொல்லிவிட்டுப் போகவில்லை.

வீட்டிற்கு ஒரு சமையற்காரியை வரவழைத்த பிறகே... அவன் ஏற்பாடு பண்ணியிருக்கிற விஷயமே தெரியும். 'ஏன் என்னிடம் ஒரு வார்த்தை சொன்னால் என்னவாம்? எனக்கென்ன சமைக்கவா தெரியாது? நான் சமைக்க மாட்டேனா?' தவித்தாள்.

என்ன பிரச்சனை என்றாலும், சண்டை என்றாலும், இந்த ஐந்து மாத காலத்தில் ஒரு நாள்கூட வேறெங்கும் படுத்ததில்லை. ஒரே அறை... ஒரே படுக்கைதான். ஆனால், இப்போது ஒரேயடியாய் அல்லவா ஒதுங்கிப் போய் விட்டான்.

'உனக்குத்தான் இந்த வீடு, இந்த மனிதர்கள், ஏன் - இந்த தாலிகூடப் பிடிக்கவில்லையே! இந்தச் சிறையிலிருந்து விடுபட்டு பறக்க நினைத்த பறவைதானே நீ! சிவகுமாரின் பாராமுகம் பற்றி உனக்கென்ன கவலை? நீ எதிர்பார்த்த சந்தர்ப்பம் கனிந்து அருகில் வந்திருக்கிறது. சென்றுவிடு.

'நா... நானா? செல்வதா? எப்படி? கதவு விரியத் திறந்துதான் இருக்கிறது. ஆனால், ஓரடிகூட எடுத்து வைக்க என்னால் முடியவில்லையே! ஏன் என்று புரியவில்லையே! என் கால்களைக் கட்டிப் போட்ட சங்கிலி எதுவென்று தெரியவில்லையே...! தனிமையில் கண்ணீர் விட்டாள் பூரணி!

★ ★ ★

அலுவலகம் புறப்பட்டாள் பூரணி!

ஹால் சோபாவில் கம்பளி போர்த்திப் படுத்திருந்தான் சிவகுமார்.

அதைப் பார்த்ததும் அடுத்த அடி எடுத்து வைக்கத் தயங்கினாள்.

"உடம்பு சரியில்லையா?" அருகே சென்று கேட்கத் தைரியம் வரவில்லை. ஆனால் கேட்க வேண்டும் போல் இருந்தது.

சிவகுமார் ஒருக்களித்துப் படுத்தான்.

அனலாய்க் கொதிக்கிறதுபோலும். முகம் மினுமினு வென்றிருந்தது. முகம் களைத்துப் போயிருந்தது.

'இந்த நேரம் பார்த்து அத்தையும் இல்லை. என்ன செய்வது?' திடுக்கிட்டாள் பூரணி.

'நானா... நானா அவர்களை அத்தை என்றேன்? அந்த உறவில் அவர்களை நான் இதுவரை கற்பனை செய்துகூடப் பார்க்காது விரோதி என்ற அளவில்தானே பார்த்தேன்? எப்படி, இப்போது மட்டும் ஏற்றுக் கொண்டேன்... இவர்களைவிட்டுப் பிரிந்து போவது என்று முடிவு செய்த பிறகு? புரியவில்லை!

பூரணி தயக்கம் உதறி அவன் அருகே சென்றாள்.



ஓசைகேட்டுக் கண்திறந்த சிவகுமார் அவளைப் பார்த்ததும் கண் மூடி முதுகு காட்டிப் படுத்தான்.

அந்தச் செய்கை அவள் கன்னத்தில் பளாரென்று அறைவது போலிருந்தது.

கண்கள் சட்டெனப் பொங்கின. மூக்கு விடைக்க முகம் சிவந்தது. பூரணி உதட்டைக் கடித்து அழுகையை அடக்கினாள். அலுவலகம் கிளம்பினாள்.

அலுவலகத்திலும் எதிலும் கவனம் செல்லவில்லை. எண்ணமெல்லாம் சிவகுமாரையே சுற்றி வந்தது. வீட்டை விட்டுக் கிளம்பும்வரை சமையல்காரம்மா வரவில்லை. பிறகு வந்தாளோ இல்லையோ? வராமலிருந்தால்... அவருக்கு யார் சமைத்துப் போட்டிருப்பார்கள்? சே... நானும் கிளம்பி வந்துவிட்டேன். காய்ச்சல் இன்னும் அதிகமாகியிருந்தால்... சீரியஸாகிவிடுமே! ஐயோ... பக்கத்தில் யாருமே இல்லையே!

அதற்கு மேல் அங்கிருக்க இருப்புக் கொள்ளாமல் அரை நாள் விடுப்பு எடுத்துக் கொண்டு பறந்தாள்.

அவள் நினைத்தது போலவே சமையல்காரம்மா அன்று வந்திருக்கவில்லை.

சிவகுமார் படுத்த இடத்தை விட்டு அசையவே இல்லை. சில கணம் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அப்படி யொன்றும் நிறமில்லை என்றாலும் மாநிறமா யிருந்தான். களையான முகம். அடர்த்தியான மீசை. சிரிக்கும் போது கீழ் வரிசைப் பற்கள் தெரியப் பளீரிடும். கவர்ச்சியாக இருக்கும். ஆறடி தொடும் உயரம். உயரத்திற்கேற்ற வலுவான உடற்கட்டு.

தன்னிலைக்கு மீண்ட பூரணி தன்னையே நம்ப முடியாமல் கிள்ளிப் பார்த்துக் கொண்டாள்.

'நானா, அங்குலம் அங்குலமாக ரசித்தேன்? இதென்ன விந்தை!'

'விந்தையல்ல பூரணி! நீ சிவகுமாரை நேசித்தாய், நேசிக்கிறாய். அவன் உன்னை வந்து பெண் கேட்டபோதே உன் மனதில் உயர்வான இடத்தைப் பெற்று விட்டான். ஆனால் அதை வெளிப்படுத்திக் கொள்ளத் தயக்கம். அவனிடம் அன்பை வெளிக் காட்டினால், அவன் உன்னைத் தவறாக எண்ணிவிடுவானோ என்கிற பயம். இன்னொரு மணவாழ்க்கைக்கு நீ தயாராக இருப்பதை வேறு விதமாய் எடைபோட்டு விடுவானோ என்கிற கவுரவப் பிரச்னை. அதை நீ அழுத்தமாய் மனதில் பதிய வைத்துக் கொண்டாய். அதன் விளைவுதான் இத்தனையும். நீயாக அமைத்துக் கொண்ட முள் வட்டத்தைத் தாண்டி வெளியே வா! இல்லாவிட்டால் இந்த வீட்டை விட்டு, வாழ்க்கையை விட்டு வெளியேற வேண்டி வரும்!'

பூரணிக்கு ஏதோ புரிபடத் துவங்க... சமையற்கட்டை நோக்கி நடந்தாள்.

பத்து நிமிடத்தில் அரிசிக் கஞ்சி தயாரித்தாள். பதமாய் ஆற்றினாள். 'இதைக் குடிக்க வைத்து ஹாஸ்பிடலுக்கு அழைத்துச் செல்ல வேண்டும்,' என்றெண்ணியவளாய், சிவகுமார் அருகில் வந்து அவன் தோளைத் தொட்டாள்.

கண்விழித்த சிவகுமார் ஒருகணம் புரியாமல் பார்த்தான்.

''இந்தக் கஞ்சிய குடியுங்க... ஹாஸ்பிடல் போகலாம்!'' என்றாள்.



சலனமின்றி நோக்கிய சிவகுமார், ''நோ... தாங்க்ஸ்!'' என்றான்.

''காலைலேர்ந்து நீங்க எதுவும் சாப்பிடாம...''

''ப்ளீஸ்... டோன்ட் டிஸ்டர்ப். லீவ் மீ அலோன்!''

இதயம் சுருங்கிப் போனது பூரணிக்கு.

''நீங்க என்ன சின்னக் குழந்தையா? உங்க உடம்பைப் பத்தி உங்களுக்கே அக்கறையில்லேன்னா எப்படி?''

''நான் சின்னக் குழந்தையில்லேதான். ஆனா, என் சின்ன சிசுவைப் பத்தி உனக்கு அக்கறையிருந்ததா? இப்ப மட்டும் அக்கறையப் பத்தி பேச வந்துட்டே? அதுக்கு உனக்கென்ன தகுதியிருக்கு?'' தீயாய் விழுந்தன வார்த்தைகள்.

பொசுங்கிப் போனாள் பூரணி!

★ ★ ★

பூரணி இளைத்துப் போனாள்.

அந்த வீட்டில் அவள் தனித் தீவாய் இருந்தாள். அவள் ஒருத்தி இருப்பதையே அசட்டை செய்தனர் தாயும், மகனும். அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை என்றாலும் பொறுத்துக் கொண்டாள்.

வயிற்றில் வளர்ந்த சிசுவை உயிரற்ற சதைப் பிண்டமாய் மாற்றியதில் அவள் பங்கு பெரிதல்லவா? அதனால் இந்தத் தண்டனை தனக்கு அவசியம் என்றே கருதினாள்.

விஜயலட்சுமி அவள் காதுபடவே பேசினாள்.

''ஏன் சிவா, அவளை அவங்கம்மா வீட்டுக்கு அனுப்பி வச்சிடேன்!''

''அவளா போகணும்னு நினைக்கறப்ப போய்க்கட்டும். யாரும் தடுக்கப் போறதில்லே!''

இதுவே பழைய பூரணியாய் இருந்தால் சிலிர்த்தெழுந்து புறப்பட்டிருப்பாள். ஆனால் இவள் தயக்கம் எனும் மேலாடையைக் கழற்றி எறிந்தவள். தன்னையே கண்டு கொண்டவள், எப்படிப் போவாள்?

ஆனால், அவளுக்கே தெரியாமல் ஒரு காரியம் நடக்கவிருப்பதை அறிந்த பிறகு பாதி உயிர் போய்விட்டது அவளுக்கு!

சிவகுமாருக்குப் பதவி உயர்வு கிடைத்திருக்கிறது. சென்னையில், இப்போது பணி புரியும் அலுவலகத்திலேயே மேனேஜராகப் பதவி உயர்வு. ஆனால், அதற்குமுன் கான்பூரில் இந்த கம்பெனியின் கிளை நிறுவனத்தில் இரண்டு வருடம் பயிற்சி பெற வேண்டும். இன்னும் இரண்டு நாளில் புறப்பட்டாக வேண்டும். டிக்கெட்டும் கையில் கொடுத்து விட்டார்கள்.

விஜயலட்சுமி பரிதவித்தாள்.

''என்ன சிவா, திடீர்னு இவ்வளவு பெரிய குண்டாதூக்கிப் போடறே? உன்னைப் பிரிஞ்சி ரெண்டு வருஷம் நான் எப்படிப்பா இருப்பேன்? உனக்கு இப்ப உள்ள வேலையே போதும். பதவி உயர்வெல்லாம் வேண்டாம்னு சொல்லி டுப்பா!''

''இல்லேம்மா... என்னைத் தடுக்காதே! இங்கே எனக்குப் பைத்தியம் பிடிச்சிடும் போலிருக்கும்மா! எனக்கு மனமாற்றம் தேவை. அதற்கு இட மாற்றம் அவசியம். வாழ்க்கையிலே



எல்லாருக்கும் ப்ரமோஷன் கிடைச்சிடறதில்லே! அப்பாங்கற ப்ரமோஷன்தான் இல்லேன்னு ஆகிப்போச்சு. இதுவாவது கிடைக்கட்டுமேம்மா! ப்ளீஸ்... என் டிரஸ்ஸையெல்லாம் ரெடி பண்ணும்மா!'' நெகிழ்ச்சியாய் வெளிப்பட்டது குரல்.

'வேணாம் சிவா! என்னை விட்டுப் போகாதீங்க. என் முகம் பார்க்கப் பிடிக்காமத்தானே போறேன்றீங்க? நான் மாறிட்டேன் சிவா. உங்களைப் புரிஞ்சுக்கிட்டேன். என்னை விட்டுப் போய்டாதீங்க!' துடித்தாள் பூரணி. ஆனால் வாய் திறந்து பேச முடியவில்லை அவளால்.

அன்று சிவகுமார் புறப்படும் நாள்!

விஜயலட்சுமி மகன் சந்தோஷத்திற்காகத் தன் மன உளைச்சலைக் காட்டிக் கொள்ளாமல் வேண்டியவற்றைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தாள்.

பூரணி உள்ளுக்கும் வெளிக்குமாக அலைந்து கொண்டி ருந்தாள்.

'ஒரே ஒரு கனிவான பார்வையை என் மேல் வீசு சிவா! உன் காலடியில், வந்து விழுந்து விடுகிறேன்!''

ம்ஹூம்... அவன் அவளை நிமிர்ந்து கூடப் பார்க்க வில்லை.

ஆட்டோவில் எல்லாப் பொருட்களையும் ஏற்றினான்.

''போய்ட்டு வர்றேன்ம்மா! உடம்பைப் பார்த்துக்கோ. லெட்டர் போடறேன். போன் பன்றேன். வரட்டுமா?'' அம்மாவிடம் விடைபெற்று ஆட்டோவில் ஏறினான்.

பூரணியிடம் ஒரு வார்த்தையும் பேசவில்லை.

எப்படிப் பேசுவான்? குழந்தையைப் பெற்றுப் போட்டு விட்டு நான் பந்தம் அறுத்துவிட்டுச் செல்லத் தடையேதும் போடக்கூடாது என்று உத்தரவு போட்டவளிடம்... எப்படிப் பேசுவான்?

சொல் பேச்சுக் கேட்காமல், அலட்சியப்படுத்திக் கருவை... குழந்தையைக் கொன்றவளிடம் எப்படிப் பேசுவான்?

ஆட்டோ சீறிப் புறப்பட்டது.

பூரணி தொப்பென அமர்ந்து முழங்காலில் முகம் புதைத்து அழ ஆரம்பித்தாள்.

அந்தக் காட்சியை நம்ப முடியாமல் பார்த்தாள் விஜய லட்சுமி.

''பூ...ர...ணி...அழறியா என்ன?''

''அத்தை! நான் தப்பு செஞ்சவதான். அதுக்காக இவ்வளவு பெரிய தண்டனையா? இத்தனை நாள் என்னையே நான் புரிஞ்சுக்கலே! ஆனா இப்ப நான் யாருங்கறதைப் புரிஞ்சுக் கிட்டேன். உங்க பிள்ளைய நிஜமா நேசிக்கிறேன்றதையும் புரிஞ்சுக்கிட்டேன். ஆனா, நீங்க யாரும் புரிஞ்சுக்கலியே! ஒரு வார்த்தை 'போய் வரட்டுமா பூரணி?'ன்னு கேட்டிருந்தா, போகாதீங்கன்னு காலைப் பிடிச்சுக் கதறியிருப்பேனே! கடவுளே...!'' கதறினாள்.

விக்கித்துப் போனாள் விஜயலட்சுமி.

''பாவிப் பொண்ணே... இத்தனை ஆசைய மனசுல வச்சுக்கிட்டா மரம் மாதிரி இருந்தே? அவன் கிளம்பறதுக்கு



முன்னே சொல்லியிருந்தா சிவாவைப் போக விடாம தடுத்திருப்பேனே... இப்ப என்ன பண்ணுவேன்?''

''இல்லே அத்தை! நான் ஸ்டேஷனுக்குப் போயாவது அவரைப் போக விடாம தடுக்கத்தான் போகிறேன்!'' கண்ணீரை வழித்தெறிந்தாள்... கூடவே ஈகோவையும். தெருவில் சென்ற ஆட்டோவைக் கைதட்டி அழைத்தாள்.

தாவி ஏறி அமர்ந்தாள். ஆட்டோ புறப்பட எத்தனித்த நேரம் வீட்டு வாசலில் ஓர் ஆட்டோ வந்து நின்றது.

முகம் முழுக்கப் பதட்டம் அப்பிக்கிடக்க... அவசரமாய் இறங்கினான் சிவகுமார்.

விஜயலட்சுமி தன் கண்களையே நம்ப முடியாமல் பார்த்தாள்.

பூரணி உற்சாக நீரூற்றுப் பீறிட... இறங்கினாள்.

''என்ன சிவா?'' என்றாள் அம்மா.

''டிக்கெட்டை மறந்து போய் வீட்லேயே வச்சிட்டுப் போயிட்டேன்மா... டிரெய்னுக்கு வேற நேரமாச்சு!''

''ஆண்டவனாப் பார்த்துதான் உன்னை மறுபடி இங்கே வரவழைச்சிருக்கான். ஆட்டோவிலிருக்கிற பெட்டி படுக்கை யெல்லாம் இறக்கிடுப்பா!''

''என்னம்மா சொல்றே?'' வியப்பாய்க் கேட்டான்.

''நீ ஊருக்குப் போக வேண்டாம்னு சொல்றேன்.''

''ஏன்?''

''திரும்பிப் பார், புரியும்!''

திரும்பினான்.

மாலை மாலையாய்க் கண்ணீர் வழிய... உதடுகள் துடிக்க... ஒரு வார்த்தைகூடப் பேச முடியாத நிலையில் பூரணியின் கண்கள் கதை கதையாய்ப் பேசின.

அதற்கு மேலும் தாங்க முடியாமல் ஓடி வந்து சிவகுமாரின் மார்பில் முகம் புதைத்து அழுதாள்.

இரண்டு ஆட்டோ டிரைவர்களும் முகம் தாழ்த்திக் கொள்ள, விஜயலட்சுமி நாகரீகமாய் உள்ளே சென்றுவிட்டாள்.

கண்ணீர் அவன் சட்டையை நனைத்தது. சிவகுமாருக்குப் புரியத்துவங்க... முகம் சந்தோஷத்தில் விரிய... அவன் கை பூரணியின் முதுகை ஆதரவாய், அழுத்தமாய்த் தடவிக் கொடுக்க... சில்லென்று ஓடி வந்த தென்றல் அவன் தலையைச் செல்லமாய்க் கலைத்து விளையாடத் தொடங்கியது.

★ ★

★

# கல்யாண மாலை

**1**

**சுகுணா பி.ஏ.,பி.எல்., என்ற எழுத்துக்கள் பித்தளை போர்டில் கதிரவனின் கதிர்பட்டுத் தங்கமாய்த் தகதகத்தது.**

காய்கறி விற்கும் பொன்னம்மா கேட்டைத் தள்ளி உள்ளே வந்ததில் எண்ணெய் பார்த்து நாளான கேட் கத்தி சப்தமெழுப்பியது.

''யாரது?'' என்று கேட்டபடி வெளியே வந்தார் அன்பழகன்.

''ஓ...நீதானா? இன்னைக்கென்ன இவ்வளவு லேட்டா வர்றே?''

''என் தலைவிதிங்க... காய்கறியெல்லாம் புத்தம் புதுசா இருக்கு. சீக்கிரம் வேணுங்கறதை வாங்கிக்குங்க. தெருத் தெருவா போகணும். இப்பவே வெயில் சுரீர்னு மூஞ்சிய நெருப்பா பொசுக்குது. ஹூம்... கட்டிய புருஷன் சரியார்ந்தா... எனக்கேன் இந்த நாய்ப் பொழைப்பு?''

''நீயே கஷ்டப்பட்டு சுயமா சம்பாதிக்கிறியே... அதுக்காக சந்தோஷப்பட்டுக்க பொன்னம்மா! அதுக்கும் ஒரு வில் பவர் வேணும். அது உன்கிட்டே இருக்கு.''

பொன்னம்மாள் களுக்கெனச் சிரித்தாள்.

''நான் என்ன ஜோக்கா சொன்னேன்? ஏன் சிரிக்கிறே?''

''ஒண்ணுமில்லேய்யா!''

''ப்ச்... சொல்லு.''

''அட விடுங்க சாமி! சும்மாதான் சிரிச்சேன்.''

''காரணமில்லாம சும்மா சிரிச்சா என்ன அர்த்தம் தெரியுமா?''

''ம்... தெரியுமே! பைத்தியம்னு சொல்வாங்க. நான் பைத்தியக்காரியாகவே இருந்துட்டுப் போறேன். தக்காளி நல்லாயிருக்கு. அரை கிலோ போடவா? ஒரு கிலோ போடவா?''

''பேச்சை மாத்தறே! வெண்டைக்காய் ஏன் முத்திப்போய் இருக்கு? சுகுணாவுக்குப் பிடிக்காது. வேணாம். நாளைக்குப் பிஞ்சு கத்திரிக்காயா எடுத்திட்டு வா! சுகுணா கத்திரிக்காய்ப் பொரியல் கேட்டிருந்தா... புதினா ஒரு கட்டு போதும். மொத்தம் எவ்வளவு ஆச்சு? சீக்கிரம் கணக்குப் போட்டு சொல்லு!''

''உங்கிட்டே எதுக்கு அண்ணாத்தே கணக்கு வழக்கெல்லாம்? நியாயமா குடுக்கறதை எப்பவும் போல குடு!''

''இப்படிப் பேசிப் பேசியே, எங்கிட்டேர்ந்து அதிகமா வாங்கிடறியோன்னு தோணுது!''

''போங்க அண்ணாத்தே... இந்தக் காலத்துல உழைச்சு சம்பாதிக்கிறதே உடம்புல ஒட்டறதில்லே... ஏமாத்தி சாப்பிடறது எப்படி ஒட்டும்?''

''சரி... சரி... நீ எதுக்குச் சிரிச்சே? அதைச் சொல்லு.''

''அட வேணாம், அண்ணாத்தே! இந்தக் கூறுகெட்டவ எதையோ நினைச்சி சிரிச்சுக்கிட்டேன். விடுவியா?''



''இல்லே, நீ எதையோ மறைக்கிறே? என்கிட்டே சொல்றதுக்கென்ன பொன்னம்மா?''

''சொல்லாம என்னை விடமாட்டே போலிருக்கே!''

''ஆமாம்! அதுமட்டுமில்லே... சொல்லலேன்னா இனி உன்கிட்டே காய்கறிகூட வாங்கப் போறதில்லே...''

''அட... உன் மனசு கஷ்டப்பட வேணாம்னு பார்த்தா என் வயித்திலேயே அடிக்கிறியே... எனக்கென்ன வந்துச்சு? சொல்லிடறேன். அதென்னமோ ஒரு பவர் சொன்னியே... என்ன பவர் அது?''

''வில் பவர்!''

''ஆங்... அதேதான்! அந்தப் பவர் ஏன் உன்கிட்டே இல்லாமப் போச்சுன்னு நினைச்சேன்... கபால்னு சிரிப்பு வந்துச்சு... அவ்ளோதான்!''

''இதை நீ சொல்லாமலேயே இருந்திருக்கலாம்!'' முணு முணுத்தபடி காய்கறிகளை எடுத்துக் கொண்டு உள்ளே சென்றார்.

''அண்ணாத்தே... ரொம்ப தாகமா இருக்கு. ஒரு தம்ளர் தண்ணி தர்றியா?''

''ம்... ம்...'' என்று தலையாட்டிக் கொண்டே போனார்.

அதே நேரம்...

மாடிப் படிகளில் கம்பீரமாய் இறங்கி வந்து கொண்டிருந்தாள் சுகுணா!

''அம்மா...!'' என்றபடி உள்ளே வந்தாள் பொன்னம்மாள்.

''வா... பொன்னம்மா!''

''உங்களைத் தாம்மா... ரொம்ப நாளா பார்க்கணும்னு நினைச்சிட்டிருந்தேன். அம்மாவைத் தான் பார்க்க முடியலே.''

''கோர்ட், கேஸ்னு அலையறவளுக்கு ஏது நேரம்? சொல்லு, என்ன விஷயம்?''

''ஹூம்... எல்லாத்துக்கும் ஒரு அதிர்ஷ்டம் வேணும்மா...!''

''என்ன சொல்றே?''

''உங்களை ஒரு துரும்பைக் கூட எடுத்துப் போடவிடாம உள்ளங்கையிலே வச்சு தாங்கற உங்க புருஷனை மாதிரி எல்லாருக்கும் கிடைச்சிட்டா... எல்லா பொம்னாட்டிகளும் பிரச்னை இல்லாம சந்தோஷமா இருப்பாங்க!''

''சரி... சரி... அவரைப் புகழ்ந்தது போதும். உன் பிரச்னை என்ன சொல்லு?''

சொன்னதும்தான் தாமதம்! பொன்னம்மாள் சேலைத் தலைப்பை வாயில் பொத்தி அழ ஆரம்பித்தாள்.

அவளைச் சமாதானப்படுத்தி ஒரு வழிக்குக் கொண்டுவர ஐந்து நிமிடம் தேவைப்பட்டது சுகுணாவிற்கு.

''எனக்கு கோர்ட்டுக்குப் போக நேரமாச்சு. அழாம விஷயத்துக்கு வா!''

''இங்கே பாருங்கம்மா!'' முழங்கையையும், முதுகையும் காண்பித்தாள். பட்டை பட்டையாய் இரத்தம் கட்டிக் கொண்டிருந்தது.

''என்னடி இது?''

''என் புருஷன் குடிச்சிட்டு வந்து அடிச்சிட்டான்ம்மா! அந்தாளோட நான் படற இம்சை கடவுளுக்கே பொறுக்காது.



தெருத்தெருவா வெயில்லேயும், மழையிலேயும் வாடி வதங்கி காய்கறி வித்து நாலு காசு சேர்த்தாதான் என் வீட்லே நாலுபேரு வயிறு ஈரமாகும். இந்தாளு ரிக்ஷா ஓட்டறான். ஆனா, பத்து பைசா குடுக்கறதில்லே. சம்பாதிக்கிற பணத்தைச் சாராயக் கடைக்கு கொடுத்துட்டு வந்து என்னையும், பிள்ளைகளையும் குடி போதையில கண்மண் தெரியாம உதைக்கிறதே வாடிக்கையாப் போச்சு.

''பிள்ளைங்க அப்பன் தெருமுனையிலே வர்றதைப் பார்த்ததுமே நடுங்க ஆரம்பிச்சிடுதுங்க. சொல்லித்திருத்த யாருமில்லே. நேத்து அந்தாளோட அட்டகாசம் அதிகமாய் போய் தாலிய அறுத்தெறிஞ்சிட்டான். விசாரிச்சிப் பார்த்தப்பதான் தெரிந்தது... அந்தாளுக்கு வேறொரு சிறுக்கியோட தொடர்பு இருக்குன்னு. இந்தாளுக்கு நான் என்ன குறை வெச்சேன்? புடவை வேணும், நகை வேணும்னு சண்டை போட்டேனா? இல்லையே! எனக்குப் போடலேன்னாலும் பெத்த குழந்தைகளுக்காவது ஒரு கைப்பிடி சோறு போடுய்யான்னுதானே கேக்கறேன்.

''இந்தாளுக்கு ஏம்மா புத்தி இப்படிப் போகணும்? ரெண்டு புள்ளைங்களைப் பெத்த பிறகு எப்படிம்மா புதுசா இன்னொருத்தி மேல லவ்வு வரும்? அந்தாளுக்குச் சுயபுத்தி கிடையாது. படிச்ச நீங்க சொல்ற விதத்தில எடுத்துச் சொன்னா... திருந்துவாருங்கற நம்பிக்கை எனக்கிருக்கும்மா! நீங்கதாம்மா எனக்கு வாழ்க்கை தரணும். கை விட்றாதீங்கம்மா!'' சுகுணாவின் கையைப் பற்றிக் கெஞ்சினாள் பொன்னம்மாள்.

சுகுணா அவளைச் சிறு புன்னகையுடன் பார்த்தாள்.

''கவலைப்படாதே பொன்னம்மா! நானிருக்கிறேன். உனக்கு இப்ப தேவை வெறும் வாழ்க்கையில்லே... சுதந்திரமான

வாழ்க்கை. உன் கழுத்திலே இருந்த கத்தி போயிருச்சேன்னு சந்தோஷப்படு. அவன் கட்டின மஞ்சக் கயிறை அவனே அறுத்துக்கிட்டுப் போய்ட்ட பிறகு எதுக்காக அவனை நினைச்சி கண்ணீரை வேஸ்ட் பண்றே? உன் புருஷன் செத்துப் போய்ட்டான்னு நினைச்சிக்க!''

''அ...ம்...மா!''

''என்ன அம்மா? பாரு பொன்னம்மா. நான் உன்னோட நல்லதுக்குத்தான் சொல்வேன். நான் படிச்சவ. அனுபவங்கள் அதிகம். ஒரு பொண்ணுக்கு எது நல்லது கெட்டதுன்னு எனக்குத்தான் தெரியும். கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்னு டயலாக் பேசினா இப்ப எடுபடாது. ஃபுல்லா வர்ற புருஷனோட தலையில கல்லைப் போட்டு நிமிர்ந்து நிக்கறதுதான் பொண்ணுக்குப் பெருமை! ஆண்களோட ஆதிக்கம் இனி இங்கே எடுபடாது. எடுபடவும் கூடாது.

''இல்லே தெரியாமத்தான் கேக்கறேன். ஒரு பெண்ணுக்கு புருஷன் எதுக்கு? படுத்துக்கறதுக்கு மட்டுமா? கட்டினவளைக் கண்கலங்காம காப்பத்தணும். பெத்த குழந்தைகளுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்கித் தரணும். ஆனா, பத்து பைசாவுக்கு பிரயோஜனமில்லாத புருஷன் உனக்குத் தேவைதானா? இப்பவும் உன் சொந்த சம்பாத்தியத்திலேதானே குடும்ப வண்டி ஓடுது! வேஸ்ட்டா, ஏன் தாலி கட்டிட்ட ஒரே காரணத்துக்காக அவனுக்கும் சேர்த்து உழைச்சுக் கொட்டறே? என்ன நான் சொல்றது புரியுதா?''

புரிந்தும் புரியாத முக பாவனை! பொன்னம்மாள் குழப்பமாய்த் தலையாட்டினாள்.

''நாளைக்கு இதே நேரத்துக்கு வீட்டுக்கு வா! நான் டைவர்ஸ் அப்ளிகேஷன் ரெடி பண்ணிடறேன். நீ சைன் பண்ணிடு. சரியா? புறப்படு... எனக்கும் நேரமாய்டுச்சி...'' என்று எழுந்து கொண்டாள் சுகுணா.



பொன்னம்மாள் யோசித்தபடி வெளியேறினாள். அன்பழகன், ''அட ராமா!'' என்று தலையில் கைவைத்துக் கொண்டார்.

## 2

மாலை!

வாசலில் டூ வீலர் வந்து நிற்கும் சப்தம் கேட்டதும் அன்பழகன் எழுந்து வந்தார்.

'அபர்ணா வந்தாச்சு.'

வண்டியை ஸ்டாண்ட் போட்டுவிட்டு உள்ளே வந்த அபர்ணா டீன் ஏஜ் பிடியில் சிக்கியிருந்தாள். அழகான, துடிப்பான இளம் பெண்.

''ஹாய் டாட்!'' என்றபடி மார்போடு அணைத்திருந்த இரண்டு புத்தகங்களை சோபா மீது அலட்சியமாய் வீசியெறிந்தாள்.

''படிப்புக்கு மரியாதை கொடுக்க வேண்டாமா அபர்ணா? இப்படி வீசி எறியறே?''

''எதுக்கு டாடி? ஏன் படிக்கணும்? படிச்சிட்டு வேலைக்குப் போகப் போறேனா? நத்திங்... ஏதோ பேருக்குப் பின்னாடி ரெண்டு எழுத்து கூடப் போட்டுக் கிட்டாதான் கவுரவம்னு மம்மி சொன்னதுக்காகப் படிக்கிறேன், அவ்வளவுதான்!''

''சொல்ல முடியாதும்மா... நாளைக்கு என்ன நடக்கும், எப்படி நடக்கும்னு யாராலேயும் சொல்ல முடியாது. உங்கம்மா பேருக்குப் பின்னாடி இருக்கிற பி.ஏ.பி.எல்.ங்கற எழுத்துதான் இன்னைக்கு சம்பாதிக்க வைக்குது. யாரு கண்டா... உனக்கும் அப்படியொரு சந்தர்ப்பம் அமையலாமில்லையா?''

"இம்பாஸிபிள்! நான் ஏன் வேலைக்குப்போகனும்? மம்மி லட்சம் லட்சமா சம்பாதிக்கறாங்களே... அதெல்லாம் யாருக்காக? எனக்காகத்தானே? நான் சம்பாதிக்கணும்னு எனக்கென்ன தலையெழுத்து? தலையெழுத்துன்னதும் தலைய வலிக்குது. ஐம் ஸோ டயர்ட் டாடி! காபி வேணும். வேலைக்காரிகிட்டே சொல்றீங்களா?"

"ம்... அகிலாண்டம்னு அவ பேரையாவது சொல்லலாம். அதிகார புத்தி!" என்று முணுமுணுத்தபடி மகளைக் கவலையாய்ப் பார்த்தார்.

டிரஸ் சேன்ஞ் பண்ணிவிட்டு இறங்கி வந்த அபர்ணா சுற்றுமுற்றும் பார்த்தாள்.

"என்ன அபர்ணா தேடறே?"

"நம்ம டாமி எங்கே காணோம்?"

"அதுவா? அது எங்கே வீடு தங்குது? கட்டிப்போட்டா வீடே இடிஞ்சு விழ மாதிரி கத்துது. தெருவிலதான் மத்த நாய்களோட விளையாடிட்டு இருக்கும்."

"என்ன டாடி சொல்றீங்க? நம்ம டாமி தெரு நாயோட விளையாடுதா?"

"ஏன் விளையாடினா என்ன? அதுவும் எத்தனை நாளைக்கு நம்ம முகத்தையே பார்த்துக்கிட்டிருக்கும்? போரடிச்சிடாதா?"

"நீங்க ஏன் அவுத்து விட்டீங்க? ச்சே... நான் எவ்வளவு ஆசை ஆசையாய் வளர்த்தேன்! அதைப் போய்த் தெரு நாய்களோட விளையாட விட்டிருக்கீங்களே..." அபர்ணா கோபமாய்க் கேட்டாள்.

"இப்ப என்னம்மா ஆகிப் போச்சு? டாமி தன்னால வீட்டுக்கு வந்துடும்."



"நோ... டாமி இனிமே வீட்டுக்குள்ளே வரக் கூடாது."

"என்ன சொல்றே?" அதிர்ச்சியாய்க் கேட்டார்.

"நான் வளர்த்தடாமிக்குன்னு ஒரு கவுரவமிருக்கு. அது எப்ப வீட்டைத் தாண்டிப் போச்சோ... அப்பவே அதுவும் தெருநாய் தான். உள்ளே சேர்க்காதீங்க."

"அபர்ணா! உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு. டாமியை ரெண்டாயிரம் கொடுத்து வாங்கியிருக்கோம்."

"ஸோ வாட்? அந்த நாய் இனி எனக்கு வேண்டாம்." தீர்மானமாய்ச் சொல்லிவிட்டு மாடியேறிப் போனாள் அபர்ணா.

அவளையே கவலையாய்ப் பார்த்துக் கொண்டிருந்த அன்பழகன் பெருமூச்சு விட்டார்.

"ஹூம்... நூலைப் போலச் சேலை! தாயைப் போலப் பிள்ளை!"

இன்று பொன்னம்மாளை எப்படியாவது பார்த்துப் பேசியே தீருவது என்ற வைராக்கியத்துடன் புறப்பட்ட அன்பழகன் நாற்பதைத் தாண்டியவர். சிரிக்கச் சிரிக்கப் பேசினாலும் அவர் இதயத்தில் ஆறாத ரணம் இருக்கவே செய்தது. அரைக்கைச் சட்டையும், வேட்டியும் அவர் மெத்தப் படித்தவர் என்பதைத் திரை போட்டு மறைத்தது.

சுற்றுமுற்றும் பார்த்தபடி தெருத் தெருவாய் நடந்தார்... தேடினார்.

'அட... நம்ம டாமிகுரல் மாதிரியே இருக்கே...' திரும்பிப் பார்த்தார்.

டாமியேதான்! இவரைப் பார்த்துவிட்டு ஓடோடி வந்தது.

''டேய்... டாமி... வா... வா... வா!''

வாலோடு சேர்த்து உடம்பும் ஆட்டி தன் எஜமான விசுவாசத்தைக் காட்டிக் கொண்டது. அன்பழகன் அதன் அருகில் அமர்ந்து வாஞ்சையாய் அதைத் தடவிக் கொடுத்தார்.

'எப்படியிருந்த பயல்... இப்படியாய்ட்டியே! பாலும், பிஸ்கட்டும், பஞ்சு மெத்தையுமாய் சுகமாய் வளர்ந்தியே! உனக்கு ஏண்டா இந்த நிலை? எலும்பும் தோலுமா ஆய்ட்டியே! புத்திய அலைய விடாம ஒழுங்கா பங்களாவிலேயே இருந்திருக்கலாமே கண்ணா! நான் இல்லையா... அவங்க ளோட இருபது வருஷமா! பல்லைக் கடிச்சிக்கிட்டு நீயும் இருந்திருக்கலாமே!'

''வவ்... வவ்...'' என்று அவர் காலை நக்கியது டாமி.

''என்னடா பசிக்குதா? வா...'' என்று அவர் முன்னே நடக்க, பின் தொடர்ந்தது டாமி.

ஒரு டீக்கடையில் இரண்டு பன்னை வாங்கிப் பிய்த்துப் போட்டார்.

ஆவலாய்ச் சாப்பிட்டது.

''டாமி... நான் கிளம்பறேம்ப்பா... வழக்கம் போல ஒரு குருவிக் கூட்டைக் கலைக்க உன் எஜமானியம்மா ஆயத்த வேலையில இறங்கிட்டாங்க. இதுல என் பங்கு என்னன்னு தான் உனக்குத் தெரியுமே. அதுக்காகப் போய்ட்டிருக்கேன். நீ நைட்ல யாருக்கும் தெரியாம வீட்டுப் பக்கம் வா! நான் வரட்டுமா?''

ஒரு நாயிடம் போய் இதை யெல்லாம் பேசிக் கொண்டிருக் கிறாரே என்று டீக்கடைக்காரர் அன்பழகனை விநோதமாய்ப் பார்த்தார்.





''என்னப்பா அப்படிப் பார்க்கிறே? எவ்வளவு ஆச்சு?''

''பரவாயில்லே சார்! நீங்க போங்க...'' என்றார் பயத்துடன்.

'பாவிப் பயலே... என்னைப் பைத்தியக்காரன்னா நினைச் சிட்டே? சில விஷயங்களை மனுஷனைக் காட்டிலும் வாயில்லா பிராணிங்க புரிஞ்சுக்கும். மனசறிஞ்சு நடந்துக்கும். போடா போ...உனக்கு வேண்டாம்னா எனக்குத்தான் லாபம்!' முணுமுணுத்தபடி புறப்பட்டார்.

''கண்றாவி! பைத்தியக்காரன்களையும், நாய்களையும் இந்த நாட்லே அது இஷ்டத்துக்கு அவுத்து விட்டுர்றாங்கப்பா!'' தலையில் அடித்துக் கொண்டார் டீக்கடைக்காரர்.

அன்பழகன் மீண்டும் தெருத் தெருவாய்த் தன் தேடுதலைத் தொடர்ந்தார்.

'கண்ணிலேயே அகப்படலியே! ஒருவேளை வியாபாரத்தை முடிச்சிட்டு வீட்டுக்கே போயிருப்பாளோ?'

'போய்ப் பார்ப்போமா? வீடு பாரதி நகர்ல இருக்குன்னு சொன்னதா ஞாபகம்.'

வழியில் எதிர்ப்பட்ட ஒரு நபரிடம் பாரதி நகரை விசாரித்து அந்த நபர் காட்டிய திசையில் நடந்தார்.

''அண்ணாத்தே... எங்கே இந்தப் பக்கம்?'' வலது புறமிருந்து குரல் வரவும் அன்பழகன் ஆச்சர்யமாய்ப் பார்த்தார்.

''பொன்னம்மா... நீயா? கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்த மாதிரி வந்திருக்கே...''

''ஐயோ...என்ன சாமி என்னைப் போய் தெய்வம். கிய்வம்னுட்டு... ஆமா எங்கே இந்தப் பக்கம்?''

''உன்னைப் பார்க்கத்தான்!''

''என்னையா? என்ன சாமி கிண்டல் பண்றீங்க? என் வூட்டுக்கு வர்ற அளவுக்கு உங்களுக்கென்ன வேலை இருக்கப் போவுது?''

''விளையாட்டில்லே... நிஜமாவே நான் உன்னைத்தான் பார்க்க வந்தேன்!''

''எதுக்கு அண்ணாத்தே? உன் வீட்லே எதுனாச்சும் காணாமப் போய்டுச்சா? அதனால சந்தேகப்பட்டு என்னை விசாரிக்க வந்தியா? தோப்பாரு... சாமி, நான் படபடன்னு பேசிடுவேன். ஆனா, மனசுல ஒண்ணும் இருக்காது. சத்தியமா என்கிட்டே திருட்டுப் பழக்கமெல்லாம் இல்லே... அண்ணாத்தே! என் தாலி மேல சத்தியமா சொல்றேன்...''

''தாலிதான் இல்லியே... அப்புறம் ஏன் அது மேல சத்தியம் பண்றே?''

பொன்னம்மா விக்கித்துப் போனாள்.

அன்பழகன் வாய்விட்டுச் சிரித்தார்.

''ஆத்திர அவசரத்திற்கு உன்னைக் காப்பாத்திக்கறதுக்கு, நீ நல்லவன்னு நிரூபிக்கறதுக்கு அந்தத் தாலி தேவைப்படுது இல்லையா?''

''......!''

''ஆனா இனி அந்தத் தாலி உனக்குத் தேவைப்படாது இல்லையா?''

''ஐ...யா... என்ன சொல்றே நீ?''



36999
5426619
...நகர், சென்னை

''குடிச்சிட்டு வந்து உதைக்கிறான். கட்டினவளுக்கும், பெத்த பிள்ளைக்கும் சோறு போட மாட்டேங்கிறான். என் பொண்டாட்டி சொல்ற மாதிரி அவன் எதுக்கு உனக்கு?''

''........?!''

''நீயும் வேணாம். உன் உறவும் வேணாம்னு அறுத் தெறிஞ்சிடு. ஆமா... உனக்கு ரெண்டுமே பொட்டைப் பிள்ளைங்கதானே?''

''ஆமா!''

''பொண்ணு வளர்த்தியோ, பீர்க்கங்காய் வளர்த்தியோன்னு சொல்வாங்க. கண்ணுமூடி. கண்ணு திறக்கறதுக்குள்ளே... தோள் மீறி வளர்ந்துடப் போகுதுங்க. அதுங்களுக்குக் கல்யாணம் காய்ச்சின்னு பண்ணணும். அதை நீ முடிச்சிடுவே. நீ யாரு? பொன்னம்மா! ஆம்பளைக்கு ஆம்பளை! பொம்பளைக்குப் பொம்பளை! நீ நாயா பேயா உழைச்சி உன் பொண்ணுங்களைக் கரையேத்திடுவே... அதைப்பத்தி பிரச்னையில்லே... ஆனா, வேற ஒரு பிரச்னை வருமே, பொன்னம்மா?''

''.......?''

## 3

''மம்மி... குட் மார்னிங்!''

அபர்ணா அரேபியக் குதிரையைப் போல் ஹைஹீல் சப்திக்க அம்மாவின் கழுத்தை ஓடிவந்து கட்டிக் கொண்டாள்.

''குட்மார்னிங்... காலேஜுக்குக் கிளம்பிட்டியா?'' என்ற சுகுணா டிரஸ்ஸிங் டேபிள் முன் அமர்ந்திருந்தாள். செய்திருந்த

அலங்காரம் திருப்திகரமாக உள்ளதா என்று இப்படியும், அப்படியுமாய்த் திரும்பிப் பார்த்து, கடைசியாய் லிப்ஸ்டிக்கைச் சரி பண்ணிக் கொண்டாள்.

''மம்மி, இன்னைக்கு நீங்க ரொம்ப அழகாயிருக்கீங்க!''

''அப்ப இத்தனை நாளா நல்லாயில்லேன்னு சொல்றியா?''

''சேச்சே... என் மம்மி எப்பவும் அழகு! நீங்க ஒருநாள் எங்க ஸ்கூல் ஃபங்ஷனுக்கு வந்தப்ப என்கிட்டே எத்தனை பேர், 'இவங்க உன் அக்காவா?'ன்னு கேட்டாங்க தெரியுமா?''

பெருமையாய்ச் சிரித்துக் கொண்டாள்.

''நீங்க எனக்கு அம்மாவா வந்து பிறந்ததுக்கு கடவுளுக்குத் தான் நன்றி சொல்லணும்!''

''யூ ஆர் ராங் மை டியர் பேபி! நான் அம்மாவா வந்து பிறக்கலே. இந்த அம்மாவுக்குப் பொண்ணா நீதான் வந்து பிறந்திருக்கே!''

''ஒக்கே... ஒக்கே...!'' என்று கையை உயர்த்திய அபர்ணாவின் கண்களுக்குச் சுவரில் மாட்டப்பட்டிருந்த போட்டோ தென்பட்டது.

அன்பழகனும், சுகுணாவும்!

''என்ன அபர்ணா... அந்த போட்டோவையே பார்த்துட்டி ருக்கே?''

''நத்திங் மம்மி!''

''இல்லே... எதையோ சொல்லணும்னு நினைக்கிறே! கம் அவுட்... கமான்!''

''இல்லே மம்மி... எனக்கு ஒரு விஷயம் புரியவே இல்லே! அப்பாவை நீங்க எப்படிக் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க?''



''ஏன் கேக்கறே?''

''உங்க பக்கத்துல அப்பா நிக்கறதே என்னவோ மாதிரி இருக்கும்மா. ஜோடிப் பொருத்தமே சரியில்லே!''

''ஹூம்...!'' என்று பெருமூச்சு விட்டாள் சுகுணா.

''அதெல்லாம் எதுக்கும்மா... பழைய கதை! இன்னைக்கு நீ சொல்ற அதே வார்த்தையைத்தான் கல்யாணத்துக்கு வந்திருந்த அத்தனை பேரும் சொன்னாங்க! எல்லாம் எங்கப்பா பண்ணின வேலை. சரி... அதைவிடு! காலேஜுக்கு நேரமாகலே?''

''இதோ கிளம்பிட்டேம்மா...'' என்றவள் தயங்கினாள்.

''என்ன அபர்ணா... பணம் ஏதும் வேணுமா?''

''ஹய்யோ... எப்படி மம்மி கரெக்டா கண்டுபிடிச்சீங்க?''

''என் அபர்ணாவைப் பத்தி எனக்குத் தெரியாதா? எவ்வளவு வேணும்?''

''எதுக்குன்னு கேக்க மாட்டீங்களா?''

''எதுக்காயிருந்தாலும் என்ன? செலவு பண்றதுக்குத்தானே பணம்? நான் யாருக்காகச் சம்பாதிக்கிறேன்? உனக்காகத் தானே!''

''ஆனா, இது உங்களுக்குப் புரியுது. அப்பாவுக்குப் புரியலியே! எதுக்கெடுத்தாலும் ஏன், எதுக்குன்னு ஆயிரம் கேள்விகள்!''

'வயசாயிடுச்சில்லையா? அதை யெல்லாம் கேர் பண்ணிக் காதே! சரி, எவ்வளவு வேணும்?''

''பத்தாயிரம்!''

''பீரோவுல எடுத்துக்க...''

''இப்பவும் எதுக்குன்னு கேக்க மாட்டீங்களா?''

''ஓக்கே... நீயே சொல்லிடு!''

''கமிங் மண்டே... உங்க அபர்ணாவோட பர்த்டே!அபர்ணா தன்னோட ஃப்ரண்ட்ஸ்களுக்கு சோழாவுல பார்ட்டி தரப்போறா...!''

''அடடே... நான் எப்படி மறந்து போனேன்? ஸாரிடா... கோர்ட்... கேஸ்னு அலையறேனா... மறந்துட்டேன். இப்ப சொல்லு! உனக்கு என்ன ப்ரஸெண்ட் வேணும்?''

''ம்... வேணாம் மம்மி! எனக்கு வேண்டியதெல்லாம் ஏற்கெனவே வாங்கித் தந்தாச்சு. புதுசா கேக்க என்ன இருக்கு?''

''ஓக்கே... யோசிச்சு நைட் சொல்லு! வாங்கித் தர்றேன். டேபிள் மேலே அப்ளிகேஷன் இருக்கு பாரு... அதை எடும்மா!''

''என்ன இது? வழக்கம்போல டைவர்ஸ் அப்ளிகேஷனா? யாருக்கும்மா?''

''பொன்னமாளுக்கு! அவ வந்துட்டாளா? அவளுக் காகத்தான் காத்துக்கிட்டிருக்கேன்!''

''அவ எப்பவோ வந்துட்டாளே!''

''சரி, நான் கிளம்பறேன் அபி!'' என்று கீழே இறங்கி வந்தாள்.

அவள் வருகைக்காகக் காத்திருந்த பொன்னம்மா இவளைப் பார்த்ததும் எழுந்து நின்றாள்.



''பரவாயில்லே... உக்காரு! படிக்கத் தெரியுமில்லே? கையெழுத்தா... கைநாட்டா?''

''எதுக்கும்மா கேக்கறீங்க?''

''இந்த அப்ளிகேஷன்ல நீ ஸைன் பண்ணினாத்தான் கோர்ட்ல கேஸ் அப்ளை பண்ண முடியும்.''

''அப்படியா... இப்படிக் கொடுங்க பார்ப்போம்.''

சுகுணா அவளிடம் நீட்டினாள்.

அதை வாங்கிய பொன்னம்மா அவளை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு அந்த பேப்பரைச் சுக்கல் சுக்கலாய்க் கிழித்தெறிந்தாள்.

அதைப் பார்த்த சுகுணா அதிர்ந்து போனாள்.

''பொன்னம்மா... என்ன பண்றே நீ?''

''கிழிச்சிப் போடறேன்ம்மா!''

''நீ கிழிச்சிப் போடறியே... அது என்னன்னு தெரியுமா உனக்கு?''

''தெரியாம என்ன? என் வாழ்க்கையை, என் குழந்தை களோட எதிர்காலத்தை நார், நாரா கிழிக்கயிருந்த கத்திதானே இது?''

''உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு?''

''இல்லேம்மா... இப்பதான் தெளிஞ்சிருக்கு. எப்பேர்ப்பட்ட தப்பைச் செய்யவிருந்தேன்? நல்லவேளை தெய்வம் என் கண்ணைத் திறந்திடுச்சி!'' என்றாள், யாருக்கும் தெரியாமல் அன்பழகனை நோக்கிக் கைகூப்பி.

அன்பழகன் ஒரு புன்சிரிப்பை உதிர்த்து, 'காட்டிக் கொடுத்துடாதே!' என்பது போல் சைகை காட்டினார்.

"நிஜமாவே உனக்குப் பைத்தியம்தான் பிடிச்சிருக்கு. கடல்ல விழுந்து தத்தளிச்சிட்டிருக்கிற உன்னைக் காப்பாத்த கை கொடுத்தா, உதறித் தள்ளி மறுபடி கடல்லேயே விழறேங் கறியே... நீ ஒரு முட்டாள்!"

"நான் விழுந்தது கடல் இல்லேம்மா! வாய்க்கால்தான்! பிரச்னைய நான்தான் பெரிசு பண்ணிட்டேன்!"

"ஓஹோ... உன் புருஷன் வந்து, 'பொன்னம்மா! என் கண்ணம்மா'ன்னு கொஞ்சியிருப்பான். நீயும் மயங்கிட்டி ருப்பே! உன்னை மாதிரி பொம்பளைங்க இருக்கிறதாலதான்... ஆம்பளைகளோட அடக்குமுறையும், அட்டகாசமும் அதிகமாய்ட்டே போகுது நீங்கள்லாம் எப்பதான் வெளிச்சத்துக்கு வரப்போறீங்க? இப்பல்லாம் கல்யாணம்னு ஒண்ணு தேவையா, அவசியமான்னு லேடீஸ் யோசிக்க ஆரம்பிச்சிட்டாங்க. அதனால்தான் திருமண வயது பதினெட்டுன்னு இருந்ததை இருபத்து ஒண்ணுன்னு மாத்தினாங்க. இப்ப இருபத்தஞ்சென்ன, முப்பது வயசாகியும் கல்யாணத்தைப் பத்தி யோசிக்காத பெண்கள் நாட்லே பெருகிட்டு வர்றாங்க. நம்ம நாட்லே மட்டுமில்லே... ஃபாரின்லே உள்ள லேடீஸோட எண்ணமும் இதேமாதிரிதான் இருக்கு!

"விஞ்ஞானம் முன்னேற முன்னேற லேடீஸோட விழிப்புணர்வும் முன்னேறிக்கிட்டே போகுது. பெண்ணின் திருமண வயதும் அதிகரிச்சுக்கிட்டே போகுது. இதுக்கெல்லாம் என்ன காரணம்? படிப்பு, வேலைவாய்ப்பு, சுயமாய்த் தன்னால இந்த சமூகத்துல நிக்க முடியும், நம்மை மட்டுமில்லே,



இன்னும் ரெண்டுபேரைக் கடைசிவரை தன்னால காப்பாத்த முடியும்ங்கற துணிச்சல் உள்ளதாலதான்! நீ படிக்காதவ... ஆனா நீயும் எதுலேயும் குறைஞ்சு போய்டலியே! உழைச்சுச் சாப்பிடணும்ங்கற வெறியிலே... வெயில்லே தெருத் தெருவா தொண்டை காய்ஞ்சி போகிற அளவுக்கு கூவிக்கூவி காய்கறி விக்கிறே! உன் குடும்பத்தையே காப்பாத்தற கெபாஸிட்டி இருக்கு! வேறென்ன வேணும்? வெட்டியா, குடிச்சிட்டு வந்து உதைக்கிறவனுக்கு ஏன் தண்டச்சோறு போடறே? காலுக்கு உதவாத செருப்பைக் கழட்டி எறியறதுதானே புத்திசாலித்தனம்! நீயே வேண்டாம்னுட்டு உன் தாலிய அறுத்தெறிஞ்சிட்டு வைப்பாட்டிகிட்டே ஓடினவனைத் தலை மேல வச்சு தாங்க நினைக்கிறியே... உனக்கு அசிங்கமாயில்லே...?" எரிமலையாய் வெடித்தாள் சுகுணா.

"இல்லேம்மா... எனக்கு அசிங்கமாயில்லே. செருப்பு அறுந்து போச்சேன்னு தூக்கியெறிய நான் ஒண்ணும் உங்களை மாதிரி மேல் தட்டு வர்க்கம் இல்லேம்மா! மறுபடி தச்சி மாட்டிக்கிற ஏழை வர்க்கம். சட்டுபுட்டுன்னு முடிவெடுக்க இதென்ன சாதாரண விஷயமா?புருஷன் பொஞ்சாதிக்கு நடுவிலே புகுந்து சட்டம் விவாகரத்துன்னு சொல்லி பிரிச்சி வெச்சிடலாம். ஆனா, மனசில வேரோடிப் போயிருக்கிற பந்தத்தை எந்த சட்டத்தாலேம்மா அறுத்தெறிய முடியும்? சட்டம் சொல்லிட்டா சட்டப்படி என் புருஷனுக்கு நான் பொண்டாட்டியா இல்லாம இருக்கலாம். ஆனா, என் குழந்தைங்களுக்கும், அப்பாவுக்கும் இடையே உள்ள உறவை எந்த சட்டத்தாலம்மா அறுத்தெறிய முடியும்? அந்நாளுக்கு முந்தானை விரிச்சி ரெண்டு குழந்தைங்களைப் பெத்தது இல்லேன்னு ஆய்டுமா? இன்னார்க்கு இன்னார்ன்னு கடவுள் போட்ட முடிச்சை அவுக்கறதுக்கு நாம யார்?"

''பேத்தடிக்... ஒரு வட்டத்துக்குள்ளே சிக்கிக்கிட்டு இதே வசனத்தை இன்னும் எத்தனை காலத்துக்குத்தான் பேசப் போறீங்களோ?'' என்றாள் ஏளனமாய்.

''அந்த வட்டம்தானேம்மா எங்களுக்குப் பாதுகாப்பு! நாலு சுவரும் ஒரு கூரையும் இல்லேன்னா அதுக்குப் பேரு வீடு கிடையாது. நடுத்தெருவிலே ஒரு பொம்பளையால தனியாய் படுக்க முடியுமா? பேருக்குப் புருஷன்னு ஒரு ஆம்பளை பக்கத்திலே இருந்தாதானே மரியாதை! இல்லேன்னா... ஆண் துணை இல்லாதவன்னு எத்தனை தெரு நாய் என் பின்னாடி வருமோ?''

''அம்மா... ஒண்ணை நல்லாப் புரிஞ்சுக்குங்க... நான் என் புருஷனைப் பத்தி உங்ககிட்டே பேச வந்ததென்னவோ வாஸ்தவந்தான். ஏதோ, படிச்சவங்களாச்சே... நறுக்குனு நாலு வார்த்தை அந்தாளுக்குச் சொல்லித் திருத்துவீங்கன்னுதான் வந்தேன்.ஆனா நீங்க என்னடான்னா... ஒரு காகிதத்தை நீட்டி கையெழுத்துப் போடு, கைநாட்டு வையுன்னு பெரிய வார்த்தையெல்லாம் பேசிட்டீங்க. என் புருஷன் குடிகாரன்தான். இல்லேங்கலே. நாட்ல எந்த ஆம்பளை குடிக்காம இருக்கிறான்? பெரிய இடத்துல பொம்பளைங்களும் சேர்ந்து குடிக்கிறாளுங்க. இதை நயமா சொல்லி நான் திருத்தியிருக்கணும். பாழாப்போன என் வாய் சும்மாயில்லாம அந்தாளு கோபத்தை ஊதி பெருசாக்கிறமாதிரிப் பேசி சண்டை போடறேன். நாள் முழுக்க சண்டைன்னா... மனுஷனுக்கு சலிப்பு தட்டிடாதா? முன்னேயெல்லாம் வீட்டுக்கு ஒழுங்கா பணம் கொடுத்தவர் தானே! நான் நாலு காசு சம்பாதிக்க ஆரம்பிச்சதும் எனக்குத் தெனாவெட்டு வந்துருச்சு. மட்டு மரியாதையில்லாம ஆம்பளைய பேசினா உதைக்காம என்ன பண்ணுவான்?



''நான் ஒழுங்கா இருந்திருந்தா... அவர் ஏன் வேற பொம்பளைய தேடிப் போறார்? குடும்பத்துக்கு நாலு காசு குடுக்க வக்கில்லே... கொஞ்சி குலாவ மட்டும் நான் வேணுமா உனக்குன்னு பேசிப்பேசியே அவரை விரட்டியடிச்சிட்டேன்.

''இப்பவும் ஒண்ணும் குடி முழுகிப் போயிடலே. போனவர் திரும்ப வருவார். என்னைக்கிருந்தாலும் கட்டினவ கட்டினவ தான். எங்கே அலைஞ்சு திரிஞ்சாலும் துன்பப்பட்டு துயரப்பட்டு நீயே கதின்னு இந்தப் பொன்னம்மாவத் தேடி வரத்தான் போறார். எனக்கு நம்பிக்கையிருக்கு. அந்த மனுஷனைப் பத்தி என்னைத் தவிர வேற யாருக்குத் தெரியும்?

''தம்மாத்துண்டு விஷயத்தைப் பெரிசாக்கி எங்களை பிரிச்சிவிடப் பார்த்தியே தாயி! நாளைக்கு என் பொண்ணுங்க வளர்ந்து, அதுங்களுக்கு கல்யாணம் காய்ச்சின்னு பண்றப்ப... பொண்ணுக்குத் தகப்பன் எங்கேன்னு கேள்வி வருமே! அதுக்காகவாவது நான் விட்டுக் கொடுத்துதான் போகணும். எனக்கு என் வாழ்க்கைய விட, என் குழந்தைங்க வாழ்க்கைதான் முக்கியம். புரட்சி, புரட்சின்னு வாய் கிழியப் பேசலாம். ஆனா, அது வாழ்க்கையையே புரட்டிப்போடற புயலாகவும் மாறிடலாம். அளவுக்கு மிஞ்சிப்போனா... ஆபத்தும்மா! எனக்கு நிறைய வேலை இருக்கு. வர்றேன் தாயி, ஐயா! வரட்டுங்களா?'' என்று கைகூப்பி, புறப்பட்டாள் பொன்னம்மாள்.

''பொன்னம்மா!'' என்று அவளைத் தடுக்க முயன்ற சுகுணாவின் குரல் காற்றில் வீணாய்ப் போனது.

அன்பழகன் மனசு சந்தோஷத்தில் விசிலடித்தது.

4

சுகுணா கோர்ட்டுக்குப் போய்விட்டாள்.

அபர்ணா கல்லூரிக்குப் போய்விட்டிருந்தாள்.

அன்பழகன் சுறுசுறுப்பாய்க் காரியத்தில் இறங்கினார்.

வாங்கி வைத்திருந்த பழங்களையும், பிஸ்கட்டுகளையும் ஒரு பெரிய பிளாஸ்டிக் கவரில் போட்டுக் கொண்டார்.

அதைக் கையில் எடுத்துக் கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்டார்.

ஒரு ஆட்டோவில் ஏறிக் கிளம்பினார்.

அரைமணி நேரத்திற்குப் பிறகு ஆட்டோ நின்ற இடத்தின் நுழைவாயிலில் பெரிய போர்டு மாட்டப்பட்டிருந்தது.

மதர் தெரசா மனநல மருத்துவமனை!

தொண்டைக்குள் கனமாய் ஏதோ வந்து அடைத்துக் கொண்டது, அந்த இடத்தில் கால் வைத்ததும்.

பழக்கப்பட்ட வாட்ச் மேன் அவரைப் பார்த்துப் புன்னகையுடன் சலாம் வைத்தான்.

அன்பழகன் நேரே டாக்டர் அறையை நோக்கிச் சென்றார்.

''மே...ஐ... கமின் டாக்டர்!''

இவர் குரலுக்கு நிமிர்ந்த டாக்டர் விஸ்வம் புருவம் உயர்த்தினார்.

''ஓ... லாயர் சாரா? வாங்க... வாங்க! உக்காருங்க!''

''ஹவ் ஆர் யூ டாக்டர்?'' என்று கையை நீட்டினார். அதைப்பற்றிக் குலுக்கிச் சிரித்த டாக்டர், ''டாக்டர்கிட்டேயே



இந்த கேள்வியைக் கேக்கற தைரியம் இந்த லாயர்கிட்டே மட்டும்தான் இருக்கு. எனிவே ஐ'ம் ஃபைன்! நீங்க எப்படி யிருக்கீங்க?''

''எனக்கென்ன டாக்டர்! உடம்பளவில நான் நல்லாவே யிருக்கிறேன். ஆனா, மனசளவில் நான் எப்பவும் நோயாளி தானே! அதனாலதானே நான் இங்கே வர்றேன்!'' என்றார் குரல் அமுங்கிப்போய்.

''ஓக்கே... ஓக்கே... நெர்வஸாகாதீங்க. எல்லாம் நல்லபடி நடக்கும்!''

''விமலா... விமலா இப்ப எப்படியிருக்கா டாக்டர்?''

''.......''

''சொல்லுங்க டாக்டர். என் தங்கை எப்படியிருக்கா?''

''சொல்லிக்கிற அளவுக்கு எந்த முன்னேற்றமும் இல்லே மிஸ்டர் அன்பழகன். போன வாரம் அவங்களோட ரகளை கொஞ்சம் அதிகமாய்டுச்சி! அறையை க்ளீன் பண்ணப்போன வார்டு பாயைப் பிடிச்சி துவம்சம் பண்ணிட்டாங்க. கையைக் கடிச்சி ரத்தமா கொட்டிச்சு. 'நான் என்ன தப்பு பண்ணினேன்? என்னை ஏன் விவகாரத்து பண்ணினே?'ன்னு எந்த ஆம்பளையப் பார்த்தாலும் ஆக்ரோஷமா கத்தறாங்க! அதனால போனவாரம் அவங்களுக்கு ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுக்க வேண்டியதாப் போச்சு. தவிர, கையில கிடைக்கிற பொருளையெல்லாம் எடுத்து வீசியெறியறாங்க... ஸோ... சங்கிலி போட வேண்டியதா போச்சு!'' வருத்தமாய், தயக்கமாய்ச் சொன்னார் டாக்டர்.

அன்பழகனின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது.

''அவளுக்குப் பைத்தியம் முத்திப்போச்சன்னு சொல்லுங்க! விமலா எனக்கு ஒரே தங்கச்சி, டாக்டர். எங்கம்மா அப்பா அவளை என்கிட்டே ஒப்படைச்சிட்டு கண்ணை மூடிட்டாங்க. அவளைப் பூப்போல வளர்த்தேன் டாக்டர்! ஆனா இன்னைக்கு உதிர்ந்து போன மாலையா ஆகிட்டா! அவ சந்தோஷமா வாழணும்னுதான் தகுதிக்கு மீறிச் செலவு பண்ணிக் கல்யாணம் பண்ணி வச்சேன். தாலி கட்டினவனால ஏற்பட்ட பாதிப்பு கையிலே சங்கிலி போட வச்சிடுச்சி. அவ தலைவிதி... நடக்கட்டும்!'' என்றார் விரக்தியுடன்.

''நம்பிக்கையை இழக்காதீங்க, மிஸ்டர் அன்பழகன். உங்க தங்கையைப் பரிபூரணமா குணமாக்கி உங்க கையிலே ஒப்படைக்கிறது என் பொறுப்பு!''

''பத்து வருஷமா நம்பிக்கையிழக்காமதான் இங்கே வந்து போய்கிட்டிருக்கேன் டாக்டர்! விமலாவை நான் பார்க்கலாமா?''

''ஓ... ஷ்யூர்!''

பெருமூச்சுடன் எழுந்து நடந்தார் அன்பழகன். தனியறை அது.

தலைமுடி கலைந்திருக்க... சுவரை வெறித்துப் பார்த்தபடி கட்டிலில் சாய்ந்தமர்ந்திருந்தாள் விமலா. அகன்ற விழிகள் அச்சமூட்டுவதாய் இருந்தன. முப்பத்து மூன்று வயதென்றால் நம்பமுடியாது. குழந்தைத்தனம் முகத்தில் மிச்சமிருந்தது.

பத்து வருடம்!

பத்து வருடமாய் இந்த நான்கு சுவர்தான் அவளுக்கு உலகம்.



அறையினுள் நுழைந்த அன்பழகனின் கண்களில் மாலை மாலையாய்க் கண்ணீர் வழிந்தோடியது.

'என் தங்கை விமலாவா இது!'

தொண்டையில் முள் சிக்கிக் கொண்ட உணர்வு அவள் கோலத்தைப் பார்த்ததும்.

வளைகரங்களில் கனமான சங்கிலி போடப்பட்டுக் கட்டிலோடு பிணைக்கப்பட்டிருந்தது.

''விமலா!''

அழைத்ததும் நிமிர்ந்து பார்த்தாள்.

''உன் அண்ணன் வந்திருக்கேன் விமலா!''

கண்களில் உக்கிரம் தென்பட்டது.

''என்னை அண்ணான்னு கூப்பிடு விமலா!''

ஏதாவது பொருள் அகப்படுகிறதா எனக் கண்கள் அலை பாய்ந்தன.

''உனக்கேம்மா இந்த நிலைமை?''

''நான் என்ன தப்பு பண்ணினேன்? என்னை ஏன் விவகாரத்து பண்ணினே? ஏன் என்னை விட்டுப்போனே? சொல்லு! நான் என்ன தப்பு பண்ணினேன்? சொல்லுடா, நான் என்னடா தப்பு பண்ணினேன்?'' விமலா திமிறிக்கொண்டு எழ முயன்றாள். சங்கிலியால் பிணைக்கப் பட்டிருந்ததால் தொப்பெனக் கட்டில்மேலேயே விழுந்தாள். ஆனாலும் அவள் கத்திக் கொண்டிருந்தாள். ஆக்ரோஷமாகப் பேசியதால் கண்கள் சிவந்து கண்ணீர் துளிர்த்தது.

அன்பழகன் தலையில் அடித்துக் கொண்டு அழுதார்.

''நான் உன் அண்ணன்ங்கறதே மறந்து போச்சேம்மா உனக்கு? உன்னை இந்தக் கோலத்தில பார்க்கவா நான் உயிரோட இருக்கிறேன்? நான் படிச்ச சட்டம் உன் வாழ்க்கைய மீட்டுத்தரப் பயன்படலியே விமலா!''

அப்படியே அமர்ந்து குலுங்கிக் குலுங்கி அழுதார்.

மனசே சரியில்லாமல், சாப்பிடப்பிடிக்காமல் சீக்கிரமாகவே படுக்கப் போய்விட்டார் அன்பழகன்.

கோர்ட்டிலிருந்து வரும்போதே எதிர்கொண்டழைக்கும் கணவன் சோர்ந்துபோய்ப் படுத்திருப்பதிலிருந்தே புரிந்தது சுகுணாவிற்கு.

'தங்கையைப் போய்ப் பார்த்துவிட்டு வந்திருப்பார்!'

''எப்படியிருக்கா விமலா?'' என்றாள் கூந்தலை அவிழ்த்த படி.

எழுந்தமர்ந்தார் அன்பழகன்.

''முன்னே விட மோசமாயிட்டா! என்னையே அவளால அடையாளம் காணமுடியலே...!'' குரல் நெகிழ்ந்தது.

''சரி... அவ தலைவிதி... அதுக்காக யாரென்ன பண்ண முடியும்? நோய் பிடிச்ச கோழி மாதிரி இப்படி நீங்க சுருண்டு படுத்துக்கிடந்தா... பார்க்கிறவங்க என்ன நினைப்பாங்க?'' என்றாள் அலட்சியமாக.

''அவ தலைவிதிய யாரும் மாத்தலே சுகுணா! நீதான்... நீதான் மாத்தினே! நீ மட்டும் அவளுக்கு டைவர்ஸ் வாங்கித் தராம இருந்திருந்தா... அவளுக்கு இந்த நிலை ஏற்பட்டி ருக்காது.''



''கண்டபடி உளறாம... போய் ஆகற வேலையைக் கவனியுங்க.'' கோபமாய்க் கூறிவிட்டுப் போய்விட்டாள் சுகுணா.

அதற்கு மேல் அவரால் எதுவும் பேசமுடியவில்லை. பேசி என்ன பிரயோஜனம்? இந்த வீட்டைப் பொறுத்தவரை... சுகுணாதான் எஜமானன். அவள் வைத்ததுதான் சட்டம். அவள் சொல்வதுதான் வேத வாக்கு.

தன் இயலாமையை நொந்து பெருமூச்சு விட்டார் அன்பழகன்.

தலையை வலிப்பது போலிருந்தது. கண்களை இறுக மூடிக் கொண்டார். மூடிய கண்களுக்குள்ளே காட்சிகள் பின்னோக்கி ஓடின.

ராமானுஜம், தெய்வநாயகி தம்பதிக்கு அன்பழகனும், விமலாவும் ஆணொன்று, பெண்ணொன்றாய்ச் சின்னஞ்சிறு அழகான குடும்பம். ராமானுஜம் நகரிலேயே பிரபல வக்கீலான ராகவனிடம் கிளார்க்காய் பணிபுரிந்து வந்தார். ராகவனின் ஒரே சீமந்த செல்வப் புதல்விதான் சுகுணா. படிப்பில் படுசுட்டி அன்பழகனும் சிறந்த அறிவாளி என்றறிந்தபோது அவன் படிப்புச் செலவு முழுக்கத் தானே ஏற்றுக் கொண்டார்.

அன்பழகன் கல்லூரியில் பி.ஏ. படித்துக் கொண்டிருந்தபோது பெற்றோரை ஒரு விபத்தில் பறிகொடுத்தார்.

தாய், தகப்பனை இழந்து தவித்த இருவரையும் தன் பொறுப்பில் அரவணைத்துக் கொண்டார் ராகவன். அன்பழகனும் தன் தங்கை மீது உயிரையே வைத்திருந்தார். இவர்களுக்குச் சிறு குறையும் ஏற்படாத அளவிற்கு எல்லா உதவிகளையும் செய்தார் ராகவன்.

மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்பார்கள். ராகவனுக்கு அப்படிப்பட்ட வரம் கிடைக்க வில்லையோ என்னவோ, அவருக்கு நேர்மாறான மனைவி யாகத்தான் இருந்தாள் சித்ரா. பணத்திற்குக் குறைவில்லாமல் வாழ்ந்தாலும், பணம் பணமென அலைந்தாள். அவளுக்கு, அன்பழகனுக்கும் - விமலாவுக்கும் பணத்தைத் தண்ணீராய் வாரியிறைத்து உதவுவது நெருப்பை மேலே வாரியிறைத்தது போலிருந்தது.

எப்படி யெப்படியோ சொல்லிப் பார்த்தாள். ராகவன் கேட்கவில்லை. கடைசியில் சுமத்தக் கூடாத பழியைச் சுமத்தியபோதுதான் ராகவன் மிருகமாய் மாறினார்.

''ஒரு சாதாரண கிளார்க் இறந்து போய்ட்டான். ஊர்ல உலகத்துல யாருக்குத்தான் சாவு வரலே! ஏதோ, அஞ்சோ, பத்தோ கொடுத்துட்டு தலைமுழுகாம, காலம் முழுக்கக் கட்டிக் காப்பாத்தறேன்னு அந்தாள் பெத்துப் போட்ட ரெண்டு பிள்ளைகளையும் வீடு பார்த்து பணத்தைப் பணம்னு பார்க்காம செலவு பண்றாராம். அப்படியென்ன அதுங்க சொந்த பந்தத்துக்கு இல்லாத அக்கறை இவருக்கு வந்துபோச்சு. நிஜமாகவே அந்தப் பிள்ளைங்க ராமானுஜத்துக்குப் பொறந்ததா, இல்லே ராகவனுக்குப் பொறந்ததான்னு எனக்குத் தெரிஞ்சாகணும்?''

சொல்லி முடித்திருக்க மாட்டாள்... ராகவனின் வலது கரம் அவள் கன்னத்தில் இடியாய் இறங்கச் சுருண்டு விழுந்தாள். விழுந்ததில் சுவரின் முனைபட்டு நெற்றியில் பிளந்து கொண்டு ரத்தம் குபுகுபுவென வெளியேறியது.

''நானும் போனாப் போகட்டும்னு நீ பேசறதையெல்லாம் பெரிசு பண்ணாம... வாயை மூடிக்கிட்டு இருந்தா... பேசக்



கூடாததையெல்லாம் பேசறியே! உனக்கு மட்டும்தான் பேசத் தெரியுமா? உன் பேச்சால கறைபட்டது நானில்லேடி. செத்துப்போன ராமானுஜத்தோட பொண்டாட்டி! நீயும் ஒரு பொம்பளைதானே! அடுத்த பொம்பளை மேல எவ்வளவு ஈஸியாகப் பழியைப் போடறே! இதே பழியை நான் உன்மேல போட எவ்வளவு நேரமாகும்? கேஸ், கோர்ட்டுனு வெளியிலேயே அலையறவன் நான்! நான் வீட்லே இல்லாத சமயத்திலே யார் யாரோ உன்னைத் தேடி வரலாம், போகலாம். இல்லையா? சுகுணாவுக்கு அப்பா நான்தான்னு சொல்லித்தான் எனக்குத் தெரியும். ஏன் அதுகூடப் பொய்யா இருக்கலா மில்லையா? ஆனாலும் நான் நம்பினேன்... ஏன்? அதுக்குப் பேருதாண்டி தாம்பத்யம். அதுக்குப் பேருதாண்டி குடும்பம்!'' ஆவேசமாய்ப் பேசினார்.

சித்ராவிற்குத் தனக்கு ரத்தம் வெளியேறுவதைப் பற்றியோ, சுற்றுச் சூழல் பற்றியோ கவலையில்லை. ஆனால், தன் கற்பைப் பற்றியே சந்தேகப்பட்டு விமர்சித்த வார்த்தைகள்தான் அவளைத் துடிக்க வைத்தன.

பாய்ந்தெழுந்து கணவனின் சட்டையைக் கொத்தாய்ப் பற்றிக் கொண்டாள்.

''என்னையா... என்னையா சந்தேகப்படறீங்க?''

''நீ என்னைச் சந்தேகப்படறப்ப... நான் ஏன் உன் மேல படக்கூடாது!''

''என் சந்தேகத்துக்கு வலுவான காரணமிருக்கு!''

''யோசிச்சா... என் சந்தேகத்துக்கும் வலுவான காரணம் நிச்சயம் கிடைக்கும்!''

"சீ... என்ன மனுஷன்யா நீ! செய்த தப்பை மறைக்க என் மேலேயே சேற்றை வாரியிறைக்கிறியா? உன் மனசுல என்னைப் பத்தின தப்பான அபிப்ராயம் இருக்கறதாலதான் இவ்வளவு பெரிய பழியைப் போடறே!இத்தனை வருஷம் உன்கூட வாழ்ந்ததற்காக வெட்கப்படறேன். வேதனைப் படறேன்!"

"எனக்கும் அசிங்கமாதானிருக்கு!"

"அப்ப... அப்ப..."

"இனி நாம சேர்ந்து வாழறதிலே அர்த்தமே இல்லே. பிரிஞ்சிடலாம்!"

"நான் நல்ல அப்பா அம்மாவுக்குப் பொறந்தவ! எனக்கும் மானம், ரோஷம் எல்லாம் இருக்கு... கெஞ்சிக் கேட்டு, கால்ல விழுந்து என்னை மன்னிச்சி ஏத்துக்குங்கன்னு கண்ணீர் விட்டுக் கதறுவேன்னு மட்டும் கற்பனையிலேயும் நினைக்காதே! இனி நம்மளை எந்த சக்தியாலும் ஒண்ணு சேர்க்க முடியாது. யாரோ ஒரு ராமானுஜத்தோட பிள்ளைகள் முக்கியமாய்ப் போய்டுச்சி! கட்டின பொண்டாட்டி குப்பையாய்ப் போய்ட்டாளா? உனக்கெல்லாம் திமிருய்யா! படிச்சிட்ட திமிரு, பணக்காரத் திமிரு! நீங்க செய்யற எந்த தப்பையும் பொம்பளைங்க தட்டிக் கேக்கவே கூடாது. கேட்டுட்டா... அவளுக்கு விபசாரி பட்டம் கட்டுவீங்க... போய்யா... நீயும்... உன் தாலியும்!" என்று அந்தக் கணமே தாலியைக் கழற்றி எறிந்தாள் சித்ரா.

சுகுணா எல்லாவற்றையும் திகைப்புடன் பார்த்துக் கொண்டு தானிருந்தாள்.

ராகவன் எல்லாவற்றையும் எளிதாகவே எடுத்துக் கொண்டார். ஆரம்ப காலத்திலிருந்தே சித்ராவின் குணம் அவருக்குப் பிடிக்காத வகையிலேயே இருந்ததால்.. இந்த



விவகாரத்து இருவருக்குமே நல்லது என்று சட்டம் படித்த அவர் மூளை தீர்மானித்தது.

## 5

ராகவன் வக்கீலாய் இருந்ததால், சட்டத்தின் சந்து பொந்தெல்லாம் அறிந்தவராய் இருந்ததால், எளிதாகவே விவாகரத்து கிடைத்து விட்டது.

மகளின் எதிர்காலம், படிப்பு, வாழ்க்கை வசதிகள் எல்லாவற்றையும் கருதி மகளை ராகவனிடமே விட்டு வைத்தாள் சித்ரா.

ஆனால் மகள் மனதில் அவள் பற்ற வைத்த பொறி தீப்பற்றி எரிந்து கொண்டிருந்ததை யாராலும் அறிய முடியவில்லை.

"சுகுணா... நல்லா வாழ்ந்திட்டிருந்த நம்ம குடும்பத்தை அழிச்சது ராமானுஜம் குடும்பம்தான். இன்னைக்கு உங்கம்மாவைத் தனி மரமாக்கி மூலைல உக்கார வச்ச குடும்பத்தை நீ சும்மா விடாதே! நல்லாப் படி! பட்டம் வாங்கு. சட்டத்தைக் கையிலே எடு! உங்கப்பனை மாதிரி திமிர் பிடிச்ச ஆம்பிளைங்க பிடியிலே மாட்டிக்கிட்டிருக்கிற பொம்பளைங்களை விடுவிச்சு அவனுங்களுக்குப் பாடம் புகட்டு!செய்வியா சுகுணா?"

"கண்டிப்பா செய்வேம்மா... சட்டம் படிச்சு லாயரா மாறுவேன். பணம் என்னோட குறிக்கோள் அல்ல! இப்ப நீ சொன்னியே... பெண்கள் சுதந்திரம். விவகாரத்து மூலம் பெண்களுக்கு நான் சுதந்திரம் வாங்கித் தர்றேன்ம்மா! பெண்களன்றி இந்த உலகில் ஓர் அணுவும் அசையாதுங்கறதை இந்த ஆண்கள் நிச்சயம் புரிந்து கொள்ள ஓர் சந்தர்ப்பம் ஏற்படுத்தித் தருவேன்." அந்த உறுதியைத் தாயிடம் அளித்தது மட்டுமன்றி, தன் சுவாசத்திலும் கலந்து கொண்டாள் சுகுணா.

சித்ரா ரொம்ப காலம் உயிரோடு இருக்கவில்லை. ஏற்கெனவே இருந்த ஆஸ்துமாவோடு சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட கசப்பும், கவலையும் அவளைப் படுத்த படுக்கை யாக்கி நிரந்தரமாய்க் கண் மூட வைத்தன.

தங்களைக் குறி வைத்து மிகப் பெரிய ஏவுகணை வரப் போவதை அறியாமல் படிப்பில் கவனமாய் இருந்த அன்பழகன் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். ராகவன் மகிழ்ந்து அவரைத் தன்னிடமே ஜுனியராய் பயிற்சி தந்தார்.

அன்பழகனின் திறமை, ஒழுக்கம், பண்பு எல்லாமே ராகவனை வெகுவாய்க் கவர்ந்தது.

அன்பழகன் பிராக்டிஸ் பண்ணிக் கொண்டிருந்த சமயம் சுகுணாவும் தேர்ச்சி பெற்று வக்கீலாகி விட்டாள். அவள் மிகப்பிரபலமான பெண் லாயர் சுலோச்சனாவிடம் ஜுனியராய்ச் சேர்ந்தாள்.

தனக்கும் தன் மனைவிக்கும் ஏற்பட்ட கசப்பான சம்பவங்களை வைத்து ராகவன் ஒரு போதும் மகளை வெறுத்ததில்லை. சித்ரா ஒழுக்கமானவள் என்பதை அவர் அறிவார். உடலை மட்டும் ஒழுக்கமாய்ப் பேணுவதில் என்ன லாபம்?

சுகுணா மீது அவர் எல்லை யில்லா அன்பைக் கொண்டி ருந்தார். அவளுக்கு நல்ல வாழ்க்கைத் துணையைத் தேடித்தர முயன்றபோது முதல் ஆளாய் அவர் மனதில் வந்து நின்றதென்னவோ அன்பழகன்தான்.

பணம் காசைத் தவிர வேறெதில் குறை அவனிடம்? அவனிடமுள்ள திறமை ஒன்றே போதுமே... கட்டுக்கட்டாய்ப் பணம் சம்பாதிக்கலாமே!



அன்பழகனைத் தவிர வேறு யாரும் சுகுணாவுக்குப் பொருத்தமாய் இருக்க முடியாது!''

தீர்மானித்த ராகவன் தன் எண்ணத்தைச் சுகுணாவிடம் வெளிப்படுத்தியபோது... அதிர்ந்தாலும், சுதாரித்துக் கொண்டாள்.

'அம்மாவிடம் செய்து கொடுத்த சத்தியத்தை நிறைவேற்ற என்திருமணத்தை ஏன் ஒரு கருவியாக்கிக் கொள்ளக்கூடாது?'

மறுமுறை கூட யோசிக்காமல் தலையாட்டி விட்டாள். அன்பழகன்தான் திகைப்பின் உச்சிக்கே போனார்.

'அந்தப் பெண்ணா? சுகுணாவா? பேரழகியா? எனக்கா? இப்படியொரு அதிர்ஷ்டமா எனக்கு?' என்று வியந்தாலும் தனக்கும் அவளுக்கும் ஒத்து வராது என்று முதலில் தயங்கினார்.

ராகவனின் வாஞ்சையும், விமலாவின் வற்புறுத்தலும் அவரைச் சம்மதிக்க வைத்தது.

விமரிசையாய்த் திருமணம் நடந்தேறியது.

மகளின் திருமணத்தை நடத்தியவுடன் தன் கடமை முடிந்த நிம்மதியோடு ராகவனும் ஹார்ட் அட்டாக்கில் போய்ச் சேர்ந்து விட்டார்.

சுகுணா சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தாள். அன்பழகனு டன் சுமுகமாகவே குடும்பம் நடத்துவது போல் நடித்தாள்.

அபர்ணாவும் பிறந்தாள். அவளுக்கு இரண்டு வயதான போது... அன்பழகன் தங்கைக்கு வரன் தேடினார். அதற் கென்றே காத்திருந்தவள் போல அவள் ஒரு வரனைக் கொண்டு வந்தாள்.

பெயர் பாஸ்கர். நல்ல வேலை. கைநிறையச் சம்பளம். ஆளும் பார்க்க அம்சமாக இருந்தான். போதாததற்கு வரதட்சணை, சீர், செனத்தி என்று அவன் எதையும் எதிர்பார்க்கவில்லை. அம்மா, அப்பா இல்லை. உடன்பிறந்தவர்களும் யாருமில்லை. எனவே மாமியார் நாத்தனார் என்கிற பிக்கல் பிடுங்கல் இல்லை. இந்த வரனை எந்தக் காரணமும் சொல்லி மறுக்க முடியாது என்பதை நன்றாகவே புரிந்து வைத்திருந்தாள் சுகுணா.

சுகுணா நினைத்தபடியே எல்லாம் நடந்தது. பாஸ்கர் எதையும் எதிர்பார்க்கவில்லை யென்றாலும், ஒரே தங்கையாயிற்றே... தன் சக்திக்கு உகந்த வகையில் சீரும் சிறப்புமாகவே கல்யாணத்தை நடத்தினார்.

பாஸ்கர் - விமலா தாம்பத்ய வாழ்க்கை நாலைந்து மாதம் வரை எந்தவிதத் தடங்கலுமின்றித் தான் சென்றது... உண்மை வெளிச்சத்திற்கு வரும்வரை.

விமலா தன் கணவன் மீது உயிரையே வைத்திருந்தாள். அவன்தான் அவளின் உலகம்.

ஒருநாள் சுகுணா சொன்ன செய்தி... உலகையே உலுக்கியது போலிருந்தது.

பாஸ்கரோடு பைக்கில் மிக நெருக்கமாக ஒரு இளம் பெண்ணைப் பார்த்ததாக.

விமலாவும் சரி, அன்பழகனும் சரி, நம்பவில்லை. ஆனால் அன்பழகனே ஒருமுறை கண்களால் காண நேர்ந்தபோது இடிந்து போனார்.

விமலாவுக்குப் பாதி உயிரே போனது.



பாஸ்கரை முகத்திற்கு நேரே கேட்டபோது திணறியபடி ஒப்புக் கொண்டான்.

அவள் பெயர் ஸ்நேகா! இளம் விதவை. ஒரே கம்பெனியில் பணிபுரிகிறாள். திருமணத்திற்கு முன்பிருந்தே தொடர்பு உண்டு.

துடித்துப் போய்விட்டாள் விமலா...

சுகுணா ஆத்திரத்துடன் அவன் சட்டையைக் கொத்தாகப் பற்றிக் கொண்டாள்.

''ராஸ்கல்... எவ்வளவு தைரியமிருந்தா செய்யறதெல்லாம் செஞ்சிட்டு ஆமாம்னு ஒத்துக்குவே! லேடீஸ்ன்னா... வாலை ஆட்டிக்கிட்டு பின்னாலேயே வர்ற நாய்னு நினைச்சிட்டியா?''

''இங்கே பாருங்க... முதல்ல கைய எடுங்க. இது நானும் என் பொண்டாட்டியும் பேசித் தீர்த்துக்கற விஷயம், அநாவசியமா நீங்க இதிலே தலையிடவேண்டாம்!'' என்றான் பாஸ்கர்.

''சுகுணா... ஆத்திரப்படாதே! நிதானமா கேட்கலாம். இப்படி வா!'' என்ற அன்பழகனின் பேச்சையும் நிராகரித்தாள்.

''உங்களுக்கொன்னும் தெரியாது... நீங்க சும்மா இருங்க. இவனுங்களையெல்லாம் இப்படி விடக்கூடாது. உனக்குத்தான் கல்யாணத்துக்கு முன்னாடியே அந்த ஸ்நேகாவோட தொடர்பு இருக்கில்லே... பிறகெதுக்குடா எங்க வீட்டுப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டே...?''

''இங்கே பாருங்க... மரியாதையா பேசுங்க. இல்லேன்னா... நானும் மரியாதையில்லாம பேச வேண்டி வரும்!''

''உனக்கென்னடா மரியாதை வேண்டி கிடக்கு?''

''அண்ணி விட்ருங்க, அண்ணி...!'' என்றாள், விமலா அழுதபடி.

''இல்லே விமலா... உனக்கு இவனைக் கட்டிவச்சதே நான்தான். தெரியாம உன்னைப் பாழுங்கிணத்துல தள்ளி விட்டுட்டேன். உன்னைக் காப்பாத்த வேண்டியது என் கடமை!''

''விமலா... நான் செஞ்சது தப்புதான்! மன்னிச்சிடு. இனி அந்த ஸ்நேகாவோட பழக மாட்டேன்!'' என்றான் மனைவியிடம் கெஞ்சலாய்.

''விமலா... நீ உள்ளே போ! ருசி கண்ட பூனை லேசில மறந்திருமா? போ... அந்த ஸ்நேகாகிட்டேயே போ! எங்க விமலாவுக்கு எப்படிப்பட்ட வாழ்க்கையை உருவாக்கித் தரணும்னு எங்களுக்குத் தெரியும்!''

''சுகுணா... ப்ளீஸ்... அவசரப்படாதே!''

''நீங்க சும்மாயிருங்க! இப்படிப்பட்ட காமுகனோட வாழ்றதைவிட, விமலா வாழாவெட்டியாகவே இருக்கலாம். நீ வெளியே போ... டைவர்ஸ் அப்ளிகேஷன் வீடு தேடி வரும்!''

''விமலா!''

''அவளை ஏன் கூப்பிடறே? அவ சின்னப் பொண்ணு! அவளுக்கு எதுவும் தெரியாது. இனி என்ன பேசறதுன்னாலும் கோர்ட்ல பேசிக்கலாம்... கெட் அவுட்!''

பாஸ்கர் ஆத்திரமும், அவமானமுமாய் வெளியேறினான்.

''என்ன சுகுணா இப்படி பண்ணிட்டே? விஷயத்தை ஊதிப் பெரிசாக்கிட்டியே!''



''அவன் நாளைக்கு அந்த ஸ்நேகாவோட பேச்சைக் கேட்டு விமலாவைக் கொலை பண்ணவும் துணியமாட்டான்னு என்ன நிச்சயம்?''

''அவன்தான் மன்னிப்புக் கேட்டானே!''

''அதை நம்பறீங்களா? வேஷக்காரன்...''

''சரி... அதுக்காக... டைவர்ஸ்தான் தீர்வுன்னு முடிவெடுக்கலாமா? எனக்குப் பிடிக்கலே... நான் பாஸ்கரைப் பார்த்துப் பேசிட்டு வர்றேன்!''

''நோ... மறுபடி போய் அவன் கால்ல விழாதீங்க!''

''நீ ஏன் தடுக்கறே சுகுணா? டைவர்ஸ் பண்றதுக்கா கல்யாணம் பண்ணி வச்சோம்? அவனை நல்ல வழிக்குக் கொண்டு வர முயற்சிக்கிறேன்...''

இப்படியே பேச்சு வார்த்தை நீண்டு கொண்டே போக... கடைசியில் அவர்களுக்குள் சண்டையே வந்துவிட்டது.

''நான் விமலாவுக்கு டைவர்ஸ் வாங்கித் தராம ஓய மாட்டேன்.''

''இதை தடுக்காம நானும் ஓய மாட்டேன்!''

''இந்த கேஸ்ல நான் ஜெயிச்சிட்டேன்னா?''

''ஜெயிக்க மாட்டே...''

''ஜெயித்தால்... நீங்க இனி கோர்ட்டுக்குப் போகக்கூடாது. இந்த வீட்டுப் பொறுப்பு மட்டும்தான் உங்களுக்கு... சரியா?''

''சரி... ஒப்புக்கறேன். அதே மாதிரி நீ தோற்றுப் போய்ட்டா...?''

''நான் இனி கோர்ட் பக்கமே தலை வச்சுப் படுக்க மாட்டேன்!''

"இவர்களின் சண்டையோ, சபதமோ விமலாவைப் பாதிக்கவில்லை.

'ஆசைக் கணவன் தன்னை ஏமாற்றி விட்டானே...' என்கிற புயல் மட்டுமே அவள் இதயத்தில் மையம் கொண்டிருந்தது. கிட்டத்தட்ட அவள் நடை பிணமாகி விட்டாள். சுகுணா நீட்டிய காகிதத்திலெல்லாம் கையெழுத்துப் போட்டாள். அன்பழகன் தங்கையிடம் எவ்வளவோ எடுத்துக் கூறியும் கேட்கவில்லை.

கடைசியில் தோற்றுப் போனது அன்பழகன்தான். அவர் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும் பாஸ்கரும் வழக்கை வாபஸ் வாங்கவில்லை.

"உம் பொண்டாட்டிக்கு அவ்வளவு திமிர் இருந்தா... எனக்கு எவ்வளவு இருக்கும்? போய்யா... எந்த சந்தர்ப்பத்திலேயும் அடுத்தவர் முன்னாடி புருஷனை விட்டுக் கொடுக்காதவதான் பொண்டாட்டி! ஆனா, உன் தங்கச்சி என்னைத் தலைகுனிய வச்சிட்டாளே! அப்படிப்பட்டவ இனி எனக்கு வேண்டாம்!" ஆணித்தரமாய்ச் சொல்லிவிட்டான்.

விவாகரத்தானது.

விமலா மனதளவில் பெரிதும் பாதிக்கப்பட்டாள்.

அன்பழகன் உடைந்து போனார்.

தன் ஒரே தங்கையின் வாழ்க்கையைக் காப்பாற்ற முடியாத சட்டப்படிப்பை வெறுத்தார்! கறுப்புக் கோட்டை கழற்றி எறிந்தார்.

நாளாக ஆக விமலாவின் பேச்சு குறைந்தது. எல்லாவற்றிற்கும் மௌனமே அவள் பதிலாய் இருந்தது. அந்த அசாதாரண மௌனத்தின் விடை விரைவிலேயே தெரிந்தது.



ஒருநாள் கைக்கு அகப்பட்ட பொருட்களையெல்லாம் வீசி எறிந்தாள். இருக்க இருக்க அட்டகாசம் அதிகரித்தது. அபர்ணா பயந்து போனாள். சுகுணா சும்மாயிருப்பாளா என்ன? அன்பழகன் தன் தங்கையை மனநல மருத்துவமனையில் சேர்த்தார்.

சுகுணா நினைத்ததெல்லாம் நடந்துவிட்ட மகிழ்ச்சியில் திளைத்தாள். அன்புழகனை ப்யூஸ் போன பல்பாக்கி, பெயருக்கு ஆம்பளையாய், தனக்குக் கணவனாய் அடக்கி வைத்தாள்.

ஆண்கள் மீது இயல்பாகவே வெறுப்பு! அதனாலேயே விவகாரத்து என்ற ஆயுதத்தின் மூலம் அவர்களைப் பழி வாங்கிக் கொண்டிருந்தாள்.

'இதற்கெல்லாம் தீர்வு எப்போது?'

அன்பழகன் அப்படியொரு நாளைத்தான் ஆவலாய் எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்.

## 6

குளியலறையில் பாட்டுச் சத்தம் கேட்டது.

நேரம் இரவு 10 மணி.

அன்பழகன் சுகுணாவின் பெட்ரூமிற்குச் சென்று ஏக்கமாய்ப் பெருமூச்சு விட்டார்.

நட்சத்திர ஹோட்டல் அறையைப் போன்று அத்தனை வசதியும் அங்கிருந்தன.

ஃபோம் மெத்தையும் படுக்கை விரிப்பும் அவரைக் கைநீட்டி அழைத்தன.

ஏஸியை ஆன் பண்ணிவிட்டுக் கட்டிலில் அமர்ந்தார். படுக்கையைக் கைகளால் தடவி ஏக்கமாய்ப் பார்த்தார்.

'இதுக்கெல்லாம் நமக்கேது கொடுப்பினை?' என்று முணு முணுத்தபடி தலையணையும், பெட்ஷீட்டும் எடுத்துக்கொண்டு ஹாலுக்கு வந்தார்.

சுகுணா அவரை ஒரு மாதிரியாகப் பார்த்தபடி அறைக்குள் நுழைந்தாள்.

'வயசு வந்த பொண்ணுக்கு அம்மான்னு சொன்னா நம்புவாங்களா? நைட்டியில் இன்னமும் சிக்குன்னு சின்னப் பொண்ணு மாதிரியே இருக்கா!' விட்டத்தை வெறித்துப் பார்த்தபடி தனக்குத் தானே பேசினார்.

அருகில் ஏதோ சலனம் தென்பட... திரும்பியவர் திகைத்தார்.

சுகுணா நின்றிருந்தாள்.

சடாரென எழுந்தமர்ந்தார்.

"என்ன சுகுணா?"

"உள்ளே வாங்க."

"நிஜமாவா?"

"கர்மம்... வான்னா... வரணும். அதை விட்டுட்டு..."

நாக்கில் எச்சில் ஊற அவள் பின்னழகை ரசித்தபடி பூனைக் குட்டியாய்ப் பின்தொடர்ந்தார்.

"என்னால நம்பவே முடியலே சுகுணா!"

சுகுணா குறும்பாய்ச் சிரித்துக் கொண்டாள்.



"ப்பா... என்ன வாசனை! இதென்ன சோப்பு சுகுணா? ஒரு நாளைக்கு உன் பாத்ரூம்ல இந்த சோப்பு போட்டு குளிக்கணும்னு ரொம்ப நாளா எனக்கொரு ஆசை!" என்றார் வாசனையை நுகர்ந்தபடி.

"பட்டிக்காட்டான் மாதிரி பேசாம படிச்சவரா பேசுங்க!"

"உன்னைப் பார்த்தா பேசவே வரலியே சுகுணா!"

"ம்... அப்புறம்?"

"நீ எப்பவும் இதே மாதிரி இருந்தா எவ்வளவு நல்லாயிருக்கும்?"

"ஏதோ போனா போகட்டும்... தங்கையைப் பார்த்துட்டு வந்ததிலேர்ந்து நோய்க் கோழி மாதிரி சுருண்டு கிடக்கறீங்களேன்னு கூப்பிட்டா... தலைக்கு மேலே ஏறி உக்கார்றீங்களே! ம்ஹூம் எந்திரிங்க!" என்றாள், சுகுணா.

"ஆனாலும் உனக்கு ரொம்பதான் கோபம் வருது! உன்கிட்டே ரொம்ப நாளா ஒரு விஷயம் பத்தி பேசணும்னு நினைச்சிட்டிருக்கேன். ஆனா, உன் முகத்தைப் பார்த்தா... எல்லாம் நாக்குக்குள்ளேயே அமுங்கிப் போய்டுது..."

"என்ன விஷயம்?"

"கோபப்பட மாட்டியே!"

"என்ன தலையணை மந்திரமா?"

"நீ எனக்குப் போடணும். ஆனா, இங்கேதான் எல்லாமே தலைகீழாச்சே!"

"சொல்ல வந்ததைச் சட்டுபுட்டுனு சொல்லி முடிச்சா நல்லது!"

"ஹி... ஹி... ரொம்ப அவசரமோ?" என்று கண்ணடித்தவர் அவளின் முறைப்புக்கு அடங்கிப் போனார்.

"இல்லே... வந்து நமக்கும் ஒரு பொண்ணு இருக்கு!"

"அதுக்கென்ன?"

"அவளுக்காக நீ பணமும் நகையுமா சேர்க்கிறே! இல்லேங்கலே. ஆனா, கூடவே பாவத்தையும் சேர்க்கறியே! அதுதான் சங்கடமாய் இருக்கு."

"என்ன பாவம்?" என்றாள் ஆழமாய் ஊடுருவி.

"இல்லே... நீ டைவர்ஸ் வாங்கித் தர்றதில் எக்ஸ்பர்ட்னு பேர் எடுத்திட்டே! இதுவரைக்கும் நூறு ஜோடிக்கும் மேலே டைவர்ஸ் வாங்கிக் கொடுத்துப் பிரிச்சிருக்கே. இதெல்லாம் பாவமில்லையா?"

"நானாகத் தேடிப்போய் யாரையும் பிரிச்சு வைக்கலியே! அவங்களா என்னைத் தேடி வர்றப்ப... வாதாடலேன்னா நான் என்ன வக்கீல்? இந்த மாதிரி விதண்டா வாதம் பண்ணீங்கன்னா வச்சுக்குங்க... உங்களையும் டைவர்ஸ் பண்ணிடுவேன்... ஆமா!"

"ஐயோ... என்ன வார்த்தை சொல்லிட்டே சுகுணா? நான் ஏதோ ஒரு பேச்சுக்குச் சொன்னேன். அதைப்போய்ப் பெரிசு படுத்திக்கிட்டு... இதுவரைக்கும் உன்பேச்சுக்கு மறுபேச்சு பேசியிருப்பேனா? என்னைப் படிக்க வச்சது உங்கப்பா... என்னை ஒரு லாயரா உருவாக்கினார். அவர்கிட்டேயே ஜுனியரா சேர்ந்தேன். படிப்பைக் கொடுத்தார். அனுபவத்தைக் கொடுத்தார். கடைசியா உன்னையும் எனக்குக் கொடுத்தப்ப மறுக்காம வாங்கிக்கிட்டேன். அப்பயிருந்தே நான் ஒரு தலையாட்டிப் பொம்மையாதான் இருந்து வந்தேன். அப்ப



ஆடின தலை இன்னும் நிக்கலியே... உன் பேச்சை என்னைக்கு மறுத்துப் பேசியிருக்கேன்? என் வாழ்க்கையிலே வருஷத்துக்கு ஒருமுறை வர்ற தீபாவளி மாதிரி இதுவும் பண்டிகைதான். இந்த சான்ஸை மிஸ் பண்ணலாமோ? மாட்டேனே... லைட்டை அணைக்கட்டுமா சுகுணா?"

எப்போதோ ஒருமுறை மலரும் குறிஞ்சிப் பூவைப்போல சுகுணாவின் முகத்தில் நாணம் பூத்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை. ஏதோ ஒரு புத்தகத்தைப் பிரித்து வைத்துக்கொண்டு ரிலாக்ஸ்டாக அமர்ந்திருந்தாள் சுகுணா. அன்பழகனும் பேப்பரை விரித்து வைத்துக்கொண்டு எதிரே அமர்ந்திருந்தார்.

"ஆமா... அபர்ணா எங்கே? காலைலேர்ந்து நான் அவளைப் பார்க்கலியே!"

"அவ காலையிலேயே ஃப்ரண்ட் வீட்டுக்குப் போறேன்னு போய்ட்டா! வரவர அவ போக்கே சரியில்லே சுகுணா நீதான் அவளைக் கண்டிக்கணும்!"

"எதுக்குக் கண்டிக்கணும்? ஃப்ரண்ட் வீட்டுக்குப் போறது தப்பா என்ன? சும்மா உளறிக்கிட்டு!"

"சொல்றதைச் சொல்லிட்டேன். பின்னாடி வருத்தப் படாதே!"

"நான் ஏன் வருத்தப்படணும்? அவ என் பொண்ணு."

"அதுக்காகத்தான் வருத்தப்படறேன்!" என்றார் முணு முணுப்பாக.

"என்ன?"

"ஒண்ணுமில்லே..."

அதே நேரம் காலிங்பெல் அலறியது.

"ம்... ம்... யாருன்னு போய்ப் பாருங்க!" விரட்டினாள்.

அன்பழகன் கதவைத் திறந்தார்.

சுகுணாவிடம் ஜூனியராகப் பணி புரியும் சுபத்ரா நின்றிருந்தாள்.

"வாம்மா!"

"மேடம் இருக்காங்களா சார்?"

"இருக்காங்க... உள்ளே வாம்மா!"

"வணக்கம் மேடம்!"

"ஹாய் சுபத்ரா... என்ன இங்கே?"

"முக்கியமான விஷயமாய் உங்களைப் பார்க்கத்தான் வந்தேன் மேடம்!"

"என்ன விஷயம்?"

"எனக்கு மேரேஜ் ஃபிக்ஸ் ஆகியிருக்கு மேடம். இன்விடேஷன் தர வந்தேன்!"

"கங்ராஜுலேஷன்ஸ். நேத்துக்கூட என்கிட்டே சொல்லவே இல்லே!"

"சஸ்பென்ஸா இருக்கட்டும்னுதான்!"

"ஒக்கே. பரவாயில்லே...! லட்சக்கணக்கான சொத்துக்களுக்கு ஒரே வாரிசு நீ! இந்த ஊரையே வளைச்சுப் பந்தல் போட்டு அமர்க்களம் பண்ணிடுவாங்களே உங்கம்மா! கல்யாணம் எங்கே? ராகவேந்திராவா? நேரு ஸ்டேடியமா?"

"வடபழனி கோயில்ல மேடம்!"



"என்னது? வடபழனி கோவில்லேயா?" என்றாள் அதிர்ந்துபோய்.

"ஆமாம் மேடம்! கல்யாணத்துக்கு என் பேரண்ட்ஸ் வரப்போறதில்லே! முக்கியமான சில பேரை மட்டுமே அழைச்சிருக்கேன்!"

"ஓஹோ... லவ் மேரேஜா?" என்றாள் அலட்சியமாக.

"ஆமாம்!" என்று தலையாட்டினாள் சுபத்ரா.

"உன் உட்பி என்ன பண்றார்?"

"ஹோட்டல் சோழாவில 'செப்'பாக இருக்கார்!"

"பளிச்சினு சமையல்காரன்னு சொல்லு!"

"......"

"உன் புத்தி ஏன்தான் இப்படிப் போகுதோ?"

சுருங்கிப்போன முகத்துடன் இன்விடேஷனை அவளிடம் நீட்டினாள்.

"அவசியம் வரணும் மேடம்!"

"அந்த தேதியிலே எனக்கு முக்கியமான வேலையிருக்கு. எனக்குப் பதிலா இவர் வருவார்!" என்றாள் அன்பழகனைக் காட்டி.

சற்று நேரத்தில் கிளம்பிப் போய்விட்டாள் சுபத்ரா.

"சமையல்காரன் கல்யாணத்துக்கெல்லாம் போனா என் பிரஸ்டீஜ் என்னாகறது?"

"உன்கிட்டே ஜூனியரா ப்ராக்டீஸ் பண்றவதானே? நீ போய் வாழ்த்தினா சந்தோஷப்படுவா!"

"பெரிய மில்லியனரோட ஒரே பொண்ணு! பிரஸ்டீஜ் காகத்தான் அவளை லாயருக்குப் படிக்க வச்சது. பிறக்கும்போதே வாயிலே தங்க ஸ்பூனோட பிறந்தவ... கையிலே கரண்டியோட பிறந்த ஒரு சமையல்காரனை லவ் பண்ணியிருக்கா! ச்சே... என்ன படிச்சு என்ன? புத்திசாலித்தனம் இல்லையே! காதலிச்சதுதான் காதலிச்சா... பெரிய பணக்காரனா பார்த்து லவ் பண்ணியிருக்கணும். இவளெல்லாம் எனக்கு ஜுனியரா இருக்கவே லாயக்கில்லே!"

"இதற்குப் பெயர்தான் காதலா?"

"என்னது?"

"இல்லே... பாட்டுப் பாடினேன்!" என்று மறுபடியும் ராகமாய்ப் பாட ஆரம்பித்தார்.

"என் அபர்ணாவுக்கு நான் எப்பேர்ப்பட்ட மாப்பிள்ளை பார்க்கப் போகிறேன் தெரியுமா?"

"அப்படியா... எப்படி?"

"நல்லா படிச்சிருக்கணும். ரொம்ப அழகாயிருக்கணும். பெரிய கோடீஸ்வரனாயிருக்கணும்!"

"ம்... அப்புறம்?"

"ஏழெட்டு கம்பெனிக்கு முதலாளியா இருக்கணும். என் பொண்ணை உள்ளங்கையிலே வச்சுத் தாங்கறவனா இருக்கணும்!"

"அடேயப்பா!"

"முக்கியமா வீட்டோடு மாப்பிள்ளையா இருக்கணும். என்னால என் மகளைப் பிரிஞ்சிருக்க முடியாது!"



அதைக் கேட்டுக் கண்களை அகல விரித்தார்.

"ஒரு கோழிக்குதான்... ஒரு முட்டையின் வழியே இன்னொரு கோழியை உருவாக்கத் தெரியும். இல்லையா?"

"என்னது?"

"ஒ...ஒண்ணுமில்லே... நீ சொல்லு!"

"போதும்... சொன்னது!" புத்தகத்தை அலட்சியமாய் வீசிவிட்டு எழுந்து போனாள் சுகுணா.

## 7

டைட் ஜீன்ஸும், தொளதொள டி ஷர்ட்டுமாய், காற்றில் கூந்தல் பறக்க ஸ்கூட்டியை வேகமாய் ஓட்டிச் சென்றாள் அபர்ணா!

மணிக்கட்டை உயர்த்தி நேரம் பார்த்தாள்.

"ஐயோ... ரொம்ப லேட்டாயிடுச்சே... அஸ்வின் கோபமா இருப்பான். அவனைச் சமாதானப்படுத்தி நார்மலுக்குக் கொண்டு வரவே அரை மணி நேரமாகிடுமே! அதுக்கப்புறம் எப்போ போய் படம் பார்க்கறது?" வேகத்தை இன்னும் அதிகப்படுத்தினாள்.

அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் யூனிவர்ஸிடி லைப்ரரியினுள் நுழைந்தாள்.

அவள் நினைத்திருந்தது போலவே அஸ்வின் ரொம்ப கோபமாய் இருந்தான். இவளைப் பார்த்ததும் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

கார் பானட் மீதமர்ந்தபடி அவன் அப்படி கோபித்துக் கொண்டது கூட அவளுக்கு அழகாய்த் தெரிந்தது.

''என் அஸ்வினுக்கு என்மேல ரொம்ப கோபமா?''

''யாரும் என்கிட்டே பேச வேண்டாம்!''

''ம்... ரொம்பத்தான் பிகு பண்ணிக்காதே! ஏன் லேட்டுன்னு கேட்டுட்டு அப்புறம் கோபப்படு!''

''எதையும் கேட்கற மனநிலையில் நானில்லே!''

''டேய்... என்ன நீ... ரொம்பதான் சிலுத்துக்கறே? கூப்பிட்டியேன்னு... இருபது நிமிஷத்திலே வர வேண்டிய இடத்துக்குப் பத்தே நிமிஷத்திலே... பயங்கர ஸ்பீட்லே வண்டியை ஓட்டிக்கிட்டு வந்திருக்கேன்... நீ என்னடான்னா...''

அஸ்வின் திடுக்கிட்டுத் திரும்பினான்.

''ஏன் அபி... அவ்வளவு ஸ்பீடாகவா வண்டியை ஓட்டிக்கிட்டு வந்தே?''

''ஆமா!''

''என்ன ஆமா? உனக்கு எத்தனை முறை சொல்லியிருக்கேன்? ஸ்பீடா வண்டியை ஓட்டிக்கிட்டு வராதேன்னு?'' என்றான் அக்கறையுடன்.

''அப்படி வந்தும்கூடப் புரிஞ்சுக்காம நீ சண்டை போடறியே?''

''எவ்வளவு நேரமா காத்துக்கிட்டிருக்கேன் தெரியுமா? தலைக்கு மேலே ஆயிரம் வேலையிருக்கு. இருந்தாலும் அதையெல்லாம் ஒதுக்கி வச்சிட்டு ஏன் வர்றேன்? என் அபிகூட படம் பார்க்கணும்னுதானே? அதைப்புரிஞ்சுக்க மாட்டேங்கறியே! கொஞ்சம் சீக்கிரமாகவே காலேஜை விட்டு கிளம்பினா... இப்படி அவசர அவசரமா ஓடிவரத் தேவையில்லையே!''



''புரியாமப் பேசாதே! எக்ஸாம் நெருங்குதேன்னு எல்லா லெக்சரரும்... ஒழுங்கா கிளாஸுக்கு வந்து லெஸன் எடுத்துட்டு இருக்காங்க. கிளாஸ் அட்டென்ட் பண்ணாதவங்க வீட்டுக்கு லெட்டர் போய்க்கிட்டிருக்கு. அதனால... டிமிக்கி கொடுத்துட்டு வர்றதுக்குள்ளே உன்பாடு, என்பாடுன்னு ஆகிப்போச்சு!''

''வீட்டுக்கு லெட்டர் போட்டா என்னாகிடும் அபி? ஏன் கிளாஸ் அட்டென்ட் பண்ணலேன்னு கேட்பாங்க. நீ சட்டுன்னு நம்ம காதலைப் போட்டு உடைச்சிடு. மேட்டர் முடிஞ்சது. எத்தனை வருஷம்தான் லவ் பண்ணிக்கிட்டே இருக்க முடியும்? வீட்டுக்கு விஷயம் தெரியட்டுமே!''

''ஐயோ... எவ்ளோ ஈஸியா சொல்லிட்டே அஸ்வின்? அம்மாவுக்கு நம்ம விஷயம் தெரிஞ்சதோ... நான் அவ்வளவுதான்!''

''தெரியாம...? எத்தனை காலத்துக்கு மறைக்கப் போறதா உத்தேசம்? பொதுவா மிடில் கிளாஸ் குடும்பமாயிருந்தா கவலையில்லே! படிப்பு முடிச்ச கையோட கல்யாணம் பண்ணாம, ரெண்டு மூணு வருஷமாவது வீட்ல வச்சிக்கிட்டு, இல்லே வேலைக்கு அனுப்பி, பிறகுதான் கல்யாணம் பண்ணுவாங்க. பணக்கார வீட்ல அந்த லாஜிக்கே கிடையாது. ரிசல்ட் வர்றதுக்கு முன்னாடியே மாப்பிள்ளை ரெடி பண்ணிடுவாங்க. உன்னை யாருக்காகவும் என்னால விட்டுத் தர முடியாது அபி!''

''நீயே விட்டுக் கொடுத்தாலும் நான் வேற ஒருத்தனைப் பண்ணிப்பேன்னு நினைக்கிறியா? நெவர்!''

''டயலாக் நல்லாயிருக்கு. பட், உங்கம்மா முன்னாடி செல்லுபடியாகாதே! அம்மா பேரைச் சொன்னாலே அலர்றே?''

''காதலிக்கறவங்க பெத்தவங்களுக்குப் பயந்துதான் தீரணும். பயப்படறதினால... உன்னைப் பிரிஞ்சிடுவேன்னு தப்பா எடைபோடக் கூடாது.''

''அப்ப... நான் உங்க வீட்லே வந்து பேசட்டுமா?''

''வேற வினையே வேணாம். அப்புறம் நான் ஹவுஸ் அரெஸ்ட்தான்!''

''ஏன் அபி, என்னை உங்க வீட்லே ஏத்துக்க மாட்டாங்களா? எனக்கென்ன குறை? உங்க அளவுக்கு இல்லேன்னாலும் ஓரளவுக்கு எனக்கும் அந்தஸ்து இருக்கே!''

''அதுதானே அஸ்வின் உதைக்குது. உங்களுக்கு அழகு இருக்கு. படிப்பு இருக்கு. நாலஞ்சு காரும் இருக்கு. ஆனா, எங்க அளவுக்கு இல்லாத உங்க அந்தஸ்துதான் அம்மாவோட கண்களை உறுத்தும். எங்கம்மாவோட எதிர்பார்ப்பே வேற... எங்களை விடப் பலமடங்கு உயர்ந்த நிலையிலே உள்ள மாப்பிள்ளையைத்தான் எனக்காகச் சல்லடை போட்டுத் தேடறாங்க.''

''நீ சொன்னா உங்கம்மா சம்மதிக்க மாட்டாங்களா?''

''என் கல்யாண விஷயத்திலே மட்டும் அவங்க கன்வின்ஸ் ஆகமாட்டாங்க! அப்புறம் இன்னொரு முக்கியமான விஷயம். மாப்பிள்ளை கல்யாணத்துக்குப் பிறகும் எங்க வீட்டோட இருக்கணும்!''

''என் அபி இருக்கிற இடம்தான் எனக்கு ஆழ்வார்பேட்டை. எனக்குத்தான் யாருமே இல்லையே... நான் வீட்டோட மாப்பிள்ளையா இருக்கிறேன்!''

''அம்மாவால என்னைப் பிரிஞ்சிருக்க முடியாது அஸ்வின். அதனால... அவங்களை என் வழிக்குக் கொண்டு வர்றது பெரிய விஷயமில்லே... ஸோ... நம் கல்யாணம் சீக்கிரமே நடக்கும்!''



''எப்படி?''

''சஸ்பென்ஸ்!''

''சொல்ல மாட்டியா?''

''ம்ஹூம்...''

''சொல்ல வைப்பேன்!''

''எப்படி?''

''முதல்ல தியேட்டருக்கு வா! உன் வண்டியை பார்க் பண்ணிட்டு கார்ல ஏறு!''

''ஆல்ரெடி லேட்... இன்னைக்குப் பாதிப் படம்தான் பார்க்கப் போறோம்!''

''படம் பார்க்கறதுக்கா போறோம்?''

''பின்னே?''

''போனவாரம் பிக்சருக்கு போய் படமா பார்த்தோம்?'' குறும்பாய்க் கண்ணடித்துக் கேட்டான் அஸ்வின்.

''ராஸ்கல்... மறுபடியும் அதே மாதிரியா? கைய வச்சிக்கிட்டு சும்மாயில்லேன்னு வச்சுக்க... கத்திக் கூச்சல் போடுவேன்!'' என்றாள் பொய்யாய் மிரட்டி.

''சுத்தற அளவுக்கு வாய திறக்க விட்டாதானே?''

''இதுக்குத்தான் காலேஜ் கட் அடிச்சிட்டு வரச்சொன்னியா?''

''காதல்ல இதெல்லாம் இல்லேன்னாதான் போரடிக்கும் அபி!'' என்று இடுப்பில் கிள்ளினான்.

''ஏய்... சும்மாயிரு!'' என்றவள் அவனை ஏறிட்டு. ''இதென்ன அஸ்வின்?'' என்றாள்.

''என்ன?''

''உன் ஷர்ட் கொஞ்சம் பழசாயிடுச்சி... அதைப்போய் போட்டுக்கிட்டு வர்றே! எனக்குப் பிடிக்கலே அஸ்வின். இந்த ஷர்ட் உன் கம்பீரத்தைக் குறைக்குது. இதையெல்லாம் பிச்சைக்காரனுக்குக் கொடுத்திட்டு புதுசா வாங்குங்க. என் அஸ்வினை எப்பவும் ஃப்ரெஷ்ஷாதான் நான் பார்க்கணும்! ஒக்கே?''

அபர்ணா அப்படிச் சொன்னதும் அஸ்வின் உடலுக்குள் ஒரு விதப் பயம் ஊடுருவியது.

'இது எங்கே போய் முடியுமோ? ஷர்ட் பழசானதற்கே குறை கூறுபவள்... மற்ற... விஷயங்களுக்கு என்னென்ன சொல்வாளோ?' பயத்தில் உள்ளங்கை வியர்த்தது.

சட்டப் புத்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்த கணவனின் அருகில் வந்தாள் சுகுணா.

''என்ன இது... ஆச்சர்யமாயிருக்கு? புக்கெல்லாம் படிச்சிட்டிருக்கீங்க?''

''கோர்ட் வாசலை மிதிக்கக் கூடாதுங்கறது மட்டும்தான் பந்தயம். புக்ஸை யெல்லாம் படிக்கக் கூடாதுங்கற பந்தய மில்லையே...!''

''நான் என்னமோ பழையபடி கறுப்புக் கோட்டை மாட்டிக் கிட்டு, கேஸ் கட்டைத் தூக்கிக்கிட்டு கிளம்பப் போறீங் களோன்னு நினைச்சேன்!'' என்றாள் கிண்டலாய்.

''அப்படி ஒரு காலம் வராமலா போகும்?''

''பகல் கனவு காணாதீங்க! நானாக உங்களை அனுமதித்தால் தான் உண்டு. நானாவது, பின்வாங்குவதாவது!''



''எல்லா பொண்டாட்டியும் தன் புருஷன் ஜெயிக்கனும்னு விட்டுக்கொடுத்து தோத்துப்போவா! ஆனா, நீ என்னை மட்டும் தோற்கடிச்சே?''

''ம்... ம்... கொஞ்சம் விட்டா பேச ஆரம்பிச்சிடுவீங்களே!'' என்று பேசிக் கொண்டிருக்கும்போதே போன் அலறத் தொடங்கியது.

ரிசீவரை எடுத்தாள் சுகுணா.

''ஹலோ... நான்தான் பேசறேன்...''

''........''

''சொல்லு சித்ரா!''

''........''

''என்னது? உன் புருஷன் வீட்டுக்கு வந்தானா? எதுக்கு?''

''........''

''காம்பரமைஸுக்கா? வேண்டவே வேண்டாம்! ஒத்துக்க மாட்டேன்னு சொல்லு!''

''........''

''வெரிகுட்! உன் தங்கச்சியையே இழுத்துக்கிட்டு ஓடியிருக்கான். இவனையெல்லாம் சும்மா விடலாமா? பத்து வருஷமாவது ஜெயில்ல தள்ள வேண்டாம்?''

''.........''

''கவலைப்படாதே சித்ரா சீக்கிரமாகவே உனக்கு டைவர்ஸ் கிடைச்சிடும்''

''.........''

''அவன் ஒத்துக்கலேன்னா என்ன? நம்மகிட்டே கேஸ் ஸ்ட்ராங்கா இருக்கு. ஒரு காரணத்தை எடுத்து விட்டாலே போதும். பயப்படாதே... நானிருக்கேன் ஒக்கே?''

''........''

''மறுபடி அவன் இன்னைக்கும் வீட்டுக்கு வர ட்ரை பண்ணுவான். உள்ளேயே விடாதே! ரொம்ப தொந்தரவு பண்ணினா நேரே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் கம்ப்ளைண்ட் கொடுத்துடு. மத்ததை நான் பார்த்துக்கறேன். பட் ஒன் திங் சித்ரா அவன் கெஞ்சறானேன்னு சென்டிமென்ட்டா ஃபீல் பண்ணி நாளைக்கு கோர்ட்ல வந்து சேர்ந்து வாழறோம்னு பல்டி அடிச்சிடாதே! புரிஞ்சுதா? சரி... வச்சிடறேன். நாளைக்கு கோர்ட்ல மீட் பண்ணுவோம்!'' என்று வைத்துவிட்டாள்.

அபர்ணா உள்ளே வந்து கொண்டிருந்தாள்.

அப்பாவும் அம்மாவும் அங்கிருக்கிறார்கள் என்கிற பிரக்ஞையே இல்லாமல் ஒரு சினிமா பாடலை முணுமுணுத்த படி மாடிப்படி யேறினாள்.

''அபர்ணா...''

''........''

''அபர்ணா...'' என்றாள் மறுபடி.

''ம்... என்ன மம்மி?'' என்றாள் திடுக்கிட்டு.

''இப்படி வா!''

வந்தாள்.

''என்ன யோசனை? நான் கூப்பிடறதுகூடக் காதுல விழாம?''



''ஸாரி மம்மி... நான் உங்களைக் கவனிக்கலே?''

''இட்ஸ் ஒக்கே... ஏன் இவ்வளவு லேட்?''

''டென்னிஸ் ப்ராக்டிஸ் இருந்துச்சு. என்ன மம்மி... என்னாச்சு உங்களுக்கு? டாடிய மாதிரி அசட்டுத்தனமா கேள்வி கேக்கறீங்க?''

அவள் அப்படிச் சொன்னதும் பக்கென்று சிரித்தாள் சுகுணா!

'சிரி... நல்லா சிரி! எல்லாத்துக்கும் சேர்த்து ஒருநாள் அழப்போறே?' என்று தனக்குள் பொருமிக் கொண்டார் அன்பழகன்.

''வயசுப் பொண்ணு லேட்டா வந்தா பெத்தவங்களுக்கு பயமிருக்காதா? வயத்துல நெருப்பைக் கட்டிக்கிட்டுத் தவிக்கிற தவிப்பு உனக்கு இப்ப புரியாது அபர்ணா! உனக்கும் கல்யாணமாகிப் பொண்ணு பிறந்து அவ உன்னை மாதிரி வளந்து நின்னா... அப்பத் தெரியும் இந்தப் பயமும், வேதனையும்!''

''நீ ஏன் டாடி நெருப்பைக் கட்டிக்கிறே? வயிறு வெந்து போய்டாதா?'' என்று கூறிவிட்டு அபர்ணா சிரிக்க... கூடச் சேர்ந்து சுகுணாவும் சிரித்தாள்.

''லேட்டா வர்றியே... காலேஜ்ல ஸ்பெஷல் க்ளாஸ் அது இதுன்னு வச்சிருப்பாங்களோன்னு நினைச்சேன். ரொம்ப ஸ்ட்ரெயின் பண்ணிக்காதேடா... நீ எப்பவும் ஃப்ரெஷ்ஷா இருக்கணும்... ஒக்கே?''

''ஒக்கே மம்மி!'' என்று மறுபடி துள்ளிக் குதித்து ஓடினாள் மாடியை நோக்கி.

''நல்ல அம்மா! நல்ல பொண்ணு!'' என்றார் முணு முணுப்பாக.

''என்ன... என்னமோ திட்டற மாதிரி இருக்கு!''

''ஒண்ணுமில்லையே... நான் பாட்டுல்லே பாடினேன்! நல்லதொரு குடும்பம்... பல்கலைக்கழகம்...'' பாடிக்கொண்டே நகர்ந்தார்.

''மனுஷனுக்குக் குசும்பு ஜாஸ்தியாய்டுச்சி... ஒட்ட நறுக்கணும்!'' என்றாள் அவரை வெறித்துப் பார்த்தபடி.

## 8

கோர்ட்டுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தாள் சுகுணா.

''ஒரு முக்கியமான விஷயம்?'' என்றாள் எதிர்ப்பட்ட அன்பழகனிடம்.

''என்ன?''

''என்னைத் தேடிக்கிட்டு ஒரு ஜோடி வீட்டுக்கு வருவாங்க...!''

''ஜோடியாகவா.. அதுவும் இந்த வீட்டுக்கா? சாத்தியமில்லையே...!''

''என்ன கிண்டல் பண்றதா நினைப்பா? இந்த வேலையெல்லாம் சுகுணாகிட்டே வேணாம். சொல்றதைக் காதால கேட்டா போதும். அவங்க என்னைப் பார்க்க வர்றாங்க. அவங்க வந்தா என்னைக் கோர்ட்ல வந்து பார்க்கச் சொல்லுங்க.''

''ம்...!'' என்றார்.

சுகுணா புறப்பட்டு விட்டாள்.

'ஹூம்... இன்னைக்கு எந்த தாலிய அறுக்கப் போறாளோ?' என்று பெருமூச்சு விட்டார்.



பத்து நிமிடம் சென்றிருக்கும்.

அந்த இளைஞன் பைக்கை நிறுத்தி ஸ்டாண்ட் போட்டான்.

''ஆட்டோ! நிறுத்துப்பா... இந்த வீடுதான்!'' என்று ஆட்டோவை கட் பண்ணிப் பணத்தை கொடுத்தாள் இளம் பெண்ணொருத்தி.

அவளையே உர்ரென்று பார்த்தான் கணேஷ் என்கிற அந்த இளைஞன்.

அவனை அலட்சியப் பார்வை பார்த்துவிட்டுத் தாண்டிச் சென்றாள் ரஞ்சனி.

''ராட்சசி... போடி...போ!'' என்று எரிச்சலோடு முணுமுணுத்தான்.

''என்ன?'' என்றாள் திரும்பி.

''ஒண்ணுமில்லையே...!''

''இல்லே... இப்ப என்னவோ காதிலே விழுந்ததே!''

''நான் ஒண்ணும் பேசலே!''

''இது ஆம்பளைக்கு அழகா? எதைப் பேசறதாயிருந்தாலும் முகத்துக்கு நேரே பேசணும். முதுகுக்குப் பின்னாடி பேசறவங்களுக்குன்னு ஒரு பேரு இருக்கு!''

''இதோ... பார்! நீ அதிகமா பேசறே?''

''அநாவசியமான பேச்சு வந்தா நான் அதிகமாகத்தான் பேசுவேன்!''

''ச்சீ... உன்கிட்டே மனுஷன் பேசுவானா?''

''இல்லே, நான் முதுகெலும்பில்லாத பிராணிங்ககூடதான் பழகுவேன்... பேசுவேன்... இப்பகூட பேசிட்டிருக்கேன்!''

அதற்கு மேல் அவளிடம் எதையும் பேசப் பிடிக்காமல் நடந்து காலிங் பெல்லின் சுவிட்சை அழுத்தினான்.

ரஞ்சனி மட்டும் சளைத்தவளா என்ன? அவளும் தன் பங்குக்கு சுவிட்சை அழுத்தினாள்.

தொடர்ந்து விடாமல் அலறிய காலிங்பெல்லின் சப்தத்தில் காதில் வண்டு நுழைந்து ரீங்காரமிடுவது போன்ற உணர்வு அன்பழகனுக்கு. காதில் விரலை விட்டுக் குடைந்து கொண்டே ஓடி வந்தார்.

கோபமாய்க் கதவைத் திறந்தார். வெளியே நின்றிருந்தவர் களை ஏற இறங்க ஒரு பார்வை பார்த்தார்.

''யாரு நீங்கன்ற கேள்விக்குப் பதிலை அப்புறம் சொல்லுங்க! எதுக்காக இப்படி செவிடன் காதிலே சங்கு ஊதறமாதிரி பெல் அடிச்சீங்க? ஒரு முறை அடிச்சா கதவைத் திறக்க மாட்டோமா...ம்?''

''நான் லாயர் சுகுணாவைப் பார்க்க வந்தேன்!''

''நானும் லாயரைப் பார்க்க வந்தேன்... அதனால அடிச்சேன்!''

''ஓஹோ... நீங்கதானா அந்த ஜோடி? ரெண்டு பேரும் சேர்ந்து டைவர்ஸுக்கு அப்ளை பண்ணினா சீக்கிரம் கிடைச்சிடும்னு சேர்ந்தே வந்திருக்கீங்க... அப்படித்தானே?''

''ஆமா சார்... லாயர் இருக்காங்களா?''

''நான்தான் லாயர்!''

''நீங்களா? வாசல்ல சுகுணான்னு போர்டு போட்டிருந்ததே! தவிர போன்ல பேசி அப்பாய்ண்ட்மெண்ட் வாங்கும் போதுகூட ஒரு லேடிதானே பேசினாங்க!''



''அது... அது என் அஸிஸ்டன்ட்!''

''அப்ப பேரு?''

''ஏன் ஆம்பளைக்குப் பொம்பளை பேரு இருக்கக்கூடாதா? கதை எழுதற ஆண்கள் பெண்கள் பெயரைப் புனை பெயரா வச்சுக்கிட்டு எழுதலியா? லாயர் மட்டும் பெண்ணோட பெயரை வச்சுக்கக் கூடாதா?''

''ம்... வச்சுக்கலாமே...!'' என்றனர் இருவரும்.

''சரி... உக்காருங்க... என்ன விஷயம்?''

''சார்... என் பேரு ரஞ்சனி!''

''நான் கணேஷ்! எங்க ரெண்டு பேருக்கும் கல்யாணமாகி ரெண்டு வருஷம் ஆகுது லவ் மேரேஜ்தான். இப்ப எங்களுக்குள்ளே டெர்ம்ஸ் சரியில்லே. பிரிஞ்சிடலாம்ங்கற முடிவுக்கு வந்திருக்கோம். அப்பதான் உங்களைப் பத்தி கேள்விப்பட்டோம். எங்களை மாதிரி ஆளுங்களுக்கு கண்கண்ட தெய்வம் நீங்கதான்னு! அதான் உங்களைத் தேடி வந்திருக்கோம்!''

''உங்களுக்குள்ளே என்ன பிரச்னை? லவ் பண்ணித்தானே கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க? அப்புறம் எப்படி மிஸ் அன்டர்ஸ்டான்டிங் வந்தது?''

''காதல்ங்கறது ஒரு மாய உலகம் சார்! பரஸ்பரம் ஒருத்தரைப் பத்தி ஒருத்தர் கனவு காண்றதுக்கே நேரம் போதாது. அந்த நேரத்துல எந்தக் குறையும் கண்ணுக்குத் தெரியாது. கல்யாணம் நடந்து தேவைகள் நிறைவேறிய பிறகுதான் குறைகள் பளிச்சினு தெரியும். விஸ்வரூபம் எடுக்கும். காதலிக்கிறப்ப பல உண்மைகளை மறைச்சிட

நாங்க... பின்னாடி அது வெளிச்சத்துக்கு வர்றப்ப என்னால ஜீரணிச்சுக்க முடியலே!'' என்றாள் ரஞ்சனி.

''இதோ பார்! நான் ஒண்ணும் எதையும் மூடி மறைக்கலே!'' என்றான் பட்டென்று.

''என்ன மறைக்கலே? இவருக்கு ரெண்டு அக்கா இருந்தாங்களாம்... ரெண்டு பேரும் ஓடிப் போய்ட்டாங்களாம்! எவ்வளவு பெரிய அசிங்கம் இது! இதை ஏன் என்கிட்டே சொல்லலே? நாங்க கவுரவமான குடும்பத்தைச் சேர்ந்தவங்க சார்! இந்த விஷயம் தெரிஞ்சி என் சொந்தக்காரங்க எவ்வளவு கேவலமா பேசறாங்க தெரியுமா?''

''ஷட் அப்! என்ன பேசிக்கிட்டே போறே? காதலிக்கிறது தப்புன்னா... நாம காதலிச்சது மட்டும் ரைட்டா? என் அக்காங்க காதலிச்சாங்க! என் பேரெண்ட்ஸ் கண்டிச்சாங்க. அதனால காதலிச்சவனையே கைப்பிடிக்கணும்ங்கற ஆசையிலே ஓடிப் போய்ட்டாங்க. அது தப்பா?''

''தப்பில்லே... அசிங்கம்!''

''சம்பாதிக்கிற திமிர்டி உனக்கு! அதனாலதான் ஆடறே! எங்க வீட்லே யாரையும் மதிக்கிறதில்லே!''

''மரியாதை குடுக்கிற அளவுக்கு அங்கே என்ன வாழுது?''

''ரஞ்சனி திஸ் இஸ் த லிமிட்! இதுக்கு மேலே ஒரு வார்த்தை பேசினியோ, நான் கொலைகாரனா மாறிடுவேன்!'' என்றான் கணேஷ் கோபமாக.

ரஞ்சனி அலட்சியமாய்த் தலையைத் திருப்பிக் கொண்டாள்.

''சார்... நீங்களே பார்த்தீங்கள்லே? எனக்குச் சீக்கிரமா டைவர்ஸ் வாங்கித் தாங்க. ஃபேமிலி கோர்ட்ல அப்ளை பண்ணினா... அதுவும் ரெண்டு பேரும் சேர்ந்து பண்ணினா



சீக்கிரமே டைவர்ஸ் கிடைச்சிடும்னு சொல்றாங்களே... உங்களைத்தான் நம்பி வந்திருக்கேன் சார்!''

அன்பழகன் சில கணங்கள் அவர்களையே உற்று நோக்கினார்.

''நான் கொஞ்சம் பேசலாமா?''

''பேசுங்க சார்!''

''சப்போஸ் உங்க காதலை உங்க ரெண்டு பேர் வீட்லேயும் ஏத்துக்கலேன்னா என்ன பண்ணியிருப்பீங்க?''

''சம்மதிக்கிறவரை, போராடியிருப்போம்!'' என்றாள் ரஞ்சனி.

''அப்படியும் மசியலேன்னா...!''

''ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணியிருப்போம்!''

''ஏம்மா... கிட்டத்தட்ட இதுவும் ஓடிப் போகிற விஷயம் தானே?''

''அது... அது வந்து... அவர் என்கிட்டே அந்த விஷயத்தை மறைச்சது தப்புதானே?''

''சரி... இப்ப டைவர்ஸ் கிடைச்சாச்சுன்னு வச்சுக்குங்க. அதுக்குப் பிறகு உங்க எதிர்காலம்?''

''எனக்கென்ன சார்? மாசா மாசம் சுளையா ஆறாயிரம் சம்பளம் வருது. இவரோட ஜீவனாம்சம் கூட எனக்குத் தேவையில்லே!''

''வெரிகுட்! உங்கம்மா வீட்டிலேயே போய் செட்டிலாகப் போறீங்க!''

''ஆமாம்!''

''உங்களுக்குத் தங்கைகள் உண்டா... இன்னும் கல்யாண மாகாமா?''

''ஒரு தங்கை இருக்கா!''

''நீங்க வாழா வெட்டியா உங்கம்மா வீட்டுக்குப் போய்டறீங்க. அதனால, அக்கா மாதிரிதானே தங்கையும்! மூச்சு விட்டாக்கூட குத்தம்னு கோர்ட்டுக்குப் போய்டுவான்னு வர்ற வரனெல்லாம் குதிராமப் போகும். பரவாயில்லையா?''

''சா...ர்!'' என்றாள் அதிர்ந்து

''காதலிச்சி ஓடிப்போறது அசிங்கம்னா... கல்யாணம் பண்ணிட்டு டைவர்ஸ் வாங்கறது மட்டும் கவுரவமான விஷயமா?''

''சா...ர்!''

மேலும் மேலும் பேசி அவள் செய்யவிருந்த தப்பை உணரச் செய்தார் அன்பழகன்.

அரைமணி நேரம் கழித்துக் கணேஷும், ரஞ்சனியும் அவரைக் கையெடுத்துக் கும்பிட்டனர்.

''நாங்க வர்றோம் சார்! அவசரப்பட்டு நான் செய்யவிருந்த தப்பை உணர்த்தி மறுபடி வாழ வச்சு உங்களை நான் எப்பவும் மறக்க மாட்டேன் சார்!''

''இனி நானும் அவளைப் புரிஞ்சு நடந்துப்பேன். எங்களுக்குள்ளே இனி எந்த ஒளிவு மறைவும் இருக்காது. அனுசரித்து நடந்துப்போம். வர்றோம் சார்!''

வெளியே... பைக்கை உசுப்பிய கணேஷின் இடுப்பைக் கைகளால் வளைத்து அமர்ந்த ரஞ்சனி அன்பழகனைப் பார்த்துச் சிரித்தபடி கையசைத்தாள்.



36999
5426619
கொளத்தூர், சென்னை

அன்பழகனின் கண்கள் கசிந்தன.

'என் தங்கையத்தான் என்னால வாழ வைக்க முடியலே! உன்னையாவது வாழ வைக்க முடிந்ததே... அதுவே போதும்!' என்று நெகிழ்ந்தார்.

## 9

''ஆனாலும்... உனக்குத் தைரியம் அதிகம் அஸ்வின்! அபர்ணாவுக்கோ, அவங்க வீட்டுக்கோ உன்னைப் பத்தி உண்மை தெரிஞ்சா... என்ன ஆகும்?'' என்றான், அவன் நண்பன் கிருபாகரன்.

''என்னைக்கிருந்தாலும் உண்மை வெளியே வரத்தான் போகுது. ஆனா, அது எங்க கல்யாணத்துக்கு முன்னாலேயே வந்துடக் கூடாது. கல்யாணம் முடிஞ்ச பிறகு யாராலேயும் எங்களைப் பிரிச்சிட முடியாதில்லையா?''

''அஸ்வின்... நான் ஒண்ணு கேட்டா தப்பா நினைச்சுக்க மாட்டியே!''

''சேச்சே... என்ன சொல்லு?''

''நீ நேசிக்கிறது அபர்ணாவையா? இல்லே அவளோட பணத்தையா?''

''பணம் இன்னைக்கு உன்கிட்டே வரும், நாளைக்கு இன்னொருத்தன் கைக்கு மாறும். அது நிலையில்லாதது. எனக்குத் தேவை அபர்ணா! அவளோட காதல், அவளோட அன்பு - இது மட்டும்தான்! அவளை என் மனைவியா ஆக்கிக்கிட்டு, என்னோட சம்பாத்தியத்தில், என்னோட இந்தச் சின்ன வீட்டுல கட்டுசெட்டா குடும்பம் நடத்தணும்னு ஆசைப்படறேனே தவிர, அவளோட அவங்க வீட்ல, ஏசி

[stamp]

ரூம்ல... வாட்டர் பெட்டில சுகமா வாழணும்னு ஆசைப் படலே!''

''நிஜமா நேசிக்கிறவன் பொய் சொல்லி ஏமாத்தி, உன்னைப் பணக்காரன்னு அவளை நம்ப வச்சி லவ் பண்ண வச்சிருக்கியே... இது நியாயமா?''

''தப்புதான்! எனக்கு வேற வழி தெரியலே! அபர்ணா ஆடம்பரப் பேர்வழி! ஒரு டிரஸ்ஸை ஒருமுறை மட்டுமே பயன்படுத்தற உல்லாசி! அவளைப் பத்தி முழுசா தெரிஞ்ச பிறகுதான்... அவளோட காதலை அடைய இதைத் தவிர வேற வழியேயில்லேன்னு புரிஞ்சுது. நான் ஆட்டோ மொபைல் வொர்க் ஷாப் வச்சிருக்கறதால... விதவிதமா காரை எடுத்துக்கிட்டுப் போய் பந்தா பண்ணவும், பணக்காரன் வேஷம் போடவும் உதவியா இருந்துச்சு! என்னோட காதல் நிஜமானது. உயர்வானது. அதை அடையப் பொய் சொல்லலாம்... தப்பில்லேன்னு தோணுது!''

''எல்லாம் சரி, அஸ்வின்! ஒருவேளை அபர்ணா வீட்லே உங்க காதலை ஒத்துக்கிட்டு கல்யாணத்துக்கு ஒத்துக்க றாங்கன்னு வச்சுக்க... அப்ப அவங்க உன்னைப் பத்தி விசாரிப்பாங்களே... அப்ப... உன்னைப் பத்தி எல்லா உண்மையும் தெரிஞ்சி போய்டாதா?''

''ஆமாம் கிருபா! ஆனா, அப்படி எதுவும் நடக்காது என்றே நம்புகிறேன். அபர்ணாவோட அம்மா நிச்சயமா இந்தக் காதலை ஏத்துக்க மாட்டாங்கன்னு அவளே சொல்லியிருக்கா! ஸோ... அவங்க வீட்டுக்குத் தெரியாம எங்க கல்யாணம் நடந்தாகணும். அபர்ணாவும் அந்த முடிவைத்தான் எடுப்பான்னு நானும் நம்பறேன்.''

''எப்படியோ... உன் காதல் ஜெயிக்கணும்.''



''நிச்சயமா ஜெயிக்கும்!'' என்றான் கண்களில் உறுதி மின்ன அஸ்வின்.

''பயப்படாதே... ஒண்ணும் ஆகாது...!'' என்று சுகுணா ஆறுதல் கூறினாள்.

''ஆமா... பயப்படாதே... பயப்படற அளவுக்கு எதுவும் இல்லே...'' என்றார் அன்பழகன்.

திரும்பிப் பார்த்து முறைத்தாள்.

''நான்தான் பேசிக்கிட்டிருக்கேனே... நடுவுலே நீங்க என்ன முந்திரிக் கொட்டையாட்டம்!'' என்றது பார்வை.

வாயை மூடிக் கொண்டார்.

அது ஹாஸ்பிடல்.

சுகுணாவின் உறவுக்காரப் பெண்ணொருத்தி தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு அங்கு சேர்க்கப்பட்டு, காப்பாற்றப் பட்டிருந்தாள்.

தற்கொலைக்குக் காரணம் கணவனோடு மனஸ்தாபம்.

இது போதாதா சுகுணாவிற்கு.

''நீ எதுக்கு அனு தற்கொலை பண்ணிக்கணும். உன்னை வேதனைப்படுத்தி இந்த நிலைக்குக் கொண்டு வந்த அந்தக் கயவனை நடுச்சந்தியில் நிறுத்து. நீ செத்துப் போய்ட்டா பிரச்சினை முடிஞ்சிடுமா? அவனை ஒரேயடியா பிரியணும்னு முடிவுக்கு வந்துட்டா பிறகு... இதுவா தீர்ப்பு? சட்டப்பூர்வமா பிரிஞ்சிடு. அவன் எதிரே தைரியமா சந்தோஷமா வாழ்ந்து காட்டு. அதை விட்டுட்டு இதென்னடி கோழைத்தனம்?''

'போச்சுடா! இங்கேயும் ஆரம்பிச்சிட்டாளா?' என்று தலையில் கைவைத்துக் கொண்டார் அன்பழகன்.

''எக்ஸ்க்யூஸ்மீ... சீஃப் டாக்டர் ரவுண்ட்ஸ் வர்றார். தயவு செஞ்சு வெளியில போய்டுங்க!'' நர்ஸ் வந்து கேட்டுக் கொண்டாள்.

''அனு... டாக்டர் வந்து போற வரைக்கும் நான் வெளியிலே இருக்கேன். இன்னும் உன்கிட்டே நிறையப் பேச வேண்டியிருக்கு! வரட்டுமா?'' என்று வெளியில் வந்தாள்.

அவளைத் தொடர்ந்து அன்பழகனும்.

''நீங்க என்ன சொன்னாலும் சரி. என்னால முடியாது, முடியாது, முடியாது!''

''இதோபார்... நான் சொல்றதை நீ கேட்டுத்தான் ஆகணும்!''

எதிர்ப்பக்கம் கணவன் மனைவி போலிருந்த ஒரு ஜோடி வாக்கு வாதத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். சுகுணா அவர்களை உன்னிப்பாய்க் கவனிக்க ஆரம்பித்தாள்.

''நல்லதைச் சொன்னா கேக்கலாம்! ஒரு உயிரைக் கொல்லச் சொல்றீங்களே! அதுவும் உங்க ரத்தம்... உங்க குழந்தை... எப்படிங்க மனசு வருது?''

''நான் மட்டும் சந்தோஷத்தோடயா இருக்கேன்? எனக்கும் பாசம் இருக்கு. இது என் குழந்தைதான். இல்லேங்கலே! ஆனா, அது பிறந்து வந்து அது முகத்தைப் பார்த்தாதான் பிரச்னை. கருவிலேயே கலைச்சிடு சாந்தி... ப்ளீஸ்!''

''இல்லேங்க... என்னால முடியாது என் குழந்தை இந்தப் பூமிக் காத்தை சுவாசிக்காம கர்ப்பத்துக்குள்ளேயே சமாதியாகறதைத் தாங்கிக்க முடியலேங்க!'' என்றழுதாள்.

''பாரு சாந்தி! ஏற்கெனவே நமக்கு மூணு குழந்தைங்க. அதுங்களுக்குத் தேவையானதை வாங்கித் தரவே என்னால



முடியலே. மூச்சு முட்டுது. சாதாரண கிளார்க்கான என்னால எப்படிச் சமாளிக்க முடியும்? அதுவும் இது பொண்ணா பிறந்திருச்சின்னா... தலையில் துண்டைப் போட்டுக்கிட்டு நடுத்தெருவிலே உக்கார்ந்துட வேண்டியதுதான்!''

''வேணாங்க... நீங்க ஒண்ணும் தர வேண்டாம். என் குழந்தையை நான் கவனிச்சுக்கறேன். நாலு வீட்ல பத்து பாத்திரம் தேய்ச்சாவது நான் குழந்தையைக் காப்பாத்திக்கறேன். மீறி வற்புறுத்தினா... என்னை உயிரோட பார்க்க முடியாது'' என்று கண்ணீர் விட்டாள்.

அவனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. எதேச்சையாய்த் திரும்பியவன் சுகுணாவைப் பார்த்து விட்டான்.

'ஐயோ... இவளா? கால்ல முள்ளு குத்தினாக்கூட அதுக்குக் காரணம் புருஷன்காரன்தான்னு டைவர்ஸ் வாங்கித் தந்திடுவாளே! இவ கண்லேயா நாங்க அகப்படணும்?'

''சாந்தி... வா... வீட்டுக்குப் போகலாம்!''

''என்ன திடீர்னு? இன்னும் நாம டாக்டரைப் பார்க்கலியே!''

''டாக்டரை நாளைக்குப் பார்த்துக்கலாம்! வா. முதல்ல வீட்டுக்குப் போகலாம். இங்கே இன்னும் அஞ்சு நிமிஷம் நாம நின்னாலும்... அடுத்த ஒரு மணி நேரத்திலே... கோர்ட்லதான் மீட் பண்ணுவோம்! கிளம்பு... கிளம்பு!'' என்றவன் மனைவியைத் தரதரவெனக் கையைப் பிடித்து இழுத்துச் சென்றான்.

சுகுணாவிற்கு முகத்தில் அறைபட்ட உணர்வு.

அன்பழகனுக்கோ சிரிப்பை அடக்க முடியவில்லை.

10

''மணி ஒன்பதாகப் போகுதே! அபர்ணா இன்னுமா எந்திரிக்கலே?'' என்று வேலைக்காரியிடம் கேட்டாள் சுகுணா.

''இல்லேம்மா... அபர்ணாம்மா ரூம்லேயே இல்லே...''

''ரூம்லே இல்லையா? இவ்ளோ காலையிலே எங்கே போயிருப்பா?''

''எங்கே போயிருப்பா? வழக்கமா இந்த க்ளாஸ், அந்த க்ளாஸ்னு போயிருப்பா! என்னைக்கு மில்லாம அதிசயமா... உன் பொண்ணு பாஷையிலே சொல்லப் போனா... ஸில்லித்தமா ஏன் யோசிக்கறே... கவலைப்படறே?'' என்றபடி எதிரே வந்தமர்ந்தார் அன்பழகன்.

''எப்படா சந்தர்ப்பம் கிடைக்கும்... மூக்கை உடைக்கலாம்னு காத்திட்டிருக்கீங்க போல... நான் கவலைப்படறது நம்ம பொண்ணைப் பத்தி! அந்தக் கவலை கொஞ்சமாச்சும் உங்களுக்கிருக்கா?''

''இதப்பார்டா... புதுசா கவலைப்பட ஆரம்பிச்சிட்டு என்னை நீ குறை சொல்றியா? அபர்ணா வயசுக்கு வந்த பொண்ணு! அளவுக்கு மீறி, சுதந்திரம் கொடுத்திட்டு அவ எப்ப போறா, எப்ப வர்றா? எங்கே போறான்னு தெரியாம கையைப் பிசைஞ்சிட்டு உட்கார்ற நிலைமைய ஏற்படுத்திக்கிட்டதும் நீதான்! எனக்கு உன்னை விட அவ மேல அதிகமாகவே அக்கறையிருக்கு! வயசுப் பொண்ணு ஒரு நாள் லேட்டா வரலாம். ரெண்டு நாள் லேட்டா வரலாம். தினசரி லேட்டா வந்தா அவ போற பாதை சரியில்லேன்னுதான் அர்த்தம்.''

''கொஞ்ச நாளாகவே அவ முகம் சரியில்லே! எனக்கு என்னவோ அவ பெரிய பிரச்னையிலே மாட்டிக்கிட்டிருப்



பாளோன்னு பயமாயிருக்கு! வரட்டும், கேட்டுடலாம்!'' என்றாள் பொறுப்பான அம்மாவாக.

அன்பழகனுக்குச் சுகுணாவின் கவலை ஆச்சர்யத்தை அளித்தது.

''பயப்படாதே... அவ வந்ததும் தீர விசாரிச்சிடலாம். அவளுக்கு நாம சீக்கிரமே ஒரு நல்ல வரனாப் பார்த்துக் கல்யாணத்தை முடிச்சிடணும்!''

''ஆமாம்... இன்னைலேர்ந்தே அந்த வேலையிலே இறங்கிட வேண்டியதுதான்!''

தான் எது பேசினாலும் அதற்கு எதிரான கருத்துக்களைச் சொல்லியே மட்டந்தட்டி வந்த மனைவி... அவர் சொல்வதற்கெல்லாம் தலையை ஆட்டி ஆமோதித்தது மேலும் மேலும் ஆச்சர்யத்தை அளித்தது.

கணவன் மனைவி என்கிற உறவை விட, தாய் குழந்தை உறவுதான் பலம் வாய்ந்தது. சக்தி வாய்ந்தது.

'போதும் என் மனைவிக்கு அவளிடமாவது நிஜமான பாசமும் நேசமும், இருக்கிறதே! சுகுணா நெஞ்சிலும் ஈரம் இருக்கிறது!'

இருவரும் அபர்ணாவின் வருகைக்காகக் காத்திருந்தனர்.

மேலும் ஒரு மணி நேரம் சென்றபிறகு... வாசலில் கார் வந்து நின்றது.

வியப்பாய்த் தலையைத் திருப்பிய சுகுணா... வியர்த்துக் கொட்ட எழுந்து நின்றாள்.

அன்பழகன் கூட இவ்வளவு பெரிய அதிர்ச்சியை எதிர்பார்க்கவில்லை.

அபர்ணாவும், அஸ்வினும் மாலையும் கழுத்துமாக மணக் கோலத்தில் வந்து நின்றனர்.

''அ...ப...ர்...ணா!'' என்றாள் தன் கண்களையே நம்ப முடியாமல்.

''அபர்ணா... என்னம்மா இது கோலம்?''

''பார்த்தா தெரியலியா டாடி? மணக்கோலம்!'' என்றாள் வழக்கம் போல, துடுக்காய்!

''ஸ்டாப்பிட்... செய்யறதையும் செய்துட்டு எவ்வளவு திமிரா பதில் சொல்றே? யார் கொடுத்த தைரியம் இது?'' கோபமாய்க் கேட்டாள் சுகுணா.

அம்மாவின் கோபத்தை எதிர்பார்த்தே வந்திருந்தாலும்... நேரடியாகத் தாக்கும் போது... நடுங்கித்தான் போனாள் அபர்ணா.

''ஸாரி மம்மி... தெரியாம செஞ்சிட்டேன். மன்னிச்சிருன்னு கண்டிப்பா சொல்ல மாட்டேன். தெரிஞ்சேதான் நாங்க கல்யாணம் பண்ணிக்கிட்டோம். ஏன்னா... நீங்க நிச்சயமா இந்த கல்யாணத்துக்கு ஒத்துக்கப் போறதில்லே! ஆனா, என்னால அஸ்வினைத் தவிர வேற யாரையும் கல்யாணம் பண்ணிக்க முடியாதும்மா! எனக்கு வேற வழியும் தெரியலே! அதனால தான் யாருக்கும் தெரியாம...''

''அபர்ணா... நீயா இப்படிப் பேசறே? உன்னை இத்தனை நாளா ஒரு குழந்தையாதான் நினைச்சேன்! ஆனா, பெத்தவங்க இல்லாமலேயே கல்யாணம் பண்ணிக்கிற அளவுக்குப் பெரிய மனுஷியாய்ட்டேன்னு இப்பதான் புரியுது. நீ கேட்டது கேட்காததெல்லாம் பார்த்துப் பார்த்துச் செய்தேனே... அதை யெல்லாம் மறந்துட்டியா? உன் கல்யாணத்தை எப்படி யெல்லாமோ நடத்தணும்னு கனவு கண்டேனே... அத்தனையும் தூள் தூளாக்கிட்டு வந்து நிக்கறியே... உனக்கு எப்படி மனசு வந்தது?'' ஆத்திரத்தில் சுகுணாவின் கண்கள் துளிர்த்தன.



''அம்மா... உன் மனம் கஷ்டப்படும்ன்னு எனக்குத் தெரியும். அதை நான் விரும்பலே! ஆனா தெரிஞ்சே இந்தக் காரியத்தைச் செஞ்சிருக்கேன்னா... அஸ்வினை நான் அந்தளவு நேசிக்கிறேன்னு அர்த்தம். நான் கேட்டதையெல்லாம் வாங்கித் தந்தே! ஆனா, அஸ்வினைக் கேட்டா நிச்சயமா நீ தரமாட்டேன்னு நல்லாத் தெரியும். அதனாலதான்... நானே...!''

''உன்னை நல்லா மயக்கிட்டான்டி! நல்லா வசதியா ஒரு பொண்ணு கிடைச்சாப் போதும்! அவளை ஏத்தி, எறக்கி மாத்திடுவீங்களே...!'' சுகுணாவின் கோபம் அஸ்வின் மீது பாய்ந்தது.

''அம்மா... அவசரப்பட்டுப் பேசாதேம்மா! அவர் ஒண்ணும் நம்ம பணத்துக்கு ஆசைப்பட்டு என்னைக் காதலிக்கலே... அஸ்வினும் வசதியானவர்தான்! நம்ம அளவுக்கு இல்லைன்னாலும் அவர்கிட்டேயும் நாலு கார் இருக்கு!''

சுகுணா பதில் பேசவில்லை என்றாலும் கோபம் தணிய வில்லை.

அதுவரை பேசாமலிருந்த அஸ்வின் பேசத் தொடங்கினான்.

''அபர்ணா... உங்ககிட்டே மன்னிப்பு கேட்கலேன்னாலும் நான் மன்னிப்புக் கேட்கிறேன். பெத்தவங்களோட அனுமதி இல்லாம, ஆசீர்வாதமில்லாம நடக்கிற கல்யாணம் தவறுதான். ஆனா, காதல் இதை யெல்லாம் சீர்தூக்கிப் பார்க்காது. எப்படியாவது ஜெயிக்கணும். அதற்காக என்னவேணும்னாலும் செய்யத் தயாராயிருக்கும். நாங்களும் ஜெயிக்கணும்னு

ஆசைப்பட்டோம். அதனாலதான் உங்க ஆசீர்வாதமில்லாம எங்க கல்யாணமும் நடந்தது. நீங்க நினைக்கிற மாதிரி பணத்துக்கு ஆசைப்பட்டு நான் உங்க பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கலே! நான் ஆம்பளை! என் மனைவியை என் சம்பாத்யத்திலே கண் கலங்காம சந்தோஷமா வச்சுக் காப்பாத்துவேன்ங்கற நம்பிக்கை எனக்கு நிறையவே இருக்கு! நடந்ததெல்லாம் மறந்துட்டு எங்களை ஆசீர்வாதம் பண்ணுங்க... ப்ளீஸ்!'' என்றான் அஸ்வின்.

''செய்யறதெல்லாம் செஞ்சிட்டு மறந்திடுங்கன்னா மறந்திட முடியுமா? நீ நல்ல மனுஷனா இருந்தா என்ன செஞ்சிருக்கணும் தெரியுமா? பெத்தவங்க நாங்க சம்மதிக்கிறோமோ, இல்லையோ... எங்களை வந்து ஒரு வார்த்தை கேட்டிருக்க வேணாமா? இப்ப வந்து வியாக்கியானம் பேசினா... எல்லாத்தையும் மறந்திட முடியுமா? இல்லே மன்னிச்சிட முடியுமா?'' பொருமினாள்.

அன்பழகன் எல்லாவற்றையும் கைகட்டியபடி பார்த்துக் கொண்டு தானிருந்தார்.

''அம்மா... பழசையே பேசிக்கிட்டிருந்தா... ஆகப்போறது எதுவுமில்லே...''

''காலேஜுக்குப் போய்ப் படிப்பை தவிர மத்ததெல்லாம் கத்துக்கிட்டு வந்திருக்கே!''

''இப்ப நாங்க உள்ளே போகணுமா? இல்லே வெளியே போகணுமா?''

''அந்த முடிவுக்கே வந்துட்டியா அபர்ணா? அவ்வளவு சீக்கிரமாகவா இந்த அம்மாவை மறந்திட்டே!''

''அம்மாவை மறந்திருந்தா... நான் இங்கே வந்தே இருக்க மாட்டேனம்மா!''



''பார்த்துக்கிட்டு கல்லு மாதிரி நிக்கறீங்களே! பெத்த தகப்பன்தானே? ஏண்டி இப்படி செஞ்சேன்னு கன்னத்துலே நாலு அறை விட்டுக் கேக்காம... வாயப் போத்திக்கிட்டு நின்றிருந்தா என்ன அர்த்தம்?''

''ஒரு தகப்பனா என்னை அவளை ஒரு கேள்வி கூடக் கேட்க அனுமதிக்கலியே சுகுணா! அப்படியிருக்கப்ப... கன்னத்துல நாலு அறை விட எனக்கென்ன உரிமையிருக்கு! அதுவும் இப்ப அவ இன்னொருத்தரோட மனைவியா வந்திருக்கா! எனக்கு மட்டுமில்லே... உனக்கும் அவகிட்டே உள்ள உரிமை குறைஞ்சுதான் போயிருச்சு!''

''.......!?''

''அபர்ணா... உன் புருஷனைக் கூட்டிக்கிட்டு நீ உள்ளே போம்மா!''

''என்னங்க?''

''ப்ச்... சுகுணா... விடு... எதிர்க்கறதால திருமதியான அபர்ணா... செல்வியாக மாறிட முடியுமா என்ன? அவசரத்துல, ஆத்திரத்துல எடுக்கப்படற முடிவு எப்பவும் சரியா வராது. அபர்ணா! உள்ளே போ! மாப்பிள்ளே... உள்ளே போங்க!''

இருவரும் உள்ளே சென்றனர்.

''அவ... எவ்வளவு பெரிய காரியம் பண்ணிட்டு வந்திருக்கா... நீங்க எவ்வளவு ஈஸியா...''

அன்பழகன் சுகுணாவின் தோளில் கை வைத்து மென்மையாய் அழுத்தினார்.

''வேற வழியில்லே சுகுணா! அபர்ணா நமக்கு ஒரே பொண்ணு! என்னைப் பொறுத்தவரை அவ செஞ்சது தப்பில்லேன்னுதான் சொல்வேன். மனசுக்குப் பிடிச்சவனோட வாழணும்னு ஆசைப்படறது தப்பா? மனசு ஒப்பாம கவுரவத்துக்காகச் சேர்ந்து வாழற எத்தனையோ பேர் இன்னைக்கும் இருக்காங்க! அவ்வளவு ஏன்? உங்கப்பா வற்புறுத்தினதுக்காக... மனசுக்குப் பிடிக்காம நீ... என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு இத்தனை வருஷமா வாழ்ந்தியே... அந்த வாழ்க்கைக்கு என்ன அர்த்தம் கிடைச்சது? அதே மாதிரி உன் பிடிவாதத்துக்கு அபர்ணா பலியாகாம அவளாவது சந்தோஷமா வாழப் போறாளேன்னு சந்தோஷப்படு! வாழறதுக்காக எதை வேணா விட்டுக் கொடுக்கலாம். ஆனா, எதுக்காகவும் வாழ்க்கையை விட்டுக் கொடுக்கக் கூடாது. இத்தனை வருஷமா உன்னை நீயே ஏமாத்திக்கிட்டு, ஒரு சராசரி பெண்ணோட சந்தோஷத்தைக் கூட அனுபவிக்காம... வாழ்ந்த உன்னை நினைச்சா... வருத்தமாயிருக்கு. என் மகளாவது ஒரு சராசரி வாழ்க்கை வாழட்டும் சுகுணா! ப்ளீஸ்...'' என்றார் கெஞ்சலாய்.

சுகுணாவிற்குள் அவரின் ஒவ்வொரு வார்த்தையும் ஊசியாய் இறங்கியது. யோசிக்க ஆரம்பித்தாள்.

## 11

சுகுணா முன்பு போல் இல்லை. ஓரளவு மாறிவிட்டாள் என்றுதான் கூற வேண்டும்.

எந்நேரமும் தன் திமிர்ப் பேச்சால் கணவனை ஓட ஓட விரட்டிக் கொண்டிருந்ததெல்லாம்... அபர்ணாவின் திருமணத் திற்குப் பின் சுத்தமாய் இல்லை.



தன் அன்பை யாருக்கும் பகிர்ந்தளிக்காமல் ஒரே மகளுக்கே அபிஷேகம் செய்து... தான் வாழ்வதே அவளுக்காக என்ற சித்தாந்தத்தை அழுத்தமாய் மனசுக்குள் பதிய வைத்துக் கொண்டிருந்தவளுக்கு அபர்ணாவின் திடீர் முடிவு... அவளை ஆகாயத்திலிருந்து குப்புறத் தள்ளி விட்டது போலிருந்தது.

தன் அன்பு அவளுக்கும், அவள் அன்பு தனக்கும் மட்டுமே உரியது என்று நினைத்திருந்தவள்... மகள் தன்னையே ஒதுக்கி வைத்துத் திருமணம் செய்து கொண்டு வந்தது பேரிடிதான்.

இப்போதுதான் தான் யாருமற்ற அனாதை என்ற உணர்வு எழுந்தது.

அன்பழகனின் வார்த்தைகள் வேறு அவளைப் புடம் போட்டுக் கொண்டிருந்தன.

''நிஜம்தான்! இத்தனை வருடமும் அவரைப் பழி வாங்குவதாக நினைத்துக் கொண்டு... நானல்லவா குழியில் விழுந்திருக்கிறேன்! அவர் என் கணவர். அதை மறந்து எப்படியெல்லாம் நடந்து கொண்டேன்? அவரைப் பழிவாங்க வேண்டுமானால் எத்தனையோ வழியிருக்கிறதே! டைவர்ஸ் கூடப் பண்ணியிருக்கலாம். ஏன் பண்ணவில்லை? அதற்கு நான் தயாராயில்லை என்றுதானே அர்த்தம்? இத்தனை காலமும் என்னை நானே ஏமாற்றிக் கொண்டு... சின்னச் சின்ன சந்தோஷங்களைக் கூட அனுபவிக்காமல், எந்திரமாய் அல்லவா வாழ்ந்திருக்கிறேன்! ஆண்கள் பெண்களை மதிக்க வேண்டும் என்று போர்க்கொடி தூக்கும் நான்... என்றாவது அவரை மதித்திருப்பேனா?''

புருஷனை மதிக்காத எந்தப் பெண்ணும் சமூகத்தில் கவுரவமாக வாழ்ந்து விட முடியாது. அபர்ணா மீது உயிரையே

வைத்திருந்தேன் இன்று என் மகள் என்னை உதாசீனம் செய்துவிட்டாள். ஆனால், எப்போதுமே உதாசீனப்படுத்தி வந்ததையெல்லாம் பெரிசு படுத்தாமல்... இன்று என்னை ஆறுதல் படுத்துவது அவர்தானே! இப்போதுதானே... எனக்கு அவரின் அருமை தெரிகிறது. இனி அவர் மனம் புண்படும்படி நடந்து கொள்ளக் கூடாது. முதலில், அவருடன் சென்று விமலாவைப் பார்த்து விட்டு வரவேண்டும். தீர்மானித்தாள்.

அன்பழகன் அசந்து போனார் தன்னையே கிள்ளிப் பார்த்துக் கொண்டார். வலித்தது.

கனவில்லை. நிஜம்தான்!

பிரமிப்பு மாறாமலேயே மனைவியுடன் மருத்துவ மனைக்குப் புறப்பட்டுச் சென்றார்.

''எப்படியோ ஒரு வழியா அம்மா சமாதானமாகி நம்ம கல்யாணத்தை ஏத்துக்கிட்டாங்க! இப்பதான் அஸ்வின் எனக்கு ரொம்ப சந்தோஷமாயிருக்கு!'' கணவனின் வெற்று மார்பில் முகம் புதைத்து மூக்கைத் தேய்த்தாள் அபர்ணா!

''விரும்பியவளையே கைப்பிடிக்கிறதுன்னா... எத்தனை காடு மலையெல்லாம் தாண்டி வரவேண்டியிருக்கு. இல்லே?''

''ஆமாம்!''

''உங்க அம்மாவை நம்ம வழிக்குக் கொண்டு வந்தது உங்க அப்பாதான். அவருக்குத் தான் முதலில் 'தாங்க்ஸ்' சொல்லணும்!''

''ஆமாம்! நான் கூட அப்பாவை என்னவோ நினைச்சிருந்தேன். ஆனா, அவருக்கு என்மேலே நிறையப் பாசம். அதனாலதான் நான் என் விருப்பப்படி அமைச்சுக்கிட்ட வாழ்க்கையப் பத்தி ஒரு வார்த்தை கூட எதிர்த்துப் பேசல...''



''பொதுவா... உங்க வீட்லே மதுரை ஆட்சி நடக்குது... அப்படித்தானே?''

''ஆமாம்! அம்மா ரொம்ப வசதி. எங்க தாத்தாகிட்டே தான் எங்கப்பா ஜூனியரா இருந்தாராம். தாத்தா அவரையே பிடிச்சி எங்கம்மாவைக் கட்டி வச்சிட்டாராம். அதுல அம்மாவுக்கு விருப்பமில்லே! அவங்க அந்தஸ்துக்குக் கொஞ்சமும் ஒத்துவராத நபரை எப்படி அவங்களால ஏத்துக்க முடியும்? அதனால அம்மா அவரை ஒரு லிமிட்டோட ஒதுக்கியே வச்சாங்க!''

''மனசு ரெண்டும் இணையறதுக்கு அந்தஸ்து எதுக்கு அபர்ணா? இப்ப என்னையே எடுத்துக்க... நான் ஏழையா இருந்தாலும் என்னை நீ காதலிச்சிருப்பே... கல்யாணமும் பண்ணியிருப்பே இல்லே?''

''நோ... நோ... யார்... சொன்னது அப்படி? எங்க அளவுக்கு இல்லேன்னாலும் ஓரளவு நீங்க வசதியானவர் அப்படினு தெரிஞ்சதனாலேதான்... உங்க காதலை ஏத்துக்கிட்டேன். சொல்லப்போனா, உங்களை விட அழகான ஆண்கள் எத்தனையோ பேர் என் பின்னாடி வட்டமடிச்சாங்க... ஆனா, அவங்களெல்லாம் படிச்சு முடிச்சி, ஃபைலை தூக்கிக்கிட்டு வேலை தேடி, அதுக்குப் பிறகு லைஃப்ல செட்டிலாகற ஏழை ஜாதி! நான் எதிர்பார்க்கிற குவாலிபிகேஷன்ல ஒண்ணு... எனக்கு புருஷனா வரப்போறவர் கைநீட்டிச் சம்பளம் வாங்கறவரா இருக்கக் கூடாது. நூறு பேருக்குச் சம்பளம் தர்றவரா இருக்கணும்!''

அஸ்வின் எச்சில் விழுங்கிக் கொண்டான்.

''சப்போஸ்... நான் இப்ப ஏழைன்னு வச்சுக்க...''

''ஏழையா இருந்தாதானே? என் அஸ்வின் ஏழையில்லே... ஐ நோ அபவுட் இட்! இப்ப எதுக்கு அந்தப் பேச்செல்லாம்? நாளைக்கு நாம ஹனிமூனுக்காக சிம்லா போறோம். அப்பாவும், அம்மாவும் அதற்கான ஏற்பாடெல்லாம் செஞ்சுட்டாங்க. ஹனிமூன் முடிச்சிட்டு வந்தவுடனே... நாம நம்ம வீட்டுக்குப் போறோம். ஐ மீன்... என் அஸ்வின் வீட்டுக்குப் போறோம். அங்கே பெட் ரூம்ல ஏஸி இருக்குதானே? என்னால ஏஸி இல்லாம படுக்கவே முடியாதுப்பா! அப்புறம்... என்னை ஒரு நாளைக்கு உங்க ஆபீஸ்க்கு கூட்டிக்கிட்டுப் போங்க! என் அஸ்வினுக்கு ஆபீஸ் வேலையிலே இனிமே நான்தான் ஹெல்ப் பண்ணப் போறேன். வீட்டு நிர்வாகத்துல மட்டுமில்லே... ஆபீஸ் நிர்வாகத்திலேயும் என் பங்கு இருக்கும். ஓக்கே?''

அபர்ணா சொல்லிக் கொண்டே போக அஸ்வினுக்கு மயக்கம் வரும் போலிருந்தது.

'கடவுளே... இவளை எப்படிச் சமாளிக்கப் போகிறேன்?'

பத்து நாட்கள் விரைந்து காணாமல் போனது. அஸ்வினும் அபர்ணாவும் ஹனிமூனை முடித்துக் கொண்டு திரும்பியிருந்தனர்.

சுகுணா கவலையாய் மகளையும், மருமகனையும் பார்த்தாள்.

''என்ன அபர்ணா திடீர்னு இப்படிச் சொல்றே? நம்ம வீடே கடல் மாதிரி இருக்கறப்ப... அவர் வீட்டுக்குப் போறேங்கறியே!''

''ஆன்ட்டி... குறுக்கே பேசறதுக்கு மன்னிக்கணும். மாமியார் வீட்டோட மருமகன் தங்கினா மரியாதை இல்லே... எனக்கு அதிலே விருப்பமும் இல்லே! உங்க பொண்ணு எங்கே இருந்தா என்ன? அவளைச் சந்தோஷமா கண்கலங்காம வச்சிருக்கறது என் கடமை!'' என்றான் அஸ்வின்.



அன்பழகன் புருவம் உயர்த்தி அவனைப் பெருமையுடன் பார்த்தார்.

''வெல்டன் அஸ்வின்! என் பொண்ணு நிச்சயமா கண்கலங்க மாட்டா... அந்த நம்பிக்கை எனக்கிருக்கு. சுகுணா... உன் பாசத்தைக் கொஞ்சம் மூட்டை கட்டி வச்சிட்டு அபர்ணாவை அவ புருஷன் வீட்டுக்கு அனுப்பி வை. அதுதான் முறை! அவளுக்கும் பொறுப்பு வரும்!''

''என்னங்க நீங்களும் அவங்க பக்கம் சேர்ந்துக்கிட்டு...'' என்றாள் வருத்தமாய்.

அபர்ணா அம்மாவின் தோளை ஆறுதலாய்ப் பற்றி அழுத்தினாள்.

''என்ன மம்மி இது? சின்னக் குழந்தையாட்டம்? நான் எங்கே போய்டப் போறேன்? இதே ஊர்லதானே இருக்கப் போறேன்? அஸ்வின் கிட்டேதான் நாலு கார் இருக்கே! நினைச்சப்ப ஒரு காரை எடுத்துக்கிட்டு உன்னைப் பார்க்க ஓடோடி வந்துட மாட்டேனா? உன் பொண்ணு கை நீட்டிச் சம்பளம் வாங்கற புருஷனைக் கட்டிக்கலேம்மா... பலபேருக்கு சம்பளம் தர்ற புருஷனைத் தான் கட்டிக்கிட்டுருக்கா ஸோ... கவலைப்படாதே! நான் எங்கேயிருந்தாலும் சந்தோஷமா இருப்பேன். என்னை மனப்பூர்வமா அனுப்பி வைம்மா ப்ளீஸ்!'' அவள் பேச்சு... சுற்றிச் சுற்றி வசதியையும், ஆடம்பரத்தையும் பற்றியே வரவே அஸ்வினுக்குள் பயம் உற்பத்தியானது. ஆனாலும் ஒரு நம்பிக்கை.

''அபர்ணாவுக்கு என் மீது அளவு கடந்த காதல் உள்ளது. அதனால்தானே பெற்றோர்களுக்கே தெரியாமல் என்னை

மணந்து கொண்டாள்? இந்த ரிஜிஸ்டர் மேரேஜ் கூட அவளோட ஐடியாதானே? ஒரு பெண்ணுக்குப் பணம் அந்தஸ்தை விட கணவன்தானே முக்கியம்! அபர்ணா தமிழ் மண்ணில் பிறந்த தமிழ்ப் பெண்தானே! தவிர அவள் மீதுள்ள காதலால்தான் நான் உண்மையை மறைத்தேன் என்பதை நிச்சயம் புரிந்து கொள்வாள். இதையே நினைத்து வீணாக மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ள வேண்டாம். இன்னும் இரண்டு மணிநேரத்தில் அவளுக்கு என்னைப் பற்றிய உண்மை தெரிந்து விடும். அவளை எப்படியாவது சமாதானப்படுத்தி விடலாம். நல்லவேளை... கூடவே அவளுடைய பெற்றோர் வரவில்லை! நான் செய்தது பெரிய தவறுதான். அந்த உறுத்தல் என்னிடம் அதிகமாக இருக்கிறது. ஆனால், அபர்ணா! அத்தனையும் உன் மீதுள்ள அளவிட முடியாத நேசத்தால்தான் என்பதை உனக்கு எப்படியாவதுஉணர்த்துவேன்!' அஸ்வின் மனதிற்குள் ஒரு தெளிவு உண்டானது.

சற்று நேரத்தில் காதல் மனைவியுடன் புறப்பட்டான் அஸ்வின்.

சுகுணாவைப் பார்க்க முப்பத்தைந்த வயது மதிக்கத்தக்க பெண் வந்திருந்தாள்.

அவளிடம் விளக்கமாகப் பேசி முடித்தாள் சுகுணா. ''சரி... நீங்க நாளைக்கு இதே நேரத்துக்கு வாங்க... அப்ளிகேஷன் ரெடி பண்ணிடறேன். சைன் பண்ணி நாளைக்கே உங்க புருஷனுக்கு அனுப்பிடலாம்!''

''உங்களைத் தாங்க நம்பி வந்திருக்கேன். அந்த ஆளோட இம்சை தாங்க முடியலேங்க!''

''என்கிட்டே வந்த பிறகு கவலையே பட வேண்டாம். போய் வாங்க...'' என்று அனுப்பி வைத்தாள்.



அன்பழகன் அவள் எதிரே வந்தமர்ந்தார்.

''ஏன் சுகுணா... இன்னும் எதற்கு இந்த மாதிரி டைவர்ஸ் கேஸையெல்லாம் எடுத்துக்கறே?''

''இது என்னோட ப்ரொஃபஷனல்! என்னைத் தேடி எந்த கேஸ் வந்தாலும் எடுத்து வாதாடித்தான் ஆகணும். இல்லேன்னா நான் படிச்ச படிப்புக்கு அர்த்தமே இல்லாமப் போய்டும்!''

''உனக்கு எப்படிச் சொல்லிப் புரிய வைக்கிறதுன்னே தெரியல. ஹூம்... கடவுள் ஏதாவது அற்புதம் நிகழ்த்தணும். மத்தப்படி யாராலேயும் உன்னை மாத்த முடியாது.''

''சரி... அதைவிடுங்க! பழசையெல்லாம் மறந்திடுங்க. நான் உங்களிடம் பந்தயம் கட்டி ஜெயிச்சி... கோர்ட் படி ஏறாம பண்ணிட்டேன். படிச்ச படிப்பை அறிவுகெட்டதனமா முடக்கி வச்சிட்டேன். அதுக்காக என்னை மன்னிச்சி மறுபடியும் நீங்க கோர்ட்டுக்குப் போகணும்!''

''.......?!'' திகைத்துப் போய்ப் பார்த்தார்.

''விமலாவைத்தான் ஸ்பெஷல் டாக்டர்ஸ் வச்சுப் பார்க்கறோமே! அவ சீக்கிரமே குணமாயிடுவா! அவளுக்கு நானே ஒரு நல்ல வாழ்க்கைய அமைச்சுத் தர்றேன்!''

''கேக்கவே சந்தோஷமாயிருக்கு சுகுணா! புதுசா பிறந்த மாதிரி ஒரு ஃபீலிங்! தாங்க்யூ... தாங்க்யூ சுகுணா!''

''நான் இப்பதாங்க வாழவே ஆரம்பிச்சிருக்கேன். என் தவறுகளை நான் உணர்ந்துட்டேன்!''

''ஆனா... ஒரே ஒரு விஷயத்திலே மட்டும் பிடிவாதமா இருக்கியே!''

"அந்த விஷயத்திலே மட்டும் தலையிடாதீங்க!" என்று செல்லமாய்க் கெஞ்சியவள் அவர் அருகில் வந்து நெஞ்சில் தலை சாய்த்துக் கொண்டாள்.

"இனி எனக்குத் தினந்தோறும் தீபாவளிதான்!"

"என்ன சொல்றீங்க?"

"அபர்ணாவுக்கு ஒரு தங்கையோ, தம்பியோ உருவாக்கித் தரலாம்னு...!"

"ச்சீ..." என்று அவரைத் தள்ளிவிட்ட சுகுணாவின் முகம் செம்மையைப் பூசிக் கொண்டது.

அதே நேரம் காலிங் பெல் அலற...

சுகுணா திறந்தாள்.

"அம்மா...!!" என்றழுதபடி ஓடி வந்து அவளைக் கட்டியணைத்துக் கொண்டாள் அபர்ணா!

## 12

அபர்ணா சொல்வதைக் கேட்கக் கேட்க வாயடைத்துப் போனது சுகுணாவிற்கு.

அன்பழகன் இதை எதிர்பார்த்தவராய் அமைதியாய் நின்றிருந்தார்.

"என்னடி சொல்றே?" பதறிப்போய்க் கேட்டாள்.

"ஆமாம்மா... நான் ஏமாந்திட்டேன். அவனை நம்பி மோசம் போய்ட்டேன்! அவனால என் வாழ்க்கையே பாழாயிடுச்சிம்மா!"

சுகுணா இடிந்து போய் அமர்ந்து விட்டாள்.



அன்பழகன் மகளின் அருகில் வந்தார்.

"அழாம விஷயத்தைச் சொல்லு! அஸ்வின் உன்னை ஏமாத்திட்டானா?"

"ஆமாம் டாடி!"

"ஏமாத்திட்டான்னா... எப்படி எடுத்துக்கறது? அவன் ஏற்கெனவே திருமணமானவனா?"

"இல்லே!"

"பின்னே...?"

"அவன் என்கிட்டே சொன்னது அத்தனையும் பொய்ப்பா!"

"என்ன பொய்?"

"அவன் பணக்காரன் இல்லே! பணக்காரன்னு பொய் சொல்லி என்னை ஏமாத்திட்டான். சொந்த வீடு கூட இல்லை. நம்ம வீட்டு பாத்ரூம் அளவு ஒரு வாடகை வீடு!"

"நாலு கார் இருந்துச்சே?" என்றாள் சுகுணா.

"அந்தாள் கார் மெக்கானிக்ம்மா! ஆட்டோ மொபைல் ஒர்க்ஷாப் வச்சிட்டிருக்கான். ரிப்பேருக்கு வர்ற கார்களைத்தான் வேளைக்கு ஒண்ணா எடுத்துக்கிட்டு வந்து என்னை... ச்சே... நான் அதையெல்லாம் நம்பி முட்டாளாயிட்டேனே!"

"சரி... நடந்தது நடந்து போச்சு! அஸ்வின் உன் மேல உள்ள காதலால உன்னையே கல்யாணம் பண்ணிக்கணும்ங்கற ஆசையில இப்படியெல்லாம் நடந்துக்கிட்டான். இப்ப என்ன... நீ பணக்கார வீட்டுப் பெண்! இருக்கிற சொத்தெல்லாம் உனக்குத்தான். நீ பணக்காரின்னா அஸ்வினும் பணக்காரன் தானே? இதை யெல்லாம் பெரிசு பண்ணாதேம்மா!" என்றார் அன்பழகன்.

''நோ... டாடி! என்னால அவனோடு சேர்ந்து வாழ முடியாது!''

''தாலி கட்டியவரை அவன் இவன்னு மரியாதையில்லாமப் பேசக்கூடாதும்மா!''

''பொய்யும், பித்தலாட்டமும் ரத்தத்துல கலந்திருக்கிற வனுக்கு எதுக்குப்பா மரியாதை?''

''நீ இப்ப ரொம்ப டென்ஷன்ல இருக்கிறே! போய் ரெஸ்ட் எடு! அப்புறம் பேசிக்கலாம்!''

''இல்லே... இப்பவே ஒரு முடிவு எடுத்தாகணும்! அம்மா இதுக்கு நீதான் ஹெல்ப் பண்ணணும்!''

சுகுணா மகளை நெஞ்சோடு சேர்த்தணைத்து முதுகைத் தடவிக் கொடுத்தாள்.

''நானே குழம்பிப் போயிருக்கேன்ம்மா! போய் ரெஸ்ட் எடு. நாளைக்குப் பேசிக்கலாம். அஸ்வினை அழைச்சி பேசுவோம்!''

''நோ... அந்தாளை நான் மறுபடி பார்க்கற இடம் நம்ம வீடு... இல்லேம்மா!''

''.......?''

''கோர்ட்லதான் மீட் பண்ணப் போறேன்!'' என்றாள் உறுதியாக.

சுகுணா அதிர்ந்து போனாள்.

''எ... என்ன சொல்றே அபர்ணா?''

''நான் அஸ்வினை டைவர்ஸ் பண்ணப் போறேன்!''

''அ...ப...ர்...ணா!''



''ஆமாம்மா... உன் பொண்ணுக்காக நீதான் வாதாடணும்! நீதான் எனக்கு டைவர்ஸ் வாங்கித் தரணும்!''

''என்னடி... பைத்தியம் மாதிரி உளறிக்கிட்டிருக்கே?''

''உளர்றேனா? ஒஹோ... அப்ப என் கேஸை நீ எடுத்துக்க மாட்டியா? இதோ பார் மம்மி... இந்த உலகத்திலே நீ மட்டுமே வக்கீல் இல்லே... தடுக்கி விழற இடமெல்லாம் பி.ஏ.,பி.எல். போர்டு தொங்குது. என் முடிவுல எந்த மாற்றமும் இல்லே. என்னை யாரும் கன்வின்ஸ் பண்ணி மாத்திட முடியாது! என்னை ஏமாத்திக் கல்யாணம் பண்ணிக்கிட்டான் இல்லே? பதிலுக்கு நான் அவனைப் பழிவாங்கியே தீரணும்! வாங்கியே தீருவேன்!'' வார்த்தையில் நெருப்பிருந்தது.

அபர்ணா தன்னறைக்குப் போய் விட்டாள்.

''என்னங்க... என்னென்னமோ பேசிட்டுப் போறா! அவ இஷ்டத்துக்கு லவ் பண்ணினா, கல்யாணம் பண்ணினா, இப்ப பத்தே நாள்ல டைவர்ஸ் பண்றேங்கறா! என்ன நடக்குது இங்கே! எனக்கு ஒண்ணும் புரியலே!''

''அவதான் தெளிவா சொல்லிட்டுப் போறாளே. என் கேஸை எடுத்து நீதான் மம்மி நடத்தணும். டைவர்ஸ் வாங்கித் தரணும்னு... கேஸை எடுத்து நடத்து. டைவர்ஸ் வாங்கிக் கொடு!'' கேஷுவலாய் சொன்னார்.

''என்ன சொல்றீங்க? அபர்ணா யாரோ இல்லே! என் பொண்ணு! நான் பெத்த பொண்ணு! அவளுக்கு நான் டைவர்ஸ் வாங்கித் தரணுமா? முட்டாள்தனமா பேசாதீங்க!'' சீறினாள்.

''அப்ப...ஊர்ல உள்ள பொண்ணுங்கள்லாம் உன் பொண்ணு மாதிரி யோசிக்காம அவசரப்பட்டு உன்கிட்டே

வருவாங்க... அவங்களுக்கெல்லாம் எந்த அப்ஜெக்ஷனும் சொல்லாம கேஸ் எடுத்து நடத்தினியே! அவங்களுக்கெல்லாம் புருஷன்கிட்டேர்ந்து சுதந்திரம் கிடைக்கலாம். உன் பொண்ணுக்குக் கிடைக்கக் கூடாதா? ஏம்மா... அபர்ணா என்ன தப்பு பண்ணினா? அவளை மட்டும் ஏன் பாரபட்சமா நடத்தறே?''

''ஐயோ... கொல்லாதீங்க!''

''நான் கொல்லலே சுகுணா! நீதான் கொன்னுருக்கே! பணம் கிடைக்குதே, புகழ் கிடைக்குதேன்னு வர்ற டைவர்ஸ் கேஸை யெல்லாம் எடுத்து எத்தனை குடும்பங்களைப் பிரிச்சிருப்பே! புருஷன் பொண்டாட்டிக்கு நடுவிலே குழந்தையும் இருந்துட்டா போச்சு. காடாறு மாதம், நாடாறு மாதம் மாதிரி. அம்மாகிட்டே அஞ்சு நாள், அப்பாகிட்டே அஞ்சு நாள்னு பந்தாட வச்சதுக்கு என்ன காரணம்? நீ வாங்கித் தந்த டைவர்ஸ்! அந்தச் சின்னக் குழந்தைங்க மனசுக்குள்ளே எவ்வளவு வேதனை இருந்திருக்கும்! உன் பொண்ணுக்கு வந்தாதான் வேதனையா?

''அவசரப்பட்டு எடுக்கிற முடிவு எதுவும் சரியாக இருந்ததில்லே! இருபது வருஷமா... வேண்டா வெறுப்பா என்னோட குடும்பம் நடத்துனியே! ஏன் மனசுக்குப் பிடிக்காம வாழணும்? நீயும் என்னை டைவர்ஸ் பண்ணியிருக்கலாமே! ஏன் பண்ணலே? உனக்கு மட்டும் பிடிக்குதோ இல்லையோ, புருஷன் வேணும். அப்படித்தானே? எத்தனையோ பொண்ணுங்க அப்ளை பண்ணின பிறகு... மனசு மாறி கேஸை வாபஸ் வாங்க வந்திருக்காங்க! ஆனா, நீ... மறுபடி அவங்க மனசை மாத்தி டைவர்ஸ் வாங்கித் தராம விட்டதில்லே! கணவன் மனைவி உறவுங்கறது பனித்துளி மாதிரி இல்லே சுகுணா! பிரச்னைங்கற சூரியன் வந்ததும் காணாம



போயிடறதுக்கு! வெட்ட வெட்டத் தழைக்கிற வாழைதான் தாம்பத்யம்! யாருகிட்டே பிரச்னையில்லே? அதுக்கு எல்லாம் ஒரே தீர்வு பிரிவு மட்டும்தானா? ஆண்கள் தப்பே பண்ணலேன்னு சொல்லலே! பண்றாங்க. ஆனா அவங்க செய்யற தப்பை உணர்த்துங்க. உணர்றதுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுங்க! அதை விட்டுட்டுத் தானும் எகிறினா... பிரச்னை வலுக்காதா? எல்லா புருஷன் பொண்டாட்டிக்குள்ளும் சண்டை சச்சரவு இருக்குது. அதுக்கு ஒரே தீர்வு டைவர்ஸ்தான் என்றால் நம்ம இந்தியாவுல... எல்லா தம்பதிகளும் டைவர்ஸ்தான் பண்ணணும். நீ மத்தப் பெண்களுக்குக் காட்டிய வழியை இன்னைக்கு உன் பொண்ணு தேர்ந்தெடுத்திருக்கா! இந்த கேஸை மட்டும் ஏன் விடணும்? எடுத்து நடத்து சுகுணா!''

''கடவுளே... கடவுளே...'' என்று தலையில் அடித்துக் கொண்டு அழ ஆரம்பித்தாள் சுகுணா!

''நான் தப்பு பண்ணிட்டேங்க! பெரிய தப்பு பண்ணிட்டேன். பல குடும்பங்களைப் பிரிச்சி வச்ச பாவி நான்! என் தப்பை இன்னைக்கு நான் உணர்ந்திட்டேங்க! தனக்குன்னு வந்தாதான் தெரியும் தலைவலியும், காய்ச்சலும்பாங்க! நான் பெத்த பொண்ணுக்கு இப்படியொரு பிரச்னை வந்தப்பதான் தெரியுது. என்னை மாதிரி எத்தனை தாய்மார்கள் தங்கள் பெண்கள் எடுத்த முடிவால இடிஞ்சு போயிருப்பாங்கன்னு. இனி நான் டைவர்ஸ் கேஸ் எடுத்து நடத்த மாட்டேன். இது சத்தியம்!'' என்றாள் கண்ணீருடன்.

அன்பழகன் மனைவியை நிம்மதிப் பெருமூச்சுடன் பார்த்தார். அவள் அருகில் வந்து கையைப் பற்றி மென்மையாய் அழுத்திக் கொடுத்தார்.

''இப்பதான் எனக்கு ரொம்ப சந்தோஷமாயிருக்கு சுகுணா!''

''நான் உங்ககிட்டே இன்னொரு விஷயத்தையும் மறைச்சிட்டேன்!''

''என்ன விஷயம்?''

''அஸ்வின் ஒரு கார் மெக்கானிக் என்பது எனக்கு ஆரம்பத்திலேயே தெரியும். அபர்ணா கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்த அன்னைக்கே யாருக்கும் தெரியாம அஸ்வினை பத்தி விசாரிச்சேன். அப்ப அவரைப் பத்திய எல்லா உண்மையும் தெரிஞ்சுது. ஆனா பொய் சொன்ன குற்றத்தை தவிர, அஸ்வின் மிக நல்லவன் என்பதைப் புரிஞ்சுக்கிட்டேன். தெரிஞ்சுக்கிட்டேன். அதனால அந்தஸ்து பேதத்தை நான் பெரிய தப்பா நினைக்கலே! ஆனா, அபர்ணா விஷயத்தை இவ்வளவு சீரியஸாக்கிடுவான்னு நான் எதிர்பார்க்கலே!'

அன்பழகன் மனைவியைப் பிரமிப்போடு பார்த்தார்.

'என்ன... அஸ்வின் பற்றிய எல்லா உண்மையும் தெரிந்திருந்தும்... அதைப் பெரிதுபடுத்தாமல், வெளிக்காட்டிக் கொள்ளாமல் பெரிய மனதுடன் ஏற்றுக் கொண்டிருக்கிறாள். என் சுகுணா முற்றிலும் மாறி விட்டாள்!'

கண்களில் காதலும், கருணையும் பொங்கச் சுகுணாவை நோக்கினார்.

''உன்னை நினைச்சா எனக்கு ரொம்ப சந்தோஷமாயிருக்கு சுகுணா! நான் கூட உன்னிடம் ஒரு விஷயத்தை மறைச்சிட்டேன். எனக்கு அஸ்வினைப் பத்தி கல்யாணத்துக்கு முன்னாலேயே தெரியும்!''

''நிஜமாவா?''

''ஆமாம் சுகுணா! அபர்ணாவோட நடவடிக்கையில சில மாற்றங்கள் உண்டானப்ப... அவ ஏதோ தப்புப் பண்றான்னு சந்தேகம் வந்தது. அந்த நேரத்திலே நான் எதைச் சொன்னாலும், அதற்கு எதிர் மாறான கருத்தைச் சொல்லியே நீயும் வாயடைச்சிட்டிருப்பே! தவிர நீயும் பிஸி. நான் வீட்லே சும்மாதானே இருந்தேன்? அதனாலே... அவளை வாட்ச் பண்ணினேன். காதல்ல சிக்கிட்டிருந்தாள்னு புரிஞ்சது. அப்பவே அஸ்வினைப் பத்தி விசாரிச்சேன். பையன் ரொம்ப நல்லவன்னு தகவல் கிடைச்சது. சரி... இதுபத்தி அபர்ணா கிட்டே பேசி, அவசரப்படாதே... படிப்பு முடியட்டும். நானே உங்களைச் சேர்த்து வைக்கிறேன்னு சொல்லலாம்னு நினைச்சிட்டு இருந்தப்பதான் ஒருநாள் அஸ்வின் என்னைத் தேடி வீட்டுக்குள் வந்தான்!''



''என்னது?''

''ஆமாம்! அவன் அவனைப் பத்திய எல்லா உண்மையும் சொன்னான். அபர்ணா அவனைப் பணக்காரன்னு நம்பித் தான் காதலிச்சிட்டிருக்கா... மறுநாள் யாருக்கும் தெரியாம ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணப் போறதாகவும், மனசு கேட்காம என்னிடம் சொல்ல வந்திருப்பதாகவும், அபர்ணாவை நான் உயிருக்குயிரா நேசிக்கிறேன். அவளில்லாம என்னால வாழ முடியாது சார் சத்தியமா அவளோட பணத்துக்காக நான் காதலிக்கலேன்னு சொன்னான் அவனோட அந்த நேர்மை எனக்குப் பிடிச்சது. நாம நம்ம பொண்ணுக்கு வசதி, வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர்றதை விட நல்ல கணவனைத் தேடித் தர்றதுதான் முக்கியம். அஸ்வின் நல்ல கணவனாக இருப்பான் என்கிற நம்பிக்கை ஏற்பட்டுச்சு. இந்த விஷயம் உனக்குத் தெரிஞ்சா நிச்சயமா கல்யாணம் நடக்காது. எனக்குத் தெரியும்ங்கற விஷயம் அபர்ணாவுக்கும் தெரிய வேணாம். அதனால அவதிட்டப்படி உங்க கல்யாணம் நடக்கட்டும்னு ஆசிர்வாதம் பண்ணி அனுப்பினேன். கல்யாணம் நடந்தது. பத்து நாள் தாம்பத்ய வாழ்க்கை அபர்ணாவை மாத்திடும்னு நினைச்சேன். ஆனா அவளுக்கு அன்பைவிட அந்தஸ்து முக்கியமாயிடுச்சு.''

சுகுணா பெருமூச்சு விட்டாள்.

''இப்ப என்னங்க பண்றது? அஸ்வினை வரவழைச்சுப் பேசலாமா?''

''வேண்டாம்! அபர்ணா இங்கே வர்றதுக்கு முன்னாடியே அஸ்வின் போன் பண்ணினான். வரட்டுமான்னு கேட்டான். நான் வேண்டாம்னுட்டேன்! இந்தச் சூழ்நிலையில வந்தா அபர்ணாவோட கோபம் அதிகமாகும்.''

''அபர்ணா டைவர்ஸ் வாங்காம விட மாட்டேன்னு சொல்றாளே! எனக்குக் கவலையா இருக்கு. என் ஒரே பொண்ணோட வாழ்க்கை வீணாகிடக் கூடாது!'' என்றாள் குரல் கம்ம.

''கவலைப்படாதே சுகுணா! அந்தளவிற்கு நான் விட மாட்டேன். உன்னையே நான் அன்பால மாத்திடலையா? என் பொண்ணு மனசை மாத்த முடியாதா என்ன? இள ரத்தம். வேகம் அதிகமாதான் இருக்கும். அதை என் விவேகத்தால அடக்கறேன். என் மகளுக்கு எல்லாத்தையும் புரிய வைக்கிறேன். என் பொண்ணை வாதாடி முதல்ல அவளை அஸ்வினோட சேர்த்த பிறகுதான் கோர்ட் படி ஏறுவேன்! இது உறுதி! அபர்ணாவோட வேகம் கோபமெல்லாம் அடங்கட்டும். கவலைப்படாதே சுகுணா! எத்தனையோ பொண்ணுங்களை டைவர்ஸ் வரைக்கும் போகாம காப்பாத்தியிருக்கேன். என் பொண்ணை மட்டும் காப்பாத்த மாட்டேனா என்ன! நம்பிக்கையோட இரு!'' என்ற அன்பழகனின் கண்களில் உறுதியிருந்தது. மனைவியை அணைத்த கரங்களில் நம்பிக்கை இருந்தது.

அன்பழகன் நிச்சயம் ஜெயிப்பார்.

★ ★
★

# காதலின் பொன் வீதியிலே...

**1**

பூமி தான் போர்த்தியிருந்த பனிப் போர்வையைச் சோம்பலுடன் மெல்ல... மெல்ல விலக்கிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்துப் படபடவெனச் சிறகு விரித்துப் பறவைகள் இங்குமங்கும் கும்மாளமிட ஆரம்பித்தன.

''அடேங்கப்பா... ஆச்சரியமாயிருக்கு! ஆனாலும் ரொம்ப கருமி தேவி நீ!'' சுகந்தி பல் விளக்கியபடியே கண்களை அகல விரித்தாள்.

புள்ளிகள் நடுவே கம்பி கம்பியாய் இழுத்துக் கோலம் போட்டுக் கொண்டிருந்த தேவி புரியாமல் நிமிர்ந்து பார்த்தாள்.

''என்னடி சொல்றே? நான் அப்படி என்ன கஞ்சத்தனம் பண்ணிட்டேன்?''

''இல்லையா பின்னே? எப்படிடி ஒரு சிட்டிகை மாவை ரெண்டே விரல்ல பிடிச்சிக்கிட்டு இருபது புள்ளி வைக்கிறே? எப்படி முடியுது?''

மெல்லச் சிரித்தாள் தேவி.

''இதென்ன பிரம்ம ரகசியமா? வா... கோலம் போடச் சொல்லித் தர்றேன். என்ன... ஏதுன்னு தன்னால புரியும்.''

''இதான்... இதான் நம்மளுக்குப் பிடிக்காது. பத்து நிமிஷத்துல பலருடைய கால்பட்டு உருத் தெரியாமப் போகப் போகிற இந்த கோலத்துக்காக... மணிக்கணக்கில் குனிஞ்சு போடணுமா? வேஸ்ட் ஆப் டைம். அந்த நேரத்தில வேற எதையாவது உருப்படியாச் செய்யலாம். ஜஸ்ட் பாராட்டினா... உடனே உன் கட்சிக்கு இழுக்கப் பார்க்காதே.''

''நம்ம உடம்பு கூடத்தான் ஒரு நாளைக்கு மண்ணோட மண்ணா மக்கிப் போகப் போகுது. அதுக்காக... குளிக்காம... சாப்பிடாமலா இருக்கோம். பொண்ணாப் பொறந்தா கோலம் போடத் தெரியணும்.''

''அது அந்தக் காலம். இந்தக் காலத்தில் பொண்ணாப் பொறந்தா டிகிரி ஹோல்டரா இருக்கணும். விஷம் போல் ஏர்ற விலைவாசியில் நாலு வாய் நிம்மதியா சாப்பிடணும்னா... கோலம் சாப்பாடு போடாது. தேவி! தெரியாம இந்தக் கோலத்தைப் பாராட்டிட்டேன். நீ ஹோம் மினிஸ்டர்னு தெரிஞ்சும் வாயைக் கொடுத்தேன் பாரு... என்னைச் சொல்லணும். என் டிபார்ட்மெண்ட்டே வேற... ஆளை விடு!'' உள்ளே போன சுகந்தியை முறைத்துப் பார்த்தாள் தேவி.

'என்னமோ... இவளை நான்தான் இழுத்துப் பிடிச்சி பேசிட்டிருந்த மாதிரி அலுத்துக்கறாளே!'

''தேவி இன்னும் எவ்வளவு நேரம் கோலம் போடப் போற! சட்டுபுட்டுனு முடிச்சிட்டு உள்ளே வா. தலைக்கு மேல வேலை இருக்கு!'' அம்மாவின் குரல் நீட்டி முழக்கிக் கேட்டது.

''இதோ வந்துட்டேம்மா!'' கோலமாவு டப்பாவைத் திண்ணை ஓரத்தில் வைத்துவிட்டு, தலையிலிருந்த டவலைப் பிரித்து நுனி முடியில் கோடாலி முடிச்சுப் போட்டுக் கொண்டு உள்ளே சென்ற தேவிக்கு இருபத்துமூன்று வயது. அழகி என்று சொல்ல முடியா விட்டாலும் லட்சணமான பெண்...படு சாந்தம். படிப்பில் அத்தனை ஆர்வமில்லை. இந்த பிளஸ்-டூவைத் தொடவே அவள் எத்தனை படிகள் தட்டுத் தடுமாறி வந்தாள்? சுகந்தி எம்.எஸ்ஸி இறுதியாண்டு படிப்பவள். சுகந்திக்கு அடுத்த முரளி பி.காம். இறுதியாண்டு படிக்கிறான்.



சாம்பிராணிப் புகை வீட்டை மணக்கச் செய்தது. இன்று வெள்ளிக் கிழமையல்லவா?

''வந்துட்டியா? மொதல்ல சட்னி அரைச்சுக் கொடு! முரளி இன்னிக்கு சீக்கிரமா காலேஜுக்குப் போகணுமாம்.''

கோதைநாயகி திரும்பிப் பார்க்காமலேயே தேவிக்குக் கட்டளையிட்டு விட்டு இட்லி தட்டில் மாவை ஊற்றினாள்.

''சரிம்மா.''

''இந்தா... அதுக்கு முன்னால அப்பாவுக்கு இந்தக் காபியக் கொடுத்துட்டு வந்துடு. நேரமாச்சுன்னா மனுஷன் கத்துவார்.''

அவள் கொடுத்த காபியை வாங்கிச் சென்றாள்.

ஜனார்த்தனன் அப்போதுதான் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்திருந்தார்.

''தேவி... பேப்பர் வந்துடுச்சாம்மா?''

''இன்னும் இல்லேப்பா.''

''சரி... நீ போய் மத்த வேலைய கவனி.''

பகல் இரண்டு மணி.

தேவி செருப்பை மாட்டிக்கொண்டு நகர்ந்தபொழுது அப்பாவின் குரல் தடுத்தது.

''தேவி! எங்கே போறே?''

''வழக்கம்போல லைப்ரரிக்குத்தாம்பா.''

'இதென்ன இன்னிக்கு புதுசாய் கேள்வி கேட்கிறார்?'

''நல்லாருக்கும்மா நீ செய்யறது. காலையிலேயே சொன்னேனா... இல்லையா? இன்னைக்கு உன்னைப் பொண்ணு பார்க்க வர்றாங்கன்னு! ம்... போம்மா. போய் கொஞ்சம் நேரம் படுத்து எழுந்திரு. அப்பத்தான் ப்ரெஷ்ஷா இருக்கும்.''

''அச்சச்சோ... மறந்தே போயிட்டேன்!'' நாக்கைக் கடித்துக் கையை உதறி வெட்கப்பட்டாள்.

''நல்லா மறந்தே போ... ஒரு பொண்ணு மறக்கக்கூடிய விஷயமா இது!'' சிரித்தார் ஜனார்த்தனன்.

அவர் ஹோல்சேல் மர வியாபாரி. இப்போதுதான் நாலு காசு பார்க்க ஆரம்பித்திருக்கிறார். இல்லாவிட்டால் இத்தனை வயது வரையிலுமா தேவியை வீட்டில் வைத்துக் கொண்டிருப்பார்?

படுத்தவளுக்கு உறக்கம் வரவில்லை. எண்ண அலைகள் பாய்ந்தோடின.

'இன்னைக்கு வரப் போறவங்க பெரிய இடமாமே! மாப்பிள்ளை ஏதோ ரீஜினல் மேனேஜர் என்றார்களே! அப்படின்னா நிறையப் படிச்சிருப்பாரா? நான் அவ்வளவாய் படிக்கலையே! அப்பா அவங்க தகுதிக்கேற்ப சீர் செனத்தி செய்வாரா? முடியுமா? அடிமண்டு... ஆறு அங்கிருக்க... இங்கேயே... அதவிடு! மொதல்ல வர்றவங்களுக்கு உன்னைப் பிடிக்குதா பார்ப்போம். அதுக்கப்புறம் சீர், செனத்தி, நகை நட்டைப் பத்தி யோசி.'



தேவிக்கு இப்போதே கவலை ஏற்பட்டு... உடம்பெல்லாம் பதற்றம் ஒட்டிக் கொண்டது.

''வாங்கோ... வாங்கோ!.''

டாக்சியிலிருந்து இறங்கியவர்களை வாய் நிறைய வரவேற்றார் ஜனார்த்தனன்.

வந்தவர்கள் மூன்றே பேர். பையனின் அம்மா கமலம், அப்பா ரெங்கசாமி, தரகர் அவ்வளவுதான்.

அப்போதுதான் கவனித்தார் ஜனார்த்தனன் அவரை.

''நீங்க... நீ... டேய் நீ ரங்காதானே?''

''அட நீ... ஜனாவா? என்னப்பா ஆளே அடையாளம் தெரியலே. குரலை வச்சித்தான் கண்டுபிடிக்க வேண்டியதா இருக்கு!'' மகிழ்ச்சியில் கத்தினார் ரெங்கசாமி.

''நீ மட்டும் என்ன? அப்போ முருங்கைக்காய் சைசிலே இருந்தே... இப்போ பூசணிக்காய் போல மாறிட்டே... ஆமாம், நீ மதுரையிலதானேப்பா இருக்கறே? தரகர் சேலம்னு சொன்னாரே!''

''மதுரையில இருந்தேன். இப்ப இல்லே! சேலத்துக்கு மாற்றல் ஆகிப் போய் பதினைஞ்சி வருஷமாச்சி! நீ குடும்பத்தோட சென்னைக்கு வந்தியே... ஒரு லெட்டராவது போட்டியா? பக்கத்துப் பக்கத்து வீட்ல பாசமா பழகினோம்! எல்லாத்தையும் மறந்துட்டே ஜனா... நீ.''

''இல்லே ரங்கா... நான் மறக்கலை. இந்த பிசினெஸ்ல போட்டி அதிகம்ப்பா! கஷ்டப்பட்டு நிமிரவே பல வருஷம்

தேவைப்பட்டது. சரி... நீங்க மட்டும்தான் வந்தீங்களா? கமலாம்மா, உங்க மகனை அழைச்சிட்டு வரலையா?''

''அதுவா... அவனுக்கு லீவு கிடைக்கலை. கழுதை அவன் என்ன பொண்ணு பார்க்கறது? நாங்களாப் பார்த்து இந்தப் பொண்ணு கழுத்தில கட்றா தாலியன்னா கட்டிட்டுப் போறான்.''

''எல்லாம் சரி ரங்கா! அதெல்லாம் அப்ப. தோளுக்கு மிஞ்சி வளர்ந்த பிள்ளைங்களை தோழனா நினைச்சி பழகணும்பா! ஆயிரம்தான் இருந்தாலும் அவருக்குப் பொண்ணைப் பிடிக்க...''

''இதோ பார் ஜனா! ரொம்ப வருஷத்துக்கப்புறம் பார்க்கறோம். நம்ம உறவு நீடிக்கணும். உன் பொண்ணுதான் எங்களுக்கு மருமகள். பொண்ணைக் காபி கொண்டுவரச் சொல்.'' அதிகார மிடுக்கோடு பேசினார் ரெங்கசாமி.

உள்ளுக்குள் ஒரு உறுத்தல் இருந்தாலும், சம்பந்தம் கூடிப் போன சந்தோஷத்தில் குரல் கொடுத்தார்.

''கோதை... தேவிய அழைச்சிட்டு வா.''

அச்சத்துடன் கால்கள் தடுமாற வந்தவளைத் தன்னருகில் இழுத்து அமர்த்திக் கொண்டாள் கமலா.

''இந்தாம்மா... என் பையன் வரலை. அவனைப் பார்க்கணும்னு ஆர்வமா இருந்திருப்பே. இதான் என் பையன் வித்யாதரனோட போட்டோ. பிடிச்சிருக்கான்னு சொல்லு.''

சைடில் திரும்பிப் பார்த்துச் சிரிக்கும் போட்டோ. தோள் பட்டையில் முகம் இடித்தது. படு காஷுவலாய் தன்னை திரும்பிப் பார்த்துச் சிரிப்பது போல... சிலிர்த்துப் போனாள் தேவி.



''என்னம்மா... என் பிள்ளைய பிடிச்சிருக்கா?'' கமலம்தான் அவள் தாடையை உயர்த்திக் கேட்டாள்.

மெதுவாய் சம்மதத்தைத் தலையசைப்பில் வெளிப் படுத்தவே தேவி வெட்கத்தில் துடித்து விட்டாள்.

''வேற என்ன? மேல ஆக வேண்டியதைப் பேசுவோம். இந்தா பாரு ஜனா, உன் பொண்ணுக்கு என்ன செய்வியோ! இல்லே செய்யாமலேயே அனுப்பினாலும் சரி. இந்தக் கல்யாணம் சீக்கிரம் முடியணும். என் பையன் எவ்வளவு நாளைக்குத்தான் ஓட்டல்ல சாப்பிடுவான்?'' வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவி வாய்க்குள் அடக்கிக் கொண்டே சொன்னார் ரெங்கசாமி.

''என்னப்பா அப்படிச் சொல்லிட்டே? புடவையைத் தவிர மீதி எல்லாத்தையும் ரெடியா செய்தே வச்சிருக்கோம்.''

''அப்ப சரி... தரகர் இந்த மாசத்துக்குள்ளே நல்ல முகூர்த்தம் ஒண்ணைப் பாரு! இன்னும் பத்து நாள்ல மார்கழி பொறந்துடும் இல்லையா?''

பஞ்சாங்கத்தைப் பிரித்துப் பார்த்துக் கணக்குப் போட்டுப் பார்த்து, தரகர், ''சரியா... அடுத்த வெள்ளிக் கிழமை ஒரு முகூர்த்த நாள் இருக்கு. அதை விட்டா தை மாசம்தான்.''

''தை வேண்டாம். அடுத்த வெள்ளியிலேயே முடிச்சிட லாம். என்ன ஜனா சொல்றே? எதுக்கும் உள்ளே போய் பொண்ணோட வசதியைக் கேட்டுட்டு வா.''

''அதெல்லாம் முடிஞ்சிருச்சுங்க சம்பந்தி. அடுத்த வாரமே கல்யாணத்தை வெச்சிடலாம்.'' கோதைதான் குறுக்கிட்டுச் சொன்னாள்.

"அப்ப இன்னும் நடுவுல பதினோரு நாள்தான் இருக்கு. இன்னைலேயிருந்தே வேலைய ஆரம்பிச்சாதான் சரியா இருக்கும். டேய் ஜனா... உன் பொண்ணோட... ச்சே! நான் ஒரு மடையன். என் மருமகளோட போட்டோ இருந்தா குடுடா. அந்தக் கழுதைக்கு அனுப்பணும்."

அந்தச் சின்னக் கூடம் சந்தோஷச் சிரிப்பில் அலையடித்தது.

சிறிய அறை அது. வீட்டில் யாருமில்லாத தைரியத்தில், படுக்கையில் தலையணை மேல் இரண்டு கைகளையும் ஊன்றியபடி குப்புறப்படுத்துக்கொண்டு- வித்யாதரனின் போட்டோவைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் தேவி.

தேவிக்குக் கூட ஆச்சரியம்தான். பெண் பார்த்த அன்றே திருமணத்திற்கு நாள் குறித்து விட்டார்களே! தரகர்கூட அப்பாவிடம் தனிமையில் என்ன சொன்னார்?

"இந்த சம்பந்தம் கூடி வரும்னு நானே எதிர்பார்க்கலே ஓய்! உன் பொண்ணு சமைஞ்ச நேரத்தை வெச்சி பார்க்கும்போது எடுத்த காரியமெல்லாம் தடைப்படும். அப்படி ஒரு ராசி. எப்படியோ நல்லபடியா முடிஞ்சது. ஒரு நூறு போட்டே கொடும்."

"அதுக்கென்ன தரகரே! நூறென்ன? இருநூறே போட்டுத் தரேன். ரொம்ப சந்தோஷமா இருக்கேன் நான்." சந்தோஷத்தில் வாரிக் கொடுத்தார் ஜனார்த்தனன்.

'இதோ ஆச்சி... இன்னும் ரெண்டே நாள்தான். இப்படிக் கள்ளத்தனமாய் என் மணவாளனை... மன்னவனைப் பார்க்க வேண்டியதில்லை. பார்வையைப் பார்! என்ன ஒரு வசீகரம்!' அவன் முகத்திற்கு ஏற்ப சிலும்பி நின்ற தலைமுடி.



'நான் உங்களைச் செல்லமாய் 'வித்யா' என்று கூப்பிடட்டுமா? அய்யோ.. வேண்டாம். பொம்பளை பெயர் அது. வித்து... வித்துன்னு கூப்பிடவா! ம்... இது நல்லாயிருக்கு!' மெல்ல அந்த போட்டோவை முகத்துக்கு நேரே உயர்த்திப் பிடித்து முத்தமிடப் போனபோது...

பூமியே சூனியம் கண்டாற்போல் எங்கும் இருட்டு.

'ச்சை! கரண்ட் போயிடுச்சா?'

## 2

கல்யாணத்திற்கு முதல் நாள் நிச்சயமும் பரிசமும். ஜனார்த்தனன் நிமிடத்திற்கொரு முறை துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

ரெங்கசாமி மண்டப வாசலிலேயே நின்றிருந்தார். ஜனார்த்தனன் அவரின் தோளைத் தொட்டார்.

"என்ன ரங்கா... மாப்பிள்ளை இன்னும் வரலையே! தகவல் போய் அவருக்குச் சேர்ந்திருக்குமா?"

"நீ... ஏன் பதட்டப்படறே ஜனா? பாவம்! கார் ஏதாவது ரிப்பேராயிருக்கும். அவன் எப்படியும் காலைக்குள்ள வந்துடுவான். அவன் என் புள்ளைடா! என் மேல ரொம்ப மரியாதையும், பயமும் வெச்சிருக்கிறான். நான் ஆ... ஊன்னா அலறுவான். வந்துடுவான். நிச்சயம் வருவான். அவன் ஆபீசுக்கே போன் போட்டுப் பேசினேன். நேத்து சாயந்திரமே கிளம்பிட்டதா சொல்றாங்க. வந்துட்டே இருப்பான். வழில கார்தான் ரிப்பேராகி இருக்கும். கோயம்புத்தூர் என்ன கிட்டேயா இருக்கு!"

ஆறுதலாய்ச் சொல்லி விட்டாரே யொழிய ரெங்கசாமிக் குள்ளும் ஒரு பய விதை முளைவிட்டு வளரத் தொடங்கியது.

'கழுதைப் பயபுள்ள... ஏன் இன்னும் வந்து சேரலை? அவசர அவசரமா அவன் பொண்ணைப் பார்க்கக்கூட அவகாச மில்லாம ஏற்பாடு செய்தது தப்பா? இன்விடேஷன், தேவியோட போட்டோவோடு எல்லாம் விளக்கமா எழுதிப் போட்டேனே! அதுக்கும் பதில் போடலை அவன். நேத்து கிளம்பி இன்னும் வந்து சேரலைன்னா... எங்கோ உதைக்குதே. அப்படியே கார் ரிப்பேராகி இருந்தாலும் வாடகைக் காரில் வந்து சேர்ந்திருக்கலாமே. படவா ராஸ்கல்! என்னதான் நெனச்சிகிட்டு இருக்கான் மனசிலே? இவன் ஏடாகூடமா எதையாவது செய்து... கடவுளே... அப்படியெல்லாம் அசம்பாவிதமா ஏதும் நடக்க விட்றாதே!''

பதைபதைத்துப் போனார், ரெங்கசாமி.

''தேவி! மாப்பிள்ளை இன்னும் ஊர்லே இருந்து வந்து சேரலையாம்!'' தேவியின் தோழி பரபரப்போடு ஓடி வந்தாள்.

''என்ன நிஜமாவா?'' தேவியின் அடிவயிற்றில் பயப்பந்து உருண்டது. ''இன்னுமா வந்து சேரலை?''

அதன்பின் தோழிகளின் எந்த வார்த்தையும் அவள் காதில் விழவில்லை.

மாப்பிள்ளை இல்லாமலேயே நிச்சயமும் பரிசமும் போடப்பட்டது.

தேவி அன்று இரவு முழுக்க கொட்டக் கொட்ட விழித் திருந்தாள்.

காலை!

கிட்டத்தட்ட அழுதே விட்டார் ஜனார்த்தனன்.

''என்ன ரெங்கா? மாப்பிள்ளைக்கு என்ன ஆச்சுன்னே தெரியலியே. முகூர்த்த நேரம் நெருங்குதே. இப்ப என்ன பண்ணுவேன், கடவுளே!''



''அதான், ஜனா! எனக்கும் புரியலை. அவசர அவசரமா எல்லா ஏற்பாடும் செஞ்சது தப்போன்னு படுது.''

''என்ன ரங்கா... இந்த நேரத்தில இப்படிச் சொல்றே? மாப்பிள்ளை இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிச்சித்தானே பதில் போட்டார்?''

''இ... இன்னும் அவனிடமிருந்து பதிலே வரலை ஜனா.''

''எ... என்ன?'' அதிர்ந்து போய்ப் பார்த்தார்.

ஏழரை- ஒன்பது முகூர்த்த நேரம்.

மண்டபம் நிறைந்திருந்தது. ஐயர் தனியே மந்திரம் ஓதிக் கொண்டு, ''பொண்ணை அழைச்சிட்டு வாங்கோ!'' என்று குரல் கொடுத்தார்.

அறையில்- கோதை, தேவியைத் தோளில் சாய்த்து அழுது கொண்டிருந்தாள்.

'என்ன நடக்குமோ... ஏது நடக்குமோ' என்ற பயத்தில்.

அந்த நேரத்தில் தபால்காரர் மண்டபத்தை நோக்கி வந்தார்.

''இங்கே யாருங்க ரெங்கசாமி?''

''நான்தான்''

''உங்களுக்கொரு தந்தி வந்திருக்குங்க.''

''தந்தியா... எங்கேயிருந்து?'' நடுங்கிப் போனார்.

''கோயம்புத்தூர்லேயிருந்து. வித்யாதரன் அனுப்பியிருக் கார்.''

கையெழுத்திட்டுப் பரபரப்பாய்ப் பிரித்துப் படித்தவர் நிலை குலைந்து போனார்.

'திருமணத்தில் விருப்பமில்லை. உடனே ஏற்பாடுகளை நிறுத்தவும்.' தெளிவான ஆங்கிலத்தில் எழுத்துக்கள் கண்களில் அறைந்தன.

கண நேரத்தில் செய்தி காட்டுத் தீ போல் மண்டபம் முழுக்கப் பரவ... ஐயர் மந்திரம் சொல்வதை நிறுத்தி, துண்டை உதறித் தோளில் போட்டு எழுந்து கொண்டார்.

தேவி அவசர மயக்கத்துக்குப் போனாள்.

ஜனார்த்தனன் மார்பைப் பிடித்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்துவிட்டார்.

வாயில் துண்டைப் பொத்தி அழுத ரெங்கசாமி, ஜனார்த்தனின் கால்களைப் பிடித்துக் கொண்டார்.

''என்னை மன்னிச்சிடு ஜனா! மன்னிக்கக் கூடாத தப்பைச் செய்துட்டேன். பொண்ணைப் பெத்த தகப்பனுக்கு மரணத்தை விட மோசமான தண்டனையைக் கொடுத்துட்டேன். இருந்தாலும் கேக்கறேன். என்னை மன்னிச்சிட்டேன்னு ஒரு வார்த்தை சொல்லுடா! சத்தியமா மனசறிந்து நான் எந்த தப்பும் பண்ணலே ஜனா. என் பையன்... பாடையிலே போறவன் என்னைத் தலைகுனிய வச்சுட்டான்டா. ஒரு பொண்ணோட பாவத்துக்கு ஆளாக்கிட்டானே. பாவி... அவன் நாசமா போயிடுவான்!''

ஜனார்த்தனன் எதையும் பேசவில்லை. முகத் தசைகள் முறுக்கேறி எங்கோ வெறித்துப் பார்த்தவர், நேரே தேவி இருக்கும் அறை நோக்கிச் சென்றார்.

உள்ளிருந்த மற்றப் பெண்களையும் வெளியே அனுப்பி, தாழ் போட்டவர் தேவியை உறுத்துப் பார்த்தார்.

அவரைப் பார்த்ததும் கதறி அழுதாள் தேவி.



அவளைப் பார்க்கப் பார்க்க... ஆத்திரம் தலைக்கேறி என்ன செய்கிறோம் என்று உணராமலேயே அவள் கன்னத்தில் 'பளார்' 'பளா'ரென்று அறைந்தார்.

''தரித்திர நாயே! போயும் போயும் எனக்குன்னு வந்து பொறந்தியே! கல்யாண ராசியே இல்லாத உனக்கெதுக்கு கல்யாணம் செய்ய நினைச்சேன்? மூதேவி... நான் எப்படி தெருவில் தலைநிமிர்ந்து நடப்பேன்? ஐயோ... அடுத்து ஒரு பொண்ணு கல்யாணத்துக்குக் காத்திருக்காளே... அவளை எப்படி கரையேத்தப் போறேன்? அழு...நல்லா அழு! காலம் முழுக்க அழு!''

பைத்தியம் பிடித்தவர் போல் பேசிய அப்பாவை அழக் கூடத் தோன்றாமல் பார்த்தாள் தேவி.

கதவு உடைபடும்போல் பலமாகத் தட்டப்பட்டது. வேகம் தணிந்தவராய்க் கதவைத் திறந்தார். கோதையும், சுகந்தியும் மற்றப் பெண்களும் பாய்ந்தோடி வந்தனர்.

''என்ன காரியம் பண்ணிட்டிங்க? குழந்தைய இப்படி அடிச்சு வச்சிருக்கீங்களே... ஏன்... ஏன் அவளை அடிச்சீங்க?'' கோதை அவரைப் பிடித்து உலுக்கினாள்.

பெண்கள் ஒருவருக்கொருவர் கேள்விக்குறியாய், அர்த்த புஷ்டியுடன் பார்த்துக் கொண்டனர்.

## 3

''என்னங்க மணி பத்தாகப் போவுது. கடைக்குப் போகலியா?''

''எப்படி... எப்படிப் போவேன் கோதை? வருஷம் ஒண்ணாகியும் இந்த ஜனங்க தேவியோட கல்யாணம் நின்னு போனதை இன்னும் மறக்கலையே. என்னென்ன

பேச்செல்லாமோ காதுல விழுது கோதை. வெளியே தலைகாட்ட முடியலை.''

''நரம்பில்லா நாக்கு நாலும் பேசத்தான் செய்யும். அதுக்கெல்லாம் முக்கியத்துவம் கொடுத்தா... நாம வாழ முடியாதுங்க.''

''இப்ப மட்டும் என்ன... பெரிசா வாழ்ந்து கிழிச்சிட்டோம்? என்ன செய்யறதுன்னே தெரியலை கோதை. தேவி ரொம்ப மோசமானவளாம். ஏற்கெனவே எவங்கூடவோ தொடர்பிருந்து உண்டாகி... அதெல்லாம் தெரிஞ்சிதான் மாப்பிள்ளை கல்யாணத்துக்கே வரலையாம். இப்படியெல்லாம் பேசறாங்க கோதை. அதனாலேயே வேற யாருமே நம்ம வீட்ல சம்பந்தம் வச்சுக்க மாட்றாங்க. சொன்னா வருத்தப்படுவே. தாம்பரத்துலேயிருந்து தேவியைப் பொண்ணு பார்க்க வந்தாங்களே... ஞாபகமிருக்கா? அந்தப் பையனோட அப்பா என்னை தனியே கூட்டிட்டுப் போய் என்ன கேட்டான் தெரியுமா? 'இந்தக் காலத்துப் பொண்ணுங்களுக்கு வேகம் இருக்கிற அளவுக்கு விவேகமில்லைங்க. மணவறை வரைக்கும் வந்து நின்னு போனா பொண்ணுக்கு வேற கல்யாணம் நடக்கிறதே கஷ்டம். அதது காலா காலத்தில் நடத்தியிருந்தா உங்க பொண்ணு தானா படுக்கையைத் தேடிப் போயிருக்காது. சரி விடுங்க! ஒரு அம்பதாயிரம் ரொக்கமா எனக்குக் கொடுத்துடுங்க. கல்யாணத்தை முடிச்சிடலாம்!'னு கேட்டான் கோதை.''

''ஐயோ... கடவுளே!'' காதைப் பொத்திக் கொண்டாள்.

''எம் பொண்ணைப் பத்தி இப்படி இல்லாததும் பொல்லாததும் சொல்றாங்களே! இவங்கள்லாம் மனுஷங்களா? மிருகங்களா?'' புடவைத் தலைப்பில் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.



''எப்படியாவது அம்பதாயிரம்... கடையை வித்தாவது கொடுத்துத் தேவியைக் கரையேத்தலாம். ஆனா... அதனால அவங்க சொல்றது நிஜம்தான்னு நாமளே ஒப்புக்கிட்டது போல் ஆயிடுமே.''

''நாம யாருக்கும் எந்தக் கெடுதலும் செய்ததில்லை. கடவுள் நம்மளைக் கைவிடமாட்டார்ங்க. தைரியத்தை இழக்காதீங்க. நீங்க கடைக்குக் கிளம்புங்க.''

கதவருகில் நின்று கேட்டுக் கொண்டிருந்த தேவி உடைந்து போனாள்.

## 4

ஜனார்த்தனன் ரொம்பவே நொந்து போனார். மேலும் இரண்டு வருடம் ஓடிப் போயும், யாரும் தப்பித் தவறிக்கூட பெண் பார்க்க என்று அவர் வீட்டுப் பக்கம் தலை வைத்தும் படுப்பதில்லை. அவருக்குத் தன் தவறு புரிந்தது. 'அன்று திருமணம் நின்றுவிட்ட வெறுப்பில் தேவியைக் காரணமே இல்லாமல் அடித்தது பெரிய தவறு. கண்மண் தெரியாத கோபம். தவறே செய்யாத பெண்ணைக் கைநீட்டி அடித்து, அவள் வாழ்க்கையில் மண்ணள்ளிப் போட்டு விட்டேனே. பார்த்தவர்கள் என் கோபத்தை வேறுவிதமாய்த் திரித்துக் கூறி ஒரு மோசமான பழியை என் பெண் மேல் சுமத்த நானே காரணமாகி விட்டேனே.'

ஒவ்வொரு நாளும் இதை நினைத்து வருந்தாத நாளில்லை. தேவியின் முகத்தை நிமிர்ந்து பார்க்கவே அவருக்குத் தைரியமில்லாமல் போய்விட்டது. தேவி யாரிடமும் சரிவரப் பேசாதது ஒரு வகையில் அவருக்கு நிம்மதியாக இருந்தது

என்றுகூடச் சொல்லலாம். அவளிடம் பேசினால் அழுது விடுவோமோ என்ற பயம்.

இதே கவலையில் அவர் வியாபாரத்தைக்கூடச் சரிவரக் கவனிக்க முடியவில்லை.

யானை குழியில் விழுந்துவிட்டால்... தவளைகூடப் பின்னாடி வந்து எட்டி உதைக்குமாம். அந்த நிலைதான் ஏற்பட்டது ஜனார்த்தனனுக்கு!

நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருந்த வியாபாரத்தைக் கடனை உடனை வாங்கி ஒப்புக்கு நடத்திக் கொண்டிருந்தவரை, சரக்கு முழுமையும் பெற்றுக் கொண்டு பணம் அனுப்புகிறேன் என்று சொல்லிச் சென்ற கேரளத்துக்காரன் அதோடு வரவே இல்லை. கேரளா சென்று விசாரித்துப் பார்த்ததில் அப்படியொரு முகவரியும் இல்லை. ஆளுமில்லை என்று தெரியவந்தது. அந்த அதிர்ச்சியோடு ஊருக்கு வந்து சேர்ந்ததே அதிகம் என்பதுபோல் அன்றிரவே கண்மூடிவிட்டார் ஜனார்த்தனன்.

சுவரில் அடித்த பந்தாய், இந்தப் பழியும் மீண்டும் தேவியிடமே வந்து சேர்ந்தது.

'கல்லு மாதிரி இருப்பாரே. மனுஷன் உடம்ப பாரேன்! கற்பூரமாட்டம் கரைஞ்சு போய்ட்டார். மூதேவி பொறக்கும் போதே... தரித்திரத்தையும் சேர்த்து வச்சே பொறந்திடுச்சி. இந்தப் பொண்ணு, இந்தக் குடும்பத்தைவிட்டுப் போனாதான் குடும்பம் விருத்திக்கு வரும். ஹூம்! விதி யாரை விட்டது...'

தேவி அழவில்லை. அழ முடியவில்லை. ஏச்சுக்களும், பேச்சுக்களும் கேட்டுக் கேட்டு அலுத்து ரத்தத்தில் ஊறிப்போய் விட்டிருந்தபடியால் அந்தப் பேச்சு அவளை ஏதும் செய்ய வில்லை.



அப்பா முகத்தையே பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

வாயோரத்தில் ஈ வந்து உட்கார்ந்திருந்தது. அதைக் கையால் ஓட்டி... சில்லிட்ட அவர் முகத்தைத் தொட்டாள்.

''அப்பா... கடைசிவரை என்கிட்டே எதையுமே பேசாமலேயே போய்ட்டீங்களேப்பா. சத்தியமாப்பா... நான் எந்த தப்பையும் செய்யலே. என் மேல உங்களுக்குச் சந்தேகம். அதனாலதானே பேசப் பிடிக்காம என் தலை தெரிஞ்சாலே மறைஞ்சு போனீங்க? தினமும் நான்தானேப்பா உங்களுக்குக் காபி, டிபனெல்லாம் குடுப்பேன். அதையும் அம்மாக்கிட்டே சொல்லி நிறுத்திக்கிட்டீங்க. இதோ... இப்ப உங்க கன்னத்தைத் தொட்டுக்கிட்டு இருக்கேன். உங்களுக்கு உறுத்தலையாப்பா? என்னைத் தொடாதேன்னு அப்படியே எழுந்து உட்கார்ந்து 'பளார்'னு ஒரு அறை குடுங்க. எழுந்துருங்கப்பா. தயவு செய்து எழுந்துருங்க. எனக்காக இல்லாவிட்டாலும் அம்மாவுக்காக எழுந்துருங்கப்பா. கால்மாட்ல அழுதழுது மயங்கிப் போய்க் கிடக்கறவளை... கோதை எழுந்துரும்மான்னு சொல்லுங் கப்பா!''

தேவி கையை எடுக்காமல் ஜனாதர்த்தனன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''தேவி... மனசொத்துச் செய்யறதுன்னா செய்... ஏதோ கடனேன்னு செய்யாதே!'' கையில் நெயில் பாலிஷை விட்டுக் கொண்டு விளிம்பை மீறித் தீட்டிக் கொண்டிருந்த பாலிஷை நாசூக்காய் துடைத்துக் கொண்டே சுகந்தி சொன்னாள்.

''புரியலை சுகந்தி. நீ என்ன சொல்றேன்னு புரியலை.''

''அந்த ரோஸ் கலர் சுடிதாரைப் பார்.''

''அட்... அதை ஏன் தண்ணில நனைச்சு வச்சிருக்கே? நேத்துதானே அயர்ன் பண்ணி வச்சேன்!''

''துவைக்காமலேயே அயர்ன் பண்ணிட்டியா?''

''இல்லையே. துவைச்சேனே...''

''ஆமா.. கிழிச்சிட்டே! ஐஸ் க்ரீம் கறை அப்படியே இருக்கு. உன்னால முடியலைன்னா சொல்லிடு தேவி. ஆபீஸ் போய்ட்டு வந்தப்புறம் நானே துவைச்சுக்கிறேன். என் தலைவிதி.''

''ஏன் சுகந்தி பெரிய வார்த்தையெல்லாம் பேசறே? இப்ப என்ன... இந்த சுடிதாரை நல்லா துவைக்கணும். அவ்ளோ தானே? இது ஒரு பெரிய வேலையா எனக்கு? உன் கஷ்டம் எனக்குப் புரியாதா?

''சரி... சரி. உள்ளே ரெண்டு புடவையும் இருக்கு. அதையும் சேர்த்தே துவைச்சிடு.''

ஹேண்ட் பேக்கை எடுத்து மாட்டிக் கொண்டு போனவளை அன்பாய்ப் பார்த்தாள்.

ஜனார்த்தனன் தேவியின் திருமணச் செலவுக்கென்று வங்கியில் சேமித்து வைத்திருந்த பணம் கடனை அடைக்கவே போதாமல் இருந்தது.. அவர் இறந்த பின் குடும்பம் ரொம்பவே அல்லல்பட்டுவிட்டது.

சுகந்தி ஏற்கெனவே ஒரு பெரிய தனியார் கம்பெனியில் வரவேற்பாளராகப் பணிபுரிந்து கொண்டிருந்தாள். அதுநாள் வரை தான் சம்பாதிக்கும் பணத்தையெல்லாம் தன் பெயரில் சேமித்து வந்தவளை... அப்பா இறந்த பின் குடும்பப் பொறுப்பு வலிய அவள் தோளில் அமர்ந்தபோது வேண்டா வெறுப்பாய்ச் சுமந்தாள். சுமக்கிறாள்.

ஆன போதிலும் அவள் உடை, மேக்கப் சாதனங்களுக்குக் கணிசமாய் ஒரு தொகையை எடுத்துக் கொண்டுதான்



கொடுப்பாள். இன்றைய விலைவாசியில்... வீட்டு வாடகை, பால்... அது இது என்று போதவில்லை.

கோதை வீட்டிலேயே அப்பளம், வடாம் செய்து விற்றாள். வீட்டு வாடகை கொடுக்கிற அளவிற்கு ஒரு தொகை அதில் கிடைத்தது. முரளி வேலை தேடிப் படிபடியாய் ஏறி இறங்கிக் கொண்டு இருக்கிறான்.

அப்பாவின் மரணத்திற்குப் பிறகு கோதை தேவியிடம் பேசுவதையேவிட்டுவிட்டாள். இவளே வலியப் போய் எத்தனையோ முறை பேசி இருக்கிறாள். அப்போதும்கூட பத்துக் கேள்விக்கு ஒரு பதில் சொன்னாலே அதிசயம்தான்.

'அம்மா... நீயும் கூடவா என்னை வெறுத்து ஒதுக்கறே. என் மேல் உனக்கு எந்த சந்தேகமும் இல்லை. அது எனக்கு நல்லாவே தெரியும். என்னைப் பெத்தவள் நீ. எல்லோரும் ஈட்டிபோல் வார்த்தையால் குத்திக் குதறிய போதெல்லாம் என்னை உன் மார்பில் சாய்த்து ஆறுதல் கூறியவள். அப்படிப்பட்டவள் அப்பா போனபின்... என்னை எட்டி வைத்தே பார்க்கிறாயே, ஏம்மா? எல்லோரும் சொல்வது போல் என்னால்தான் இந்தக் குடும்பத்திற்கு இத்தனை அனர்த்தமும் வந்தது என்று நம்பிவிட்டாயா? என் நேரம் சரியில்லாமல் போனதற்கு நான் என்னம்மா செய்ய முடியும்? என்னைப் படைச்சவன் என் தலைல எழுதி வச்சதற்கு அவன்கிட்டே போய் சண்டையா போட முடியும்?'

பெருமூச்சு விட்டபடி துணிகளைக் காயப் போட்டாள்.

**கோ**விலில் உற்சவம்.

நல்ல சேலையை உடுத்திச் செல்ல, பெட்டியைத் திறந்து ஆராய்ந்தாள். பனாரஸ் புடவை மடிப்பிலிருந்து கீழே விழுந்தது

அது. போட்டோ. வித்யாதரனின் போட்டோ. விரல்கள் நடுங்க அதை எடுத்தாள்.

'வித்து!' மெல்ல அழைத்தாள். உடலெங்கும் ஒரு மெல்லிய சிலிர்ப்பு. கண் மூடிக் கொண்டாள். முதன் முதலாய்த் தன் இதயத்தில் அனுமதி இல்லாமலே நுழைந்து ஆக்கிரமித்த ஆண் முகம்.

'ஏன் வித்து இப்படிச் செய்தீர்கள்? என்னைப் பிடிக்கவில்லை என்றால் முதலிலேயே சொல்லி இருக்கலாமே. மணமேடையில் அமர்ந்த பிறகு... அதுவும் தந்தியின் மூலமாகச் சொல்லி இருக்க வேண்டாம். காரணம் தெரியாமல் நான் கருவினைச் சுமந்தவள் என்று பட்டம் கட்டி விட்டார்கள் வித்து... எனக்கே தெரியவில்லை நீங்கள் ஏன் என்னைத் தட்டிக் கழித்தீர்கள் என்று?

'பெத்தவங்க முன்னாடி புடவை விலகினாக் கூட பதறுபவள் நான். ஆண் ஸ்பரிசமே அறியாமலே... நான் கன்னித் தாயாகிவிட்டேன். என்ன வேடிக்கை இது!'

மெல்ல நகைத்துக் கொண்டவள் சேலையை உதறிக் கட்ட ஆரம்பித்தாள்.

## 5

"அப்பா படத்துக்குக் கற்பூரம் ஏத்திட்டுப் போடா. இந்த வேலையாவது கிடைக்கணும்னு நல்லா வேண்டிக்க."

சொன்னபடியே செய்தவன் ஃபைலை எடுத்துக் கொண்டு படிக்கட்டில் இறங்குவதற்கும்... மார்க்கெட் போய் வேர்க்க விறுவிறுக்க தேவி எதிரே வருவதற்கும் சரியாய் இருந்தது.

கடுகடுப்பானான் முரளி.

"ம்... போற காரியம் உருப்பட்டா மாதிரிதான்."



"என்ன முரளி? இன்னிக்கு இண்டர்வியூவா?" சாதாரணமாக விசாரித்தாள்.

"அது சரி. போகும்போதே விசாரணையா? நிச்சயம் இந்த வேலையும் பனால்தான்."

"ஏன் முரளி அபசகுனமா பேசறே? நம்பிக்கை இழக்காம போய்ட்டு வா!" தேவிக்கு இன்னும் புரியவில்லை - 'அவன் தன்னைத்தான் தாக்கிப் பேசுகிறான்' என்று.

'அம்மா... ஈசுவரி எப்படியாவது இந்த வேலை முரளிக்குக் கிடைக்கணும்!' தனக்குள் வேண்டிக்கொண்டே இருந்தாள் தேவி.

இண்டர்வியூ முடிந்து முரளி வீட்டிற்கு வந்தபோது பிற்பகல் மணி மூன்று...

"என்ன முரளி? இண்டர்வியூ நல்லா பண்ணியா?"

"கேக்கற கேள்விக்கெல்லாம் பட்பட்டுனு பதில் சொன்னாலும் அங்கே செல்லுபடியாகாது. அதிர்ஷ்டமும், பணமும் கூடவே தேவை."

"என்னப்பா ஆச்சு? புரியும்படியா சொல்லேன்."

"பதினஞ்சாயிரம் டெபாஸிட் கட்டச் சொல்றாங்க. ஹும்... எல்லாத்துக்கும் குடுத்து வச்சிருக்கணும்."

"பதினஞ்சாயிரமா? அவ்ளோ பணத்துக்கு எங்கே போறது?" கோதை சோர்ந்து போனாள்.

"ப்ச்! மாசம் மூவாயிரம் சம்பளமாம். நல்ல வேலை. விடுங்க... என் தலைல என்ன எழுதியிருக்கோ... அதுப்படி தானே நடக்கும். இன்னும் எத்தனை படி ஏறி இறங்கி வேலை தேடணுமோ... தேடித்தானே... ஆகணும்!"

''முரளி... பதினஞ்சாயிரம் கொடுத்தா கண்டிப்பா வேலை கிடைச்சிடும்ல. ஏதாவது தில்லுமுல்லு பண்ணி கடைசியில ஏமாத்திடுவாங்களா?'' தேவி அக்கறையாய்க் கேட்டாள்.

எரிச்சலாய் அவளைத் திரும்பிப் பார்த்தான் முரளி.

''ஏன்? நீ பணம் கட்டப் போறியா?'' கிண்டலாய்க் கேட்டான்.

''பணமா இல்லைன்னாலும்... நகையா கொடுக்கிறேன்!''

புரியாமல் பார்த்தான் முரளி.

''எனக்குன்னு சேர்த்து வச்ச நகைகள்ல பதினஞ்சி பவுன் பத்திரமா இருக்கே முரளி. ஆபத்து அவசரத்துக்கு உதவாத நகை அப்புறம் எதுக்கு? ரெட்டை வடம் சங்கிலி அஞ்சு பவுன் இருக்கும். அதை வித்து... பணத்தைக் கட்டிடு.''

''அது... வந்து...நகை...'' முரளி இதை எதிர்பார்க்கவில்லை. அவனைவிடக் கோதை இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அப்பளத்தை அடுக்கிக் கொண்டிருந்தவள் திடுக்கிட்டு தேவியைப் பார்த்தாள். 'அடிப்பாவிப் பொண்ணே அவசரப் படாதே!' என்று மனதுக்குள் சொன்னாள்.

எதையும் அறியாத... புரியாத தேவி சங்கிலியை முரளி யிடம் கொடுத்தாள்.

முரளி தயக்கம் உதறி மலர்ச்சியுடன் வெளியேறினான். கோதை யாருக்கும் தெரியாமல் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''முரளி பெஸ்ட் ஆப் லக்! பரவாயில்லையே, காத்திருந்ததுக்கு நல்ல பலன் கெடைச்சிருக்க. விசாரிச்சேன். நல்ல கம்பெனிதானாம். என்ஜாய்!'' என்றாள் சுகந்தி முரளியின் முதுகைத் தட்டியபடி.



5426619
கொளத்தூர், சென்னை

''ஐயாவை என்னன்னு நெனச்சே? பார்த்துக்கிட்டே இரு. நான் எவ்ளோ உயரத்துக்குப் போகப் போறேன் பார்!''

''அதை ஏண்டா சேலஞ்ச் பண்ற மாதிரி சொல்றே. நீ நல்ல பொஸிஷனுக்கு வந்தா எனக்குப் பெருமைதானே!''

அன்று முதல் மாதச் சம்பளம்.

முரளி பல அட்டைப் பெட்டிகளுடன் வீட்டினுள் நுழைந்தான்.

ஒரு கவரைக் கோதையிடம் கொடுத்தான். அதை ஜனார்த்தனன் படத்தருகே வைத்து வணங்கினாள்.

''முதல்ல பிரிச்சிப் பாரும்மா...'' என்றான் அட்டைப் பெட்டியைத் திறந்தபடி.

கவரைப் பிரித்துப் பணத்தை எடுத்து எண்ணியவள் அதிர்ந்து போய்ப் பார்த்தாள்.

''என்னடா இது? வெறும் ஆயிரம் ரூபாதான் இருக்கு!''

''ஆமா... ஆயிரம்தான் இருக்கும்.''

''சம்பளம் மூவாயிரம்னு சொன்னியேடா.''

''சொன்னேன்தான். அதுக்காக வாங்கற பணத்தை அப்படியே வந்து கொட்டச் சொல்றியா?''

''ஏண்டா இப்படியெல்லாம் பேசறே? உன்னைத்தான்டா நம்பியிருக்கேன். தேவியோட நகைய வித்துதானே இந்த வேலைக்குப் பணத்தைக் கட்டினே. இப்படி மூணுல ஒரு பங்குன்னு வீதம் போட்டுக் கொடுத்தா... நகைய எப்படி வாங்க முடியும்?''

''ஏம்மா... தெரியாமத்தான் கேக்கறேன். சுகந்தி வாங்கற சம்பளத்தை யெல்லாம் அப்படியே கவர் பிரிக்காம உங்கிட்ட கொடுத்துடறாளா? பாதிச் சம்பளம் துணிமணி வாங்கறதுக் குன்னு செலவு பண்ணலே? நான் பாக்கற கவுரவமான வேலைக்குத் துணி நல்லபடி உடுத்தணும்னா... வாங்கற சம்பளமே போதாது. எனக்கு மட்டும் ஆசையிருக்காதா?

''நீ பேசறது உனக்கே நல்லாயிருக்கா? அப்பாவுக்கு அடுத்தபடியா இந்தக் குடும்பத்தைக் கட்டிக் காக்க வேண்டியவன், நீயே இப்படிப் பேசலாமா?''

''ஆமா... என்னத்தைக் கட்டிக் காக்கறது? போகும்போது எனக்குன்னு கடனை மட்டும்தானே வச்சிட்டுப் போனார்? இந்தப் பேச்சை இத்தோட விட்டுடும்மா. குடுக்கறத வாங்கிக்க... அவ்ளோதான்!' துணிமணிகள் அடங்கிய அட்டைப் பெட்டிகளுடன் உள்ளே போய்விட்டான் முரளி.

திக்பிரமை பிடித்து நின்றிருந்தாள் கோதை.

'அவர் கடனை வச்சிட்டுப் போனது வாஸ்தவம்தான். ஆனா... அதையெல்லாம் தேவிக்குன்னு சேர்த்து வச்ச பணத்தைக் கொண்டுதானே அடைத்தேன்? இன்னும் என்ன எதிர்பார்க்கிறான்? 'எம்.காம்.' என்ற பட்டம் எப்படிக் கிடைத்தது? பெத்த தகப்பனின் வியர்வை சிந்திய பணத்தால்தானே!

'பிள்ளைக்கு வேலை கிடைத்துவிட்டதே... கை நிறையச் சம்பளம் வாங்கப் போறானே... இந்த அப்பளம், வத்தல் விக்கிற வேலைக்கெல்லாம் முடிவு கட்டலாம் என்று நினைத்த நினைப்பில் இப்படி மண்ணள்ளிப் போட்டுட்டானே! உடம்பும் முன்னைப் போல் இழுத்த இழுப்புக்கெல்லாம் வளையற தில்லே. கடவுளே! காலம் முழுக்க எனக்கு இதேதானா?



எனக்கு விதிச்சது அவ்ளோதானா? ரெண்டு பொண்ணுகளை எப்படிக் கரையேத்தப் போறேன்.'

எதிர்காலத்தைப் பற்றிய பயம், அவள் குரல்வளையை இறுக்கிப் பிடித்தது.

## 6

பனிகொட்டும் விடிகாலை நேரம். வீரிட்டலறிய கதறல் சத்தம் தேவியின் ஆழ்ந்த தூக்கத்தை உசுப்பிவிட்டது. பதறியபடி எழுந்து உட்கார்ந்தவள் சுற்று முற்றும் பார்த்தாள். கோதையும் எழுந்திருந்தாள். கதவைத் திறந்து வெளியே வந்தனர். இருட்டில் உருவங்கள் மசமசப்பாய்... இங்குமங்கும் தெருவில் ஓடிக் கொண்டு இருந்தனர்.

ஒரு நபரை நிறுத்தி வைத்து விசாரித்தாள் கோதை.

''நம்ம கிருஷ்ணசாமியோட பொண்ணு ரமா தூக்கு மாட்டிக் கிச்சாம்!'' சொல்லிவிட்டு ஓட்டமும் நடையுமாய்த் தெருக் கடைசியில் இருந்த அந்த வீட்டை நோக்கி ஓடினார்.

''பாவம். சின்னப் பொண்ணு. கல்யாணமாகி ஆறுமாசம் தான் ஆச்சி. கல்யாணத்துக்கு முன்னாடி ஒரு கிறிஸ்தவப் பையனைக் காதலிச்சாளாம். அப்பா, அம்மா, 'அவனை மறந்துரு. இல்லே நாங்க விஷம் குடிச்சி செத்துடுவோம்!'னு அடிச்சி, உதைச்சி மிரட்டி இந்த கும்பகோணத்துக்காரனுக்குக் கல்யாணம் பண்ணி வச்சாங்க.

''யாரோ கிருஷ்ணசாமிக்கு ஆகாதவங்க இந்தப் பொண்ணோட காதல் விவகாரத்தைப் பத்தி மாப்பிள்ளைக்கு மொட்டைக் கடுதாசி போட்டிருக்கான். அன்னிலேர்ந்து அந்தப் பொண்ணு வாழ்க்கை நரகம்தான். நான் அப்பவே

எல்லாத்தையும் மறந்துட்டேன்!'னு சொல்லியும் நம்பலே பாவிப் பய! அந்தப் பொண்ணு மூணு மாசம் முழுகாம வேற இருக்காம். 'அந்த கொழந்தைக்கு அப்பன் நானில்லை!'ன்னு நாக்குல நரம்பில்லாம பேசறானாம். இப்படிப்பட்ட சந்தேக ஒநாயோட வாழறதைவிட சாகறதே மேல்! ஜாதி, மதம்னு பார்க்காம கிருஷ்ணசாமி பேசாம அந்த கிறிஸ்தவனுக்கே கட்டி வச்சிருக்கலாம். இப்ப... பொண்ணை மண்ணுக்கு இல்லே தாரை வார்த்துட்டாங்க!'' விசனமாய்ச் சொல்லிக் கொண்டிருந்தாள் பக்கத்து வீட்டுப் பவளக்கொடி மாமி.

''அதெப்படி? எவனோ ஒருத்தனைக் காதலிச்சா கட்டி வச்சிடணுமா? நம்ம ஜாதி ஜனம் நம்மளைதான் ஒதுக்கி வைக்கும். குலம் கோத்திரம்னு எதுக்கு இருக்கு? காதலிக்கறதுக்கு முன்னால அப்பா, அம்மா, கவுரவம் எதுவுமே ஞாபகத்துக்கு வராதா? அப்படி நினைச்சிப் பார்த்திருந்தா... காதல் கண்றாவிதான் வருமா? என்னமோ போ! இந்தக் காலத்து சிறுசுங்க மனசு சிறுத்துப் போச்சு!'' கோதை அன்று முழுக்க இதைப் பற்றிதான் வாய் ஓயாமல் முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.

தேவிக்கு மனசே ஆறவில்லை.

'பாவம் ரமா. ஏனிந்த முடிவுக்குப் போனா? வேற வழியே இல்லையா? அவளோட புருஷன் அந்தளவுக்கு அவளைக் கொடுமை பண்ணினானா? ஆண்கள் அந்தளவு இறுகிப் போன இதயம் படைத்தவர்களா? எல்லோரும் அப்படித் தானா? பெண் மனதைப் புரிந்து கொள்ளவேமாட்டார்களா? அவர்களின் தியாகத்தை உணரவே மாட்டார்களா? தன்னைப் பற்றி மட்டுமே யோசிக்கும் சுயநலவாதிகள்தானா? பெண்களின் வாழ்க்கையைக் கெடுப்பதே ஆண்கள்தானோ?



என் வாழ்க்கையைக் கெடுத்த வித்யாதரன் போல, ரமாவின் வாழ்க்கையைக் கெடுத்த கும்பகோணத்துக்காரன் போல... இப்படி பட்டியல் நீண்டு கொண்டே போகுமா?'

'இல்லை. சாரதாவின் கணவன் கண்ணன்போல, சில மாணிக்கங்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.'

சாரதா - தேவியின் பள்ளித் தோழி. தேவி ப்ளஸ்டூவுடன் படிப்பை நிறுத்திவிட்டாள். சாரதா ராணிமேரி கல்லூரியில் பி.ஏ. சேர்ந்து படித்தாள். படிக்கும் போதே வினோத் என்ற வாலிபனுடன் காதல் உண்டானது. பழகப் பழக அவனின் குணம் தெரிய ஆரம்பித்தது. அவளை அடைய வேண்டும் என்ற குறிக்கோளோடு பழகினான்.

மெதுவாய் அவனை விட்டு விலக ஆரம்பித்தாள். புரிந்து கொண்ட வினோத் அவள் மீது காதலாகி உருகுவது போல் நடித்தான். சாரதா அசைந்து கொடுக்கவில்லை. கெஞ்சினான். திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. கோபம் தலைக்கேறி... மிரட்ட ஆரம்பித்தபோதுதான் சாரதா உள்ளூர நடுங்கிப் போனாள்.

''என்னையா ஒதுக்கித் தள்றே? அவ்வளவு திமிரா? என்னை விட்டு இன்னொருத்தனைக் கல்யாணம் பண்ணிக்குவியா? பார்க்கலாம்டி! ரெண்டுல ஒண்ணு... நீயா, நானான்னு பார்த்துடறேன். உங்கழுத்துல எவன் தாலியக் கட்றான்னு பார்த்துடறேன். உனக்கு இந்த ஜென்மத்துல கல்யாணமே கிடையாது. போனா போகட்டும்! ஒரே ஒரு சான்ஸ் தரேன். நீ யாரை வேணாலும் கட்டிக்க. அதுக்கு முன்னாடி ஜஸ்ட் ஒன் அவர் என்கூட வா. என்ன சொல்றே?''

''யூ... பாஸ்டர்ட்! எ... என்னைப் பார்த்து... என்ன கேள்வி கேட்டே?'' செருப்பைக் கழட்டிக் கையில் எடுத்தாள்.

சற்றே மிரண்டவன் சுதாரித்துக் கொண்டான்.

''ஓ! அந்தளவு தைரியம் வந்துடுச்சா? இனி உன்கூட எனக்கென்ன பேச்சு? நீயா என் கால்ல விழுந்து கதறுவே... கதற வைக்கிறேன். வர்ரேன்டி என் மாமன் மகளே!''

மீசை துடிக்கச் சொல்லிவிட்டுச் சென்றவனை அச்சத்துடன் பார்த்துக் கொண்டு நின்றாள் சாரதா.

அந்தப் பயத்திலேயே உறக்கமும் பிடிக்காமல், உணவும் செல்லாமல் உள்ளுக்குள் மருகிக் கொண்டிருந்தாள்.

அப்போதுதான் கண்ணன் இவளைப் பெண் பார்க்க வந்தான். ஆள் கம்பீரமாய் இருந்தான். ஏர்போர்ஸில் வேலை.

சாரதாவைப் பார்த்தவுடனே கண்ணனுக்குப் பிடித்துப் போனது. திருமண ஏற்பாடுகள் மளமளவென நடக்கத் தொடங்க அவள் நெஞ்சுக் கூடு படபடவெனத் துடித்தது.

'நிச்சயம் இந்த கல்யாணம் நடக்கப் போவதில்லை. வினோத் நடக்கவிட மாட்டான். திருமண மண்டபத்திலேயே வந்து எல்லோர் முன்னிலையிலும் ரசாபாசம் பண்ணி என்னை அவமானப்படுத்தாமல் ஓய மாட்டான். அவனுக்கு நான் எழுதிய கடிதங்கள் போதுமே... எல்லோரும் என்னைக் காறித் துப்ப! என்ன செய்யப் போகிறேன் நான்? யாரிடம் சொல்லி இந்தக் கல்யாணத்தை நிறுத்தப் போகிறேன்? அப்பாவிடம் சொல்லலாமா? வேண்டாம் வேண்டாம்... என்னைக் கண்டதுண்டமாக வெட்டி விட்டுத்தான் மறு வேலை பார்ப்பார்.

அம்மாவிடம்?

அந்த எண்ணமே தவறு. அழுது ஊரைக் கூட்டி விடுவாள். ஐயோ... கடவுளே! நான் என்னதான் செய்வேன்?'



குமுறிக் குமுறி ரகசியமாய் பாத்ரூமில் அழுதவள், கண்ணீர் வற்றிப் போன பின் அந்த எண்ணம் தோன்றியது.

மறுநாளே கண்ணனுக்கு ஃபோன் பண்ணி யூனிவர்சிடி லைப்ரரிக்கு வரச் சொன்னாள்.

வெள்ளை பேண்ட்டும் இன் பண்ணிய இளநீலத்தில் வெள்ளைக் கோடு போட்ட சட்டையுமாய்க் கமகமவென மணக்கும் சென்ட்டுமாய் வந்த கண்ணன் அவளையே குறுகுறுவெனப் பார்த்தபடி நின்றான்.

''உங்களை டிஸ்டர்ப் பண்ணிட்டேனா?''

''உண்மையைச் சொல்லட்டுமா?''

''என்ன?'' என்பது போல் நிமிர்ந்து பார்த்தாள்.

''நீ இப்படி தனியே என்னைச் சந்தித்துப் பேசக் கூப்பிடு வாய்னு அப்பவிருந்தே எதிர்பார்த்துட்டிருந்தேன்.''

''ஏன்?'' திகிலாய்க் கேட்டாள்.

''உன்னைப் பொண்ணு பார்க்க வந்தப்பவே கவனிச்சேன். உன் முகம் சரியில்லே! பேயறைஞ்சவ மாதிரி இருந்தே. என்னைக்கூட நீ நிமிர்ந்தே பார்க்கலே. சம் ப்ராளம்னு நினைச்சேன். ஒருவேளை என்னைப் பிடிக்கலையா... இல்லே ஏதாவது லவ் அஃபேரான்னு சந்தேகப்பட்டேன். ஆனா நீ என்னை மறுக்கலேன்னு தெரிஞ்சதும் நான் உடனே சம்மதிச்சிட்டேன். பிகாஸ்... ஐ லைக் யூ! ஹோம்லி லுக். பார்த்த விநாடியே அவசர அவசரமா உன்னைக் காதலிக்க ஆரம்பிச்சேன் தெரியுமா? சரி. இப்ப சொல்லு. ஏன் என்னை வரச் சொன்னே?''

சாரதாவிற்குத் தொண்டை வறண்டு போனது.

'என்ன மாதிரி மனிதன் இவன்! என்னை எந்தளவு உன்னிப்பாகக் கவனித்திருக்கிறான்! வெளிப்படையாக ஒளிவு மறைவின்றிப் பேசுகிறான்! என்னை இந்தளவு நேசிக்கிறானே! இந்த அன்பும் பாசமும் எனக்குச் சொந்தமில்லாமல் போகப் போகிறதே!'

தன்னை ஒரு நிலைக்குத் தயார்ப்படுத்திக் கொண்டு சன்னமான குரலில் சொன்னாள்.

''தயவு செய்து இந்தக் கல்யாணத்தை நிறுத்திடுங்க... ப்ளீஸ்.''

அதிர்ச்சியோடு கேட்டான்.

''எ... என்ன சொன்னே?''

''இந்தக் கல்யாணத்தை நிறுத்திடுங்க.'' மறுபடியும் அவள் அதையே சொல்ல, நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த கண்ணன் சீரியசாய் அவளைப் பார்த்தான்.

''இப்படி தலையுமில்லாம... வாலுமில்லாம மொட்டையா சொன்னா என்ன அர்த்தம்?''

சாரதா எல்லாவற்றையும் அவன் முகத்தை நிமிர்ந்து பார்க்காமல் சொல்லி முடித்தாள்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த கண்ணன் தீவிரமாய் யோசித்தான்.

''ப்ளீஸ்... நிறுத்திடுங்க! என்னைப் பிடிக்கலேன்னு காரணம் சொல்லித் தயவு செய்து இந்தக் கல்யாணத்தை நிறுத்திடுங்க. வினோத் நிச்சயம் வந்து கலாட்டா செய்வான். அந்த அவமானம் தாங்காம நான் மட்டுமில்ல, எங்க குடும்பமே தூக்கில தொங்கிடும்!'' கையெடுத்துக் கும்பிட்டவளின் கன்னத்தில் கண்ணீர் நேர்கோடாய் இறங்கியது.



ஒரு பெருமூச்சொன்றை வெளியிட்ட கண்ணன், அவளை நிமிர்ந்து சலனமில்லாமல் பார்த்தான். மறுவிநாடி அவளிடம் சொல்லாமல் கொள்ளாமல் திரும்பி நடந்தான்.

வேதனையோடு அவனையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள் சாரதா.

சாரதாவிற்கு எதுவுமே புரியவில்லை. கண்ணன் சொன்னானா இல்லையா? கல்யாண ஏற்பாடுகள் அதுபாட்டுக்கு நடந்து கொண்டிருந்தன.

திருமணத்திற்கு முதல் நாள் மாலை பரிசம் நடந்தபோது தான் கண்ணனைப் பார்த்தாள் சாரதா.

அவன் முகத்தில் எந்தவிதக் குழப்பமும் இல்லை. சர்வ சாதாரணமாக வளைய வந்தான். நண்பர்களின் கேலிப் பேச்சுகளுக்கு வெட்கத்துடன் சிரித்தான்.

'என்னதான் நினைத்திருக்கிறான் இவன், மனதில்? விடிந்தால் கல்யாணம். பூதமாய் வந்து நிற்பானே வினோத்!' இந்தப் பயத்திலேயே பச்சைத் தண்ணீர்கூடக் குடிக்கவில்லை சாரதா.

அவள் முகவாட்டத்தைப் பார்த்த தேவியும் மதனாவும் அவளைத் துருவித் துருவி விசாரிக்க...

தாள முடியாத வேதனையோடு எல்லாவற்றையும் அவர்களிடம் கொட்டினாள்.

சாரதாவிற்கு ஆறுதல் சொல்ல மட்டுமே அவர்களால் முடிந்தது.

இன்னும் சாரதாவிற்குப் பிரமிப்பு அடங்கவில்லை. தன் கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த அந்தப் புத்தம்புது மஞ்சள்

கயிற்றையே பார்த்துக் கொண்டிருந்தாள். எனக்குத் திருமண மாகிவிட்டதா? வினோத் வந்து இந்தக் கல்யாணத்தை நிறுத்தவில்லையா? ஏன்?

மதனாதான் துணிச்சலாய்க் கண்ணனிடம் கேட்டாள்.

"என்ன சார்? கல்யாணத்துக்கு முன்னாடியே சாரதாவை மீட் பண்ணீங்களாமே. அவதான் சொன்னா."

சாரதாவைப் பார்த்து அர்த்தமுடன் ஒரு புன்னகையை வழியவிட்டபடி, "நான் எங்கே? அவதான் என்னைக் கூப்பிட்டு பேசினா! சரி... ஜாலியா ஏதோ பேசலாம்னு போனா... யாரோ ஒரு காலிப் பயலோட கதையைச் சொல்லிப் போரடிச்சிட்டா."

"உங்களுக்கு அவ மேல கொஞ்சம்கூட கோபமே இல்லியா?"

"கோபமா? எனக்கா? எதுக்கு? காதலிக்கறது குற்றமா? கல்யாணம்ங்கறது இருவரை ஒருவராகக் காண்பது. அந்த ஒருவர் யார் என்பதுதான் வாழ்வுன்னு எதிலோ படிச்சிருக்கேன். அந்த ஒருவன் நிச்சயமா வினோத் இல்லேன்னு ஆயிட்ட பிறகு, அவனுக்குப் பயந்து தன் தலையிலே தானே மண்ணள்ளிப் போட்டுக்கணுமா? அதுவும் இந்தக் காதல் சும்மா வெத்து வேட்டுன்னு புரிஞ்சு போயிடுச்சு. இதுக்கெல்லாம் முக்கியத் துவம் கொடுத்து என் மனசைக் கவர்ந்தவளைக் கைவிட விரும்பலே."

"சார்... எ... எப்படிச் சொல்றதுன்னே தெரியலே! உங்களைப் பார்த்தா பிரமிப்பா இருக்குது. எங்க சாரதா ரொம்ப குடுத்து வச்சவ. சரி... இப்ப வினோத் வந்தான்னா கல்யாணம் ஆயிடுச்சின்னாலும் அசிங்கமா கலாட்டா பண்ணுவானே!" கவலையோடு கேட்டாள் மதனா.



ரோஸ் நிற ஈறுகள் தெரிய வாய்விட்டுச் சிரித்தவன், "அவன் ஜெயில்ல கம்பி எண்ணிக்கிட்டிருக்கான்!" என்றான்.

அந்தக் கண்ணனைப் போல் இந்தக் கும்பகோணத்துக்காரன் இருந்திருக்கக் கூடாதா? இந்தக் காலத்தில் கல்யாணத்துக்கு முன் காதலிக்காதவர்களை விரல் விட்டு எண்ணி விடலாமே. இது தெரியாதா? கொஞ்சம் முற்போக்காய், நியாயமாய்ச் சிந்தித்திருந்தால் ரமா செத்திருக்க மாட்டாளே!

'உயிர் என்பது எத்தனை அற்புதமான விஷம்! அது உருவாகி வெளி உலகம் கண்டு வளர்ந்து படித்து கல்யாணம் செய்து... பாதியிலேயே வாழ்வை முடித்துக் கொள்ளவா ஆண்டவன் படைத்தான்? சரி! இவள்தான் காதலித்த பாவத்திற்கு உயிரை விட்டாள். அவள் வயிற்றில் வளர்ந்த மூணு மாதச் சிசு என்ன தவறு செய்தது?'

தேவிக்குத் தாங்க முடியவில்லை.

"மழை வர்றாப்பல இருட்டுது. கொல்லையில துணி காயுது போல..." கோதையின் குரலில் கலைந்தாள் தேவி.

கோதை அப்பளத்தை நூல் போட்டுக் கட்டிக் கொண்டு குனிந்தபடியே யாருக்கோ சொல்வது போல் சொன்னாள்.

தேவி வேதனையாய்ச் சிரித்தபடி எழுந்து போனாள்.

'ஏம்மா... அதை நேரடியாக என்னிடம் சொல்லக் கூடாதா? சுகந்தியும் முரளியும் வேலைக்குப் போயிட்ட பிறகு இந்த வீட்டில் என்னையும் உன்னையும் தவிர யாருமில்லே. எவ்வளவு கட்டுப்பாடாய் இருக்கிறாய்... என்னிடம் பேசவே கூடாதென்று! ஆனாலும் நான் உன்னை வற்புறுத்தமாட்டேன். அன்பும் பாசமும் இயல்பாய் வரணும். கட்டாயப்படுத்திப் பெறுவதில் என்ன இருக்கிறது? ஆனா ஒண்ணு மட்டும்

புரியவே இல்லே! என்ன காரணத்துக்காக நீ என்னிடம் மட்டும் மவுனம் சாதிக்கிறாய்?'

காய்ந்த துணிகளை எடுக்கத் தொடங்கினாள்.

**தூ**ரத்திலிருந்தே பார்த்த தேவிக்கு வியப்பாய் இருந்தது.

அந்த லிட்டில் ஸ்டார் லைப்ரரி மாவிலைத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது.

வாசலிலேயே ஒரு சின்ன ஸ்டூலில் சந்தனம், பன்னீர், டைமன் கற்கண்டு ஒரு தட்டில் வைக்கப்பட்டிருந்தன.

''வாங்க!'' உள்ளே டேபிளுக்குப் பின்னே உட்கார்ந்திருந்த அந்த இளைஞன் வரவேற்றான்.

'யார் இவன்? இங்கேயிருந்த கந்தசாமி நாடார் எங்கே? அவர் இடத்தில் இவன் எப்படி?'

''இந்த லைப்ரரிய நான் விலைக்கு வாங்கிட்டேன். தொடர்ந்து நீங்க ஆதரவு தரணும்.''

'இதென்ன எலெக்ஷன் நேரத்தில கூழைக் கும்பிடு போட்டு வோட்டு கேட்கும் வேட்பாளர் போல... ஆதரவு தரணும்னு கைகூப்பி வேண்டுகிறான்!' தேவிக்குச் சிரிப்பு வந்தது.

'பரவாயில்லை. இவன் இந்த இடத்தில் அமர்ந்திருப்பது அந்த இடத்திற்கு வசீகரம் கூடிவிட்டதுபோல் இருக்கிறது!' அவள் புன்னகைத்தபடி புத்தகத்தை மாற்றி எடுத்துச் சென்றாள்.

அதன் பிறகு வந்த நாட்களில் ரகு இவளுடன் சகஜமாய்ப் பேசினான். தேவிக்கு அவன் தோழமை இதமாக இருந்தது. முதன் முதலாய் ஒரு ஆடவனுடன் நட்பு.



லைப்ரரிக்கு வருபவர்களுக்குப் பெரும்பாலும் தேவியைப் பற்றி நன்கு தெரியும். அவள் முதுகுக்குப் பின்னே அவளைப் பற்றிக் கேவலமாகப் பேசினர். ரகுவுக்கு அந்தப் பேச்சுக்கள் வேதனையை அளித்தன. தேவியிடம் அதைப்பற்றி அவன் கேட்கமாட்டான். தேவியும் பொதுவாகப் பேசுவாளே தவிர, அவனைப் பற்றியோ... அவன் குடும்பத்தார் பற்றியோ பேச மாட்டாள்.

நாளாக... ஆக... தேவி ரகுவின் மனதை ஆக்கிரமிக்கத் தொடங்கினாள்.

## 7

''அம்பது ரூபாயாவது குடு சுகந்தி.''

''இல்லே தேவி. மாசக் கடைசி. இப்ப வந்து கேட்டா என்ன பண்றது? முரளிகிட்டே கேட்டுப் பார்.''

அரைமணி நேரமாய்க் கெஞ்சிக் கொண்டிருக்கிறாள் தேவி. தன் கூடப் படித்த சிநேகிதியின் மகளுக்குக் காது குத்தும் விழா. வெறுங்கையுடன் போவதா? பொம்மை ஏதாவது வாங்கிச் செல்லலாம். இல்லாவிட்டால் கவரில் அம்பத்தோரு ரூபாயை வைத்துக் கொடுத்துவிடலாம். ஆனால் பணம்? அதற்குத்தான் காலையிலிருந்து கெஞ்சிக் கொண்டிருக்கிறாள் தேவி.

முரளி தலையைத் துவட்டியபடியே வந்தான்.

''என்ன முரளி கிரளின்னு என் பேர் அடிபடுது!''

''இவ ஏதோ பங்ஷனுக்குப் போகணுமாம். ஒரு அம்பது ரூபா இருந்தா குடுப்பியாம்.''

''என்ன பங்ஷன்?''

''என்கூடப் படிச்சாளே ஜெயா! அன்னைக்கு வீட்டுக்கு வந்திருந்தாளே... அவதான். அவளோட பொண்ணுக்குக் காது குத்தற விழா.''

''சொல்றேன்னு தப்பா நினைக்காதே! குழந்தைக்குக் காது குத்துறதுக்குன்னே பெங்களூர்ல இருந்து வந்திருக்கா. நம்ம வீட்ல நல்ல காரியம் நடக்குதோ, நடக்கலியோ, அது ரெண்டாம் பட்சம். அப்படி நடந்தாலும் இதுக்காகப் பெங்களூர்ல இருந்து வந்து கலந்துக்குவாளா? இந்த அம்பது ரூபா திரும்பி வரப்போகுதா? வேஸ்ட்டா ஏன் செலவு பண்ணணும்?''

''முரளீ...'' அவனைப் பார்க்கவே கூசினாள். 'அன்பா கொடுப்பதற்குப் பெயர்தான் அன்பளிப்பு. கடனா கொடுப்பது போல் கொடுத்து எதிர்பார்க்கறதுக்கு என்ன பெயர்?'

''திரும்பி வரலேன்னா என்ன? அம்பது ரூபாதானே!''

''அந்த விழாவுக்கு நீ போய்த்தான் ஆகணுமா?''

''ஏன் கேக்கறே?''

''ப்ச்! எதையும் நேரடியாத்தான் சொல்லணுமா?. நீ அந்த விழாவுக்குப் போனா... உனக்கு இன்னும் கல்யாணம் ஆகலைங்கறத பத்தி நாலு பேர் நாலு விதமா பேச மாட்டாங்களா? அப்புறம் உன் இஷ்டம். இந்தா... அம்பது ரூபா.''

தேவி - இதயத்தில் ஆணி அறைந்தது போல் - அசந்து போய் நின்றாள். அடிபட்ட வலியில் அனுமதி இல்லாமலே கண்ணீர் எட்டிப் பார்த்தது.

முரளி நீட்டிய பணத்தை வாங்காமல் அவனையே பார்த்தாள். 'கேவலம் ஒரு அம்பது ரூபாய்க்காகப் பழைய



சம்பவங்களைச் சொல்லிக் குத்தி காட்டுகிறானே. நீங்க ளெல்லாம் பேசுவதை விடவா அவர்கள் பேசிவிடப் போகிறார்கள்! இனியும் புதிதாய்க் காயம் ஏற்பட என் இதயத்தில் இடம் பாக்கியிருக்கிறதா? எல்லாமே மரத்துப் போனாலும் என் தன்மான உணர்ச்சி மட்டும் மரத்துப் போகலை!'

''வேண்டாம் முரளி! பணத்தை நீயே வச்சுக்க. அதுக்கு அவசியமில்லே!'' சொல்லிவிட்டுச் சமையலறை நோக்கி நடந்தாள்.

மாவைப் பிசைந்து கொண்டிருந்த கோதை, காரியத்தில் கண்ணாயிருந்தாலும்... அவளை நெருங்கிப் பார்த்தால் தெரிந்திருக்கும் அவள் அழுது கொண்டிருந்தது.

**லை**ப்ரரியிலிருந்து கொண்டு வந்திருந்த புத்தகத்தைப் பிரித்து வைத்திருந்தாளே யொழிய அவள் கண்களும் கவனமும் எங்கோ வெறித்துக் கொண்டிருந்தன.

'சே! எத்தனை காலத்திற்கு இதேபோல் ஏச்சுக்களும் பேச்சுக்களும் வாங்கிக் கொண்டு, ஒவ்வொரு செலவிற்கும் இவர்களிடம் கெஞ்சிக் கொண்டு, கூனி குறுகிச் சலாம் போட்டு- அதற்கும் பலவித அறிவுரைகளையும் ஈட்டி போன்ற வார்த்தைகளையும் நெஞ்சில் வாங்கிக் கொண்டு இருப்பது?

எல்லாவற்றிற்கும் இவர்களை எதிர்பார்த்துக் காத்தி ருப்பதால்தானே இவ்வளவு பேச்சுக்கள்? ஏன் இவர் களைப் போல் என்னாலும் சுயமாய்ச் சம்பாதிக்க முடியாதா?

பிளஸ் - டூ பாஸ் பண்ணியிருக்கேன். டைப்பிங் பாஸ் பண்ணியிருக்கேன். இது போதாதா? இந்தத் தகுதிக்கு எனக்கொரு வேலை கிடைக்காமலா போகும்? நாளை முதல் தொடங்க வேண்டும்.'

மறுநாள் பக்கத்து வீட்டிலிருந்து தினத்தந்தி பேப்பரை வாங்கி வரி விளம்பரங்கள் பகுதியில் வரி விடாமல் படித்து கம்பெனிகளுக்கு அப்ளிகேஷன் எழுதிப் போட்டாள்.

சுகந்தியும் முரளியும் அவளைப் பார்த்துக் கேலியாய்ச் சிரித்தனர்.

''அவனவன் எம்.பி.ஏ. படிச்சே வேலை கிடைக்காம அலையறான். டைப்பிங் தெரிஞ்சாதான் வேலை கிடைக்கும்னு இருந்தது அந்தக் காலம். கம்ப்யூட்டர் கத்துக்கிட்டாத்தான் சோத்துக்கு வழி பிறக்கும்ங்கறது இந்தக் காலம். தேவி! நீ கம்ப்யூட்டரைக் கண்ணாலாவது பார்த்திருக்கியா? சொல்லு... அதை வச்சே நான் உனக்குப் பெரிய கம்பெனிக்கு சிபாரிசு பண்றேன்!'' முரளி மூச்சு விடாமல் சொல்ல... வயிறு நோகச் சிரிப்பாள் சுகந்தி. 'தன்னைவிட வயதில் மூத்தவளாயிற்றே!' என்ற மரியாதையெல்லாம் அவர்களிடம் கிடையாது.

தேவி எதற்கும் கவலைப்படவில்லை. தொடர்ந்து எழுதிப் போட்டுக் கொண்டே இருந்தாள்.

இரண்டு மூன்று இடங்களிலிருந்து இண்டர்வியூ கார்டும் வந்தது. ஏதோ வேலையே கிடைத்து விட்டதுபோல் வெகுவாய் மகிழ்ந்து போனாள் தேவி.

நாளை முதன் முதலாய் இண்டர்வியூவிற்குச் செல்லப் போகிறாள். ஒருபுறம் சந்தோஷமாய் இருந்தாலும் நடுக்கமாய் இருந்தது. என்ன கேள்வி கேட்பார்களோ? தமிழில் கேட்பார்களா? இங்கிலீஷில் கேட்பார்களா?

தேவிக்கு ஆங்கிலத்தில் பேசுவது கொஞ்சம் புரியும். ஆனால் தொடர்ந்தாற் போல் இரண்டு வார்த்தை பேசத் தெரியாது. எழுதத் தெரியாது.



'யுனைடெட் இந்தியா புளோர் மில் கம்பெனி லிமிடெட்' பளிங்குக் கற்களில் பெயர் பொறிக்கப்பட்டிருக்க... தடதடக்கும் இதயத்தோடு அந்த கம்பெனி படி ஏறினாள்.

ரிசப்ஷனில் ஒரு அழகான பெண் லிப்ஸ்டிக் உதடுகளை நோகாமல் பிரித்து இவளைப் பார்த்து ''எஸ்'' என்றாள்.

''ஒ... ஒண்ணுமில்லே! இ... இண்டர்வியூ! என்னை வரச் சொல்லி...'' அதைப் பேசக்கூடத் திணறிப் போனாள் தேவி.

''ஓ... ப்ளீஸ் பீ ஸீட்டெட்.'' அவள் வலதுபுறமாய்க் கையைக் காட்டினாள். அங்கே ஏற்கெனவே பன்னிரண்டு பேர் அமர்ந்திருந்தனர்.

அங்கு வந்திருந்த ஆண்களும் பெண்களும் இவளை விட அழகாய், நாகரீகமாய் உடை அணிந்திருந்தனர்.

ஒவ்வொருவராக பியூன் வந்து அழைத்தான். இவள் முறை வந்த போது உள்ளங்கை வியர்த்துப் போனது.

ஏசி சில்லென்று அவளைத் தழுவியது. பெரிய கண்ணாடி மேஜைக்கு எதிரே ரோலிங் சேரில் எம்.டி. அமர்ந்திருந்தார்.

''ப்ளீஸ் ஸிட் டவுன்!'' கம்பீரமான குரல்தான்.

வினைல் சேரில் பட்டும்படாமல் அமர்ந்தாள் தேவி.

அவள் சர்ட்டிபிகேட்டை வாங்கிப் பார்த்தபடி, ''உங்கள் பெயரென்ன?'' என்றார் ஆங்கிலத்தில்.

''தேவி''

''மிஸ் ஆர் மிஸஸ்?''

''மிஸ் தேவி.''

"ஓ... ஆர் யூ டிகிரி ஹோல்டர்?"

அவர் கேட்ட ஆங்கிலத் தொனியில் சட்டென்று அர்த்தம் புரியாமல் யோசித்தாள்.

"சொல்லுங்க! உங்க குவாலிபிகேஷன் என்ன?"

மென்று விழுங்கினாள். "பிளஸ் டூ."

"ப்ளுயன்ட்டா இங்கிலீஷ் பேச வருமா?"

அவர் என்ன கேட்டார் என்பதே சுத்தமாய்ப் புரியவில்லை. 'தமிழில் கேள்வி கேட்டால் என்னவாம்?'

"டூ யூ நோ இங்கிலீஷ்?"

"ஐ டோண்ட் நோ!" தேவிக்கு ஒழுங்காய்ப் பேசத் தெரிந்த ஒரே வார்த்தை இதுதான்.

"ஓக்கே! வீட்டுக்கு கார்டு அனுப்பறோம்."

நிச்சயமாய் இந்த வேலை கிடைக்காது என்று அவளுக்குப் புரிந்தது.

எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றினான் முரளி.

"என்ன தேவி, இண்டர்வியூ நல்லா பண்ணியா? நிச்சயம் நல்லா பண்ணியிருப்பே! டக்டக்னு பதில் சொல்லியிருப்பே. சரி எப்போ ஜாய்ன் பண்றே?" சிரிக்காமல் கேட்டான் முரளி.

சுகந்தி குபீரென்று சிரித்து விட்டாள். தேவி எதுவும் பேசவில்லை.

கோதை அவர்களிடம் மெதுவாய், "என்ன முரளி! ஏன் அவளை இப்படிப் படுத்தறே? எதிலதான் விளையாடறதுன்னு இல்லே. நீ கூடத்தான் படிப்படியா ஏறி இறங்கி ரெண்டு



வருஷத்துக்கு அப்புறம்தான் வேலையே கிடைச்சது. அப்பவெல்லாம் அவ உன்னை இப்படித்தான் கிண்டல் பண்ணாளா?"

முரளி எதிர்பார்க்கவில்லை. 'அம்மாவா பேசுகிறாள்? என்ன திடீர்னு கரிசனம் மகள் மேல்?'

தேவி கொல்லைப்புறத்திலேயே அமர்ந்துவிட்டாள். மனசு கனமாகியிருந்தது.

'பொறு! அவசரப்படாதே! ஏன் உடைந்து போகிறாய்? உன்னைத் தவிர இன்னும் பன்னிரண்டு பேர் அந்த இண்டர்வியூவிற்கு வந்தார்களே! எல்லோருக்குமா வேலை கிடைத்துவிட்டது? யாரோ ஒருவருக்குத்தானே!

'எல்லோரும் உடைந்து போய் விடுகிறார்களா? வேறு கம்பெனிகளில் முயற்சிப்பார்கள். நீயும் முயற்சி செய்!

'நீ அடைய வேண்டிய லட்சியம் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் அதற்கான அடுத்தபடி உன் கால் அருகில் என்பதை மறவாதே!'

எங்கோ படித்த வரிகள் நினைவுக்கு வரத் தெளிந்தாள்.

அதற்கடுத்து வந்த இண்டர்வியூவிலும் கலந்து கொண்டாள். அவள் முதுகுக்குப் பின்னே மேனேஜரைத் திட்டித் தீர்த்தார் ஜி.எம்.

"ஏன்யா? இந்தக் காலத்து டிகிரியே வெறும் சப்பைக்கட்டு. அப்படியிருக்கச்சே நீ எப்படிய்யா இந்த பிளஸ்டூவுக்கெல்லாம் கார்டு அனுப்பி வரச் சொன்னே?"

முகத்தில் சாணியடித்தது போல் இருந்தது தேவிக்கு.

சுகந்தி, முரளியெல்லாம் காலேஜ் போய்ப் படிச்சு... மதிப்பா ஒரு வேலைய தேடிக்கிட்டாங்க. நான் மட்டும் ஏன் படிக்கலை? கதைப் புத்தகங்களைப் படிப்பதில் இருந்த ஆர்வம் பாடப் புத்தகத்தில் செல்லவில்லையே! அப்பா 'படிக்க வைக்க மாட்டேன்' என்றா சொன்னார்? நான்தானே அடி உதை வாங்கியும் படிப்பு ஏறவில்லை என்று வீம்பாய் வீட்டில் உட்கார்ந்துவிட்டேன். எல்லாம் கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம். இப்போதும்கூடத் தபாலில் பட்டப்படிப்பு படிக்கலாம்தான். ஆனால் பணம்?

அம்பது ரூபாய்க்குகூட இதயத்தில் குத்துகிற முரளி, ஆயிரக் கணக்கில் செலவு பண்ணிப் படிக்க வைப்பானா?

பல கம்பெனிகளில் இவள் போட்ட அப்ளிகேஷன் கிணற்றில் போட்ட கல்லாய் இருந்தபோது, ஒரு இண்டர்வியூ கார்டு வந்தது.

அலுவலகம் சிந்தாதிரிப் பேட்டையில் இருந்தது. இண்டர் வியூ பதினோரு மணிக்கு! அவசர அவசரமாய் ஓட வேண்டிய தில்லை. மெதுவாகவே கிளம்பலாம்.

அதிசயமாய் அன்றைக்குப் பார்த்துச் சுகந்தியும், முரளியும் வீட்டிலிருந்தனர்.

அம்மா ஏன் ஒரு மாதிரியா இருக்கிறாள்? கண்களெல்லாம் சிவந்து போய்... அழுதாளா? இல்லை, உடம்புக்கு ஏதும் முடியலியா?

"என்னம்மா உடம்புக்கு?" என்று பரிவோடு கேட்க மனம் துடித்தது. ஆனால் நிச்சயம் பதில் சொல்லமாட்டாள்.

என்னோட துஷ்ட ராசியாலதான் அப்பா செத்தார்னு எல்லோரும் சொல்றதை நீயும் எப்படிம்மா நம்பறே? நான்



எந்தளவு நொந்து போயிருக்கேன்னு உன்னால புரிஞ்சுக்க முடியுதாம்மா? இல்ல... புரிஞ்சிக்க முயற்சியாவது பண்றியா? கிணத்துல போட்ட கல் மாதிரி ஏம்மா இப்படியாயிட்டே? ஒருநாள் போறதே பெரிய விஷயமா தோணுதும்மா!

எனக்கு வயசு இருபத்தெட்டு. பல சமயங்கள்ல தோண்ற மனுஷனுக்கு உண்டான அந்த உணர்ச்சிகளை என் ஒருத்தியால எச்சில் விழுங்கற மாதிரி விழுங்க முடியல. அந்த ஆசாபாசமெல்லாம் நிறைவேறாதுன்னு தெரிஞ்சு போச்சு. ஆனா எனக்குள்ளே கொந்தளிக்கிற வேதனைகளைப் பகிர்ந்துக்க எனக்கு ஒரு துணை வேணும்.

எனக்கு உன்னைவிட்டா வேற யாரு? இந்த நிலைமை அப்படியே நீடிச்சா... இன்னும் கொஞ்ச நாள்ல நான் பேசறதையே மறந்துடுவேன் போலிருக்கும்மா!

தேவி துளிர்த்த கண்ணீரை நாசூக்காய்த் துடைத்துக் கொண்டு மானசீகமாய் அம்மாவிடம் விடைபெற்றாள்.

வெகு நாட்களுக்குப் பிறகு இந்த இடத்திலிருந்து கார்டு வந்திருந்தது. அதனால் ஏற்பட்ட சந்தோஷமோ... பயமோ... தேவிக்குக் காபி கூட இறங்கவில்லை.

அவள் போனதும் கோதை முரளியிடம் கேட்டாள்.

## 8

லெதர் எக்ஸ்போர்ட் கம்பெனி அது. பல ஊர்களிலும், மாநிலங்களிலும் கிளை பரப்பி இருந்த நிறுவனம்.

இண்டர்வியூ பன்னிரண்டு மணிக்குத்தான் ஆரம்பமானது. வந்திருந்தவர்கள் அனைவர் முகத்திலும் டென்ஷன் இருந்தது.

மூணு போஸ்ட்டிற்கு ஆள் எடுக்கிறார்கள். அதனால் 'நமக்கும் ஒரு போஸ்ட் கிடைக்காமலா போகும்?' என்கிற நம்பிக்கையோடு இருந்தார்கள். ஒவ்வொரு நபரும் உள்ளே போய் வெளியே வர அரை மணி நேரமானது.

'அப்படியென்ன உலகத்தில் உள்ள கேள்வியெல்லாம் கேட்கிறார்களா?' தேவிக்கு நா உலர்ந்து போனது.

லஞ்ச் பிரேக்.

காலையிலிருந்து எதுவும் சாப்பிடாததில் வயிறு பசித்தது.

'எந்த நம்பிக்கையில் நான் இப்படி வேலைக்காக அலைகிறேன்? கணவனுக்காக, குழந்தைகளுக்காக என்று பார்த்துப் பார்த்து அவர்களுக்குத் தேவையானதை வாங்க அலையும் இந்த வயதில் நான் மட்டும் எனக்காக தன்னந்தனியே அலைந்து கொண்டு இருக்கிறேன். அந்த வித்யாதரன் என்னைக் கல்யாணம் செய்து கொண்டிருந்தால் இன்று இந்த நிலை வந்திருக்குமா?'

'ச்சை. என்ன கற்பனை இது! முகம்கூடப் பாராது 'வேண்டாம்' என்று ஒதுக்கியவனை ஏன் இன்னும் நான் மறக்கவில்லை? முதல் முத்தம், முதல் காதல் போல, முதன் முதலாய்ப் பெண் பார்க்கும் வைபவத்தின் கதாநாயகன்! மறக்க முடியுமா?'

தேவியின் பெயர் சொல்லி பியூன் அழைக்க... எழுந்து சென்றாள்.

பச்சை நிற கார்ப்பெட் விரித்திருக்க... ஏஸி ரீங்காரம் பாடிய பெரிய அறை அது.

ரோலிங் சேரில் முதுகு காட்டி அமர்ந்திருந்தவர் இவள் வந்ததை உணர்ந்து திரும்பிப் பார்த்தார்.



அவரைப் பார்த்ததும் உச்சபட்ச அதிர்ச்சியில் திகைத்து நின்றாள்.

'இவரா?'

## 9

''ப்ளீஸ் ஸிட் டவுன்!'' அவர் மூன்றாவது முறையாகச் சொன்ன பிறகுதான் அமர்ந்தாள் தேவி.

அவருக்கும் அவளை எங்கோ பார்த்தது போல் ஒரு உணர்வு. ஆனால்?

தேவியால் மறக்க முடியுமா அந்த முகத்தை?

எச்சிலைக் கூட்டி விழுங்கிக் கொண்டு, பேயறைந்தது போல் அமர்ந்திருந்த அவளைப் பார்த்துக் கேட்டான்.

''உங்க பேரென்ன?''

'என்னை அடையாளம் தெரியலையா வித்து?'

''தே... தேவி!''

சட்டென்று தாக்கப்பட்டவன் போல் அவள் சான்றிதழை வாங்கிப் பார்த்தான். அதில் அப்பா பெயர் ஜனார்த்தனன் என்றிருக்க... மின்னலாய்ப் புரிந்தது அவனுக்கு.

''நீ... நீங்க ஜனார்த்தனனோட மகளா?''

''ஆமாம்.''

''ஓ, காட்! தேவி... நா... நான்... என்னைத் தெரியுதா?''

''ம். மதுரையில சின்ன வயசுல பார்த்தது. அப்புறம் உங்க அம்மா குடுத்த போட்டோவுல பார்த்திருக்கேன்.''

திணறிப் போனான் வித்யாதரன். என்ன பேசுவது என்றே புரியாமல்.

"உங்க... உங்களுக்குக் கல்யாணம் ஆய்டுச்சா தேவி?"

வேதனையாய் அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

"அப்ளிகேஷன்ல 'நான் மிஸ் தேவி' என்றுதான் போட்டிருக்கேன்."

"ஐயம்... வெரி... வெரி சாரி தேவி. என்னோட கோழைத் தனத்தால அநியாயமாக உங்க வாழ்க்கையைப் பாழடிச்சிட்டேன்."

"... ..."

"நீங்க ஏன் வேற கல்யாணம் பண்ணிக்கலை?"

"விதி!" என்றாள் விரக்தியாய்.

"நான் சொல்றத நீங்க நம்பணும் தேவி! உங்களை நான் ரிஜக்ட் பண்ணினதுக்கு காரணம் நீங்க இல்லே தேவி! ராஜி. என் மனைவி ராஜேஸ்வரி. அவளை நான் அஞ்சாறு வருஷமா காதலிச்சேன். வேற ஜாதிங்கறதால அப்பாவிடம் சொல்லப் பயந்திட்டு இருந்தேன். திடீர்னு அப்பாகிட்டேர்ந்து லெட்டர். கூடவே இன்விடேஷன், உங்க போட்டோ எல்லாம் இருந்தது. இன்னும் ஒரே வாரத்தில் கல்யாணம். நான் என்ன பண்ணுவேன்? என் ராஜியோட கதி? அந்த நேரம் பார்த்து ராஜி அவளோட அத்தை வீட்டுக்கு நாகர்கோயிலுக்குப் போயிருந்தா. அவளுக்கு டெலிகிராம் குடுத்து கோயம் புத்தூருக்கு வரவைக்கிறதுக்குள்ளே நாலு நாள் ஓடிப் போச்சு. பிறகு நாங்க ரெண்டு பேரும் பேசி, தீர்மானிச்சு சில நண்பர்கள் உதவியோட மருதமலை கோயில்ல... அப்பா ஏற்பாடு பண்ணியிருந்த கல்யாணத்துக்கு ஒருநாள் முன்னாடி எங்க



கல்யாணம் நடந்தது. அப்புறமாகத்தான் எனக்கே ஞாபகம் வந்தது. மெட்ராஸ்ல இந்நேரம் கல்யாண ஏற்பாடெல்லாம் நடந்து, எனக்காகக் காத்துக்கிட்டு இருப்பாங்களேன்னு டெலிகிராம் கொடுத்தேன்."

"அதையாவது அனுப்பணும்னு தோணிச்சே உங்களுக்கு. ரொம்ப தாங்க்ஸ்."

"நீங்க எவ்வளவு விரக்தியில பேசறீங்கன்னு எனக்குப் புரியாம இல்லே மிஸ் தேவி. பட், அந்த நேரத்துல எனக்கு வேற வழியே தெரியலை."

"... ..."

"தேவி... என்னால உங்க வாழ்க்கையே நாசமாப் போச்சுன்னு நினைக்கிறப்ப... ரொம்ப வேதனையா இருக்கு. அதுக்குப் பிராயச்சித்தமா உங்களுக்கு ஒரு ஹெல்ப் பண்ண நினைக்கிறேன். இப்ப இந்த வேலைக்காக நிறையப் பேர் பெரிய மனுஷங்களோட சிபாரிசு கடிதத்தோட வந்திருக்காங்க. நாங்களும் பெரிய மனுஷங்களைப் பகைச்சுக்க முடியாதே... எனவே, நான் மேலதிகாரிகிட்டே பேசி இங்கே உங்களுக்கொரு போஸ்ட் கிடைக்க ஏற்பாடு பண்றேன். அது நிச்சயம் என்னால முடியும்."

தேவி எழுந்து கொண்டாள்.

"தாங்க் யூ சார்! இந்தளவிற்கு என் மேல கருணை காட்டி உதவி செய்ய நினைச்சதுக்கு... ரொம்ப தாங்க்ஸ்! ஆனா, இங்கே என்னால வேலை செய்ய முடியும்னு தோணலை." கை கூப்பிவிடைபெற்றுச் சென்ற தேவியைக் கண்களில் நீர் கசியப் பார்த்தான் வித்யாதரன்.

தொய்ந்து போய் நடந்தாள் தேவி. எங்காவது தனியே அமர்ந்து ஓவென்று மனசு விட்டு அழணும் போல் இருந்தது.

வித்யாதரன் சுயநலக்காரன். தன் வாழ்க்கையை மட்டுமே நினைத்துப் பார்த்தவன், என்னையும் நினைத்துப் பார்க்க வேண்டாமா? உடனடியாகத் தன் விருப்பமின்மையைத் தெரிவித்திருந்தால்... இன்று உலர்ந்த சருகாக ஆகியிருப்பேனா? ஏன்... எனக்கு மட்டும் வாழ்க்கையில் நடக்கக் கூடாததெல்லாம் நடக்கிறது?

வெகு நேரம் அவள் பஸ் ஸ்டான்டில் நின்றிருந்தாள். அவள் போகும் பஸ் எத்தனையோ வந்தும்... ஏறவில்லை. வித்யாதரன் சென்னைக்கு எப்போது மாற்றலாகி வந்தான்?

மணி ஆறை நெருங்கிக் கொண்டிருந்தது.

யாரோ தோள்பட்டையில் சீண்டியது போலிருக்க, திரும்பிப் பார்த்தாள் தேவி.

நாற்பது வயது மதிக்கத்தக்க மனிதன். ஈயென்று இளித்தபடி நின்றிருந்தான்.

"பாப்பா ரோம்ப நேரமா நிக்குது போலிருக்கு. நான் பைக் வச்சிருக்கேன். வர்றியா அதுல போகலாம்."

'சுரீர்' என்று அடிபட்டது போல் துடித்துப் போனாள்.

'பாவி.. என்னைக் கிராக்கி என்று நினைத்து விட்டானா? என்னைப் பார்த்தால் அப்படியா தெரிகிறது?' இழுத்துப் போர்த்திக் கொண்டு, அவனை முறைத்துப் பார்த்தவள், அடிக்கத் துடித்த கையைச் சிரமப்பட்டு அடக்கினாள்.

சற்றுத் தள்ளி நாலைந்து பெண்மணிகள் 'மே மாதம்' படத்தைப் பற்றி விமர்சித்துக் கொண்டிருக்க... அவர்களோடு போய் நின்று கொண்டாள். நெஞ்சின் படபடப்பு இன்னும் அடங்கவில்லை.



ஐந்து நிமிடத்திற்குப் பின் அவள் போகும் பஸ் அதிக கூட்டத்தைச் சுமந்தபடி ஒரு பக்கம் சாய்ந்து கொண்டு வந்தது. நெருக்கியடித்து ஏறிய தேவி தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

கம்பியின் மீது தன்னைச் சாய்த்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்டாள்.

அவள் எதிர்பார்த்தாளா- இன்று வித்யாதரனைச் சந்திப்போம் என்று? போட்டோவில் பார்த்ததைவிடச் சற்றே சதை போட்டிருக்கிறான். நிஜமாகவே எனக்காக வருத்தப்படுகிறான். எனக்காக உதவி செய்யத் துடிக்கிறான். பாவம். அவனும்தான் என்ன செய்வான்? அத்தனை வருடமாக ஒரு பெண்ணைக் காதலித்து, ஆசையை வளர்த்து, நம்பிக்கையை ஊட்டியபின், அப்பா பார்த்துவிட்டாரே என்பதற்காக என்னை நேரில்கூடப் பார்க்காமல் சம்மதிக்க முடியுமா? இது காதலிக்குச் செய்யும் துரோகமல்லவா? என் விதி மோசமாக இருக்கும் போது அவனைக் குறைப்பட்டுக் கொள்வதில் என்ன நியாயம்?"

"டிக்கெட்... டிக்கெட் வாங்கியாச்சா? வாங்காதவங்க வாங்கிடுங்க. செக்கிங் ஸ்குவாட் வந்திடுச்சின்னா மாட்டிப்பீங்க. ஏம்மா... நீங்க டிக்கெட் வாங்கிட்டீங்களா?"

"ஆங்... இ... இல்லே. இதோ..." சுயநினைவிற்கு மீண்ட தேவி ஹேண்ட் பேகை திறந்து கைவிட்டவள் அதிர்ந்தாள். கை வெளிப்புறம் நீண்டது. எவனோ பிளேடால் பேகைக் கிழித்து அதில் உள்ள பர்சை அபேஸ் செய்துவிட்டிருந்தான்.

"ஐயோ... என் பர்ஸ். கண்டக்டர் என் பர்சைக் காணலை!" உடம்பெல்லாம் வெடவெடவென்று நடுங்க, கீழே குனிந்து தேடிப் பார்த்தாள்.

''ஏம்மா... உன்னை மாதிரி எத்தனை பேரைப் பார்த்திருப் பேன்? பார்த்தா நல்ல குடும்பத்துப் பொண்ணு மாதிரி இருக்கீங்க. இறங்கும்மா கீழே.''

''இல்லே கண்டக்டர், சத்தியமா என் பர்சை...''

''அதெல்லாம் விசாரிச்சிட்டிருக்க எனக்கு நேரம் இல்லை. இறங்குங்க.'' கண்டக்டர் விசிலடிக்க, பெரியார் பாலமருகே வண்டி நிற்க, பலரின் ஏளனமான கண்கள் முதுகைத் துளைக்க... அவமானத்தில் உடம்பு எண் சாணாய் குறுகிப் போன உணர்வில் இறங்கியவள்... அழுகையைக் கட்டுப்படுத்த முடியாமல் விம்மல் வெடித்தது.

'ஐயோ... என்ன செய்வேன்? எப்படி வீட்டிற்குப் போய்ச் சேருவேன்?

ஆட்டோவில் போய்டலாமா? வேண்டாம். பணம் அதிகமாகும். யாரிடம் போய்ப் பணத்தைக் கேட்பேன்? அதற்கும் தேளாய் வார்த்தையில் கொட்டுவார்கள்.'

நான் பாரம். எல்லாருக்கும் பாரம். வித்யாதரன் காதலுக்குப் பாரம். அப்பாவின் கடமைகளுக்குப் பாரம். அம்மா வாய்மூடிக் கிடக்கப் பாரமானேன். இப்போது இந்த பஸ்சிற்கு பாரமாகிவிட்டேன். எல்லோருமே என்னை நடுவழியில்தான் இறக்கி விடுகிறார்கள்!

காலையில் வெறும் காபி மட்டுமே குடித்திருந்ததால்... உடம்பு சோர்வாய் இருந்தது. வெகுவாய் இருட்டிப் போய்விட்டது. நடையை எட்டிப் போட்டாள்.

**ம**ணி ஒன்பதை நெருங்கிக் கொண்டிருந்தபோது... தேவி தெருவில் நுழைந்தாள். அம்மா வீட்டின் வாசலிலேயே நிற்பது தெரிந்தது.



ஒரு சின்ன மத்தாப்பூவாய் உள்ளுக்குள் மலர்ந்தாள்.

'அம்மா எனக்காகக் காத்திருக்கிறாள்!'

'ரொம்ப நேரமாய்டுச்சின்னு என்னைக் காணாம பதறிப் போய்ட்டியாம்மா?' தேவி வீட்டை நெருங்கியதும் கோதை உள்ளே போய்விட்டாள்.

முரளி வெளியில் வந்தான்.

உள்ளே செல்ல முயன்றவளைத் தடுத்தான் முரளி.

''நில்லு. உள்ளே போகாதே!''

## 10

**'ஏ**ன்?' என்பது போல நிமிர்ந்து பார்த்தாள். வார்த்தை வராமல் நாக்கு உலர்ந்து போயிருந்தது. மூணு சொம்பு தண்ணியாவது குடிச்சாதான் அடுத்த அடி எடுத்து வைக்க முடியும் போல் கிழிந்த துணியாய்த் தொய்ந்து போயிருந்தது உடம்பு.

''சுகந்திய...''

''சுகந்திய...?''

''பொண்ணு பார்க்க வந்திருக்காங்க.''

சிலிர்த்துப் போய் நிமிர்ந்தாள்.

''நிஜமாவா?''

''ம்...''

'அப்பாடா! எவ்வளவு நாள் கழிச்சி இந்த வீட்டில் ஒரு நல்ல காரியம் நடக்கப் போகுது!' சந்தோஷ மிகுதியில் கண்களில் துளிர்த்தது.

''ஏய்... எங்கே உள்ளே போறே?''

''மாப்பிள்ளை எப்படி இருக்கார்னு பார்த்துட்டு வந்துடறேன், முரளி.''

''கெட்டுது போ! அதுக்குதானா இத்தனை நேரமும் வாசல்ல உனக்காகப் பழியா கெடந்தோம்? அவங்கள்லாம் கௌம்பற நேரமாச்சு. நீ அவங்க போற வரைக்கும் கண்ல படாம இருந்தியான்னா... உனக்கு ரொம்ப புண்ணியம் உண்டு!'' பேச்சில் கிண்டல் படர்ந்திருந்தது.

சட்டென்று வாடிப் போனாள் தேவி.

அதற்குமேல் எதுவுமே பேசத் தோன்றாது கொல்லைப்புறம் சென்றாள். வெடித்து வந்த கேவலை கஷ்டப்பட்டு விழுங்கினாள். 'இன்றைக்கு மட்டும் எத்தனை அடிகள்! அவமானங்கள்!' உடம்பும் மனசும் கனத்தது. வியர்த்தது. கிணற்றில் இருந்து நாலைந்து வாளித் தண்ணீரைச் சேந்தி தலைவழியே ஊற்றினாள். லேசாய்ப் படபடப்பு குறைந்தது போலிருந்தது. இப்போது பசியில்லை. தாகமில்லை. கோபமில்லை. எல்லாமே மரத்துப் போனது போலிருந்தது.

துணி துவைக்கும் கல்லின் மேல் அமர்ந்தவள் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள்.

சில்லென்ற காற்று ஓடி விளையாடியது. ஈரத் துணி உடம்போடு ஒட்டி நடுங்க வைத்ததுகூட உணராமல் தூங்கிப் போனாள்.

சுகந்தி தலையிலிருந்த பூ பாரத்தைக் கழற்றி வைத்தாள். இறைந்திருந்த சாமான்களை ஒழுங்குபடுத்திவிட்டுக் கோதை கொல்லைப்புறம் வந்தாள்.



வாடிப்போய் உறங்கிக் கொண்டிருந்த தேவியின் தலையை நடுங்கும் கரங்களால் மென்மையாய்த் தடவிக் கொடுத்தாள்.

'சாப்பிட்டியா என் கண்ணே!'

லேசாய் நடுங்கிக் கொண்டிருந்தவளின் மேல் ஒரு போர்வையைக் கொண்டு வந்து போர்த்தினாள். அவளை எழுப்பி உள்ளே அழைத்துச் செல்ல... தயக்கம் வந்து தடுத்தது. அவளும் ஒரு பாயை விரித்துக் கிணற்றுப் பக்கத்திலேயே படுத்துக் கொண்டாள்.

தேவி கண்விழித்த போது நன்றாகப் பொழுது புலர்ந்திருந்தது.

சுற்றுமுற்றும் பார்த்தவள் வியந்தாள்.

'இங்கியேவா தூங்கிவிட்டேன்? யாருமே என்னை எழுப்பி உள்ளே அழைத்துச் செல்லவில்லையா?'

தண்ணீரை எடுத்து முகத்தைக் கழுவியவளின் கண்கள் சுகந்தியைத் தேடின.

அம்மா அடுப்படியில் இருந்தாள். இவளை நிமிர்ந்தே பார்க்கவில்லை.

'அம்மா. நேற்று ஏன் அவ்வளவு லேட்டாய் வந்தாய்னு கேக்கவேமாட்டியா? சாப்பிட்டியான்னு ஒரு வார்த்தை கேட்டாயா? உள்ளே வராதேன்னு சொல்லத்தான் நீயும் என் வருகைக்காகக் காத்திருந்தாயா? நேற்று என்னவெல்லாம் நடந்தது தெரியுமா? வித்யாதரனைப் பார்த்தேனம்மா. அது தெரியுமா உனக்கு? ஒரு கபோதிப் பயல் இந்தக் குருடிகிட்டே பிக்பாக்கெட் அடிச்சானே... அது தெரியுமா? சிந்தாதிரிப் பேட்டையில் இருந்து ராயபுரம் வரைக்கும் நடந்தே

வந்தேன்ம்மா. காலெல்லாம் பயங்கர வலி. அதுவாவது தெரியுமா?

'என் வலி உன்னைப் பாதிக்காதும்மா! நீ என்னைவிட்டு ரொம்ப விலகிப் போயிட்டே. நான் எக்கேடு கெட்டுப் போனாலும் கவலைப்படமாட்டாய். அதான் எனக்குத் தண்ணி தெளித்து விட்டாயே!'

பெருமூச்சு விட்டபடி சுகந்தி அறையை நோக்கிச் சென்றாள் தேவி.

சுகந்தி விட்டத்தை வெறித்துப் பார்த்தபடி படுத்திருந்தாள்.

'மணியாயிடுச்சே. இன்னைக்கும் வேலைக்குப் போகலியா?'

''சுகந்தி!''

''என்ன?''

''எந்திரிக்கலை?''

''அதான் முழிச்சிட்டிருக்கேனே. என்ன கேள்வி இது?''

''இல்ல... மணி ஏழாயிடுச்சி. இந் நேரத்துக்கு குளிச்சிட்டிருப்பே. உடம்புக்கு முடியலியா சுகந்தி?''

''சும்மா தொணதொணக்காம என்னைக் கொஞ்சம் தனியா விடேன்!'' உஷ்ணமாய் வந்தது வார்த்தை.

''நேத்து உன்னைப் பொண்ணு பார்த்துட்டுப் போனாங்களே, என்ன சொன்னாங்க? அவங்களுக்குப் பிடிச்சுப் போச்சா?'' அவளால் ஆவலைக் கட்டுப்படுத்த முடியாமல் மீண்டும் கேட்டாள்.

''......''



அவள் மவுனம் எதையோ உணர்த்த...

''சொல்லு சுகந்தி. என்ன ஆச்சு? சொல்லும்மா!''

அந்தப் பரிவான குரலை மீண்டும் அலட்சியப்படுத்தத் தைரியமின்றி தேவியைப் பார்த்தாள்.

''அவங்க பதினஞ்சு பவுனாவது எதிர்பார்க்கிறாங்க. ப்ச்...! அவ்ளோ பணத்துக்கு எங்கே போறது? ஆபீஸ்ல லோன் போட்டாக்கூட அவ்வளவு கிடைக்காது. விடு! இந்தப் பேச்சை இத்தோட விட்ரு!''

''நீங்களாவே ஒரு முடிவுக்கு வந்துட்டா எப்படி சுகந்தி? என்னை எல்லோரும் மறந்திட்டீங்களே.''

''என்ன சொல்ற நீ?''

''இந்தக் கல்யாணம் நடக்கும் என்கிறேன். எனக்குன்னு அப்பா செஞ்ச நகையில இன்னும் அஞ்சு பவுன் நெக்லசும், அஞ்சு பவுன் வளையலும் பெட்டியில பத்திரமா தூங்குதே சுகந்தி. அதை எல்லோரும் மறந்திட்டீங்களே! பெட்டியில் இருக்கறதைவிட... உன் கையிலேயும், கழுத்துலேயும் இருந்தாதான் மதிப்பு அதுக்கு.''

''தேவி... அது... அது உனக்குன்னு...''

''இல்லே சுகந்தி. விளக்கு எரியலையேன்னு எண்ணெய் ஊத்தி எரிய வைக்கலாம்தான். ஆனா திரியே இல்லாதப்போ எண்ணெய் ஊத்தி என்ன லாபம்? சரி. மிச்ச நகைக்கு ஆபீஸ்ல லோன் போட்டு ஏற்பாடு பண்ணிடு. என்ன?''

நெகிழ்ச்சியாய் அவளையே பார்த்துக் கொண்டிருந்த சுகந்திக்கு மடை திறந்த வெள்ளம்போல் கண்கள் பொலபொல வென்று கசிந்தன.

'இவளையா இத்தனை நாள் உதாசீனப்படுத்தினேன்? என்னைப் பெண்பார்க்க வருபவர்கள் முன் இவள் தலை தெரியக்கூடாது என்று கண்டிஷன் போட்டேன்? இப்போது இவள் போடும் பிச்சையால்தானே எனக்கு வாழ்க்கை கிடைக்கப் போகிறது.'

''ஏய்? ஏன் அழறே?''

''....''

''இதப் பார், கல்யாணப் பொண்ணா லட்சணமா சிரிச்சிக் கிட்டு இரு! போம்மா, டைமாகுதில்லே போய்க் குளி.''

தேவியின் கையை அழுத்திப் பிடித்துத் தன் நன்றியைத் தெரிவித்த சுகந்தி, மெல்ல அவளைப் பார்த்துப் புன்னகைத் தாள்.

## 11

சுகந்தி எவ்வளவோ வற்புறுத்தியும் தேவி அவள் திருமணத்தில் கலந்து கொள்ளவில்லை. யாருக்குப் புரியுதோ இல்லையோ... அவள் வராத காரணம் கோதைக்குப் புரிந்தது.

'தங்கை திருமணத்திற்குக் கல்யாணமாகாத அக்கா எப்படி வருவாள்? வர்றவங்க கண்ணும் வாயும் சும்மாவா இருக்கும்? அவளைத் துளைச்சி எடுத்துட மாட்டாங்களா?'

கோதைக்கு மட்டும் அப்படியொரு ஆசையா என்ன? தேவியை வச்சுக்கிட்டு சுகந்திக்குக் கல்யாணம் பண்ணுவதில் அவளுக்குத் துளியும் விருப்பமில்லை.

எல்லாமே முரளியின் ஏற்பாடு. தன் அலுவலகத்தில் பணிபுரியும் நண்பர் சுரேஷிற்குச் சுகந்தியைத் திருமணம் பேசி



முடித்தவனே அவன்தான். நல்ல குடும்பம். யாருமே கோதை வீட்டிற்குப் படியேறி வந்து சம்பந்தம் பேசத் தயங்கியபோது தைரியமாய் வந்து திருமணத்தையே முடித்துக் கொண்டுவிட்ட சுரேஷ் குடும்பத்தாரைக் கையெடுத்துக் கும்பிடத் தோன்றியது என்னவோ உண்மைதான். ஆனால் தேவி?

அவளின் எதிர்காலம்?

இப்போதே முரளி அவளைக் கண்டால் விளக்கெண்ணெய் குடித்ததுபோல் முகம் சுளிப்பவன். தன் காலத்திற்குப் பிறகு எப்படி காப்பாற்றுவான்? விஷமாய் நினைக்க மாட்டானா?

தேவியைப் பற்றி, அவள் எதிர்காலத்தைப் பற்றி நினைத் தாலே, படுக்கும் பாய்கூட முள்ளாய்க் குத்தியது கோதைக்கு.

''என்னங்க! கொஞ்ச நாளா இந்தப் பக்கம் ஆளே காணோம்?'' என்றான் சிரித்தபடி ரகுராஜ்.

''வீட்ல கல்யாணம். இப்படி அப்படி அசைய முடியலே!''

''கல்யாணமா? உங்களுக்கா?''

அந்தக் கேள்வி அவசர அவசரமாய் வெளிவந்தவுடன் தன் நாக்கைக் கடித்துக் கொண்டான். தேவியின் முகம் சட்டென்று வாடிப் போனதைக் கண்டு பதறினான்.

''ஸ... ஸாரிங்க!''

''எதுக்குங்க ஸாரி? இப்படி ஸாரி கேக்கறதுதான் எனக்கு வருத்தமாயிருக்கு! எனக்குக் கல்யாணமே ஆகாதுன்னு முடிவே பண்ணிட்டீங்களா?''

''ஐயோ! தேவி! நிஜமாங்க... அந்த அர்த்தத்திலே சொல்லலை. நான் கேட்டது வேற விதமா. சரிங்க! இப்ப அதைப் பத்தியே பேசி இன்னும் சங்கடப்பட்டுக்கிட்டிருக்க வேண்டாம்.

புக்ஸ் படிச்சிட்டீங்களா? பாலகுமாரனோட 'முள் முடிச்சு' பிடிச்சிருக்கா?''

''அழகா பேச்சை மாத்தறீங்க. வேற நல்ல புக்ஸ் எடுத்துக் குடுங்க.''

''நான் ஒரு புக் படிச்சேங்க தேவி. 'இரண்டாவது தாலி' ராஜேஷ்குமார் எழுதினது ரொம்ப நல்ல கதை. படிங்க. படிச்சிட்டு அசந்து போயிடுவீங்க.''

''அதையே குடுங்க.''

தன் மேஜை டிராயரைத் திறந்து அந்தப் புத்தகத்தை எடுத்துக் கொடுத்தான்.

இன்னும் வேறு சில புத்தகங்களையும் தேர்ந்தெடுத்தாள்.

''வர்றேங்க.''

''வாங்க.''

போனவளையே இமைக்காமல் பார்த்தான்.

'இந்தப் பொண்ணையா... கள்ளம் கபடமில்லாத இந்த வெள்ளை உள்ளத்தையா தார் பூசிக் களங்கப்படுத்துகிறார்கள்? தேவி! உனக்குத் தெரியுமா? என் இதயத்தில் உனக்கு எவ்வளவு பெரிய இடத்தை ஒதுக்கி வைத்திருக்கிறேன் என்று?'

**சா**ப்பாடு முடிந்து, சமையலறையைச் சுத்தப்படுத்திவிட்டு வந்து படுத்தாள். கழுத்தெல்லாம் கசகசத்தது. எழுந்து முகம், கழுத்தையெல்லாம் கழுவிக் கொண்டு நனைந்து விட்டிருந்த புடவையைக் கழற்றி வேறொன்றை உடுத்த எண்ணிப் பெட்டியைத் திறந்தாள்.

பெட்டியின் மூலையில் வித்யாதரன் சிரித்துக் கொண்டிருந்தான்.



மெல்ல அதை எடுத்தவள் சிறிது நேரம் அதையே பார்த்துக் கொண்டிருந்தாள். பின் இரண்டாய், நாலாய், எட்டாய்க் கிழித்தாள்.

நிஜமே சொந்தமில்லாதபோது... நிழல் எதற்கு?

ரகு கொடுத்த 'இரண்டாவது தாலி'யைக் கையில் எடுத்துக்கொண்டு படுத்தாள். புத்தகத்தைப் பிரித்தவுடன் தொப்பென்று ஏதோ ஒன்று மேலே விழ... பல்லியோ, கரப்பானோ என்கிற பயத்தில் உதறிக் கொண்டு எழுந்தாள்.

ஒரு சிவப்பு நிற கவர் கதவோரத்தில் போய் விழுந்தது. என்ன இது?

பரபரப்பாய்ப் போய்ப் பிரித்துப் பார்த்தாள்.

ஒரு சின்ன வெள்ளைக் காகிதத்தில் இரண்டே வரிகள்...

'உங்களுக்கு விருப்பமென்றால்... உங்கள் பெயருக்கு முன் இனிஷியலாக நானிருப்பேன்.'

'இது ரகுராஜின் கையெழுத்துதான்! குண்டு குண்டாகச் சாய்ந்த கையெழுத்து... அவளுக்குப் பரிச்சயமானது.'

'என்ன அர்த்தம் இது? காதல் கடிதமா? யாருக்கு? எனக்கா? சேச்சே! நிச்சயம் எனக்கில்லை.'

அப்படியெனில் யாருக்கு? அவன் வேறு எந்தப் பெண்ணையோ காதலிக்கிறானா?

'சே! நான் ஏன் அதையெல்லாம் நினைக்கிறேன்? அவன் யாரைக் காதலித்தால் எனக்கென்ன? சரி. தவறுதலாய்க் கடிதத்தை இதில் வைத்திருப்பான் போலும்!'

மறுநாளே அவள் லைப்ரரிக்குச் சென்றாள். வரும்போதே ரகு பார்த்துவிட்டான். உள்ளே ஏழெட்டுப் பேர் புத்தகங்களை ஆராய்ந்து கொண்டிருந்தனர்.

சற்றே உதறலாக இருந்தது ரகுவுக்கு.

''என்ன நீங்க? அஜாக்கிரதையா இருக்கீங்க? இந்த லெட்டர் இந்த புக்குக்குள்ள தவறுதலா வச்சிட்டு இருக்கீங்க.''

'ச்சை! சரியான மண்டுவாக இருக்காளே. இது உனக்காக நான் எழுதின லெட்டர் தேவி.'

''த... தாங்க்ஸ்!''

'இது உங்களுக்காக எழுதின லெட்டர்னு சொல்வீங்கன்னு எதிர்பார்த்தேன். அந்த அதிர்ஷ்டம் எனக்கில்லையா?' ஏமாற்றத்துடன் திரும்பிவிட்டாள் தேவி.

## 12

மொத்தம் இருநூற்று எண்பது ரூபாய் எண்ணிப் பெற்றுக் கொண்டபோது சிறகு விரித்துப் பறப்பது போன்ற பரவசம் ஏற்பட்டது தேவிக்கு.

அது ஒரு சிறிய ஷூ கம்பெனி. ஷூவின் உட்பாகத்தில் வயர் கூடை பின்னுவது போல் அதிலும் நேர்த்தியாய்ப் பின்ன வேண்டும். ஒரு ஜோடி ஷூவிற்கு நாற்பது ரூபாய். எதிர்வீட்டு தேவகி கொடுத்த யோசனைப்படி... ஒவ்வொரு கம்பெனியாய் ஏறி இறங்கி ஏமாறுவதைவிட இப்படி வீட்டிலிருந்தபடி கைத்தொழில் செய்து சம்பாதிக்கலாம். அவசர அவசரமாய்ப் பெயருக்கு நாலு வாய் சாப்பிட்டு- சமைத்து டப்பாவில் அடைத்துக் கொண்டு, பல்லவனில் நசுங்கி அலுவலக நாற்காலியில் அமர்ந்து வேலை செய்து வாங்கும் சம்பளம் எல்லாச் செலவிற்கும் போக எவ்வளவு மிஞ்சும்? இந்த ஷூ கம்பெனியில் ஒரு வாரத்திற்குத் தேவையானதை வாங்கிக் கொண்டு வந்து வீட்டிலேயே பின்னலாம். மாதத்திற்கு ஆயிரத்திற்கு மேல் சம்பாதிக்கலாம்.



தேவி உடனே சம்மதித்தாள். அவளால் தினத்திற்கு ஒரு ஜோடி ஷூ பின்ன முடிந்தது. இரவில் கதைப் புத்தகம் படிக்க மட்டும் நேரத்தை ஒதுக்கிக் கொண்டாள். 'ஏனோ... அப்படியாவது அந்த லைப்ரரிக்குப் போகலாம். ரகுவைப் பார்க்கலாம். இல்லாவிட்டால் அவனைப் பார்க்கவே முடியாது.'

அப்படியொரு எண்ணம் தோன்றியதும் தூக்கி வாரிப் போட்டது.

'ஏன் அடிக்கடி ரகுவைப் பற்றி நினைக்கிறேன்? இது தவறில்லையா? அவன் என்னைப் பற்றிச் சிந்தித்தே பார்க்காத போது... நான் மட்டும் ஏன் அவனையே நினைக்கிறேன்?'

'இதோ! முதன் முதலாய் என் உழைப்பில் வாங்கிய சம்பளம். அம்மாவிற்கு எதையாவது வாங்கிச் செல்லலாமா? இப்போது வேண்டாம். இன்னும் கொஞ்சம் பணம் சேர்த்து வைத்து தீபாவளிக்கு அம்மாவிற்கு ஒரு புடவை எடுத்துத் தரலாம்.'

தீபாவளி என்றதும் 'திக்' கென்றானது.

'சுகந்திக்கு அது தலை தீபாவளி இல்லையா? மாப்பிள்ளையை அழைத்துச் சீரெல்லாம் செய்யணுமே. அம்மாவிடம் அதற்கெல்லாம் ஏது பணம்? சிம்பிளாக டிரஸ் எடுக்கற அளவுக்காவது பணம் வேண்டுமே. இன்னும் தீபாவளிக்கு இரண்டு மாதம்தானே இருக்கிறது? அதற்குள் முடிந்தளவு நாம் சேர்க்கலாம். முரளியிடம் பத்துப் பைசாகூட எதிர்பார்க்க முடியாது.'

ஷூ கம்பெனி மந்தைவெளியில் இருந்தது. அங்கிருந்து 1 ஜே பஸ்சில் ஏறிக்கொண்டாள். அந்த பஸ் அவள் வீட்டிற்கு ஒரு

ஸ்டாப்பிங் முன்னதாகவே நிற்கும். அங்கிருந்து நடந்தே வீட்டிற்கு வரவேண்டும். இருட்டி விட்டது.

குறுக்கு வழியில் சீக்கிரம் போயிடலாம். மாதா சர்ச் ரோட்டில் புகுந்து நடந்தாள். சன் டி.வி.யில் ரஜினி படம் ஓடிக் கொண்டிருந்தது. கதவுகள் சாத்தப்பட்டுத் தெருக்கள் வெறிச்சோடிக் கிடந்தன.

நடையை எட்டிப் போட்டாள் தேவி. டக் டக் என்று செருப்பு சப்திக்க நடந்தாள்.

'சர்க்... சர்க்' என்று இன்னொரு சப்தம். வெகு நேரமாகத் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது.

மனதில் ஏதோ மணியடிக்க... மெதுவாய்த் திரும்பிப் பார்த்தாள்.

கன்னங்கரேல் என்று நெற்றியில் தழும்புடன், சிவந்து போன கண்களுடன் பீடா மென்று, 'சர்க்' கென்று எச்சிலைத் துப்பிவிட்டு இவளைப் பார்த்துச் சிரித்தபடி வந்து கொண்டிருந்தான் அவன்.

தேவிக்குச் சகலமும் நடுங்கியது. அவன் பஸ்சிலிருந்தே தன்னைப் பின் தொடர்வது புரிந்தது. ஒரு சடன் பிரேக்கில் அவள் மீது சாய்ந்தது நிச்சயம் எதேச்சையாக அல்ல என்று இப்போது தெரிந்தது.

அவன் கண்களில் அப்பட்டமாய்க் காமம் வழிந்தது. எதற்கும் அஞ்சாததைச் செய்யத் துணிந்த முகம்.

'கடவுளே... என்ன செய்வேன்? கண்ணுக் கெட்டியவரை வேறு யாரையும் காணோமே? புத்திகெட்டதனமாய் இப்படிக் குறுக்கு வழியில் வந்தது எத்தனை பெரிய தவறு!'



தெரு விளக்குகள் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன. முகம் தெரியாத அளவிற்கு இருள் பரவிக் கொண்டிருந்தது.

'எந்த வீட்டின் கதவையாவது தட்டி நுழைந்து விடலாமா?' ஓட்டமும் நடையுமாய் வியர்வையை வழித்துப் போட்டவள்- மெல்லத் திரும்பிப் பார்த்துத் 'திக்' கென்று அதிர்ந்தாள்.

வெகுவிரைவாய் வந்து கொண்டிருந்தான். அவனுக்கும் அவளுக்கும் பத்தடி இடைவெளிதான்.

''ஏய் தேவி! இவ்ளோ நேரமா? எவ்வளவு நேரமா காத்திருக்கேன் தெரியுமா? வா வா... வீட்ல காத்துக்கிட்டு இருக்காங்க!'' சட்டென்று அவள் கையைப் பற்றியது ஒரு முரட்டுக் கரம்.

''ஐயோ...!'' என்று கத்த வாயெடுத்தவள்... அந்தக் குரலுக்குச் சொந்தக்காரன் ரகு என்பதை உணரச் சில விநாடிகள் பிடித்தது... வாயை மூடிக் கொண்டாள்.

ரகு அவள் தோள் மீது கைபோட்டு மெல்ல அவள் காதில் கிசுகிசுத்தான்.

''கொஞ்ச நேரம் இதையெல்லாம் சகிச்சுக்குங்க, தேவி!'' என்றவன் அவள் மேனியின் நடுக்கத்தை உணர்ந்து ஆதரவாய் அணைத்தபடி நடந்தான்.

தெருமுனைக்கு வந்த பின் ஓரக் கண்ணால் திரும்பிப் பார்த்தான். அவன் ஆளே காணோம். கையை விலக்கிக் கொண்டான்.

நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி கண்ணீர்விட்டாள். நெஞ்சின் மீது கை வைத்துப் படபடப்பை ஆசுவாசப் படுத்தினாள்.

''ரொம்ப நன்றிங்க! நீங்க மட்டும் வராமலிருந்தால்...''

''நன்றியெல்லாம் இருக்கட்டும். நீங்க எங்கே இந்த நேரத்தில... அதுவும் ஆளரவம் இல்லாத இந்தப் பக்கம்?''

அவள் எல்லாமே சொன்னாள்.

''நல்ல குறுக்கு வழிய கண்டுபிடிச்சீங்க போங்க! இப்ப உங்க பின்னாடி வந்தது யார் தெரியுமா? கேசவன். கேடி கேசவன்னுதான் பட்டப் பெயர். ரெண்டு வாரத்துக்கு முன்னாடிதான் ஜெயில்லே யிருந்து வந்தான். கற்பழிப்பு, கொலையெல்லாம் அவனுக்கு அல்வா சாப்பிடறது மாதிரி. சாட்சி இல்லாம தப்பைச் செய்யறதில கில்லாடி... இந்த தெருவில் என் ஃபிரெண்ட் கோபால் வீடு இருக்கு. அவனோட மாடியில பேசிட்டிருந்தப்பதான் யதேச்சையா ஜன்னல் வழியா உங்களையும் அவனையும் பார்த்தேன். புரிஞ்சிக்கிட்டேன். அதனால்தான் உங்களுக்கு நெருக்கமானவன் போல் நடிச்சேன். ஆள் ஓடிட்டான்.''

'வெறும் நடிப்புதானா ரகு?'

''......''

''ரொம்ப பயந்து போயிட்டீங்க. உங்க வீடு வரைக்கும் நான் துணைக்கு வரட்டுமா?''

'வீடு வரைக்கும் மட்டுமா ரகு?'

''ப... பரவாயில்லே. ரோடு வழியாகவே நான் போய்க் கறேன். நீங்க போங்க. நான் வர்றேங்க!'' கண்களால் நன்றி கூறிப் புறப்பட்டாள் தேவி.

ரகுராஜ் தன் உள்ளங்கையை உற்றுப் பார்த்தான். அவளைத் தொட்ட கை! அவளின் நடுக்கம் இன்னும் அதில்



மிச்சமிருப்பதுபோல் உணர்ந்தான். மெல்லக் கையை உயர்த்தி முத்தமிட்டான்.

## 13

நட்சத்திரக் காசுகளைக் கொட்டி எண்ணிக் கொண்டு இருந்தது வானம்.

சுவரில் வாலறுந்த பல்லி மட்டும் இவள் திருட்டுத் தனத்தைத் தலை உயர்த்திப் பார்த்துக் கொண்டு இருந்தது.

தன் தோள்பட்டையில் முகம் பதித்தாள்...

இன்னும் ரகுவின் வாசனை இருந்தது. அவன் மார்பின் கதகதப்பு, மூச்சுக் காற்றின் வெப்பம்... எதுவுமே அவளைவிட்டு அகலவில்லை.

'ரகு! நிஜமாய் சொல்லுங்கள். உங்கள் இதயத்தில் நான் இல்லையா? பிறகேன்... என் மீது உங்களுக்கு அவ்வளவு அக்கறை? வெறும் மனிதாபிமானம் என்று கூறிக் கதை கட்டாதீர்கள். தெரியும். உங்கள் மனதில் நான் இருக்கிறேன். அதை வெளிப்படுத்த இன்னுமா தயக்கம்?'

'ஏங்கிப் போய் இருக்கிறேன் ரகு. வெட்கத்தைவிட்டுச் சொல்கிறேன். எனக்குக் கணவன் வேண்டும். அவன் அருகாமை வேண்டும். மீசை குத்த முத்தம் வேண்டும். அவனுள் நான் காணாமல் போக வேண்டும். அழகான குழந்தை வேண்டும். என்னுள் எத்தனை வேண்டுதல்கள்! ஆனால்... ஆனால்... இதையெல்லாம் நான் எப்படி ரகு உங்களிடம் சொல்ல முடியும்?

'நான் என் மனதை வெளிப்படுத்த... நீங்கள் மறுக்க... பிறகு இப்போதுள்ள நட்பைக்கூட இழக்க வேண்டி வரலாம். ஐயோ!

நினைக்கவே முடியவில்லையே. எனக்கு இதுவே போதும். இந்த நட்பு மட்டும் போதும். இதிலும் ஒரு சுகமான அவஸ்தை இருக்கத்தான் செய்கிறது!'

கண்களை இறுக்க மூடிக் கொண்டாள். ஆனால் தூக்கம்தான் வரவில்லை.

திருமணத்துக்கு முன் காதல் என்பது முடிவு பெறாத நூலுக்கு மிகச் சிறியதொரு முகவுரை போன்றது.

கரிய வானத்தில் பெயர் தெரியாத வெள்ளை நிறப் பறவை பறந்து சென்றது. அந்த இரவு நேரத்தில் அதைப் பார்க்க அபரிமிதமான அழகோடு இருந்தது.

தேவியும் அந்தப் பறவை போல்தான். இருட்டில் வழி தெரியாமல் ஏதோ ஒரு போக்கில் போய்க் கொண்டு இருப்பதைப் போல... வாழ்க்கை எனும் வானத்தில் எந்தவிதக் குறிக்கோளுமின்றிப் போய் கொண்டு இருக்கிறாள்.

'தேவி! உன்னை எந்தளவு நேசிக்கிறேன் தெரியுமா? எத்தனையோ வழிகளில் நான் சூட்சமமாக என்னைத் தெளிவுபடுத்தியும் புரிந்துகொள்ளவில்லையே! இல்லை... புரிந்தும் புரியாத மாதிரி நடிக்கிறாயா?'

'ஏன்? நான் கிறிஸ்தவன் என்பதாலா? அல்லது ஆண்களெல்லாம் பெண்களை ஏமாற்றவே பிறந்தவர்கள் என்கிற தவறான கருத்து உன் மனதில் பசுமரத்தாணி போல் பதிந்து போனதாலா?'

'ஐந்து விரல்களும் ஒரே மாதிரியாகவா இருக்கிறது? பாவம். நீ வாழ்க்கையில் நிறைய அடிபட்டவள். தந்தை, தமையன், வித்யாதரன் என்று ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக உன்னைப் பாதிக்க வைத்துவிட்டார்கள்.



'உன் வலிக்கு நான் மருந்தாக இருப்பேன் தேவி! இதை உன்னிடம் வெளிப்படையாகச் சொல்லத் தயக்கமாக இருக்கிறது!

'பார்ப்போம். நமக்கிடையே உள்ள திரையை எப்படி விலக்கப் போகிறோம் என்று!'

அவள் நினைவுகளுடன் உறங்கிப் போனான், ரகு.

''யார்டா அந்தப் பொண்ணு?''

மேஜை மீது சாய்ந்தவாறு அமர்ந்து ரகுவையே கூர்மையாகப் பார்த்துக்கொண்டு இருந்தான் கோபால்.

''எந்தப் பொண்ணு?''

''ஒண்ணுந்தெரியாத மாதிரி பாவ்லா காட்டாதே. ஒழுங்கா சொல்லிடு.''

''நீ என்ன சொல்றேன்னே புரியலை.''

''ஏற்கெனவே சிவாஜி சாருக்கு கொடுத்திட்டாங்களேன்னு பாக்கறேன். இல்லேன்னா 'நடிகர் திலகம்' பட்டத்தை உனக்கு வாங்கித் தந்திடுவேன்.''

''நேரே விஷயத்துக்கு வா.''

''நேத்து எங்க வீட்டுக்கு வந்தியே... திடீர்னு இறங்கிப் போய்...''

சங்கோஜமாய்ச் சிரித்தான்.

''அவளா? தெரிஞ்ச பொண்ணுடா.''

''எனக்குத் தெரியாம யார்டா அது, உனக்குத் தெரிஞ்சவ?''

''ஏய்...ஏய்... என்னடா நீ? அவ என்னோட லைப்ரரி மெம்பர்.''

''வெறும் மெம்பர் மட்டும்தானா?''

''என்ன நீ. குறுக்குக் கேள்வியெல்லாம் கேக்கறே?''

''டேய் மாமு! எல்லாத்தையும் பார்த்துக்கிட்டுதான்டா இருந்தேன். அப்படியே அய்யா அரவணைச்சு அழைச்சிட்டு போனீங்களே. வெறும் மெம்பரா இருந்திருந்தா அவளோட செருப்பு பிஞ்சிருக்குமேடா, அடிக்கிற அடியில. ஒருவேளை கிராக்கியா? இருந்தா சொல்லுடா கையெல்லாம் அரிக்குது''

''கோபால்!'' அதட்டினான் கோபமாக.

''தேவியைப் பத்தி அப்படியெல்லாம் பேசாதே.''

''வாங்க சார் வழிக்கு. ஏண்டா நான் உன் நண்பன்தானே! என்கிட்டயே மறைக்கிறியே! உன் மூஞ்சைப் பார்த்தாலே தெரியுதேடா. காதல் ஏக்கம் கண்ணில வழியுது.''

''ஏய்... நீ பாட்டுக்கு உளறாத. ஐ லவ் ஹர். பட், அவ மனசு எப்படின்னு எனக்குத் தெரியாது.''

''தோள்ல கைபோடற அளவுக்கு அனுமதிச்சிட்ட பிறகும் இந்த சந்தேகம் ஏண்டா உனக்கு?''

''ஐயோ! உனக்குத் தெரியாதுடா.'' நேற்று நடந்த சம்பவத்தை விளக்கினான்.

''ஓஹோ... அப்படிப் போகுதா கதை. ஏன்டா, நீதான் கவிஞனாச்சே. ஒரு பாட்டுப் பாடி அவ மனசைத் தெரிஞ்சுக்கோயேன்.''

''சும்மாயிருடா. கிண்டல் பண்ணிக்கிட்டு.''

''மூடி மறைச்சு என்னப்பா லாபம்? பட்டுனு கேட்டுடு.''

''சரி... சரி... இப்ப கொஞ்சம் வாயை மூடிக்க. கடைக்கு வர ஆரம்பிச்சிட்டாங்க, பார்.''



## 14

ஒவ்வோர் இதயத்திற்கும் தனியான சுமையும் வேதனையும் உண்டு. ரகுவிற்கும் அந்த வேதனை உண்டு. அதற்குக் காரணம் ஸ்டெல்லா. அவனுக்குத் தூரத்து உறவு முறைப்பெண். இவர்கள் குடும்பத்தைவிட வசதி.

ஸ்டெல்லா அழகி. புத்திசாலி.

ரகுராஜ் பி.ஏ. படித்து இருந்தான். மதுரை அரசரடி கிராமத்தில் டேனியல் மதிப்பும் மரியாதையுமிக்க மனிதராய் வலம் வந்தார். அவர் பேச்சுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் கிராமத்து மக்கள். மனிதர் கறாரும், கண்டிப்புமானவர். அப்படிப்பட்டவருக்கு ஒரே மகனாய்ப் பிறந்த ரகுராஜ் அமைதியான சுபாவம் கொண்டவன்.

அழகான எல்லாமே அவன் பேனாவிற்கு மயக்கம். மயக்கம் தந்த போதையில் கவிதைகள் பிறந்தன. இப்படித்தான் அவன் கவித்திறன் வளர்ந்தது. வெயிலில் காயும் பாறையைக்கூட அவன் பேனாவிட்டு வைக்காது. அவனுக்குக் கவிதை மீது காதலே உருவாகிவிட்டது.

ஸ்டெல்லாவின் அழகும் கவிதையாய்ப் பிறந்தது. அதை அவன் காகிதத்தில் மட்டுமல்ல, இதயத்திலும் எழுதி வைத்தான். அவளும் ரகுவிடம் பழகினாள். சிரித்துப் பேசி வெளிப்படையாகப் பழகிய விதம் ரகுவை வேறுவிதமாய்க் கனவு காணச் செய்தது.

தன் ஆசையை அம்மா ரீட்டாவிடம்... அவள் முந்தானையைத் தன் விரலில் முடிச்சுப் போட்டுப் போட்டு அவிழ்த்தபடி வெளிப்படுத்தியபோது சற்று தயங்கவே செய்தான்.

ஸ்டெல்லாவின் தந்தை செல்வராஜ் ஒப்புக் கொள்வாரா? உப்புசப்பில்லாத ஒரு காரணத்துக்காக இரண்டு வீட்டாரும் பேசிக் கொள்வதில்லை. அதுவும் ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரி. கூடவே பிறந்த அலட்சியம். உபரியாகச் செல்வம். இதனால் மனுஷன் யாரையும் மதிப்பதில்லை.

டேனியல் விவரம் தெரிந்து கோபத்தில் குதித்தார். ரகுவிற்கு அப்பாவிடம் பயம் இருந்தது. எதிர்த்து ஒரு வார்த்தை இதுவரை பேசியதில்லை. ஆனாலும் அவன் வீம்பாக இரண்டு நாட்கள் சாப்பிடாமல் இருந்தான். டேனியல் மனதிலும் கொஞ்சம் ஈரம் இருந்தது.

தன் பிள்ளைக்காகப் பகை மறந்து செல்வராஜ் வீட்டிற்குப் பெண் கேட்கச் சென்றபோது, உட்காரக்கூடச் சொல்லவில்லை அவர்.

பைப் புகைத்தபடி வந்தவர்களை அலட்சியமாய் ஏறிட்டார்.

டேனியல் தான் வந்திருக்கும் காரணத்தைச் சொன்னபோது உதட்டிலிருந்த பைப் நழுவிக் கீழே விழுந்தது.

அடுத்த விநாடி அந்த பங்களாவே அதிரும்படி... ''ஸ்டெல்லா...'' என்று கத்தினார் கோபமாக.

''என்ன டாட்?'' ரோஸ் நிற ஹவுஸ் கோட்டில் தேவதைபோல் மாடியிலிருந்து இறங்கி வந்தாள் ஸ்டெல்லா.

''இங்கே வா.''

''ஹாய் அங்கிள்! ஹலோ ஆன்ட்டி! எப்ப வந்தீங்க? ஹேய் ரகு! என்ன அங்கேயே நின்னுட்டே? உள்ளே வா மேன்.''

''ஸ்டெல்லா... இவங்க என்னென்லாமோ சொல்றாங்களே! அதெல்லாம் உண்மையா?''



முகம் சுருங்கிப் போனது ஸ்டெல்லாவிற்கு.

''வாட்? என்ன சொன்னாங்க? என்ன உண்மை?''

''நேரடியா கேக்கறேன். நீ ரகுவைக் காதலிக்கிறியா?''

''யூ மீன் லவ்? நான்... ரகுவையா? என்ன டாடி நீங்க... உங்களுக்கு என்னப் பத்தி தெரியாதா?''

''அதனாலதாம்மா எதிர்லேயே வச்சு கேக்கறேன். ரகுவுக்கு உன்னைப் பெண் கேட்டு வந்திருக்காங்க. அவன் உன்னைக் காதலிச்சானாமே!''

அதைக் கேட்டு அசந்து போனாள்.

''ரகு! வாட் இஸ் திஸ்? என்ன கோமாளித்தனம் இதெல்லாம்! நான் உன்னை லவ் பண்ணினேனா? நீயா கற்பனை பண்ணி... ஓ.கே... பாஸ்ட் இஸ் பாஸ்ட்! லுக் ரகு! ஆல் ரெடி ஐயம் எங்கேஜ்டு! யெஸ்... நான் லவ் பண்றேன். என் ரஞ்சனை. இன்னிக்கு நேத்தல்ல. நாலு வருஷமா. என் டாடி எங்க காதலுக்குப் பச்சைக் கொடி காட்டிட்டார். அப்படியிருக்க நான் எப்படி உன்னை? நான் உன்னைச் சலனப்படுத்தியிருந்தா... ஐ ஃபீல் ஃபார் இட்! ரியலி சாரி! பட் நான் உன்னோட நல்ல பிரண்ட்ஷிப்பாதான் பழகினேன். ஓ.கே. எல்லோரும் காபி சாப்டீங்களா? ஒரு நிமிஷம். இதோ வந்திடறேன்.'' சட்டென்று சகஜ நிலைக்குத் தன்னைக் கொண்டு வந்தாள் ஸ்டெல்லா.

செல்வராஜிடமிருந்து ஒரு நமுட்டுச் சிரிப்பு வெளிப்பட்டது. அவமானத்தில் சிறுத்துப் போன டேனியல்தான் தடுத்தார்.

''வேணாம் ஸ்டெல்லா! வரும்போது சாப்பிட்டுத்தான் வந்தோம். வர்றோம். ஏய், வாடா உலக்கை...'' ஸ்தம்பித்து

நின்றிருந்த ரகுவைக் கையைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துச் சென்றார். ரீட்டா ஸ்டெல்லாவையே திரும்பித் திரும்பிப் பார்த்தபடி வந்தாள்.

ரகு தன் ஆசையைக் கூறுவதற்கு முன்பிருந்தே ரீட்டா ஸ்டெல்லா தன் வீட்டு மருமகளாக வர வேண்டும் என்று ஆசைப்பட்டாள். இப்போது தன் ஆசை கருகிப் போனதே என்பதைவிட, தன் மகனின் காதல் கருகிப் போய்விட்டதே என்றுதான் வருத்தப்பட்டாள்.

தன் வீட்டிற்குள் வந்ததும் வராததுமாய் ரகுவைப் 'பளா'ரென ஓர் அறை விட்டார் டேனியல்.

"இதுவரைக்கும் நம்ம குடும்பத்துக்கென்று ஒரு கவுரவம். மரியாதை இருந்தது. நான் கேட்டு இல்லைன்னு இந்த அரசரடியில் ஒரு பய சொன்னதில்லை. ஆனா... இன்னைக்கு உன்னால என் மூஞ்சியில கரிய பூசிட்டான்டா அந்த செல்வராஜ். அவன் யாரு? பரதேசிப் பயல். அவனோட அம்மா அப்பாவெல்லாம் எங்க பண்ணையில வேலை செஞ்சு கஞ்சி குடிச்சு வளர்ந்தவங்கடா. புதுப் பணக்காரன். அவன் முன்னாடி என்னைத் தலைகுனிய வச்சிட்டியே. செக்கு மாடு மாதிரி வளர்ந்திருக்கே. ஒரு புண்ணாக்கும் தெரியலே. இதுல வேற... கவிதையா எழுதறே கவிதை! கையை உடைச்சிடுவேன் படவா. அந்தப் பொண்ணு ஸ்டெல்லா திருத்தமா சொல்றாளே. உன்கிட்டே நட்பாதான் பழகினேன்னு. இவர் பெரிய ஹீரோ. எல்லாப் பொண்ணுங்களும் இவரைப் போட்டி போட்டுக் கிட்டு காதலிக்கிறாங்க!"

"என்னங்க நீங்க! அவனே மனசொடிஞ்சு போய் இருக்கான். நீங்க வேற கண்டபடி திட்டிக்கிட்டு."



5426619

"நீ வாயை மூடுடி மொதல்ல! சப்போர்ட் பண்ணி.என்ன அந்த ஆர்மிக்காரன் முன்னாடி வாயைப் பொத்தி நிக்க வச்சது போதாதா? ஒழுங்கா வேட்டி கட்டத் தெரியாதவனுக்கெல்லாம் எதுக்குடா காதல்? இனி காதல்... ஊதல்னு பேச்செடுத்தே... பல்லைத் தட்டிடுவேன் ராஸ்கல்! அம்மாவையும் புள்ளை யையும் சேர்த்து வச்சி புதைச்சிடுவேன். ஒழுங்கா நாளைலேயிருந்து ஊரைச் சுத்தாம கோழிப்பண்ணையைப் போய் பார்த்துக்க. இல்ல, ஒரு வாய் சோறுகூடப் போட மாட்டேன். சொல்லிட்டேன். ஆமா!" துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு போய்விட்டார் டேனியல்.

தோளுக்கு மிஞ்சி வளர்ந்த பிள்ளையைத் தோழனாக நினைத்துப் பழகுவதுதான் தந்தைக்கு மரியாதை.

ரகு ஏற்கெனவே உடைந்து போயிருந்தான். ஸ்டெல்லா தன்னைக் காதலிக்கவில்லை என்பதே பெரிய இடியாக இருந்தது. அதற்கு மேல் அப்பா இப்படிக் கன்னத்தைப் பதம் பார்த்தது... அவன் மீசையைத் துடிக்க வைத்தது. அடுத்த வேளை சாப்பாட்டிற்குகூட அப்பாவிடம் பேச்சு வாங்கணுமா?

ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது.

மறுநாளே... ஒரு துண்டுக் காகிதத்தில் இரண்டு வரி எழுதி அப்பாவின் கண்ணில் படும்படி மெழுகுவத்தி ஸ்டாண்டில் வைத்துவிட்டு, வைகையில் ஏறிச் சென்னைக்கு வந்துவிட்டான்.

ரீட்டாதான் குய்யோ முய்யோ என்று அழுதாள். தன் கணவனைத் திட்டினாள். டேனியல் தன் தவிப்பை வெளிக் காட்டிக் கொள்ளவில்லை. ஆனால் தன் மனைவியைச் சமாதானப்படுத்தினார்.

"இளவயசு வேகம்! விவேகமா சிந்திக்கத் தோணாத வயசு. விடு... தன்னால வருவான். என்னைக்காவது ஒருநாள் வழி

தவறிப் போன ஆடு இந்த மந்தைய தேடித்தான் வந்தாகணும். அவனுக்கு ஒண்ணும் ஆகாது. ஜீஸஸ் அவனுக்குத் துணையிருப்பார். நீ சாப்பிடு மொதல்ல,'' என்று ரீட்டாவைச் சாப்பிட வைத்து அவர் வயிற்றுப் போக்கு என்று காரணம் சொல்லிச் சாப்பிடாமலேயே சென்றார். சமாதானம் சொல்லிட் டாரேயொழிய... மனசு கிடந்து அடித்துக் கொள்ள, சென்னை யில் வசிக்கும் தன் நண்பர் பத்ரிக்கு விளக்கமாய் எழுதிப் போட்டார். 'ரகுவைக் காண நேர்ந்தால் எனக்குத் தகவல் கொடு,' என்று.

எந்தவித முன்யோசனையும் இன்றி ரகு சென்னையில் கால் வைக்கவில்லை. ஒரு குறிக்கோளுடன்தான் வந்தான். தன் எழுத்தின் மீது அவனுக்கு அபார நம்பிக்கை. சினிமாவில் கவிஞர் கண்ணதாசன் போல் பெரிய பாடலாசிரியராக வர வேண்டும் என்கிற வெறி அவனுள் இருந்தது.

ஒவ்வொரு சினிமா கம்பெனியாக ஏறி இறங்கினான். வாசலோடு விரட்டியடித்தவர்கள் பலர். என்ன ஏது என்று விசாரித்தவர்கள் சிலர்.

அதில் ஒரே ஒரு புண்ணியவான் மட்டுமே வாய்ப்பு தந்தார். கனவு சீன்! கதாநாயகி குளிக்கும்போது மறைந்திருந்து பார்த்து குளிர்காயும் கதாநாயகன் கனவு காணும் பாடல்! படத்திற்கு அவசியமில்லாத, சம்பந்தமில்லாத காட்சிதான். ஆனாலும் கிளுகிளுப்பிற்காக அத்தியாவசியமாக்கப்பட்டது காட்சி. இசை அமைப்பாளர் போட்ட ட்யூனுக்கு ரகுவிடமிருந்து அழகாய் வார்த்தைகள் வந்து விழுந்தது. ஆனால் இசையமைப்பாளர் முதல், தயாரிப்பாளர், டைரக்டர் வரை யாருக்குமே திருப்தி யில்லை.



அவர்கள் எதிர்பார்த்ததோ வேறு விதம்- சொல்லப் போனால் தோலுரித்த வாழைப்பழம் போல பச்சையான இச்சை வார்த்தைகளை! ஆனால் ரகு இலைமறைவு காயாக எழுதினான். எவ்வளவோ வற்புறுத்தியும் அவன் அப் பட்டமாக, கொச்சைத்தனமாக எழுத மறுத்தான்.

கையெடுத்துக் கும்பிட்டு அவனை அனுப்பிவிட்டனர். அவன் இந்த திரையுலகைப் பார்த்து வேதனைப்பட்டான். இரட்டை அர்த்தத்தோடு எழுதத் தெரிந்தால்தான் இரண்டு வேளையாவது சாப்பிட முடியும் என்கிற எழுதாத சட்டம் இருப்பது அவனுக்குத் தெரியாது. வேதனைப்பட்டான். சினிமாவுக்கே டாட்டா சொல்லிவிட்டு... கழுத்தில், கையில் கிடந்த செயின் மோதிரங்களை விற்று, விலைக்கு வந்த ஒரு லெண்டிங் லைப்ரரியை வாங்கினான். அது ஏற்கெனவே நிறைய உறுப்பினர்களைக் கொண்டு பிரபலமாகி இருந்ததால் ரகுவுக்குச் சிரமமில்லாமல் ஓரளவு வருமானம் கிடைத்தது.

இதோ... சென்னைக்கு வந்து அப்படி இப்படி என்று ஐந்து வருடம் ஓடிவிட்டது. எப்போதாவது அம்மாவின் நலம் விசாரித்து ஊருக்குக் கடிதம் எழுதுவான். அம்மா புலம்பி... 'ஊருக்கு வந்துடு' என்று ஏழெட்டுப் பக்கத்திற்குக் கண்ணீராலேயே பதில் எழுதுவாள். இரண்டு முறை அம்மாவும் அப்பாவும் சென்னைக்கே வந்து அழைத்தார்கள். பிடிவாதமாய் மறுத்துவிட்டான். டேனியல் கொஞ்சம் தளர்ந்துவிட்டார். எப்படியும் என்றாவது ஒருநாள் மதுரைக்குத்தான் போய் செட்டிலாகணும். வேறு வழியில்லை. ஆனால்... தேவி! அவளை மறக்க முடியுமா?

'ஏனிப்படி அவள் நினைவாகவே இருக்கிறேன்?'

குணமுள்ள பெண் ஒருவன் கருத்தைக் கவருவாள். புத்திசாலிப் பெண் ஒருவனின் கவனத்தைக் கவருவாள்.

அழகான பெண் ஒருவரின் கலையுணர்வை மயக்குவாள். ஆனால் பரிவும் பாசமும் உள்ள பெண்தான் அவனை உரிமையாக்கிக் கொள்கிறாள் என்பது போல தேவி என்னை உரிமையாக்கிக் கொண்டாளா?

என் மனதை அவளிடம் எப்படி வெளிப்படுத்தப் போகிறேன்? ஸ்டெல்லா போல் இவளும் என் இதயத்தில் நெருப்பள்ளிக் கொட்டிவிட்டால்?

தாங்குவேனா...?

## 15

பின்னி முடித்த ஷாக்களைக் கொடுத்துவிட்டு அதற்குண்டான பணத்தையும் ஒரு வாரத்திற்குப் பின்னுவதற்குத் தேவையான பொருட்களையும் பெற்றுக் கொண்டு வந்த தேவி எதிர்பார்க்கவில்லை.

ரோகினி கார்டன் என்று எழுதப்பட்ட தெருமுனை மஞ்சள் நிறக் கல்லின்மீது கையூன்றியபடி நின்றிருப்பது ரகுதானா? அவனேதான்!

தேவிக்குத் திடீரென உற்சாகம் பொங்கி வழிந்தது.

''என்னங்க இந்தப் பக்கம்? இங்கே உங்களுக்கு வேண்டியவங்க வீடு இருக்கா?''

''ம்கூம்! வேண்டியவங்க வந்திருக்காங்க. அவங்களைப் பார்த்துட்டுப் போகலாம்னு வெயிட் பண்றேன்,'' என்றான் குறும்பாகச் சிரித்தபடி.

''ஓ!'' என்றாள். குரலில் சுரத்தில்லை.

''சரி, வாங்க. போகலாம்.''



''நீங்கதான் யாருக்கோ வெயிட் பண்றதா சொன்னீங்களே!''

''அதான் வந்துட்டீங்களே.''

சட்டென்று அவனை நிமிர்ந்து பார்த்தவள் அவன் கண்களை சந்திக்கத் தெம்பின்றித் தலையைத் தாழ்த்திக் கொண்டாள். இதயம் பட்டாம்பூச்சியாய் படபடத்தது. ஆனால் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் கேட்டாள்.

''இன்னிக்கு லைப்ரரி இல்லையா?''

''உங்களுக்குத் தெரியுமே. ஞாயிறு லீவுன்னு!''

''மறந்துட்டேன்.''

சற்று நேரம் அமைதியாகவே நடந்தார்கள்.

''என்னங்க தேவி! ஒண்ணுமே பேச மாட்டேங்கறீங்க? நான் இங்கே வந்தது பிடிக்கலையா?''

''சேச்சே...!'' என்றாள் அவசரமாக.

''பின்னே? இவ்ளோ தூரம் உங்களுக்குப் பாதுகாப்பா இருக்கணும்னு வந்தேன். திரும்ப அந்தப் பொறுக்கி உங்ககிட்ட வம்பு பண்ணுவானோங்கற எண்ணத்தில... நீங்க என்னடான்னா...''

அவனையே நெகிழ்வாய்ப் பார்த்தாள்.

''இல்லைங்க ரகு! உங்களைத் திடீர்னு எதிர்பார்க்கலை... அதான்.''

''சரி, அத விடுங்க. சம்பளம் வாங்கியிருக்கீங்க. எனக்கு என்ன வாங்கித் தரப் போறீங்க?''

''என்ன வேணும்? கேளுங்க... நிச்சயம் வாங்கித் தர்றேன்!'' என்றாள் உற்சாகத்துடன்.

'உன் இதயத்தை' என்று தனக்குள் உச்சரித்துப் பார்த்தான்.

''சொல்லுங்க... என்ன வேணும்?''

''நிச்சயமா தருவீங்களா?''

''என்னால முடியற எதுவும்...''

''பரவாயில்லை! இப்ப வேணாம். சரியான சந்தர்ப்பம் கிடைக்கும்போது கேட்பேன். தரணும். வாக்கு மாறக் கூடாது!'' என்றவன், குறுகுறுவென அவளையே பார்த்தான்.

உள்ளங்கை வியர்த்துப் போனது தேவிக்கு.

மாலை நேரம். இலவசமாய்க் கிடைத்த காற்றை வாங்க மக்கள் கும்பல் கும்பலாய்க் கடற்கரை மணலில் நடந்தார்கள். வெளிச்சத்தை விரட்டிக் கொண்டு இருள் வந்து கொண்டிருந்தது.

''கொஞ்ச நேரம் பீச்ல உக்காரலாமா? உங்களுக்கு ஒண்ணும் அவசரமில்லையே!''

''இல்லே, வாங்க.''

நாகரீகமாய் இடைவெளிவிட்டு அமர்ந்தனர். ஓயாமல் எதையோ தேடித் தேடி வந்து போனது அலைகள்.

''தேவி!''

''ம்!''

''இந்த ஆரவாரமான அலைகளைப் பார்க்கும்போது உங்களுக்கு என்ன தோணுது?''

''தொட முடியாதுன்னு தெரிஞ்சும்... ஏதோ ஒரு குருட்டு நம்பிக்கையில கரையைத் தொட்டே தீருவதுன்னு விடாமுயற்சி பண்ணுது. என்னைப் போல...''



''என்னங்க நீங்க, நல்லா உற்சாகமா எதையாவது சொல்வீங்கன்னு பார்த்தா... ஈவ்னிங் மூடையே ஸ்பாயில் பண்றீங்க.''

''சட்டியில இருக்கறதுதானே அகப்பைக்கு வரும்.''

''சரி... என் சட்டியில என்ன இருக்குன்னு பார்ப்போமா?''

''சொல்லுங்க,'' என்றாள் அவன் பேச்சை ரசித்தபடி.

''உங்களுக்குக் கவிதை பிடிக்குமா?''

''ரசிப்பேன்.''

''அப்ப சரி!''

'கடல் ஏன் இப்படி

கத்தித் தொலைக்கிறது?

புரிகிறது!

உப்புச் சத்து உபரியானதால்

ரத்தக் கொதிப்பு இதற்கும் வந்தது!'

எப்படிங்க இந்த புதுக் கவிதை?''

''ரொம்ப நல்லா இருக்கு. உங்களுக்குக் கவிதைகூடத் தெரியுமா?''

''என்னங்க அப்படி கேட்டுட்டீங்க? நான் மெட்ராசுக்கு வந்ததே... சினிமாவுல பெரிய பாடலாசிரியரா வரணும்னு தான்.''

அவள் ஆச்சரியமாய் விழிகளை விரித்து, ''அப்ப ஏன் லைப்ரரியில...''

''புல்வாவுக்கு வழி பண்ணனுமே! அதுக்குத்தான் லைப்ரரி. நான் ஏறாத சினிமா கம்பெனியில்லை. அதென்னமோங்க... என் பேனா 'டோலாக்கு, டாலாக்குனு' அகராதியில் இல்லாத வார்த்தைகளை எழுத மறுக்குது. வெறுத்துப் போச்சு. விரக்தியோட ஒதுங்கிட்டேன். ஆனாலும் மூளை துருப் பிடிச்சிடக் கூடாதுன்னு தினமும் ஒரு அஞ்சு பக்கமாவது கவிதை எழுதிட்டு வர்றேன்.''

அவள் அவனின் பெற்றோரைப் பற்றிக் கேட்டாள். அவன் எல்லாமே சொன்னான். ஸ்டெல்லாவை ஒருதலையாய்க் காதலித்தது... அப்பா அடித்தது...

''நீங்க மதுரைக்காரரா?'' வியப்பாய்க் கேட்டாள்.

''ஆமாம்! ஏன் கேக்கறீங்க?''

''எனக்கும் பூர்வீகம் மதுரைதான். உங்களுக்கு மதுரைல எங்கே வீடு?''

''அரசரடி''

''நாங்க மீனாட்சி அம்மன் கோவில் பக்கத்திலேயே... தெற்கு மாட வீதியில...''

''கேக்கவே சந்தோஷமா இருக்கு.''

''எனக்கும்.''

''தேவி!''

''ம்...''

''நான் பொதுவா கவிதைகளை நோட்டிலதான் எழுதி வைப்பேன். ஆனா ஒரே ஒரு கவிதைய மட்டும் என் இதயத்துல எழுதி... ரொம்ப நாளா பத்திரமா பாதுகாத்து வர்றேன். அதை நீங்க தெரிஞ்சிக்கணும்னு ஆசைப்படறேன். சொல்லட்டுமா?''



''சொல்லுங்க.''

'நடியாத நாளில்லை கண்கள்! அந்த

நுண்கலையில் வல்லவர்கள் என் நாட்டுப் பெண்கள்!

கொடியாகிப் படர்கின்றாள் தாவி! ஆமாம்,

கொடிமலரா மலர்க்கொடியா என் காதல் தேவி!'

''இந்தக் கவிதை உங்களுக்குப் பிடிச்சிருக்கா தேவி?'' என்றபடி அவள் கண்களை ஊடுருவிப் பார்த்தான்.

'எவ்வளவு அழகாய் கவிதை பாடியே காதலை வெளிப் படுத்திவிட்டான்! அவன் ஒரு பிறவிக் கவிஞன் என்பதற்கு இதைவிட வேறென்ன சான்றாக இருக்க முடியும்?'

தேவி இதை எதிர்பார்த்தாலும் திணறிப் போனாள்.

'இந்த உலகில் என்னைக்கூட ஒருவன் காதலிக்கிறானா? தன்னைப் போல அவனும் உள்ளுக்குள் இத்தனை நாளும் உருகியிருக்கிறானா?' சந்தோஷத்தில் கண்ணீர் வெளிப்பட்டது.

அதைப் பார்த்துப் பதறிப்போனான் ரகு. ''தேவி... நான் ஏதும் தப்பா சொல்லியிருந்தா...''

''ஐயோ... அதுக்காக இல்லே! எனக்கு அதுக்கெல்லாம் தகுதியில்லைங்க. ஊர்ல என்னைப் பத்தி என்ன சொல்றாங் கன்னு உங்களுக்குத் தெரியாது. தெரிஞ்சா இப்படி...''

''தெரியும்,'' என்றான் அமைதியாக.

''தெ... தெரியுமா?'' அவள் முகத்தில் மெல்லிய அதிர்ச்சி.

''ஒரு பெண் நல்லவளா கெட்டவளான்னு அவளோட பேச்சை வச்சே சொல்லிடலாம். நீங்க நல்ல பெண் தேவி. எனக்குத் தெரியும்.''

''ர... ரகு... இந்த உலகத்துல என்னை நல்லவள்னு சொல்ற ஒரே ஆத்மா நீங்கதான். என்னை இந்தளவு புரிஞ்சு வெச்சிருக்கிறதே போதும் ரகு. நாம... வேற வேற மதம். இணைய முடியாது ரகு''

''மதம் வேறங்கறதால நமக்குள்ள என்ன வேறுபாடு தேவி? நான் கிறிஸ்டியன்ங்கறதனால எனக்கு மூணு கண் இருக்கா? இல்லை... நீங்க இந்துங்கறதால நாலு கண் இருக்கா? யேசுவும் ஈசனும் ஒண்ணுதான். மேரியும் மாரியாத்தாளும் ஒண்ணுதான். நம்ம வசதிப்படி அதுக்கு இந்து, கிறிஸ்துன்னு முத்திரை குத்தி வச்சிட்டோம்னு நீங்க படிச்சதில்லையா தேவி? நான் வற்புறுத்தலை. என் விருப்பத்தைச் சொல்ல எனக்கு எந்தளவு சுதந்திரம் இருக்கோ, அதே அளவு உங்க முடிவைச் சொல்றதிலேயும் இருக்கு. உங்க இதயத்தில நான் இல்லைன்னு சொல்லிடுங்க. மேற்கொண்டு இதைப் பத்தி ஒரு வார்த்தை கூடப் பேசமாட்டேன். சொல்லுங்க... பிடிக்கலையா என்னை?''

''நா... நான் அதிர்ஷ்டகாரி ரகு.''

சந்தோஷமாய் நிமிர்ந்தான் ரகு.

''நீ மட்டும்தானா? ம்...''

நெஞ்சு கொள்ளா பூரிப்புடன் அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

வீடு வந்து சேர்ந்த பிறகும் பிரமிப்பு அடங்கவில்லை. ரகு என்னைக் காதலிக்கிறாரா? நிஜமாத்தானா? இந்தப் பாலை வனத்தில்கூட மழை பெய்கிறதா?

முரளி அப்போதுதான் வீட்டிற்குள் நுழைந்தான். லுங்கியைக் கட்டிக் கொண்டே கடுகடுவெனத் தேவியைப் பார்த்தான்.



''இதோ இருக்கிற மந்தைவெளிக்குப் போயிட்டு வர உனக்கு ஆறு மணி நேரம் தேவைப்படுதா? மத்தியானம் போனவ... எட்டு மணிக்குத்தான் வர்றே.''

''அதுக்கென்ன இப்ப?''

''ஏன் இவ்ளோ நேரம்னு கேட்டா... இடக்கா பேசறியா?''

''நான் எதைச் சொன்னாலும் உனக்குத் தப்பாதான் தெரியுது. நான் எப்ப போய் எப்ப வந்தா உனக்கென்ன முரளி? அப்படி என்ன கரிசனம் திடீர்னு எம்மேல?''

''என்ன கிண்டலா? ஏம்மா... இவ பேசறத பாரேன்.''

''யாரை வேணாலும் சாட்சிக்குக் கூப்பிடு. இந்த வீட்ல யாருக்குத்தான் எம்மேல அக்கறை? சொல்லுடா. என்னை ஒரு பொண்ணாக்கூட நினைக்க வேணாம்... ஒரு பொம்மையாக் கூட யாரும் என்னைச் சட்டை பண்ணலே. எல்லோரும் அவங்கவங்க பிரச்சினைகளைப் பத்திதான் யோசிக்கறீங்க. என்னைப் பத்தி யோசிச்சீங்களா? மனசு கொதிக்குதுடா! எவ்வளவோ அடக்கி வச்சிருக்கேன்.

''எனக்குத் தலைவலி, காய்ச்சல்னா கூட... இந்த வீட்ல ஒரு வாய் தண்ணி குடுக்கக்கூட பாசமான ஒரு மனுஷாள் இல்லே. நாளைக்கே ஏதாவதொன்னு ஆகி நான் செத்தாக்கூட... எம் பொணத்தைக் காக்காவும், குருவியும்தான் கொத்தித் தின்னும். அப்பக்கூட பார்த்துக்கிட்டு அவங்கவங்க வேலையக் கவனிக்கப் போயிடுவீங்க. அப்படிக் கிடக்கு வீடு. சொல்ல வந்துட்டான். இந்த அழகில... நான் எங்கே... எப்படிப் போனா உனக்கென்ன முரளி? நீ என்னைவிட ஆறேழு வயசு சின்னவன். அதுக்கேத்த மாதிரி நடந்துக்க.''

முரளி ஸ்தம்பித்துப் போனான்.

'பேசுவது தேவிதானா?"

உள்ளே போய்க் கதவைப் பட்டென்று அறைந்து சாத்திக் கொண்டாள் தேவி.

"அம்மா... பார்த்தியா? என்ன பேச்சு பேசிட்டுப் போறா பார்! என்ன தைரியம்! உம்! அவ்ளோ தூரம் ஆயாச்சா? காட்டறேன். இன்னும் ஒரு வாரத்துல என்னவெல்லாம் நடக்கப் போகுது பார், இந்த வீட்ல."

கோதை பொங்கி வந்த அழுகையை மறைக்கப் பிரயத்தனப்பட்டாள்.

அந்த அழுகை... தேவி முரளியைக் கோபமாய்ப் பேசிவிட்டதால் வந்ததல்ல. 'செத்தாக்கூட பிணத்தைத் தூக்கிப் போட ஆளில்லாத... கொடூரமானவளா என்னையும் நினைச்சிட்டியே தேவி. உனக்குத் தெரியுமா, எவ்வளவோ கட்டுப்பாடு போட்டு பாசத்துக்குப் பலமான அணை போட்டு இருக்கேன்னு. உன்னையே நினைச்சி நினைச்சி நான் உருகறதும் உனக்குத் தெரியுமா? எல்லாமே கேட்டும்கூட என் உசுரு போகலையே. கடவுளே... நான் பெத்த குழந்தைங்க கிட்டேயே இன்னும் என்னென்ன ஏச்சு பேச்சுக்கள் வாங்கிக் கட்டிக்கப்போறேனோ? எனக்குத் தெரியும். முரளியை ஏசுவது போல் என்னைச் சாடி ஏசிவிட்டுப் போகிறாள்.'

சாத்திய அறைக்குள் தேவி மாலை மாலையாய்க் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள்.

'என்னை மன்னிச்சிடும்மா! நான் அதிகப்படியாய்ப் பேசிவிட்டேன். சத்தியமாய் உன் மீது எனக்கு வெறுப்பில்லை. வருத்தம்தான். விரைவில் நான் உன்னைவிட்டுப் பிரியப்



போகிறேனம்மா. என் ரகுவோடு போகப் போகிறேன். உனக்குப் பிடிக்காத... வேற்று மதக்காரரோடு என் வாழ்க்கை ஆரம்பமாகப் போகுது. எனக்கும் ஒரு வாழ்க்கை அமையப் போகுதும்மா. இதை நிச்சயம் நீ ஜீரணிக்கமாட்டாய். அதனால்தான் என் பிரிவு உன்னை அதிகம் பாதிக்கக்கூடாது என்பதற்காக... நீ என்னை வெறுக்கணும்கறதுக்காக அத்தனை கோபமா பேசிவிட்டேன். என்னை மன்னிச்சிடும்மா!'

## 16

கேரியரில் நியூஸ் பேப்பரைக் கொத்தாக வைத்துக் கொண்டு கிணிகிணியென்று மணியடித்துச் சென்ற பையனுக்கு வழிவிட்டு ஒதுங்கினாள்.

குனிந்து சிறியதாய்க் கோலம் போடத் தொடங்கினாள் தேவி.. நான்கு வீடு தள்ளி யாரோ புதிதாய்க் குடி வந்திருந்தவர்கள் டெம்போவிலிருந்து கோணிப்பையில் கட்டிய பாத்திர பண்டங்களையும், பீரோ, டேபிளையும் இறக்கிக் கொண்டிருந்தார்கள்.

டிரைவர் சீட்டில் அமர்ந்திருந்தவனைப் பார்த்துச் சற்றே அதிர்ந்து... பின் தெளிந்தாள்.

'இல்லை... ரகு இல்லை, வேறு யாரோ?'

அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்கிற மாதிரி காதல் வயப்பட்ட கண்களுக்குக் காதலன் போலவோ, காதலி போலவோ பார்க்கும் மனிதர்களெல்லாம் தெரிவார்கள் போலும்.

தனக்குள் நகைத்துக் கொண்டாள் தேவி.

'இன்றைக்குக் கண்டிப்பாய் ரகுவைப் பார்க்கணும். அன்றைய கடற்கரைச் சந்திப்பிற்குப் பிறகு அவனைப் பார்க்கவேயில்லை.

கோலம் போட்டு முடித்ததும் தூக்கி இடுப்பில் செருகி இருந்த புடவையை இழுத்து விட்டுக் கொண்டு வீட்டுக்குள் நுழையப் போனவள் பின்னால் படபடவென்ற ஆட்டோ சத்தம்.

'யாரது? நம் வீட்டிற்கா?' திரும்பிப் பார்த்தவள் அதிலிருந்து இறங்கியவர்களைப் பார்த்து முகம் சுருங்கினாள்.

மாலையும் கழுத்துமாய் முரளியோடு அந்தப் பெண் நின்றிருந்தாள்.

சத்தம் கேட்டு உள்ளேயிருந்து வந்த கோதை... அவர்களைப் பார்த்த அதிர்ச்சியில் தள்ளாடிக் கதவைப் பிடித்துக் கொண்டாள்.

''டே... டேய் முரளி! எ... என்னடா இதெல்லாம்? என்னடா நடக்குது இங்கே?''

''அம்மா! இன்னிக்கு விடிகாலைல கவிதாவை நான் வடபழனி கோவில்ல வச்சு கல்யாணம் பண்ணிக்கிட்டேன். சத்தம் போட்டு ரகளை பண்ணினா இதே ஆட்டோவில் திரும்பிப் போயிடறோம். என்ன சொல்றே?''

'அவன் தீர்மானத்தோடுதான் வந்திருக்கிறான். கைநிறையச் சம்பளம். காதல் மனைவி. இனி இந்த வீடோ... இந்த மனிதர்களோ அவசியமில்லைதான் அவனுக்கு. ஒருவேளை இது சொந்த வீடாய் இருந்திருந்தால்... விரட்டினாலும் போகமாட்டான். இப்போது இவனும் போய் விட்டால்? அம்மா? நானும் போயிட்ட பிறகு அவள் தனியாகி விடுவாளே'

தேவியின் மூளை பின்விளைவுகளைச் சிந்தித்துப் பார்க்க... அதற்குள் கூட்டம் சேரத் தொடங்கியது. தேவி முரளியின் அருகில் வந்து, ''கொஞ்சம் இருங்க, இதோ வந்திடறேன்!'' என்றவள் எதிர்வீட்டிற்கு ஓடிச்சென்று கையோடு தேவகியை அழைத்து வந்து... அதே வேகத்தோடு ஆலம் கரைத்து தேவகியின் கையில் கொடுத்து, அதன் நடுவில் நனைந்து விடாமல் லாவகமாய் பேப்பரில் கற்பூரத்தை மிதக்க விட்டு கொளுத்தி ஓரமாய் ஒதுங்கிப்போய்விட்டாள் தேவி.



தேவகி கனத்த மனத்தோடு ஒரு முறை அவளைப் பார்த்துவிட்டு ஆலம் சுற்றி ஊற்றினாள்.

கவிதா வீட்டினுள் வலது காலை எடுத்து வைத்தவள் 'உப் உப்' பென்று ஊதிக் கொண்டாள்.

''என்ன முரளி... இப்படிப் புழுங்குது?''

''என் ரூம்ல பேன் இருக்கு. உள்ளே வா.''

''நடுப்பகல்ல இந்த ஓட்டு வீட்ல நெருப்ப கொட்டின மாதிரி எரியுமே. ஓர் ஏர்கூலர் வாங்கிடு முரளி.''

''வாங்கிட்டாப் போச்சு.''

கோதை வியர்த்துப் போயிருந்தாள். நெஞ்சை ஏதோ அடைப்பது போலிருக்க... தலை கிறுகிறுவெனச் சுற்றுவது போலிருந்தது. அப்படியே உட்கார்ந்துவிட்டாள்.

'பாவி. இப்படிப் பண்ணிட்டானே! மூத்த அக்கா வீட்டிலிருக்க... இப்படி மாலையும் கழுத்துமா வந்து நிக்கிறானே. அவர் உயிரோடிருந்திருந்தா... இப்படி எல்லாம் நடக்குமா?'

'உன்கிட்ட பணத்தைகூட நான் எதிர்பார்க்கலை. எம் பொண்ணுக்காக நான் குருவி மாதிரி சேர்த்து வச்ச பணமே பத்தாயிரம் வரைக்கும் இருக்கு. ஆனா ஏற்கெனவே சுகந்தி

கல்யாணம் தேவிக்குத் தடைக்கல்லா இருந்தது. போதாதுன்னு இப்ப நீயும் கல்யாணம் பண்ணிக்கிட்டு அவளுக்கு மலை மாதிரி மறைச்சி நின்னுட்டியே. எம் பொண்ணை நான் எப்படி கரை சேர்க்கப் போறேன்? கடவுளே!' தனக்குத் தானே அரற்றியபடி அழுதவளைப் பரிதாபமாய்த் திரும்பிப் பார்த்தாள் தேவி.

'நீ என்னம்மா பாவம் செய்துட்டு வந்தே? இப்படி மூணு பாவ ஜென்மங்களை உன் வயிறு சுமந்ததால... காலம் முழுக்க நிம்மதியில்லாம தவிக்கிறியேம்மா.'

தேவி தாய்க்காக வருத்தப்பட்டாள்.

புதுமணத் தம்பதிகளுக்காக வடைபாயசத்துடன் சாப்பாடு போட்டு அமர்க்களப்படுத்தினாள்.

கவிதா ஒரு மரியாதைக்காகக் கூடத் தேவியிடம் ஒரு வார்த்தை பேசவில்லை.

தேவிதான் வலியச் சென்று பேசினாள்.

''இந்தப் பட்டுப் புடவையைக் கழட்டிடும்மா! இந்தா... இந்த புடவையை கட்டிக்க.'' ஒரு நூல் புடவையை அவளிடம் நீட்டினாள்.

கவிதா அதைக் கையால்கூடத் தொடவில்லை.

''நோ தாங்க்ஸ். நான் காட்டன் புடவை கட்டறதில்லை. அதுவும் மத்தவங்க உடுத்தினதை நான் உடுத்தற அளவுக்குத் தாழ்ந்தும் போகலை. ஈவ்னிங் என்னோட திங்ஸ்செல்லாம் எடுத்திட்டு வந்திடுவேன். அதுவரைக்கும் பட்டுப்புடவையே இருக்கட்டும்.''

தேவி மலைத்துப் போனாள்.



'ஏதோ... வரும்போது கட்டின புடவையோடு வந்தாளே... மாத்திக்க சேலையைக் கொடுத்தால்... அம்மாடி... இந்தப் போடு போடறாளே. முரளிக்கு ஏத்த ஜோடிதான்!'

''முரளி... இந்த ரூம்ல எப்படித்தான் இருக்கீங்களோ... காட்! ரொம்பவார்ம்மா இருக்குப்பா. நமக்கு இந்த ரூம்லதான் பர்ஸ்ட் நைட்டா?''

துளைத்தெடுத்துக் கொண்டிருந்தாள் கவிதா.

தேவி அசந்து போய் நின்றாள். 'இந்தப் பெண் எப்படி இந்தக் குடும்பத்தை அனுசரித்துப் போகப் போகிறாள்?' ஒருவிதப் பயம் குரல்வளையைப் பிடித்தது.

மாலையில் ஒரு கும்பல் வந்து இறங்கியது. காச் மூச்சென்று கத்தியதில் இருந்து அவர்கள் கவிதாவின் பெற்றோரும் உறவினர்களும் என்று புரிந்தது.

''அடிப்பாவி! திருட்டுத்தனமா தாலி கட்டிக்கிட்டியேடி. உனக்கு என்னடி குறை வச்சோம்? சிம்லாவில மாப்பிள்ளை பார்த்து வச்சோமே. உன்புத்தி இப்படியா போகும்? இது சொந்த வீடா? வாடகை வீடா? எலிப்பொந்து மாதிரி இருக்கே. அங்கே வசதியா வாழ்ந்துட்டு இங்கே எப்படிடி இருப்பே? இந்த கம்மாநாயுடு பரம்பரையில இப்படி ஜாதிவிட்டு ஜாதி கல்யாணம் பண்ணினதில்லையே. தலைகுனிய வச்சிட்டியே தறுதலை!'' மூக்கை உறிஞ்சி அழுது ஆர்ப்பாட்டம் பண்ணினாள் அந்த இரட்டைச் சரீரப் பெண்.

''அம்மா! இப்ப வாய மூடப் போறியா இல்லையா? உன்னோட பெரிய ரோதனையாப் போச்சி. ஏன் இப்ப உயிர் போற மாதிரி கத்தறே? எனக்கு முரளிய பிடிச்சிருக்கு. உன்கிட்ட சொன்னா கட்டி வைக்கப் போறதில்லே. அதனால

யாருக்கும் தெரியாம பண்ணிக்கிட்டோம். இப்ப என்னாங்கறே?''

''ஏண்டி! ஒரே பொண்ணு நீ எவ்வளவு செல்லமா வளர்த்தோம்? பெத்தவங்களை ஒரே நிமிஷத்தில உதறிட்டியே. உன் நைனா எவ்ளோ வேதனைப்பட்டார் தெரியுமா? எங்க மேல கொஞ்சமாவது பாசம் இருந்தா இப்படிச் செய்யத் துணிச்சல் வருமா?'' அம்மாக்காரி விடாமல் கத்த... நைனா ஒரு ஓரமாய் நின்றிருந்தார்.

''அம்மா! ஏன் புரிஞ்சுக்க மாட்றே? முரளிய கல்யாணம் பண்ணிக்கிட்டதால உன்மேல பாசமில்லைன்னு ஆயிடுமா? முரளி கூடத்தான் அவங்க வீட்ல யார்கிட்டேயும் சொல்லல. அவங்க யாரும் கத்தி ரகளை பண்ணலை. நடந்தது நடந்து போச்சி. இனி அதை மாத்த முடியாதுன்னு புரிஞ்சிக்கிட்டாங்க... நீ மட்டும் ஏன் இப்படி ஆர்ப்பாட்டம் பண்றே?''

தேவி ஒதுங்கி நின்று கவனித்தாள்.

'பரவாயில்லை! கவிதா நம்மைப் பத்தி பெருமையாகத்தான் சொல்கிறாள். நாம நினைச்சது போல ரொம்ப கர்வமான பெண்ணில்லை இவள்!'

''இந்த வீட்ல எப்படி ரகளை பண்ண முடியும்? யாரும் சம்பந்தம் வச்சுக்கப் பயப்படற ஒதுக்கப்பட்ட வீட்ல... லட்டாட்டம் நீ வந்திருக்கப்ப... எதிர்த்து ஒரு வார்த்தைதான் பேச முடியுமா? ஆமாம்... நானும் வந்ததிலேயிருந்து பார்க்கறேன். இந்த வீட்டு மனுஷா ஒருத்தரும் கண்ல படலியே. யாருடி உன் மாமியார்?''

''அம்மா கோவிலுக்குப் போயிருக்காங்க... இப்ப வந்திடுவாங்க.''



தேவி அருகில் வந்து புன்னகைத்தபடி சொன்னாள்.

அந்தம்மா ஏற இறங்க அவளைப் பார்த்தாள்.

''யாரு நீ? மாப்பிள்ளைக்கு என்ன வேணும்?''

''நா... நான் முரளியோட அக்கா.''

''கல்யாணம் ஆயிடுச்சா?'' கேட்டபடி அவள் கண்கள் கழுத்தை மேய்ந்தன.

''இ... இல்லே.''

''முரளியோட அக்காங்கறே. இன்னுமா ஆகலை?''

''முதல்ல உக்காருங்க, எல்லோரும். காபி எடுத்திட்டு வர்றேன்.'' கூச்சம் பிடுங்கித் தின்ன அடுக்களைக்குள் ஓட எத்தனித்தாள்.

''ஒண்ணுக்குள்ள ஒண்ணு ஆயிட்டோம். காபி அப்புறம் சாப்பிடலாம். நீ சொல்லு. வரும்போது நாலு பேர்கிட்ட இந்த வீட்டப் பத்தி விசாரிச்சிட்டுத்தான் வந்தேன். அந்தப் பொண்ணுதானா நீ? பார்க்க லட்சணமா... அடக்கமாகத்தான் இருக்கே. பின்னே... ஏம்மா உன்னைப் பத்தி மோசமா சொல்றாங்க?'' விடாமல் கேட்டாள் அந்தப் பெண்மணி. தேவியின் கையை பற்றிக் கொண்டிருந்தாள்.

ஆயிரமாயிரம் ஊசிகள் வந்து குத்துவது போல் துடித்துப் போனாள் தேவி. தொண்டை அடைத்துக் கொண்டது. அவமானத்தில் சிறுத்துப் போனாள். முரளியிடம் கண்களால் கெஞ்சினாள். 'இந்த கும்பலலேயிருந்து என்னைக் காப்பாத்து!' என்று.

முரளி வேறு பக்கம் திரும்பிக் கொண்டான்.

''விட்ரு வேணி! பாவம் அந்தப் பொண்ணு சங்கடப்படுது!'' என்றபடி முதன் முறையாய் வாயைத் திறந்தார் அந்த தொப்பை மனிதர். தேவியின் தலையை மெல்லத் தடவிக் கொடுத்துச் சிரித்தபோது... வெற்றிலையில் சிவப்பேறிய பற்கள் பார்க்கவே அருவருப்பைத் தந்தது. தேவி லாவகமாய் ஒதுங்கிக் கொண்டாள்.

''அண்ணா! இந்தக் குடும்பத்தைப் பத்தி தெரிஞ்சிக்கிட்டா நல்லதுதானே!'' என்றாள் வேணி.

வாசலில் காலடிச் சத்தம்.

''அதோ... அம்மா வந்துட்டாங்க!'' முரளிதான் பார்த்துச் சொன்னான்.

கோதை உள்ளே சூழ்ந்திருந்த மனிதர்களைப் பார்த்து என்னவோ... ஏதோவென்று பயந்து போனாள்.

''அம்மா! கவிதாவோட அம்மா, அப்பாவெல்லாம் வந்திருக்காங்க. மரியாதைக்கு நாலு வார்த்தை வந்து பேசு.'' காதில் கிசுகிசுத்தான் முரளி.

''யாரோ வர்றாங்க... யாரோ போறாங்க. எல்லாமே அவங்கவங்க இஷ்டப்படி நடக்கறப்ப... நான் யார்கிட்டே என்னன்னு பேச? கல்யாணம் பண்ணிக்கறப்ப நான் மரியாதைக்காவது ஆசீர்வதிக்க வேணும்னு தோணலை. இப்ப மரியாதைக்கு நாலு வார்த்தை பேச மட்டும் நான் வேணுமா? என்னை விட்ரு.''

''அம்மா!'' பற்களை அரைத்தான். ''சத்தமா பேசாதே... இப்பத்தான் அவங்க பேசி அடங்கினாங்க. நீ திரும்பவும் ஆரம்பிச்சு வச்சுடாதே. அவங்கள்லாம் பெரிய இடம்.''

''முரளி... ஏற்கெனவே நொந்து நூலாப் போயிட்டேன். உன்கிட்ட சண்டை போடவோ... இல்ல உன் புது



சொந்தக்காரங்க கூடச் சண்டை போடவோ... எனக்குத் தெம்பில்லை. அதுக்கு எனக்குத் தகுதியுமில்லை. ஏன்னா... நீங்கள்லாம் ரொம்ப பெரிய இடத்தைச் சேர்ந்தவங்க... இல்லையா? நான் வர்றேன். கோவில்ல போய் உக்காந்திருக்கேன். ஊர் சந்தடியெல்லாம் அடங்கின பிறகு வர்றேன்.'' போய்விட்டாள்.

கோதையைப் பொறுத்தவரை அவள் கோபம் நியாயமானது. 'வீட்ல ஒரு அக்கா இருக்கப்ப... இவனுக்கு என்ன அவசரம்? சுகந்திக்கு ஒரு வரன் பார்த்து முடிச்சது போல்... இவளுக்கும் பார்த்து முடிக்க முடியாதா? இந்தக் காலத்துல விதவைங்களுக்கே தடபுடலா கல்யாணம் நடக்கறப்ப... என் பொண்ணுக்கு நடக்காதா?' புலம்பியபடி நடந்து சென்றாள் கோதை.

தேவி அம்மாவின் போக்கு கண்டு கோபமுற்றாள்.

'தன் தலையில தானே மண்ணள்ளிப் போட்டுக்கறாளே!'

அதற்குப் பின் நடந்த ரசாபாசம் கொஞ்ச நஞ்சமல்ல. வந்தவர்கள் மீண்டும் சத்தம் போட்டு, சண்டை போட்டு கிளம்பிப் போக ஒரு மணி நேரமானது. தேவி அவர்கள் முன் தலை குனிந்து நின்றிருந்தாள்.

கவிதா உள்ளே சென்று விசும்பிக் கொண்டிருந்தாள்.

## 17

மறுநாளே தேனிலவுக்காகப் பெங்களூர், மைசூர் என்று கிளம்பி விட்டனர் முரளியும், கவிதாவும்.

தேவி எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு, கையில் புத்தகங்களை எடுத்துக் கொண்டு கிளம்பினாள். நேற்றே ரகுவைப் பார்க்க வேண்டியது. முரளியின் கல்யாணக்

கனேபரத்தில் மறந்தே போனாள். 'ரகு என்ன நினைத்துக் கொள்வானோ?'

அவனை நினைத்தபோதே... பனிக்கட்டி போல் குளிர்ச்சியாய் இருந்தது.

ஏக்கமும் எதிர்பார்ப்புமாய் நெருங்கியவள் கண்களை அகல விரித்தாள்.

பூட்டியிருந்தது.

மாடியை அண்ணாந்து பார்த்தாள். அதுவும் பூட்டியிருக்க... புருவம் உயர்த்தினாள்.

அந்த லைப்ரரியின் மேல் மாடியறையிலேயே வாடகை எடுத்துத் தங்கியிருந்தான் ரகு. இரவு ஒன்பதுவரை லைப்ரரி திறந்தே இருக்கும்.

'எங்கே போனார்? யாரிடம் கேட்பது?' பக்கத்து வீட்டிலிருந்து ஓர் இளம்பெண் வெளியேவர... விசாரித்தாள்.

"தெரியலையே! நாலஞ்சு நாளா பூட்டியேதான் கிடக்கு. உங்களை மாதிரியே நிறையப் பேர் புக்ஸ் மாத்த வந்து ஏமாந்துட்டுப் போறாங்க. கொஞ்சம்கூட ரெஸ்பான்ஸ் இல்லாம இப்படி பூட்டிட்டு ஓடிப் போயிடறாங்க. எல்லோருக்கும் பதில் சொல்லி... எங்க பிராணன் போறது!" சலித்தபடி பதில் சொன்னாள்.

அதற்கு மேல் அவளிடம் எதுவும் கேட்கத் தோன்றவில்லை. வந்த வழியே ஏமாற்றத்துடன் திரும்பினாள்.

'நாலைஞ்சு நாளா பூட்டியிருக்கு என்றால்... என்னவாக இருக்கும்? உடம்புக்கு முடியலியா? கடவுளே... அப்படி ஏதும் இருக்கக்கூடாது. அப்படியென்றாலும் வீடு ஏன் பூட்டிக்கிடக்க வேண்டும்?'



இதயம் காரணம் தெரியாமல் கனமாகிப் போனது. மறுநாளும் வந்தாள். ஏமாற்றம்!

மேலும் பதினைந்து நாட்கள் ஓடிப் போகத் துவண்டு போனாள் தேவி.

சுகந்தி நடுவில் ஒரு முறை வீட்டிற்குத் தனியாக வந்திருந்தாள். முரளியைக் காரசாரமாக நாலு வார்த்தை கேட்டாள்.

"தேவி வீட்டில் இருக்கப்ப... இப்படி மூணாம்பேருக்குத் தெரியாம ஏண்டா திருட்டுத் தாலி கட்டிக்கிட்டே?"

"ஏய், மரியாதை குடுத்துப் பேசு! நான் ஒண்ணும் திருட்டுத் தாலி கட்டலே. தேவி வீட்டில் இருக்கப்பதானே நீயும் கல்யாணம் பண்ணிக்கிட்டே?"

"ஆம்பளைக்கும் பொம்பளைக்கும் வித்தியாசமில்லே? எனக்கும் வயசாகிப் போனதால நீயா பார்த்து முடிச்ச வரனுக்குச் சம்மதிச்சேன்."

"கவிதாவும் பொம்பளைதானே! அவளுக்கும் வயசாகுதே. கூடப் பொறந்த பாவத்துக்கு நான் காத்திருக்கலாம். அவளுக்கென்ன தலையெழுத்து? எனக்காக எவ்வளவு நாள்தான் காத்திருப்பா? அதுவும் தேவிக்கு முடிச்சிட்டு நாங்க பண்ணிக்கனும்னா... அது அடுத்த ஜென்மத்திலதான் நடக்கும். அதுவரைக்கும் காத்திருக்கச் சொல்றியா?" உஷ்ணமாய்ச் சுகந்தியிடம் கேட்டான்.

"சுகந்தி! இப்படி வா. தயவு செய்து என்னைக் காரணம் காட்டி யாரும் சண்டை போடாதீங்க. அசிங்கமாயிருக்கு. இதனாலே... நான் ஏதோ கொலையே பண்ணிட்டா மாதிரி ஒரு குற்ற உணர்ச்சி ஏற்படுது. விட்டுடு சுகந்தி. கெஞ்சிக் கேட்டுக்கறேன். இந்தப் பேச்சை இத்தோட விட்டுடு."

சுகந்தி வேதனையோடு தேவியைப் பார்த்தாள்.

'பாவம்! ரொம்ப அடிபட்டிருக்கிறாள். எத்தனை ஆசைகள், கனவுகள், கற்பனைகள், எதிர்பார்ப்புகள் மனசில இருந் திருக்கும்? இவளுக்கு மட்டும் ஏன் ஆண்டவன் தலைவிதிய தப்பா எழுதிட்டானா?'

"சரி தேவி! நான் வரட்டுமா? அவர் காத்துட்டிருப்பார்."

திடீரென நினைத்துக்கொண்டவளாய்... "அம்மா உன்கிட்ட பேசறாளா தேவி?" என்று கேட்டாள்.

உதட்டைப் பிதுக்கி விரக்தியாய்ச் சிரித்தாள்.

"ஏன் இப்படி ஆயிட்டா அம்மா? எதுக்காக உன்கிட்ட பேசறதை நிறுத்திட்டா? நானும் எத்தனையோ முறை அவகிட்டே கேட்டே பார்த்துட்டேன். இதே கேள்விய திரும்பத் திரும்பக் கேட்டா உன்கிட்ட கூட பேசமாட்டேன்னு ஒரே போடா போட்டுட்டா. இப்ப எங்கே அவள் ஆளே காணோம்?"

"இப்பல்லாம் வடாம், அப்பளத்தைக் கடையில போட்டுட்டு. கோவிலுக்குப் போய் உட்கார்ந்துடுவா. எட்டு ஒம்பது மணிக்குத்தான் வருவா. கொஞ்ச நேரம் இரேன். வந்துடுவா... பார்த்துட்டே போயிடு"

"வேணாம். அடுத்த வாரம் வரும்போது பார்த்துக்கறேன். கவிதா எப்படி? அடக்க ஒடுக்கமா இருக்காளா?" மெல்ல கிசுகிசுப்பாய்க் கேட்டாள் சுகந்தி.

"அவ எப்படி இருந்தா என்ன சுகந்தி? இப்ப அவளும் நம்ம வீட்டுப் பொண்ணாயிட்டா. சின்னப் பொண்ணுல்லியா? சின்ன சின்ன விஷயங்களுக்கு கோபப்படறா. மத்தப்படி குறை சொல்ல ஏதுமில்லே. சரி... இருட்டிப் போச்சி. நீ கிளம்பு."



## 18

குளக்கரையில் அமர்ந்து கல்லெறிந்து கொண்டிருந்தான் ரகு. ஒவ்வொரு கல்லும் ஏற்படுத்திய வட்டப்பரப்பில் தேவியின் முகம் தெரிந்தது.

பெருமூச்சு விட்டான்.

முழுதாய் இரண்டு மாதம் ஓடிவிட்டது. என்னைப் பற்றித் தவறாக நினைத்துக் கொண்டிருப்பாய்... அப்படித்தானே தேவி? உனக்குத் தெரியுமா... உன்னை நான் கனவிலும்கூட மறக்கவில்லை என்பது. அப்பாவிடமிருந்து தந்தி வந்ததுமே உடனேகூட நான் ஊருக்குக் கிளம்பவில்லை. நீ லைப்ரரிக்கு வருவாய் என்று பதட்டத்துடன் காத்திருந்தேன். ஏனோ... நீ வரவில்லை. அம்மா மிகவும் சீரியஸ் என்ற செய்தியைத் தாங்கிய தந்தியைக் கையில் வைத்துக் கொண்டு எவ்வளவு நேரம்தான் அங்கே இருக்க முடியும்? நான் ஒரு மடையன். உன் முகவரியை நான் எடுத்து வரவில்லை. என்முகவரியை உனக்குத் தரவுமில்லை. இப்படியெல்லாம் நடக்கும் என்று யார்தான் எதிர்பார்த்தார்கள்? உனக்குக் கடிதம் போடக்கூட முடியாத நிலை. எப்போது சந்திக்கப் போகிறோம் தேவி?

மனப்புழுக்கத்தில் கண்ணீர் துளிர்க்க நினைத்தது. இமையை இறுக்கமாக மூடி மறைத்தான். ஆண் அழுவதா?

"இங்கேயா இருக்கே? உன்னை எங்கெல்லாம் தேடறது? அம்மா கூப்பிடறா... வா."

டேனியல் நின்றிருந்தார். இரண்டு மாத அலைச்சல் முகத்தில் தெரிந்தது.

"இதோ வந்திட்டேன்ப்பா."

ரீட்டா கட்டிலின் மீது சாய்ந்தமர்ந்திருந்தாள்.

''வாப்பா... ரகு! சாப்பிட்டியா?''

''ம்... ஆச்சும்மா.''

''இப்படி உக்கார்ப்பா.''

அம்மாவின் அருகே அமர்ந்தான்.

''என்னம்மா?''

''திரும்ப மெட்ராசுக்குப் போறதா சொல்லிட்டிருந்தியாமே, உண்மையா?''

''ஆமாம்மா. எல்லாம் அதது அப்படி அப்படியே போட்டுட்டு வந்துட்டேன்.''

''ஏன் ரகு பிடிவாதம் பிடிக்கறே? நீ எங்களுக்கு ஒரே பிள்ளை. எங்களை ஏம்ப்பா தனியா விட்டுட்டுப் போறே? நீயும் இப்படி தனியா எவ்வளவு நாளைக்கு இருப்பே? அந்த லைப்ரரிய வித்துடு. கடவுள் கிருபையில இங்கே நமக்கு வேண்டிய வசதிகள் இருக்கப்ப... அங்கே ஏன் கஷ்டப்படணும்? இனிமே முன்னப் போல என்னால ஓடியாடி வேலை செய்ய முடியாது ரகு. என்னதான் கர்ப்பப் பையில கட்டி வந்து ஆபரேஷன் பண்ணி குணமாயிடுச்சின்னு சொன்னாலும்... நாளைக்கே ஹார்ட் அட்டாக் வந்து போயிட மாட்டேன்னு என்ன நிச்சயம்?''

''அம்மா... அப்படியெல்லாம் பேசாதே! உனக்கொன்றும் ஆகாது.''

''நான் மரணத்துக்காகப் பயப்படலை ரகு. அப்படியே நான் செத்தாலும் அந்தக் கடைசி நேரத்தில கூட ஒரு வாய் தண்ணி



ஊத்த நீ அருகே இருக்க மாட்டேங்கறியே. உங்கப்பா திங்கற நாலு வாய் சோத்துக்கு வாய்க்கு ருசியா சமைச்சுப் போடக்கூட என்னால முடியலியே ரகு.''

நிறுத்தி விட்டு லேசாய் மூச்சு வாங்கினாள் ரீட்டா. 'என்ன சொல்வதற்காக இத்தனை பீடிகை?' கவலையாய் அம்மாவைப் பார்த்தான் ரகு.

''நம்ம ஸ்டீபன் மாமாவ தெரியுமில்லே?''

''ம்... திருப்பரங்குன்றத்துல இருக்காரே... அவர்தானே?''

''அவரேதான். அவர் பொண்ணு விக்டோரியா தெரியுமில்லே. சின்னதுல பார்த்தது. இப்ப என்னம்மா வளர்ந்துட்டா தெரியுமா? இப்பத்தான் பி.எஸ்ஸி. முடிச்சாளாம். மூணு மாசத்துக்கு முந்தி ஸ்டீபன் இங்கே வந்திருந்தார். நம்ம ரகுவுக்கு விக்டோரியாவ முடிச்சா என்னன்னு கேட்டார். அழகான... புத்திசாலியான பொண்ணு. எனக்கும் உங்க அப்பாவுக்கும் பிடிச்சிருக்கு. நான் ஹாஸ்பிடல்ல இருந்தப்ப விக்டோரியா என்னைப் பார்க்க வந்தா. அந்த நேரம் பார்த்து நீ நம்ம வீட்டுக்கு வந்துட்ட. என்ன அடக்கமா இருக்கா தெரியுமா! நீ என்ன சொல்றே ரகு? வர்ற மாசம் முடிச்சிடலாமா?''

''அம்மா!'' அதிர்ந்து போய்ப் பார்த்தான். என்ன பதிலைச் சொல்வது? என்னால் தேவியைத் தவிர யாரையும் மனசால நெனச்சுக்கூட பார்க்க முடியாதும்மா என்று எப்படிச் சொல்வது?

''அம்மா... இப்ப என் கல்யாணத்துக்கு என்ன அவசரம்?''

''ரகு... இப்ப உனக்கு வயசு முப்பத்து மூணு. கல்யாணம் பண்ற வயசையெல்லாம் தாண்டி வந்து ரொம்ப வருஷமாச்சு!'' கவலையாய்ச் சொன்னாள் ரீட்டா.

''யோசிச்சு சொல்றேம்மா... நீங்க ஸ்டீபன் மாமாகிட்ட. இப்போதைக்கு எதுவும் சொல்ல வேண்டாம். நான் அடுத்த வாரம் மெட்ராஸ் போகலாம்னு இருக்கேன். அப்புறமா... என் பதிலை எழுதறேன்!''

''இப்பத்தானே இவ்வளவு விளக்கிச் சொன்னேன்? திரும்பவும் மெட்ராஸ் போறேன்றியே!'' அலுத்துக் கொண்ட அம்மாவை அன்புடன் கையைப் பற்றிக் கொண்டான்.

''ப்ளீஸ்... புரிஞ்சிக்கம்மா... நான் மெட்ராசுக்குப் போயே ஆகணும். மெம்பர்ஸ் என்னைப் பத்தி தப்பா நினைச்சிக் கிட்டிருப்பாங்க. அவங்களுக்கு முதல்ல என் நிலைமையை விளக்கணும். தவிர்க்க முடியாது. போய்த்தான் ஆகணும். வீட்டுக்கு ஒரு வேலைக்காரிய ஏற்பாடு பண்ணியிருக்கேன். நீ ரெஸ்ட் எடும்மா.''

''நான் மருமகளைக் கேட்டா... வேலைக்காரிய கொண்டு வர்றியே.''

''எல்லாம் நேரம் வரும்போது மருமகளும் வருவா. வீணா உடம்பை அலட்டிக்காதேம்மா.''

''என்ன ரீட்டா? என்ன சொல்றான் உம்புள்ள?'' டவலால் முகத்தைத் துடைத்தபடி உள்ளே நுழைந்தார் டேனியல்.

''எல்லாம் உங்களாலதான். உம்புள்ள... உம்புள்ளன்னு பிரிச்சிபேசி... பேசியே அவன் விலகிப் போயிட்டான். அடுத்த வாரம் மெட்ராஸ் போறானாம்.''

''ஏன்டா... அப்படியா சொன்னே? நீ ஒன்னும் எங்கேயும் போக வேண்டாம். இங்கே இரு.''



''இல்லப்பா... அவசியம் போய்த்தான் ஆகணும்.'' அம்மாவிடம் சொன்ன அதே காரணத்தை அவரிடமும் சொன்னான்.

''என்னமோ போ! ஆனா... எல்லா பிரச்சினைகளையும் முடிச்சிட்டு. அந்த லைப்ரரிய வித்துட்டு சீக்கிரமா ஊர் வந்து சேர்''

''ச... சரிப்பா.''

''ப்ச்! என்ன இருந்தாலும் நீ செஞ்சது ரொம்ப தப்பு கோபால். வொய்ப்பை கைநீட்டி அடிச்சிருக்கக்கூடாது. போ, உங்க மாமியார் வீட்டுக்குப் போய்ச் சமாதானம் பண்ணி அழைச்சிட்டு வா.''

''இல்லே ரகு... உனக்குத் தெரியாது. ரொம்ப திமிர் ஏறிப் போச்சு அவளுக்கு. வார்த்தைக்கு வார்த்தை இடக்கா பேசறா. எவ்வளவுதான் அனுசரிச்சுப் போக முடியும். பொறுமைக்கும் ஒரு எல்லை இருக்கு. கல்யாணம் பண்ணிக்கறது ரொம்ப தப்பு. அனுபவப்பட்டு சொல்றேன். நீ பண்ணிக்காதே.''

''ரெண்டு வயசுல குழந்தைய வச்சுக்கிட்டு பேசற பேச்சைப் பாரு. இப்படித்தான் சிஸ்டர்கிட்டேயும் பேசியிருப்பே! எனக்கே ஆத்திரம் வரும்போது, பாதிக்கப்பட்ட அவங்களுக்கு எப்படி இருக்கும்? இதோ பார் கோபால்... லேடீஸ் அப்படி இப்படித்தான் இருப்பாங்க. அவங்கள்லாம் புருஷன்கிட்ட அன்பையும் பாசத்தையும் அதிகமா எதிர்பார்க்கிறவங்க. உன் கோபத்தைக் காட்டலாமா? வீட்டுப் பொறுப்பைச் சுமக்கிற லேடீஸ் ஆண்களைவிட அதிகமா டென்ஷனா இருப்பாங்க. அனுசரிச்சுப் போப்பா.

''உன் பிசினஸ் டென்ஷனை வீட்டுக்குக் கொண்டு போறதை விட்டுடு. பிரச்சினையே அதனாலதான்... அட... தேவி! எப்ப வந்தே? வா... வா தேவி!'' ஆச்சரியம் தாங்காமல் நாற்காலியை விட்டே எழுந்துவிட்டான் ரகு.

''இ... இப்பத்தான்...'' அவனை வெகுநாள் கழித்து இப்போதுதான் பார்க்கிறாள். சந்தோஷமா, துக்கமா... அவளுக்கே தெரியாமல் தொண்டை அடைத்துக் கொண்டது.

'எப்படி இளைத்து விட்டிருக்கிறாள்? கன்ன மேடு பளபளப்பும் முகவசீகரமும் இந்த இரண்டு மாதத்தில் எங்கே போனது? கவலை... இவளை ஒரேயடியாக உருக்கிவிட்டதே. எல்லாம் என்னால்தான்!' ரகு அவளையே பார்த்தபடி நின்றான்.

கோபால் ரகுவின் தோளைத் தொட்டு, ''ரகு, நீ சொன்னியே அவங்கதானே இது? இருட்டுல பார்த்தது அடையாளம் தெரியல. சரி, நான் வர்றேன். யாராவது கடைக்கு வர்றதுக்குள்ள ஏதாவது பேசுங்க. எவ்வளவு நேரம்தான் மவுனமா நிப்பீங்க?'' அவன் குரலில் கேலி இழையோடியது.

ரகு சிரித்துக் கொண்டான்.

''நான் சொன்னது ஞாபகமிருக்கட்டும்.''

''ஓகே... ஓகே... என் பொண்டாட்டிய விட மோசமா... நீதான்ப்பா உயிரை வாங்கறே!'' என்றவன் காதில் 'என்ஜாய்' என்று கிசுகிசுத்தான். போய்விட்டான்.

''வா தேவி. ஏன் நிக்கறே? உட்கார்.''

''பரவாயில்லையே. என்னை நினைவுகூட வச்சிருக்கீங்களே!''

திடுக்கிட்டு அவளைப் பார்த்தான்...



''ஸோ... அந்தளவு மோசமா என்னை நம்பிட்டிருக்கே! அப்படித்தானே?'' வேதனையுடன் கேட்டான்.

''......''

''பேசாம இருந்தா எப்படி? நான் இன்னிக்கு காலைலதான் ஊருக்கு வந்து சேர்ந்தேன். ரெண்டு மாசத்துக்கு மேலா உன்னைப் பார்க்காம தவிச்சுப் போய்ட்டேன் தேவி. இவ்வளவு நாள் கழிச்சு உன்னை இப்ப பார்த்ததும் எவ்வளவு சந்தோஷப்பட்டேன் தெரியுமா? ஆனா... நீ?''

''திடீர்னு சொல்லாம கொள்ளாம ஊரை விட்டுப் போய்ட்டீங்க. இங்கே நான் பட்ட அவஸ்தை எனக்கில்ல தெரியும்?''

''சும்மா கிட்டிப்புள் விளையாடவா அப்படியே எல்லாத்தையும் விட்டுட்டு ஓடுவாங்க? ஏன் புரிஞ்சிக்க மாட்டேங்கறே தேவி? அம்மா ரொம்ப சீரியசாயிட்டாங்க. பிழைக்கிறதே உன்பாடு என்பாடுன்னு ஆயிடுச்சு. மேஜர் ஆபரேஷன் பண்ண வேண்டியதாயிடுச்சி. வீட்ல லேடீஸ் வேற யாருமில்லே. அவங்க குணமாகறவரைக்கும் அப்பாகூட நான் இருந்துதானே ஆகணும்?'' வருத்தம் கலந்த குரலில் சொன்னான்.

ரகுவை நெகிழ்வாய்ப் பார்த்தாள்.

'பாவம் அம்மாவிற்கு அந்தளவு சீரியசாய் இருக்கும் போது... நான் வேறு விதமாய்க் கற்பனை பண்ணி இவரைத் துரோகியாகவே முடிவு பண்ணி... சே... என் புத்திய செருப்பால அடிக்கணும்.'

''என்னை மன்னிச்சிடுங்க ரகு. தெரியாம பேசிட்டேன். இப்ப அம்மா எப்படி இருக்காங்க?''

''பரவாயில்லை. எழுந்து முன்னே போல நடமாட இன்னும் ஒரு மாசமாகும். கடைக்குச் சில பேர் வர்றாங்க. நாளைக்கு சண்டேதானே? உன்கிட்ட நிறைய பேசணும். பட்டினப்பாக்கம் வந்துடு. சரியா?''

''என்னப்பா திடீர்னு கடைய மூடிட்டுப் போயிட்டே? என்ன காரணம்னு ஒரு பலகையில எழுதி வச்சிட்டாவது போயிருக்கலாம். வந்து வந்து ஏமாந்து போயிட்டிருந்தோம்.''

ரகு மன்னிப்புக் கேட்கும் பாவனையுடன் தனக்கு ஏற்பட்ட இக்கட்டான சூழ்நிலையைக் கூறிக் கொண்டு இருக்க... தேவி 'தரையில் இறங்கும் விமானங்களை'ப் புரட்டிக் கொண்டு இருந்தாள்.

## 19

'பெண்ணுக்குத் திருமண வயது 21' என்று முதுகில் எழுதிக் கொண்டிருந்த ஆட்டோவில் ஏறிக் கண்ணகி சிலையருகே இறங்கிக் கொண்டார்கள்.

ஒரு படகின் மீது சாய்ந்து அமர்ந்தார்கள்.

''சொல்லு தேவி, ஏன் டல்லா இருக்கே? கொஞ்சம் இளைச்சிருக்கிற மாதிரியும் தெரியுது. உடம்புக்கு முடியலியா?''

அவளால் பதில் சொல்ல முடியவில்லை. கண்களில் மளுக்கென்று நீர் எட்டிப் பார்த்தது.

'எத்தனை இதமான வார்த்தைகள்! காயத்திற்கு இதமான வெந்நீர் ஒத்தடம் போல் இந்த வார்த்தைகளுக்காக... அதை ரகுவின் உதடு உச்சரிப்பதற்காக எத்தனை கஷ்டத்தையும் படலாம்.'

''ஏய்... ஏன்... ஏன்... தேவி அழறே?'' பதறிப் போனான்.



''ஒ... ஒண்ணுமில்லே...''

''ஒண்ணுமில்லாம ஏன் கண்ணு கலங்குது?''

''உங்களைக் காணாம நா... நான் எவ்வளவு...''

''அதான் வந்திட்டேன்ல, திரும்பத் திரும்ப ஏம்மா அதையே பேசறே. இதப் பார். இனி நான் ஊருக்குப் போறதானா தனியா போக மாட்டேன். உன்னையும் அழைச்சிக்கிட்டுத்தான் போவேன். சரிதானே? இப்ப சந்தோஷம்தானே?''

''நிஜமாவா?'' விழிகள் விரிய வாய் பிளந்தாள்.

''வாயை மூடு. மீன் துள்ளி குதிச்சி வாய்க்குள்ள விழுந்துடப் போகுது. கேள்வியப் பார். இன்னுமா என்னை நம்பலே?''

''இல்லைங்க ரகு. இதுவரைக்கும் என் வாழ்க்கையில எந்த சந்தோஷமும் நிலையா இருந்ததில்லே. நான் சந்திச்ச நபர்களும் நம்பிக்கையா நடந்ததில்லே. அதனால ஏற்பட்ட அவநம்பிக்கை என் ரத்தத்தில ஊறிப் போச்சு.''

''தேவி... நான் பலருக்கு நிழல் தர்ற மரமா இருக்கலாம். ஆனா... நான் நிக்கிற பூமியே நீதான் தேவி. நீ இல்லாம நான் இல்லே. இது வசனமில்ல. நிஜம். தேவி! ஒரு நிமிஷம்.''

'என்ன?' என்பது போல் நெற்றி சுருக்கினாள்.

''நீ தப்பா நினைக்கலைன்னா உ.. உன் கையத் தொடலாமா?'' தயக்கமாய்க் கேட்டான்.

''ம்...'' என்றாள் உள்ளுக்குள் சிலிர்ப்புடன்.

அவள் கையை மென்மையாகப் பற்றினான்.

''பொதுவா எனக்குச் சத்தியம் பண்றதிலே நம்பிக்கை யில்லை. என் மனசுக்கு விரோதமில்லாம செயல்படுவேன்.

நான் நல்லவனா, கெட்டவனான்னு யாருக்கும் நிரூபிச்சுக் காட்டத் தேவையுமில்லே. ஆனா... என் வாழ்க்கையில என் கூட கடைசி வரைக்கும் துணையா வரப்போறவ நீ. நீ என்னை நம்பணும். அந்த நம்பிக்கைய உனக்கு ஏற்படுத்த வேண்டியது என் கடமை. சத்தியத்தை மீறினா சத்தியம் பண்ணவங்க கெட்டழிஞ்சு போவாங்கங்கறது உன் நம்பிக்கையல்லவா? இப்ப உனக்காக... உன் திருப்திக்காக... நான் சத்தியம் பண்ணப் போறேன். எனக்குக் கல்யாணம்னு ஒண்ணு நடந்தா அது உன்னோட மட்டும்தான். இது சத்தியம். நிச்சயம் இதை மீற மாட்டேன். மீறினா நான் அழிஞ்சி..."

"ரகு!" மறு கையால் அவன் வாயைப் பொத்தினாள், தேவி.

"என்னவெல்லாம் பேசறீங்க? எனக்கு எதுவுமே வேண்டாம். உங்க அன்பே போதும். அதை நினைச்சே என்னால காலத்தை ஓட்ட முடியும். நீங்க நூறு வயசுக்கும் மேலே வாழணும். இப்படியெல்லாம் பேசாதீங்க. உங்களை நம்பறேன். போதுமா? வேற எதையாவது பேசுங்க."

"தேவி! எங்க வீட்ல எனக்குப் பொண்ணு பார்த்துட்டு இருக்காங்க."

"என்ன?" கலக்கமாய்ப் பார்த்தாள்.

"ஏய்... பொண்ணு பாக்கறாங்கன்னு மட்டும்தானே சொன்னேன்? கல்யாணமே ஆய்ட்டதுன்னா சொன்னேன்? எனக்குன்னு நீ இருக்கும் போது நான் சம்மதிச்சிடுவேனா? சீக்கிரம் நம்மைப் பத்தி வீட்ல சொல்லிடணும். நீ உங்க வீட்ல மெதுவா நம்ம கல்யாணத்தைப் பத்தி பேசிடு."

விரக்தியாய்ச் சிரித்தாள்.



"வீடுன்னு பேருக்காக இருக்கே தவிர, அது வழிப்போக்கர் வந்து தங்கற சத்திரம் மாதிரின்னுதான் சொல்லணும். ஒவ்வொருத்தரும் தங்களுக்குள் சம்பந்தமே இல்லாத மாதிரி வாழ்ந்திட்டிருக்கிற இடம் அது. அங்கு யார்கிட்டே போய் நான் சொல்வேன் ரகு?" தன் வீட்டினரைப் பற்றி கூறினாள் தேவி.

"நான் வந்து பேசிப் பார்க்கட்டுமா தேவி?"

"ஐயோ! வேணாங்க. நீங்க வேற ஜாதியா இருந்தாக் கூட பரவாயில்லை. வேறு மதம். பொதுவா யாராவது கலப்பு மணம் செஞ்சிக்கிட்டாக் கூட வாய் ஓயாம திட்டி தீர்க்கறவங்க எங்க அம்மா. கொஞ்சம் ஜாதி வெறி உள்ளவ. அப்படிப்பட்ட என் அம்மா சம்மதிப்பாங்கன்னு நம்பறீங்களா?"

"சம்மதம்ங்கறது ரெண்டாம் பட்சம். பின்னாடி நம்மகிட்ட ஒரு வார்த்தை கேட்டாங்களா பார்னு ஒரு பேச்சு வரக் கூடாது. தேவி."

"நிச்சயம் ஒத்துக்க மாட்டாங்க ரகு. நம்ம விஷயம் தெரிஞ்சா என்ன ஆகும்னு சொல்லவே முடியாது. சரி... உங்க வீட்ல நிலவரம் எப்படி?"

"வயசானவங்க யாருமே நம்ம காதலை ஜீரணிக்க மாட்டாங்க தேவி. அம்மாவ கன்வின்ஸ் பண்ணிடலாம். ஆனால் அப்பாவ சமாளிக்க முடியாது."

"அப்ப என்ன பண்றது?" அப்பாவித்தனமும், வேதனையும் கலக்க தன்னைப் பார்த்துக் கேட்ட தேவியின் தோளில் மெல்லத் தட்டினான்.

"இருக்கவே இருக்கு ரிஜிஸ்டர் மேரேஜ். எவ்வளவு காலம் வாழ்ந்தோம்ங்கறது முக்கியமில்லே. எப்படி வாழ்ந்தோம்ங் கறது தான் முக்கியம். அதுவும் மனசுக்குப் பிடிச்ச துணையோட

சந்தோஷமா நாலு நாள் வாழ்ந்தா கூட போதும் தேவி. ஏனோ தெரியலை. என்னுள்ளே புகுந்து நீ ரொம்பத்தான் ஆட்டிப் படைக்கிறே!'' என்றான் அவளைக் குறுகுறுவெனப் பார்த்தபடி.

''நீங்க மட்டும் என்னவாம்?'' அவள் குரல் அவளுக்கே கேட்கவில்லை. வெட்கத்தில்.

''ரொம்ப சீக்கிரம் இதுக்கு ஒரு முடிவு கட்டணும்''

''நான் ஒண்ணு சொன்னா தப்பா நினைக்க மாட்டீங்களே?''

''தப்பா நினைக்கற மாதிரி ஏன் கேக்கறே? சரி, சொல்லு'' என்றான், காலருகில் ஓடிய நண்டைப் பிடித்துக் கடலில் தூக்கி எறிந்தபடி.

''எனக்குன்னு இப்ப எதுவுமே இல்லை. நகை, பணம் இத்யாதி... எதுவுமே நான் கட்டின புடவையோட வந்தா ஏத்துப்பீங்களா?''

''அந்தப் புடவை கூட எதுக்கு?''

''ஐயோ! என்ன சொல்றீங்க?'' என்றாள் கண்களில் மிரட்சியுடன்.

''அவசரப்படாதே தேவி. அந்தப் புடவை கூட நான் வாங்கித் தந்ததா இருக்கட்டுமே!'' என்றான் குறும்பாய்ச் சிரித்துக் கொண்டே.

''அப்பா! ஒரு நொடில என் உடம்பு தூக்கி வாரிப் போட்டிருச்சி.''

''ம்... அப்படி என்ன ரொம்ப மோசமாவா பேசிட்டேன்?''

''பின்னே?'' என்றவள் வெட்கம் மேலிடக் குனிந்து



கொண்டாள். பேச்சை மாற்ற எண்ணியவள்...

''கல்யாணத்துக்குப் பிறகு எனக்கு நிறைய புடவை எடுத்துத் தருவீங்களா?'' பெண்களுக்கே உரிய ஆசையுடன் கேட்டாள்.

''ம்ஹூம்... ரெண்டே ரெண்டுதான்!'' என்றான் சீரியசாய்.

''ரெண்டா? போதுமா?'' முகம் சுருங்கிப் போனது.

''வெளில போக வர கட்டிக்க ரெண்டு போதாதா?''

''வீட்ல கட்டிக்க?''

''அதான் நான் இருக்கேனே!''

சில நொடிகள் புரியாமல் பின் புரிந்து... ''சேச்சே... ரொம்ப மோசம்!'' இரு கைகளையும் சேர்த்து முகத்தை மூடிக் கொண்டாள்.

## 20

அந்தப் புத்தகக் கண்காட்சியில் ஏகக் கூட்டம். ரகு தனக்கு வேண்டிய புத்தகங்களைப் புரட்டிப் பார்த்துத் தேர்ந்து எடுத்துக் கொண்டு இருந்தான்.

''ஹலோ ரகு!'' தோள் மீது தோழமையாய் வந்து விழுந்த கையினைக் கண்டு மிரண்டு திரும்பியவனின் கண்கள் டன் டன்னாய் ஆச்சரியத்தைக் கக்கின.

''ஹேய்... செல்வக்குமார்... நீயா?''

''நானேதான். எதிர்பார்க்கலே இல்லே?''

''சத்தியமாய் எதிர்பார்க்கலே. ஆமா... எப்படியிருக்கே?''

''ஃபைன். கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்த மாதிரின்னு சொல்வாங்களே, அதுபோல இருக்கு ரகு... உன்னை நான் இங்கே பார்த்தது.''

''என்னைத் தெய்வமாக்கிடாதே குமார். சொல்லு, என்ன விஷயம்?''

''இங்கே வேண்டாம். வாயேன். பக்கத்துல ஏதாவது ஹோட்டலுக்குப் போவோம். ஸ்வீட்டோட அந்த விஷயத்தைச் சொல்லணும்னு ஆசைப்படறேன்.''

செல்வக்குமார் முன்பைவிட சற்றே சதை கூடி இருந்தான். ஆனால் அந்தச் சிரிப்பும், நட்பும் மட்டும் மாறவேயில்லை. ரகு அவனைப் பார்வையால் அளந்தபடி பரவசப்பட்டுப் போனான்.

யமுனா ரெஸ்டாரன்டின் மாடிப் பகுதிக்குச் சென்று மூலையில் அமர்ந்தார்கள்.

ஆர்டர் பண்ணிய பாசந்தியும், கட்லெட்டும் வந்தது.

''என்ன ரகு... அப்படிப் பார்க்கறே? சாப்பிடு...''

''சொல்லு குமார். இப்ப என்ன பண்ணிட்டிருக்கே? இன்னும் சினி பீல்டில்தான் இருக்கியா?''

''அதை விட்டா வேற என்ன தெரியும் எனக்கு? இப்ப அதான் சோறு போடுது. என்னைத் தயாரிப்பாளர்ங்கற அந்தஸ்துக்கு உயர்த்தி இருக்கு.''

''என்ன?'' ஆச்சரியத்தில் புரையேறியது.

'இவனா? தயாரிப்பாளரா? வாவ்!'

ரகு சினிமாவில் பாட்டெழுத அலைந்த காலத்தில் இவன் தயாரிப்பு நிர்வாகியாக இருந்தான். ஓரிரு மாதம் செல்வகுமார் அறையில்தான் தங்கி இருந்தான். ரொம்ப அமைதியானவன். கதைகள் கூட எழுதுவதாகக் கூறுவான். அவனா... இன்று... பெருமிதத்தோடு செல்வகுமாரின் தோளைத் தட்டினான்.



''ரொம்ப சந்தோஷமாயிருக்கு குமார். ரியலி ஐயம் பிரவுட் ஆப் யூ.''

''இன்னொரு குட் நியூஸ்.''

''ஏதோ முடிவு பண்ணிட்டே. என்னைச் சந்தோஷப் படுத்தியே ஆகாய வீதியில பறக்க விடறதா... சொல்லு, என்ன நியூஸ்?''

''இது ஒரு ஆர்ட் பிலிம். நான் எழுதின கதைதான். டைரக்டர் கம் கேமராமேன் பாலுமகேந்திரா. கமலோட கால்ஷீட்டுக்காக ட்ரை பண்ணிட்டு இருக்கோம். அநேகமா கிடைச்சிடும். நிச்சயம் இந்தப் படம் அவார்டு வாங்கும்னு பாலுமகேந்திரா அடிச்சுச் சொல்றார்.''

''நிறுத்து... நிறுத்து... கொஞ்சம் எனக்கு மூச்சு விடறதுக்கு டைம் கொடு.''

சிரித்தான், குமார்.

''பாடலாசிரியர் யார் தெரியுமா?''

''வைரமுத்துவா?''

''ம்ஹூம்''

''புலமைப்பித்தன்?''

உதட்டைப் பிதுக்கினான்.

''வாலி...''

''கிடையாது''

''தெரியல... நீயே சொல்லு.''

''சாட்சாத் நீயேதான்.''

"என்ன?" வாயிலிருந்த கட்லெட் கீழே விழ... நாற்காலியை விட்டே எழுந்து விட்டான்.

"உக்காருப்பா."

"நா... நானா? நிஜமாவா?"

"நீயேதான். உன் திறமை, தாகம் எல்லாம் எனக்குத் தெரியாதா? கொச்சைத்தனமில்லாம என் படத்துக்குப் பாட்டெழுத உன்னால மட்டும்தான் முடியும். என் கதையைப் படமா எடுக்கனும்னு நினைச்சப்ப உன் ஞாபகம்தான் வந்தது. ஆனா... உன் அட்ரஸ் தெரியாம தவிச்சேன். எதேச்சையா உன்னை இன்னைக்குப் பார்த்ததும் எவ்வளவு சந்தோஷம் தெரியுமா? இப்ப நான் விநியோகஸ்தராகவும் இருக்கேன். என் ஃபிரண்ட் ஒருத்தனுக்கு ரெண்டு தியேட்டர் சொந்தமா இருக்கு. வேறென்ன? படம் நிச்சயம் நூறு நாள்தான். இதுல வொர்க் பண்றவங்க அத்தனை பேரும் உசரத்துக்குப் போகப் போறது உறுதி."

"குமார்... என்னை நீ..." அவன் கைகளைப் பற்றிக் கொண்டான். நெகிழ்வாய்... சன்னமான வெளிச்சத்தில் அவன் கண்கள் பளபளத்தது தெரிந்தது.

"சேச்சே... என்ன இது குழந்தையாட்டம்! ரிலாக்ஸ். திறமை இருக்கிற இடம். அது காடா இருந்தா கூட வாய்ப்பும், புகழும் தானா தேடி வரும். இன்னும் ரெண்டு வாரத்துல பூஜை போடப் போறோம். இப்ப பாடலாசிரியரும் ரெடி. ஸோ... ஒரு வாரத்துல பாடல் ஒலிப்பதிவு. நாளைக்கு நீ கோதண்டபாணி ரிகார்டிங் தியேட்டருக்கு வந்திடு. உன்னைப் பத்தி அவங்ககிட்டே சொல்லணும்."

அவன் சொல்லச் சொல்ல இன்னும் திகைப்பிலிருந்து மீள முடியவில்லை ரகுவால்.



வசந்தம் ஒரே நாளில் மலர்ந்து விடுவதில்லை. வாழ்க்கையில் உயர்வும் ஒரே நாளில் கிட்டி விடுவதில்லை. ரகுவிற்கு வசந்த காலம் தொடங்கி விட்டது.

நிசப்தமான அந்த இரவின் அமைதியைக் கூறு போட்டு எங்கோ நாய் குரைத்தது.

தேவிக்குத் தூக்கம் வரவில்லை.

'ரகு சொன்னது போல் வீட்டில் சொல்லி விடலாமா? என் காதலை அங்கீகரிப்பார்களா? சொல்லாமல் கொள்ளாமல் முரளியைப் போல அம்மாவை உதாசீனப்படுத்திக் கல்யாணம் செய்து கொள்வது தவறுதானே?'

அம்மா?

'ரமா ஒரு கிறிஸ்தவனைக் காதலித்துத் தூக்கில் தொங்கிய பிறகும் அவளை ஏசிக் கொண்டிருந்த அம்மா...!'

'உன் மகளுக்கு வாழ்க்கை வந்திருக்கும்மா. வீடு தேடி வந்து பெண் பார்க்காமல், சொஜ்ஜி, பஜ்ஜி சாப்பிடாமல், அக்கம் பக்கம் விசாரிக்காமல், அவர்கள் தரும் அசிங்கமான சர்டிபிகேட்டுக்கு அம்பதாயிரம் ரொக்கம் கேட்டு, என் மேல் இல்லாத களங்கத்தை மெய்ப்படுத்தும் கும்பலில் இருந்து வராமல், என்னை எனக்காக மட்டுமே நேசிக்கும் ஒரு ஜீவன் வேறு ஜாதியில் இருந்து வந்திருக்கும்மா. எனக்கும் வாழணும். குழந்தை பெத்துக்கணும், அதை ஸ்கூலுக்கு அனுப்பணும்னு ஆசையாய் இருக்கும்மா. அனுமதிப்பியா?' உள்ளுக்குள் உருகிக் கலங்கிப் போனாள் தேவி. அவளால் எந்த ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை.

கடல் மீது வெண்மையாய்ச் சில பறவைகள் பறந்தன கொக்கா?

''இத்தனை நாள் பட்ட கஷ்டத்துக்கு விடிவு காலம் பொறந்திடுச்சி தேவி...''

''.....''

''இளையராஜாவே என் பாட்டை ரொம்ப பாராட்டினார்.''

''.....''

''ஏய் என்ன மவுனமாய்ட்டே?''

''நீங்க நிச்சயம் சினிமாவுல பெரிய ஆளா ஆய்டுவீங்க. அப்புறம் என்னை மறந்திட மாட்டீங்களே?''

''எனக்கு ரொம்ப வருத்தமாயிருக்கு தேவி!''

''ஏன்?''

''இன்னும் கூட நீ என்னை முழுசா நம்பலை.''

''இல்லே... அப்படியெல்லாமில்லே. ஒரு பயம். அதான்.''

''பயம் கூட ஏன் வருது? நம்பிக்கை இல்லாததாலதானே? இப்படியே பேசிட்டு இருந்தே இந்த முறை சத்தியத்தைக் கையில பண்ண மாட்டேன்...''

அவள் புரியாமல் பார்த்தாள்.

''உன் உதட்டில... (தன் உதட்டை தொட்டு)...இதாலே பண்ணுவேன்.''

காது மடல் சூடாகிப் போனது தேவிக்கு.

''ஐயய்யோ... நான் உங்களை நம்பறேன்!'' சொல்லி விட்டு இயல்பாய் அவனை விட்டுச் சற்றே நகர்ந்து போனாள்.

ரகு மீண்டும் அவளை ஒட்டியபடி அமர்ந்து. ''என் பக்கத்திலே இருக்கப் பிடிக்கலையா உனக்கு?''



''அப்படியில்ல...''

''வேற எப்படி?'' இயல்பாய் அவள் கையை எடுத்து வைத்துக் கொண்டான்.

வேலை செய்து காய்த்து மென்மையிழந்து போன அவள் கரத்தை இதமாய்த் தடவிக் கொடுத்து உள்ளங்கையில் உதட்டைப் பதித்தான்.

தேவி சிலிர்த்துப் போனாள்.

''கல்யாணத்துக்கப்புறம் நீ எந்த வேலையும் செய்யக் கூடாது.''

''அப்ப யார் செய்யறதாம்?''

''நான் எதுக்கு இருக்கேன்?''

''ம்... உங்களுக்கு வேற வேலையே இல்லையா என்ன?''

''இருக்குதான். ஆனா என் தேவி கல்யாணத்துக்குப் பிறகாவது கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கணும். வீட்ல ரொம்ப கஷ்டப்படுத்தறாங்களா தேவி?''

''ரகு!'' என்று விசும்பியபடி அவன் தோள் மீது சாய்ந்தாள்.

''ஹேய்... என்ன?'' என்றான், அவள் கூந்தலை ஒதுக்கி... கன்னத்தைத் தடவிக் கொடுத்தபடி.

''ஒரேயடியாய் எம்மேல இவ்ளோ பாசத்தைக் கொட்டா தீங்க ரகு. என்னால தாங்கிக்க முடியலை. மழையே இல்லாம பயிர் வாடிக்கிட்டிருக்கப்ப பெருமழை பெஞ்சு பயிர் நாசமாயிடற மாதிரி உங்க அதிகமான அன்பால இப்பவே இந்த சந்தோஷத்தோடவே செத்துடணும் போலிருக்கு.''

"பைத்தியம் மாதிரிப் பேசாதே. இனிதான் நாம வாழவே போறோம். இவ்வளவு சீக்கிரம் சாகறது பத்தி பேசணுமா?"

கண்களைத் துடைத்துக் கொண்டு இதயம் விகசிக்க... காதல் பொங்கப் பார்த்தாள்.

"சரி... இனி நான் பேசலை."

"தேவி..."

"ம்..."

"தாம்பத்யங்கறது என்ன தெரியுமா? இந்தக் கடலும், வானமும் போல கணவன் மனைவி இருக்கணும்."

"அதெப்படிங்க? ரெண்டுமே தொட்டுக்க முடியாதபடி... எட்டாத உயரத்துல..."

"நான் அதைச் சொல்லவில்லை. கடலுக்கென்று எந்த நிறமும் கிடையாது. அந்த வானத்தின் நீலத்தைத்தான் இது பிரதிபலிக்குது. மனைவியும் அப்படித்தான். புருஷனோட துக்கம், சந்தோஷம் எல்லாத்தையும் பிரதிபலிக்கிறவளா இருக்கணும். நாமும் அப்படி இருக்கணும் தேவி."

"நான் அதிகம் படிக்கவில்லை. உங்களைப் போல கவித்துவமா எனக்குப் பேசத் தெரியாது. ஆனா... ஒண்ணு சொல்வேன். நான் உங்களுக்கு அடிமை. அதிலதான் என் சந்தோஷமெல்லாம்..."

"கல்யாணமான ஆம்பிளைங்க எல்லோருமே மனைவிகிட்டே சரண்டர் ஆயிடறதாதான் பேச்சு. நீ என்னன்னா...?"

சுற்றிலும் இருள் அப்பிக் கிடந்தது. கலங்கரை விளக்கத்தின் தலையில் இருந்த சிவப்பு விளக்கின் ஒளி இவர்களையும் தொட்டு விட்டுச் சென்றது.



## 21

"இந்த லெட்டர் எப்ப வந்தது?"

"நேத்து காலையில."

"இப்ப என்னங்க பண்றது?"

"ஒண்ணும் புரியலை. என்னடா ஆறு மாசமாயிடுச்சே. இவன் இன்னும் நம்ம வழிக்கு வரலியேன்னு அப்பா இந்த முடிவுக்கு வந்திருக்கார். என் மாமா பொண்ணு விக்டோரியாவைப் பேசி முடிச்சிட்டு இருக்கார். சர்ச்ல கூட அனவுன்ஸ் பண்ணியாச்சாம். அடுத்த புதன் கல்யாணம். இன்னும் நடுவுல ஒம்பது நாள்தான் இருக்கு. என்ன செய்யறதுன்னு ஒண்ணும் பிடிபட மாட்டேங்குது!" கைகளைப் பிசைந்தான் ரகு.

"உங்க அப்பாவுக்கு நம்ம விஷயத்தைத் தெரியப்படுத்தி இந்த கல்யாணத்தை நிறுத்திடுங்களேன்."

"வேற வினையே வேணாம். அவர் முடிவு எடுத்தா எடுத்ததுதான். உன்னை மருமகளா ஏத்துக்க சம்மதிக்க மாட்டார்."

"......"

"ஏய்... ஏன் அழறே?"

"அப்ப... நா... நான்?"

"அசடு. என் முடிவுல எந்த மாற்றமுமில்லை. ஒண்ணு பண்ணுவோம். நாளைக்கே ஒரு லெட்டர்ல விளக்கமாக எழுதி அப்பாவுக்கு அனுப்பிடறேன். அதைப் பார்த்ததும் நிச்சயம் அப்பா இங்கே ஓடோடி வருவார். அவர் வர்றதுக்கு முன்னாடி நம்ம கல்யாணம் முடியணும் தேவி."

''க... கல்யாணமா? எ... எப்படி?''

''என்ன தேவி பயப்படறே? இதுக்கும் ஒத்து வர மாட்டேங்கறே. அதுக்கும் அசைய மாட்டேங்கறே. இப்ப யோசிக்க நேரமில்லே. அப்பா வந்துட்டார்னா அவரை மீறி எதுவும் என்னால செய்ய முடியாது. ஏன்னா அவர் வளர்த்த விதம் அப்படி. அவர் முகத்தை நிமிர்ந்து பார்த்துப் பேசக் கூடப் பயப்படுவேன். அப்படிப்பட்டவர் அவர். ஸோ... அவர் வரும்போது நாம மாலையும், கழுத்துமா நின்னா அவரால ஒண்ணும் பண்ண முடியாது. ஆசீர்வாதம் பண்றதை தவிர.''

''இதெல்லாம் நடக்குமா ரகு?''

''நடக்கணும். இப்போதிருந்தே காரியத்தில் இறங்கணும். நாளைக்கு நீ லைப்ரரிக்கு வரும்போது எல்லா ஏற்பாடும் பண்ணிட்டு சொல்றேன்.''

''ச... சரிங்க.''

''ஏய் கல்யாணப் பொண்ணே! கொஞ்சம் சிரியேன்.''

''பயமா இருக்கு ரகு. அ... அம்மாவுக்குத் தெரியாம, என்ன இருந்தாலும் மனசு கேக்கலை.''

''நான் வேண்டாம்னா சொல்றேன்? இப்பக் கூட நான் உங்கம்மாகிட்டே வந்து பேசத் தயார். வரட்டுமா?''

''வே... வேண்டாம். இன்னிக்கு நானே பேசிப் பாக்கறேன்.''

''அட... என் தேவிக்குக் கூட தைரியம் வந்திடுச்சே!''

அவள் கன்னத்தில் செல்லாய்த் தட்டினான்.

சாப்பிட்டு முடித்து தட்டைக் கழுவி மர ஸ்டாண்டில் கவிழ்த்த கோதை, கையைத் துடைத்தபடி கொல்லைப்புறம்



சென்றாள். நட்சத்திரம் கண் சிமிட்டி அழைத்ததை நிமிர்ந்து கூடப் பார்க்கத் தோணாமல் துணி துவைக்கும் கல் மீது அமர்ந்தாள்.

இன்று கோவிலில் சந்திராவைப் பார்த்தாள். இவளைப் பார்த்ததும், ''என்ன மாமி? சவுக்கியமா இருக்கீங்களா?'' என்று அன்பாய் விசாரித்தாள்.

''தேவி அக்காவுக்கு ஏதும் வரன் அமைஞ்சதா?''ன்னு கேட்டபோது துவண்டு போனாள் கோதை.

கோதை எத்தனையோ பேரிடம் தேவிக்கு வரன் பார்க்கச் சொல்லி வைத்து இருக்கிறாள். ஆனால் யாரும் வரவில்லையே.

'என் மகளுக்கு மட்டும் அந்த பிராப்தமே இல்லையா? சுகந்தி முழுகாம இருக்கான்னு கேள்விப்பட்டதும் சந்தோஷப் படறதுக்குப் பதிலா அழுதேனே. மூத்தவ இருக்க இளைய வளுக்குக் குழந்தை. எந்த தாயால் தாங்கிக்க முடியும்?'

'ஊர்ல உலகத்துல எத்தனை பொண்ணுங்களுக்குக் கல்யாணம் ஆகுது! என் பொண்ணுக்கு மட்டும் ஏன் இப்படி? பொண்ணுக்குத் தாலின்னு ஒண்ணு கழுத்துல இருந்தாதானே மதிப்பு! என்னால நான் பெத்த மகளுக்கு ஒரு நல்ல வாழ்க்கைய அமைச்சுத் தர முடியலியே!'

உள்ளுக்குள் அசை போட்டுக் குமைந்து கொண்டு இருந்த கோதை, ''அம்மா!'' என்ற குரல் கேட்டுத் திரும்பியவள் திடுக்கிட்டாள்.

தேவி.

சட்டென்று எழுந்து கொண்டாள்.

''உக்காரும்மா. உங்கிட்ட நான் பேசணும்.''

அப்படியும் நகர முற்பட்ட கோதையைக் கை நீட்டி வழி மறித்தாள், தேவி.

"நில்லும்மா. ஏன்... ஏன்... இப்படியெல்லாம் பண்றே? நான் படற அவஸ்தை போதாதுன்னு நீ வேற ஏம்மா என்னைப் பழிவாங்கறே?"

அமைதியாய் நின்றிருந்தாள், கோதை. அவளுக்கு முதுகைக் காட்டியபடி பேசினாள், தேவி.

"இந்த வீட்ல எனக்குன்னு யாரும்மா இருக்கா? எங்கிட்ட ஏன் பேசறதையே நிறுத்திட்டே? என்னைக் கண்டாலே நெருப்பைத் தொட்ட மாதிரி எட்டிப் போய்டறே. ஏன்? நிஜமாவே என்னை நீதான் பெத்தியா? இல்லே அநாதையா திரிஞ்சவளைக் கூட்டி வந்து வளர்த்தியா? காரணமே இல்லாம என்னை ஏன் வெறுக்கறே? இதையே நினைச்சி நினைச்சி நான் எத்தனை நாள் கண்ணீர் விட்டேன் தெரியுமா? நீ என்னை உன் இதயத்தில் இருந்தே தூக்கி எறிஞ்சிட்டே. ஆனா என்னால முடியலேம்மா. இந்த தொப்புள் கொடி பந்தத்தை நீயும் நானும் நெனச்சாக்கூட பிரிக்க முடியாது. நீ என் அம்மா. நான் உன் பொண்ணுங்கறத மாத்தத்தான் முடியுமா? அம்மா! நான் இப்ப உன்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் சொல்லப் போறேன். நீ திகைச்சுப் போய்டாதே. நல்லா யோசிச்சி நல்ல பதிலைச் சொல்லு. எனக்குன்னு ஒரு வாழ்க்கை, கணவன், குடும்பம்னு அமையப் போகுதும்மா. அவர் பேரு..." திரும்பிப் பார்த்தவள் அப்படியே பேச்சை நிறுத்தினாள்.

கோதை எப்போதோ போய் விட்டிருந்தாள்.

முட்டி மோதி நின்ற கண்ணீர் உடைப்பெடுத்துக் கன்னத்தில் இறங்கியது தேவிக்கு...



'இத்தனை நேரமாக நான் இந்த மரங்களிடமா பேசிக் கொண்டிருந்தேன்? அம்மா... என்னை நீ அந்தளவு அந்நியமாக ஒதுக்கி விட்டாயா?'

'சரி. இதுதான் உன் முடிவு என்றால் என் வழியில் உனக்குத் தெரியாமல் கல்யாணம் செய்து கொள்வதை தவிர வேறு வழியில்லை. உங்களைப் போல நானும் சுயநலக்காரியாய் மாறுவதில் தப்பே இல்லை.'

"இதோ பார் தேவி. நாளை காலைல எட்டு மணிக் கெல்லாம் ரெயில்வே ஸ்டேஷனுக்கு வந்துடு. திண்டுக்கல்ல என் நண்பன் ஒருத்தன் இருக்கான். அவனுக்கு போன் பண்ணி எல்லா ஏற்பாடும் பண்ணச் சொல்லிட்டேன். அங்கே நமக்கு ரிஜிஸ்டர் மேரேஜ் முடிச்சிக்கிட்டு நேரே மதுரைக்கு. அப்பா இங்கே வந்து களேபரம் பண்றதுக்குள்ள அங்கேயே போய் ஆசீர்வாதம் வாங்கிடுவோம். திரும்ப மெட்ராஸ் திரும்பிடலாம். ஏன்னா இனி எனக்கு இங்கேதான் வாழ்க்கை. ரெண்டு மூணு படத்துக்குப் பாட்டு எழுதவும் சான்ஸ் கிடைச்சிருக்கு. இப்படி திட்டப்படி எல்லாமே ஒழுங்கா நடந்தாதான் நாம இணைய முடியும். இல்லேன்னா அப்பா என்னைக் குண்டுகட்டா தூக்கிட்டு போயிடுவார். சரியா எட்டு மணிக்கு வந்திடு. காத்திருப்பேன்.

"நிச்சயம் வந்திடுவேன்!" என்றாள்.

"ஆங்... தேவி மறந்திட்டேன். இந்தா. இதில புடவை இருக்கு. வரும்போது இதை உடுத்திக்கிட்டு வா."

நெகிழ்வுடன் அவனைப் பார்த்தாள்.

"ர... ரகு... உங்களுக்கு நான் எப்படி..."

''கைம்மாறு செய்யப் போறேன்னுதானே சொல்ல வர்றே? எண்ணி பத்தே மாசத்துல ஒரு குழந்தை பெத்துக் குடுத்துடு. வேறு எதுவும் வேணாம்.''

''சீ!'' வெட்கத்தில் முகம் சிவந்து போனது.

மறுநாள்...

தன்னைக் கொஞ்சம் அதிகப்படியாய் அலங்கரித்துக் கொண்ட தேவி, ரகு கொடுத்திருந்த மைசூர் சில்க்கை உடுத்திக் கொண்டாள். சந்தன நிறத்தில் சிவப்பு பார்டர் போட்ட புடவை. அவளுக்குக் கச்சிதமாய் இருந்தது. தலைக்கு மல்லிகையும், கனகாம்பரமும் சூடிக் கொண்டாள்.

கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டவள் அதிசயித்தாள்.

'பரவாயில்லையே. நான் கூட அழகாக இருக்கிறேனே. கல்யாணம் என்றதும் முகத்தில் களை எங்கிருந்தோ ஓடி வந்து ஒட்டிக் கொண்டு விட்டதே!'

தான் சேமித்து வைத்து இருந்த பணத்தை மட்டும் பேகில் வைத்துக் கொண்டாள்.

தேவி கடிகாரத்தைப் பார்த்தாள். 7.20.

பதறிப் போனாள். 'நேரமாகி விட்டதே!'

செருப்பை மாட்டிக் கொண்டு சமையல் அறையில் நின்றிருந்த கோதையை நிமிர்ந்து கூடப் பார்க்காமல், மனதைக் கல்லாக்கிக் கொண்டு படி இறங்கினாள்.

''எங்கே போறே?'' முரளியின் குரல் பின்னால் கேட்க, திக்திக் இதயத்தோடு திரும்பினாள்.



சென்னை மாவட்ட மைய நூலகம் 36999 542-6619 எழும்பூர், சென்னை

''க... கல்யாணத்துக்கு.''

''இன்னைக்கு நீ வெளியே எங்கேயும் போகக் கூடாது.''

## 22

வெளியே எங்கேயும் போகக் கூடாது என்றதும் திடுக்கிட்டுப் பார்த்தாள், தேவி.

''ஏ... ஏன்?''

'ஒருவேளை விஷயம் இவனுக்குத் தெரிந்து விட்டதா?'

உள்ளிருந்து வந்த கோதையும் வைத்த கண் வாங்காமல் இவளையே பார்த்தாள்.

'கல்யாணப் பொண்ணு மாதிரி எவ்வளவு அழகாக இருக்கிறாள்? என் கண்ணே பட்டுவிடும் போலிருக்கே.'

''இன்னைக்கு உன்னைப் பெண் பார்க்க வர்றாங்க!'' என்றான் மிடுக்காக முரளி.

''எ... என்ன?'' அரண்டு போனாள் தேவி.

''என்னடா சொல்றே முரளி? நிஜமாவா? தேவிய பொண்ணு பார்க்க வர்றாங்களா? யார்டா? எங்கேருந்து? எப்ப வர்றாங்க?'' நிமிஷத்தில் முரளியின் மீதிருந்த கோபம் மறைந்து கேள்வியால் துளைத்தெடுத்த அம்மாவை ஆச்சரியமாய் பார்த்தாள், தேவி.

'அம்மா... எத்தனை சந்தோஷம் உனக்கு! பொண்ணு பார்க்க வர்றாங்கன்னதும் வானத்துக்கும், பூமிக்குமாய்க் குதிக்கிறியே, இது நிஜமாவா நீதானா?'

''சொல்லுடா, யார்டா மாப்பிள்ளை? என்ன வேலை பார்க்கறார்?''

"அ... அது வந்து... மூணு மணிக்கு அவங்கள்லாம் வரும்போது நீயே பார்த்துக்கோயேன்!" சற்றே மிரண்டான் முரளி.

கோதைக்குள் ஒரு சந்தேக விதை விழுந்தது. முகம் சுருக்கி அவனையே பார்த்தாள்.

"இதிலே என்னடா சஸ்பென்ஸ்? சொல்லு. எனக்கு இப்பவே தெரியணும்."

தேவி நேரம் போவதை மறந்து அம்மாவையே பார்த்துக் கொண்டு இருந்தாள்.

"க... கவிதாவோட மாமா ஒருத்தர். அன்னைக்கு நம்ம வீட்டுக்குக் கூட வந்திருந்தாரே. நீ எங்கே, வந்தவங்கிட்டே முகம் கொடுத்தே பேசலியே!"

"போனது போச்சு. ஏதோ கோபத்தில் நடந்துக்கிட்டேன். மன்னிச்சுடு. சரி சொல்லு. அந்த மாமாவோட பிள்ளைக்கா?"

"இ... இல்லேம்மா..." சங்கடமாய் நெளிந்தபடி ஓரக் கண்ணால் கவிதாவைப் பார்த்தான்.

"எங்க மாமாவுக்குக் குழந்தையே இல்லை. அவர் ஜாதகப்படி ரெண்டு குழந்தை பிறக்குமாம். அத்தைக்குத்தான் ஏதோ கோளாறு!"

"சரி... அப்ப யார்டா மாப்பிள்ளை?"

"என்னம்மா நீ? இன்னும் புரிஞ்சிக்கலை. கவிதாவோட மாமாவுக்குத்தான் தேவிய ரெண்டாந்தாரமா..."

"என்னடா சொல்றே? ரெண்டாந்தாரமாகவா? எம் பொண்ணையா? டேய்... தேவி உன் கூடப் பொறந்த



அக்காடா? அவளைப் போய் ஒரு கிழவனுக்குக் கல்யாணம் பண்ண நினைக்கிறியே? அவ என்னடா பாவம் செஞ்சா உனக்கு?" கோதையின் குரல் உயர்ந்தது.

தேவி சிலை போல் நின்றிருந்தாள். மணி எட்டு பத்து ஆனது கூட உணராமல் அவள் இதயம் முழுக்க அம்மா வியாபித்திருந்தாள்.

"ஏதோ போனா போகுது. கூடப் பொறந்த பாவத்துக்காக ஒரு கல்யாணம் செய்ய நினைச்சா என் பல்லையே பிடிச்சிப் பதம் பாக்கிறியா? என்னமோ அடுத்த வேளை சோத்துக்கு லாட்டரி அடிக்கிறவனுக்கா கல்யாணம் பண்ணித் தரப் போறேன். அந்த மாமா லட்சாதிபதி. இதை ஞாபகம் வச்சுக்க!" கோபமாய்ப் பதிலுக்குக் கத்தினான். முரளி.

"போடா, உங்க பணத்தையெல்லாம் குப்பைத் தொட்டியில போய் கொட்டுங்கடா. எவ்ளோ பாசம்டா உனக்கு அக்கா மேல!"

"உனக்கு மட்டும் ரொம்ப பாசமோ? இப்ப மட்டும் என்ன பாசமழை பொழியற மாதிரி நடிக்கிறே?"

"ஆமாண்டா. நடிக்கிறேன்தான். இப்ப இல்லே. என் பொண்ணை பத்து மாசம் சுமந்து பெத்து தாய்னு எனக்கு அந்தஸ்து கொடுத்த அவ மேல நான் எந்தளவு உசிரை வச்சிருக்கேன்னு உனக்கென்னடா தெரியும்? என் தெய்வமும் என்னை விட்டுப் போயிட்ட பிறகு... ரெண்டு பொட்டைப் பிள்ளைங்களையும், தன் சந்தோஷமே பெரிசாய் நினைக்கும் உன்னையும் வச்சிக்கிட்டு எப்படி கரையேத்தப் போறேன்னு எண்ணி எண்ணியே பாதி உசிரு போயிடுச்சி. ஏற்கெனவே இந்த ஊராலேயும், உலகத்தாலேயும் பழிக்கப்பட்ட,

வாழ்க்கையே கேள்விக்குறியாக்கிக்கிட்டு நிக்கிற! இந்த தேவி என்னைக்காவது, 'அம்மா! எனக்குக் கல்யாணம் பண்ணி வை!'யுன்னு கேட்டா நான் என்ன பண்ணுவேன்? எனக்கு வசதியுமில்லை. போதாததுக்கு இந்த ஊர் பொல்லாப்பை மடி நிறைய வாங்கிக் கட்டியிருக்கிற இவளை யார்டா கட்டுவா? அவளோட பேசினா இதைப் பத்தி பேசுவாளோங்கற பயத்திலேயே அவகிட்டே பேசறதை நிறுத்தினேன். ஏன்னா அவளும் பொண்ணு தானே! பொம்மை இல்லையே. அவளை வெறுக்கிற மாதிரி நடிச்சேன். அப்படியாவது என்னை வெறுத்து யாரையாவது காதலிச்சி கல்யாணம் பண்ணிக்குவான்னு, எந்த தாயும் விரும்பாத, நினைக்காத ஒரு செயலை எதிர்பார்த்தேன். ஆனா உங்களை மாதிரி சுயநலக்காரியா இல்லாம நன்றியுள்ள நாயா என் காலையேதான் சுத்தி சுத்தி வர்றா.''

''அ... அம்மா!'' ஓடி வந்து தாயை இறுக அணைத்துக் கொண்டு அழுதாள், தேவி.

''இப்ப என்னதான் சொல்றீங்க ரெண்டு பேரும்? மாமா வந்துட்டார்னா என்ன பதிலைச் சொல்றது?'' காட்டமாய்க் கேட்டான், முரளி.

''டேய் போயும் போயும் ஒரு கிழவன்தானா கிடைச்சான் என் பொண்ணுக்கு?''

''ஆமா! உங்க பொண்ணை நீங்கதான் மெச்சிக்கணும். கல்யாணம் ஆகிறதுக்கு முன்னாடியே வயித்தை ரொப்பிக் கிட்டவளை எந்த ஆம்பிளைதான் தைரியமா வந்து கட்டிக்குவான்?'' எகத்தாளமாய்க் கேட்டாள், கவிதா.

தேவி விக்கித்துப் போனாள். கோதையின் உடல் கோபத்தில் ஆடியது. உக்கிரமாகக் கவிதாவையே முறைத்துப் பார்த்தாள்.



''முப்பது வயதுக்காரிக்கு இருபது வயசு மாப்பிள்ளையா கொண்டு வர முடியும்? ஏதோ ஒரு தாலி அவ கழுத்துல ஏறுதேன்னு சந்தோஷப்படறதை விட்டுட்டு...''

பளார்!

கன்னத்தில் விழுந்த அறையில் பொறி கலங்கிப் போனது கவிதாவுக்கு.

''அம்மா!'' அடித் தொண்டையில் உறுமினான், முரளி. தன் மனைவியைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு இருவரையும் உறுத்துப் பார்த்தான்.

''பாவிங்களா! நீங்க நல்லா இருப்பீங்களா? என் பொண்ணை பத்தி நீங்களே இப்படி மோசமா பேசினா ஊரார் பேச மாட்டாங்களா?

''நாளைக்குச் சாகப் போற கிழவனுக்குத் தேவிய கட்டணுமா? இன்னைக்கு பேருக்கு ஒரு தாலிய கட்டி அந்த வேகத்திலேயே அறுத்தெறியப் போற இந்தக் கல்யாணமும் வேணாம். கருமாதியும் வேணாம். அவ எம் பொண்ணாகவே கடைசி வரைக்கும் இருக்கட்டும். கல்யாணம் கட்டி எல்லாத்தையும் அறுத்தெறிஞ்சு மூலையில உக்கார வைக்கவா பாடுபடறீங்க எல்லோரும்? இதுக்குத்தானா பெத்து வளர்த்தேன்?'' ஆவேசமாய்க் கத்தினாள், கோதை.

''சும்மா நிறுத்தும்மா. கவிதா! பெட்டியெல்லாம் எடுத்துக்கிட்டு கிளம்பு. உன்னைக் கை நீட்டி அடிச்ச இவங்க இனி எனக்கு அம்மா இல்லை. இனி இவங்களுக்கும், எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நீ செத்தியானா உன் பொண்ணையே கொள்ளி போடச் சொல்லு. வா, கவிதா! போகலாம்.''

கையைப் பற்றிக் கொண்டு போயே போய் விட்டான், முரளி தன் மனைவியோடு.

அவன் வார்த்தைகள் ஊசியாய்க் கோதையின் இதயத்தைக் குத்தின. சில நிமிடங்கள்தான். திடீரென்று கோதை மயங்கி விழுந்தாள்.

''அம்மா!'' வீறிட்டு அலறியபடி கோதையை மடியில் அள்ளிப் போட்டுக் கொண்டாள்.

ஹால் கடிகாரம் பத்து முறை அடித்து ஓய்ந்ததும் வாய் விட்டு அழ ஆரம்பித்தாள், தேவி.

அந்த அழுகை அம்மாவுக்காகவா? ரகுவுக்காகவா?

வெளியே மேகமும் கறுத்து அழத் தயாரானது.

## 23

ஹாஸ்பிடலில் துயரமே உருவாகத் தன் தாயின் அருகில் அமர்ந்து இருந்தாள், தேவி. மரக்கட்டை போல் படுத்திருந்தாள் கோதை.

ஆம்... மரக்கட்டைதான். உணர்ச்சிகள் மரத்துப் போன மரக்கட்டை. இனி அவளால் பேச முடியாது. கை, கால்களை அசைக்கக் கூட முடியாது. பக்கவாதத்தில் படுத்து விட்டாள். ஆனால் அந்தக் கண்களில் இருந்து மட்டும் கண்ணீர் ஆறாய்ப் பெருகிக் கொண்டு இருந்தது.

தேவி இறுகிப் போய்க் கிடந்தாள்.

'அம்மா... இத்தனை வருடமாக என்னிடம் பேசாமல் வெறுப்பது போல் நடித்து கடைசியில் அதை வெளிப்படுத்திய நேரம் ஆண்டவன் இப்படி தண்டிச்சிட்டானே? நீ பேச



வேண்டும். ஆசை தீர அதை நான் கேட்கணும்னு ஆசைப்பட்டேனே... ஏம்மா எனக்கு மட்டும் ஏன் எல்லாமே நடந்து முடியப்போற தறுவாயில் எதுவும் நடக்காமப் போயிடுது? உன்னை விட்டுட்டு ரகு பின்னால இனி என்னால போக முடியாதும்மா. அந்தளவு சுயநலக்காரியல்ல நான்.'

'இனி மறக்கணும். ரகுவை... கல்யாணத்தை... குடும்பத்தை... கனவுகளை, கற்பனைகளை எல்லாமே மறக்கணும். நடக்க வேண்டிய திருமணம் நின்று விட்டது. என்னை ரகு தேடியிருப்பார். அவருக்கென்ன தெரியும்? ஊருக்கு ஒதுக்குப்புறமான இந்த ஹாஸ்பிடலில் நாங்கள் இருப்பது? ரகுவின் அப்பா சென்னைக்கு வந்து விடுவார். கையோடு ஊருக்கு அழைத்துச் சென்று அந்தப் பெண்ணிற்கே திருமணம் செய்து வைப்பார்கள். ரகு! என்னை மறந்து விடுங்கள். உங்கள் வாழ்க்கையாவது சிறப்பாக அமையட்டும்.'

'அம்மா... இனி உனக்கு எல்லாமே நான்தான். உன் உயிர் என்னுடலில். இனி ஒவ்வொரு நிமிடமும் உனக்காக. நீ சுவாசிக்கும் காற்றாக வாழ்வேன். தீவிர சிகிச்சை கொடுத்தால் நீ பழையபடி ஆகி விடுவாய் என்று டாக்டர்கள் உறுதி கூறி உள்ளார்கள். அதற்குத் தேவை பணம். அதைச் சம்பாதிப்பதே என் லட்சியம். உன்னைக் குணப்படுத்துவேன். நீ சொன்னபடி கடைசி வரை உன் மகளாகவே இருப்பேனம்மா இருப்பேன்.'

மழையில் சொட்டச் சொட்ட நனைந்தபடி ஆட்டோவில் இருந்து இறங்கிய ரகு, தேவியின் வீட்டில் பூட்டு தொங்கியதைக் கண்டு தொய்ந்து போனான்.

'எங்கே போனாள் தேவி? யாரிடம் விசாரிப்பது? அக்கம் பக்கத்தில் விசாரிப்பது சரியா?'

''ரகு... உன்னை எங்கெல்லாம் தேடறது? உங்க அப்பாகிட்டர்ந்து தந்தி வந்திருக்குடா!'' கோபால் பதறியபடி ஓடி வந்து மூச்சு வாங்கக் கூறினான்.

தேவிக்கு இப்போதெல்லாம் ஓய்வேயில்லை. அப்பளம், வடாம் போட்டு விற்பதும், ஷூக்களைப் பின்னுவதும், அம்மாவைக் கவனித்துக் கொள்வதுமாக... பம்பரமாய்ச் சுழன்று கொண்டிருந்தாள். கோதையை வீட்டில் வைத்தே கவனித்தாள். இரண்டு முறை சுகந்தியும் வந்து பார்த்தாள். முரளி விஷயம் அறிந்தும் வந்து எட்டிப் பார்க்கவில்லை.

தேவியின் கவனிப்பும்... மருந்து மாத்திரைகளின் தன்மையும் மூன்றே மாதத்தில்... இப்போது கோதையின் வலது கையை இலேசாய் இயங்க வைத்திருக்கிறது. அந்த சந்தோஷத்தில் கடந்த காலத்தைப் பற்றியோ... எதிர்காலத்தைப் பற்றியோ கிஞ்சித்தும் கவலைப்படாமல் உழைத்தாள் தேவி.

பாலைப் புகட்டி விட்டு அவள் வாயைத் தன் முந்தானையால் துடைத்து.. தலையணையை நோக்கிப் படுக்க வைக்கும் போது... கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. வாசலுக்கு வந்து பார்த்த போது தேவிக்குத் தூக்கி வாரிப் போட்டது.

கண்ணாடி அணிந்த நபரும், அவர் பக்கத்தில் ஒரு பெண்மணியும், அவர்களுக்குப் பின்னால் ரகுவும்...

ரகுவின் அம்மா... அப்பா!?

''வா...வாங்க! உள்ளே வாங்க!'' வரவேற்றுப் பரபரப்பாய் உள்ளே ஓடிப் போய் இரண்டு மடக்கு நாற்காலிகளை விரித்துப் போட்டாள்.



''அ...அப்பா! இவதான் தேவி!'' ரகு மெதுவாய்ச் சொன்னான்.

''ம்...''

அந்தக் களைத்த முகமும், கருணை கொண்ட கண்களும்... தேவி நிமிடத்தில் டேனியல், ரீட்டா மனதில் பதிந்து போனாள்.

ரீட்டா கோதை அருகே அமர்ந்து கொண்டாள்.

கோதை கண்களால் தேவியை விசாரித்தாள்.

என்னவென்று பதில் சொல்வாள்? இவர்கள் இப்போது இங்கே எதற்காக வந்திருக்கிறார்கள் என்பதே புரியவில்லையே!

கோதை பயந்திருந்தாள்.

'யார் இவர்கள்? நம் வீட்டிற்கு எதற்காக வந்திருக்கிறார்கள்?'

மவுனத்தை மேலும் நீட்டிக்க விரும்பாமல் டேனியல் உடைத்தார்.

''ஏம்மா... நீதான் தேவியா?'' சற்றே கண்டிப்புக் கலந்த குரல்.

மிரட்சியுடன் நிமிர்ந்தாள் தேவி.

''ஆ... ஆமாம்!''

''இவங்க உங்க அம்மா?''

''ம்.''

'என்ன ஆச்சு? எதற்கு இத்தனை கேள்விகள்?' கத்தி மேல் நிற்பது போல் வியர்த்துப் போனாள்.

"எல்லாம் கேள்விப்பட்டோம். அம்மா... உங்களுக்கு இப்ப எப்படி இருக்கு? கர்த்தர் உங்களுக்கு எந்தக் குறையும் வைக்க மாட்டார். கவலைப்படாதீங்க!"

கோதை அப்போதுதான் கவனித்தாள், டேனியல் நெஞ்சில் சிலுவை தொங்கிக் கொண்டிருந்தது.

'கிறிஸ்டியனா?'

கோதை மீண்டும் தேவியைப் பார்த்தாள்.

"இங்கே பாருங்கம்மா! உங்க பொண்ணும், எங்க பையனும் ஒருத்தரையொருத்தர் விரும்பறாங்க. நாங்க சொந்தத்துல ஒரு பொண்ணைப் பார்த்து... நாளும் குறிச்சிட்டோம். அப்பத்தான் இவன் கடிதம் மூலமா அவனோட காதல் விவகாரத்தை எழுதியிருந்தான். அம்மாவுக்கு உடம்பு சரியில்லைன்னு பொய்யா ஒரு தந்தியைக் கொடுத்து வரவழைச்சு கண்டிச்சேன். தலைகீழா நின்னு பார்த்தும்... அவன் நாங்க பார்த்த பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்க மறுத்து... சர்ச்சில போய் சொல்லி கல்யாணத்தையும் நிறுத்திட்டான். நாங்க விசுவாச மான கிறிஸ்தவ குடும்பத்தைச் சேர்ந்தவங்க. இந்துப் பொண்ணை மருமகளா ஏத்துக்கறதில விருப்பமில்லே..." சொல்லிவிட்டுத் தேவியைக் கூர்ந்து பார்த்தார் டேனியல்.

தேவிக்குச் சகலமும் நடுங்கியது. சண்டை போடறதுக் கென்றே மதுரையில் இருந்து வந்திருக்கிறார்கள். பயத்துடன் அம்மாவைப் பார்த்தாள். 'அம்மா என்னைப் பற்றி என்ன நினைப்பாள்?' கோதையின் முகத்தில் இருந்து எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை.



ரீட்டா ஆரம்பித்தாள்.

"எவ்வளவோ சொல்லியும் கேட்கலே! சரி... இருப்பது ஒரே பையன். அவன் மனசுப்படி அவனுக்குப் பிடிச்ச பொண்ணையே கட்டிக்கட்டும்னு நாங்களும் அவனுக்காக விட்டுக் கொடுத்து வந்திருக்கோம். இப்ப நீங்க சொல்லுங்க. இந்தக் கல்யாணத்துல உங்களுக்குச் சம்மதமா?" கோதையின் கையைப் பற்றிக்கொண்டு கேட்டாள் ரீட்டா.

பன்னீர்ப் பூக்கள் தெளித்த உணர்வில் திக்கு முக்காடிப் போன தேவி... சந்தோஷ விம்மலுடன் ரகுவைப் பார்த்தாள். அவன் கண்களும் இவளைப் பார்த்து ஏதேதோ சொல்ல...

கோதை அவர்களிருவரையும் கவனித்தாள்.

தேவி யோசித்தாள். 'அம்மா இப்படி இருக்கும் நிலையில் எனக்குத் திருமணமா? இது எவ்வளவு பெரிய துரோகம்? நிமிடத்தில் மறந்து போனேனே!'

தீர்மானித்துக் கொண்டவளாய், பேச வாயைத் திறக்கும் போது ரகுவின் குரல் மென்மையாகக் கேட்டது.

"எங்கள் திருமணத்திற்குப் பிறகும் நீங்கள் எங்களுடன் இருக்க வேண்டும்."

தேவி மட்டுமல்ல, கோதையும் பரவசப்பட்டாள். தேவி அம்மாவின் அருகே அமர்ந்து கொண்டாள். 'அம்மா என்ன சொல்லப் போகிறாள்?'

தன் வலது கையை உயர்த்தி, தேவியின் கரத்தைப் பற்றினாள், கோதை. சற்றே சிரமப்பட்டுத் தலையை அசைத்து ரகுவை அருகே அழைத்தாள்.

"என்னம்மா?" என்றபடி அவளருகே முழங்காலிட்டு அமர்ந்தான் ரகு.

தேவியின் கையை அவனிடம் தர... அதை இறுக்கமாய்ப் பற்றிக் கொண்ட ரகு, மனம் விட்டுச் சிரிக்க... தேவியின் கண்கள் ஆனந்தமாய் முத்துக்களை உதிர்க்க... கோதையின் நெஞ்சு சந்தோஷத்தில் விம்மியது.

"மருமகப் பொண்ணே! முதல்ல உன் கையால எங்களுக்கு காபி போட்டுக் கொண்டு வா! சீக்கிரம்..."

கம்பீரமாய்ச் சிரித்தபடி கூறினார் டேனியல்.

56999
5426619